# கருத்தரங்கக் கட்டுரைகள்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண். 430

# கருத்தரங்கக் கட்டுரைகள்

தொகுப்பாசிரியர் :

**சாமி. சிவஞானம்,** எம். ஏ.,

*நிருவாக அலுவலர்,*

*சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.*

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்,**

*தஞ்சாவூர்.*

[ விலை : ரூ. 80-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | கருத்தரங்கக் கட்டுரைகள் |
| பதிப்பாசிரியர் | : | திரு. சாமி. சிவஞானம், எம். ஏ., |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 430 |
| மொழி | : | தமிழ், வடமொழி, ஆங்கிலம். |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | செப்டம்பர், 2006 |
| தாள் | : | TNPL 11 கி. கி |
| நூல் அளவு | : | 25 x 19 செ. மீ. |
| பக்கங்கள் | : | 154 |
| படிகள் | : | 250 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு மற்றும்<br>ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | கட்டுரைகள் |
| விலை | : | ரூ. 80-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

மாமன்னர் சரபோஜியின் 222ஆவது பிறந்தநாள் விழாவில் மாமன்னர் தொண்டினை நினைவுகூறும் வகையில் தமிழறிஞர்களும் வடமொழி அறிஞர்களும் பங்கேற்ற கருத்தரங்கம் நூலகத்தால் நடத்தப்பெற்றது. அக்கருத்தரங்கை அணிசெய்த அறிஞர்தம் கட்டுரைகளின் தொகுப்பு நூலே இப்படைப்பாகும்.

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு எனப் பன்முகங்காட்டும் கட்டுரைகள் இச்சிறப்பு மலரை எழில் செய்கின்றன. கட்டுரைகள் காப்பியங்களைத் தொடுகின்றன; வாழ்வியல் நெறிகளை வரைந்து கூறுகின்றன; இசைப் பாடல்களை எடுத்துக்காட்டுகின்றன; மனிதநேயத்தின் மாண்பை விளக்குகின்றன; இலக்கண பொருண்மைக்கு விளக்கம் கூறுவன; கல்வெட்டுச் செய்திகளைக் காட்டி நிற்பன; ஆகம விதிகளின் ஆழம் தொடுவன; சித்திரக்கலையின் சிறப்பைப் பகர்வன; காப்பியத்தில் தொடங்கி கணினி வரை பொருண்மைச் சிறப்பால் பொலிவுற்றமைவன. கட்டுரையாளர்கள் அனைவருக்கும் என் நன்றியினை உரித்தாக்குகின்றேன். இந்நூல் இரண்டாம் பதிப்பாக மலர்கின்றது.

இக்கட்டுரைகளை அழகிய ஆரமாகத் தொடுத்து - தொகுத்து நூலாக வழங்கியுள்ள இம்மலரின் தொகுப்பாசிரியர், நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இம்மலரின் பதிப்புப் பணிகள் செப்பமாக அமைய ஆவனசெய்த முன்னாள் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், பதிப்புப் பணிகள் செழுமைபெறத் துணைநின்ற நூலக முன்னாள் தமிழ்ப்பண்டிதர் முனைவர் ய. மணிகண்டன் அவர்களுக்கும், வெளியீட்டுப் பணிகளில் உதவிய ஏனையோருக்கும் என் வாழ்த்துக்கள்.

வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இக்கட்டுரைத் தொகுதி, நூலார்வலர் அனைவருக்கும் நல்விருந்தாக அமையுமெனப் பெரிதும் நம்புகிறேன்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
*26-9-2006*

# AN APPEAL

Manuscripts on Palmleaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The Manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar King of Tanjore, **Rajah Serfoji,** has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world famous **"Sarasvati Mahal Library"**. It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DISTRICT COLLECTOR AND DIRECTOR**

**Sarasvati Mahal Library,**

**Thanjavur.**

# பொருளடக்கம்

| வ. எண். | கட்டுரை | பக்கம் |
|---|---|---|
| 1. | இராமாயணக் காப்பியங்களில் இயற்கை வருணனைகள் — திரு. சாமி. சிவஞானம் | 1 — 18 |
| 2. | சேக்கிழார் காட்டும் வாழ்வியல்நெறி — முதுமுனைவர் ம. சா. அறிவுடைநம்பி | 1 — 12 |
| 3. | ஒரு வன்வாளி — முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் | 13 — 16 |
| 4. | சிலப்பதிகார இசைப்பாடல்கள் — முனைவர் இ. அங்கயற்கண்ணி | 17 — 24 |
| 5. | பெண்கள் கல்வி மேம்பாடு — திரு. ஆறு. காளிதாசன் | 25 — 32 |
| 6. | வேத இலக்கியங்களில் மனிதநேயம் — டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி | 33 — 38 |
| 7. | பாணினி ஸம்ஞா சூத்திரங்களில் புதைந்துள்ள கணினி பற்றிய செய்திகள் — டாக்டர் கே. இராதா | 39 — 42 |
| 8. | ஸ்ரீவேதாந்ததேசிகனின் கவிதை இலக்கியங்கள் — டாக்டர் டி என். ஆராவமுதன் | 43 — 50 |
| 9. | சம்ஸ்கிருத மொழியில் இசை நூல்கள் — கலைமாமணி பி. எம். சுந்தரம் | 51 — 54 |
| 10. | சம்ஸ்கிருத இசை இலக்கண நூல்கள் — முனைவர் இராம. கௌசல்யா | 55 — 62 |

11. கல்வெட்டுக்களில் சமஸ்கிருதம் 63 — 68
— குடவாயில் பாலசுப்ரமணியன்

12. சம்ஸ்கிருத நாட்டிய சாஸ்திர நூல்கள் 69 — 76
— திரு. என். விசுவநாதன்

13. மராட்டியர் வரலாறு கூறும் சமஸ்கிருதச் சுவடிகள் 77 — 84
— திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி

14. புராணங்களில் காணப்படும் வரலாற்றுச் சான்றுகள் 85 — 94
— திரு. ஆ. வீரராகவன்

15. சம்ஸ்கிருதக் கீர்த்தனங்களின் வளர்ச்சி 95 — 98
— திரு. என். ஸ்ரீநிவாசன்

16. ஆகமத்தில் ஆலயக்ராம நிர்மாணவிதி 99 — 110
— திரு. எஸ். சுதர்ஷன்

17. The concept of communication as developed in the Sanskrit Drama 111 — 118
— Dr. S. Ramaratnam

18. ஆகமங்களும், சிற்ப நூல்களும் 119 — 130
— திரு. ஆர். சுப்ரமண்யம்

19. Legal Rules Pertaining to the Calculation of Interests in Ancient Law Books 131 — 140
— Dr. E. R. Rama Bai

20. தர்க்க தரிசனம் 141 — 148
— டாக்டர். எஸ். கோதண்டராமன்

# இராமாயணக் காப்பியங்களில் இயற்கை வருணனைகள்

திரு. சாமி. சிவஞானம், எம். ஏ.,
நிருவாக அலுவலர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

நற்றமிழ்ப் புலமை நக்கீரர், 'திருமுருகாற்றுப்படை' எனும் சங்க நூலில் 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்று கூறுகிறார்; ஆம் இயற்கைக்கு யாரும் கைபுனைந்து அழகூட்டவில்லை. பூமியும் கதிரவனும் நிலவும் விண்மீனும் அருவியும் மரங்களும் மலரும் பழங்களும் இயற்கையின் இன்பச் சிலிர்ப்பாக நமக்குப் பல காட்சிகளையும், கருத்துக்களையும் தொடர்ந்து தந்துகொண்டிருக்கின்றன.

அழகினை ஆராதிக்காத கவிஞர்களே இல்லை. கீட்சுக் (Keats) கவிஞன், "The thing of beauty is a joy for ever" என்று கூறுகிறார். அழகான பொருட்கள் என்றும் ஆனந்தத்தை அளிப்பவை. மேலும் அவர், "Beauty is truth, Truth beauty — அழகே உண்மை; உண்மையே அழகு ஆகும்" என்று கூறுகிறார்.

இங்கு, வான்மீகி, அத்யாத்ம இராமாயணக் கவிஞன், காளிதாசன், கம்பன், துளசிதாசர் ஆகிய ஐந்து காப்பியவாணர்கள் தங்களின் இராம காப்பியங்களில் கூறும் இயற்கைக் காட்சிகள் சிலவற்றை எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

வான்மீகத்தில், இராமசரிதத்தை வான்மீகி நாரதரிடமிருந்து கேட்டு அறிந்தார். இருப்பினும் இக்கதையை இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ள விரும்பினார். நிகழ்ச்சிகளைத் தம் ஞானக் கண்ணால் மனத்திரையில் ஓடவிட்டார், பின் எழுந்ததுதான் மாகாவியமான வான்மீகம்.

கடலில். கிளிஞ்சல், முத்துச்சிப்பி, சங்கு போன்ற எளிய பொருட்களும், இரத்தினங்கள் போன்ற விலையுயர்ந்த பொருட்களும் கலந்து உள்ளன. இதைப்போல் இக்காப்பியத்தில் அறம், துறக்கம் போன்ற உயர் எண்ணங்கள் மேலோங்கியும் பொருளின்பமும் காமமும் சுருக்கப்பட்டும் காட்டப்பட்டுள்ளன என்று இயற்கைப் பொருள்களோடு ஒப்பிடுகிறார்.

(பாலகாண்டம் — சர்க்கம் 3, பக்கம் 15-16)

இராமன் அழகன், ஆற்றலன், முழங்கால் வரையில் நீண்ட திருக்கைகளை உடையவன், உடல் பலமும் மதயானையின் நடை அழகும் கொண்டவன். தயரதன் தன்னை நோக்கிவரும் இராமனைக் காண்கிறான். இராமனின் புயவலியைக் காண்கிறான். இராமனின் அழகும், ஆற்றலும், மதியனைய பொலிவும் பொருந்திய தோற்றம் தயரதனுக்கு மனநிறைவைத் தரவில்லை. இது, எவ்வாறு இருக்கிறதென்றால், கோடைக் காலத்து வெய்யிலின் வெம்மையால் வருந்துபவர்கள் மழைபெய்து குளிர்ச்சியைக் கொடுக்கும் மேகத்தை எத்தனைமுறை பார்த்தாலும் மனநிறைவை அளிக்காததுபோல் உள்ளது என வான்மீகி கூறுகிறார்.

(அயோத்தியா காண்டம் — சர்க்கம் 3, பக்கம் 13-14)

இராமன், கானகம் நோக்கிச் செல்கிறான். அயோத்தி நகர மக்களும் அந்தணர்களும் அவன்மீது தீராக் காதல் கொண்டவர்கள். மக்கள் முழு மதியைக் கண்டால் இன்பம் அடைவதுபோல் இராமனைக் கண்டால் உவகை அடைபவர்கள். அவர்கள் இராமனைத் தொடர்ந்து செல்கிறார்கள். 'இராமா! திரும்பு, திரும்பு' என்று அடிக்கடி பிரார்த்திக்கிறார்கள். வேடன் தன் வலையில் மிருகங்களைக் கட்டித் தான் போகுமிடமெல்லாம் இழுத்துச் செல்வதுபோல் இராம இலக்குவர்கள் தங்களுடைய உயர்குணங்கள் என்ற கயிற்றினால் மக்களைக் கட்டிப் போகுமிடமெல்லாம் இழுத்துப் போனார்கள். மக்கள் இராமன் பயணிக்கும் தேரை இழுத்துச்செல்லும் குதிரைகளை நோக்கி, "இரதத்தைத் திருப்புங்கள்" என்று கூறுகின்றனர். இராமனைத் தொடரும் அந்தணர்கள் கூறுகிறார்கள், "இராமா! நாங்கள் செய்யும் வேள்வியில் எழும் அக்னிகள் அடங்கி எங்களின் தோள்களின் மேலிருந்து உன்னைத் தொடர்கின்றன. நாங்கள் செய்த வாஜபேய யாகங்களினால் பெற்ற வெண்குடைகள் உனக்குப்பின் கூட்டம் கூட்டமாகச் சரத்காலத்தில் வெளுத்த மேகக்கூட்டங்களைப்போல் தொடர்வதைப் பார். இக்குடைகளால் உனக்கு நிழல்

திருகிறோம்" என்றார்கள். பின் அன்னப்பறவைகள் அன்ன வெளுத்த தலை முடிகள் உள்ள எங்கள் முடிகள் புழுதியில்படும்படி உள்ளன; வணங்குகிறோம்; விலங்குகளும் பறவைகளும் உன்னைத் திரும்புமாறு பிரார்த்திக்கின்றன. மரங்கள், மக்கள் இராமன் பின் செல்ல இருக்கும் வாய்ப்பைப் பெற்றதை எண்ணித் தாங்களும் எங்களுடன் வர முயல்கின்றன. ஆனால் அவை வேரோடு இருப்பதால் நடக்கவியலாமல் நின்றுவிட்டன. இம்மரங்களில் அணையும் காற்று, தான் இராமனைத் தொடரமுடியவில்லை எனப் பெருங்குரலுடன் அழுவதுபோல் இருக்கிறது. மரத்தில் உள்ள பறவைகள் மரத்திலேயே தங்கி விட்டன. உணவு தேடச் செல்லவில்லை" எனக்கூறி அழுகிறார்கள். தமசா நதி குறுக்கிடுகிறது. அதுவும் இராமனைப் "போகாதே" எனத் தடுப்பது போல் உள்ளதால், இரவில் சுமந்திரன் உதவியுடன் மக்கள் உறங்கும் வேளையில் இரதம் வடக்கு நோக்கிச் சென்றதுபோல் சிறிது தூரம் போக்குக் காட்டிவிட்டுத் தன் தென்திசைப் பயணத்தை இராமன் தொடர்ந்தான். பொழுது புலர்ந்தது; நிலையை மக்கள் அறிந்தனர், அழுதனர், அரற்றினர். "இங்குள்ள உலர்ந்த கட்டைகளாலும், இலைகளாலும் பெரிய நெருப்பை வளர்த்து அதில் விழுந்து உயிரை விடுவோம்" என்றனர். கன்றுகளை இழந்த பசுக்கள் போல் துயரத்தில் மூழ்கினர். வேறு வழியின்றி அயோத்திக்குத் திரும்புகின்றனர். அவர்கள் வீடுகள் பொலிவிழந்து தோன்றுகின்றன. இராமனில்லாத அந்நகரம் "ஆழமான மடுக்களிலிருந்த பாம்புகளைக் கருடன் தூக்கிக்கொண்டுபோன பின், ஒளியிழந்த நதிகள் போலும், நிலா இலா விண்போலும், நீர் வற்றிய நெடுங்கடல் போலும்" அந்நகர் விளங்கியதாம். இந்த ஒரு நிகழ்வில் பல இயற்கைச் செயல்பாடுகளைக் கையாண்டு இராமனைப் பிரிந்த அயோத்தி கொண்ட அவலத்தை வடிக்கிறார் கவிஞர்.

மேலும் ஓர் இயற்கை தாலாட்டும் இனிய காட்சியைச் சித்திரகூடத்தின் செழுமையிலே காட்டுகிறார் கவிஞர்.

சித்திரகூடத்தில் தங்கியிருந்தபோது இராமன், அதன் எழிலைச் சீதைக்கு எடுத்துக்கூறுகிறான்.

"இங்குள்ள சிகரங்கள் விண்ணை அளாவும் உயரத்தை உடையவை, இவற்றில் பல தாதுக்கள் நிறைந்து அளவற்ற செல்வச் செழிப்பில் விளங்கு கின்றன. இவற்றுள் சில இடங்கள் வெள்ளிபோல் வெளுத்திருக்கின்றன. சில இடங்கள் இரத்தத்தைப்போல் சிவந்து காணப்படுகின்றன. சில இடங்கள் இந்திரநீலம், புட்பராகம், ஸ்படிகம், பாதரசம் இவற்றின் நிறத்தை ஒத்திருக்

கின்றன. சில இடங்கள் வெளுப்பும் கறுப்பும் கலந்த நிறத்துடன் காணப்படு கின்றன. பல பறவைகள் மகிழ்ச்சியில் ஒலி எழுப்புகின்றன; விலங்குகள் பகை மறந்தன! சாந்தமுற்றன. மா, நாவல், வேங்கை, வெள்ளலொத்தி, முரளை, பலா, தவம், அழுஞ்சில், பவ்யம், தினிசி, பில்வம், பச்சிலை, மூங்கில், கொம்மட்டி, வேம்பு, மாவலிங்கை, இலுப்பை, மஞ்சாடி, இலந்தை, கடம்பு, பிரம்பு, மருதை, மாதுளை முதலிய மரங்களை அவற்றின் மலர்களும் பழங்களும் மறைத்து நிற்கின்றன. இந்த மலை அருவிகளாலும் ஊற்று நீர்களாலும், மதம் பெருகும் பெரிய யானையை நிகர்த்தது; பன்னிற மலர்கள் சுமந்து செல்லும் மணம், குகைகளிலிருந்து வெளிவரும் காற்றோடு கலந்து இன்பமூட்டுகிறது. இங்கு உள்ள புகழ்பெற்ற ஔஷதச் செடிகள் இரவில் ஒளிவீசுகின்றன. சில குகைகள், வீடுகள் போலத் தோன்றுகின்றன. இந்த மலை, பூமியைப் பிளந்து ஆகாயத்தைப் பிடிக்கும் முயற்சியைக் கொண்டு விளங்குகிறது. தாமரை இதழ்கள் பரப்பப்பட்ட படுக்கைகள், இயல்பாக அமைந்துள்ளன. இந்திர உலகையும் மிஞ்சுகிறது; மானச ஏரியைவிட அழகில் விஞ்சுகிறது. இம்மலை அழகு, எனக்கு இரண்டு நன்மைகளைச் செய்கிறது. ஒன்று, என் மனத்திற்கு அமைதியைத் தருகிறது; மற்றொன்று, பரதனுக்கும் மகிழ்வைத் தருகிறது.

(அயோத்தியா காண்டம் சர்க்கம் 94, பக். 321-322)

அடுத்து மந்தாகினி நதியை வருணிக்கிறான் இராமன் :—

> "நதியில் மணற்குன்றுகள் தெரிகின்றன; அன்னங்களும் பிற பறவைகளும் தாமரை மலர்கள் நடுவில் தனிச் சுகத்துடன் விளையாடுகின்றன; காட்டு விலங்குகள் இறங்கிக் கலக்கியதால் குங்குமப் பூச்சைப் போன்று நீர், காட்சி தருகிறது".

இருடிகள் மான்தோல் உடுத்துப் புண்ணிய நதியில் நீராடுகிறார்கள்; சில முனிவர்கள் கைகளை உயர்த்திக் கதிரவனை வணங்குகிறார்கள். காற்றின் கடுமையால் மரங்களின் கிளைகள் அசைகின்றன. மலர்களும் இலைகளும் உதிர்ந்து ஆற்று நீருக்குப் போர்வை போர்த்தியதாக அமைந்து உள்ளன. சில இடங்களில் நீர், முத்துக்களைப் போல் தூய்மையாகத் தெரிகிறது. காற்றால் மலர்க் கொத்துக்கள், கரையில் ஒதுங்குகின்றன. மலர்க்குவியலின் அமர்ந்த சக்கரவாகப் பறவைகள் இனிய குரலில் தங்கள் பேடுகளை விளையாட அழைக்கின்றன. எங்கு நோக்கினும் அழகு; அழகின் சிரிப்பு, இனியவளே! இந்தச் சித்திரகூடத்திற்கு நகரங்கள் இணையாகா. உன்னைவிட இந்த மந்தாகினி நதி "எனக்கு" விருப்பத்தை வளர்க்கிறது.

ஐம்புலன் வென்ற முனிவர்கள் இந்நதியில் நீராடுவதால், அவர்கள் பாதத்தூளி பட்டு இந்நதி தூய்மையாகிறது.

(சர்க்கம் 95, பக். 323-324)

சுக்ரீவன் உள்ளிட்ட வானரர்களைக் கிட்கிந்தைக்கு அனுப்பிவிட்டு இராமன் இலக்குவனுடன் பிரஸ்நவன கிரி மலையில் தங்கியிருந்தார். இராமன் தானும் இலக்குவனும் தங்குவதற்குக் குகை ஒன்றைத் தேர்ந்தெடுத்தார். இங்குக் காணப்படும் மலை பல வண்ணங்களைக் கொண்டது; சோலைகளும் கொடிகளும் மலர்களும் நிறைந்துள்ளன. மயிலும் மற்றப் பறவைகளும் ஒலி எழுப்புகின்றன. இங்கு ஓடும் நதி அழகிய மங்கை போல் அழகானது; அதில் பல மரங்களும் மலர்களும் நிறைந்து காட்சி தருகின்றன.

மழைக்காலம் வருகிறது; கதிரவனின் கிரணங்களால் விண், கடல் நீரை முகந்து கார்த்திகை முதல் ஆடிமாதம் வரை நீர் என்ற கருப்பம் தரித்துப்பின் பிரசவிக்கிறது. மேகங்களாகிய படிக்கட்டுகள் வழியாக ஏறி, மலர் மாலைகளால் சூரியனை அலங்கரிக்க முடியும். விண்ணிலே மேகங்கள் விரைகின்றன. நீர் உண்ட மேகங்கள் அவை; அவை ஓரத்தில் வெளுத்தும் நடுவில் மாலைக் கதிரவனால் சிவந்தும் காணப்படுகின்றன; இது, விண்ணகப், தேகமெங்கும் பட்ட காயத்திற்கு மருந்திட்டு, வெள்ளைத் துணியால் கட்டப்பட்டிருப்பது போலவும் நடுவில் இரத்தம் கசிவது போலவும் காணப்படுகிறது. இங்குள்ள மலைகள் கரிய மேகங்களென்ற கறுப்பு மான் தோலையும், தூய மழைத் துளிகளென்ற வெளுத்த பூணூலையும் அணிந்து வேதமோதும் பிரம்மசாரிகள் போல் காணப்படுகின்றன. எழில் வண்டுகள் எழுப்பும் ரீங்காரம் இனிய இசையை ஒத்தது; தவளைகள் தரும் ஒலி, வாயால் தாளத்தின் சொல்கட்டுகளைக் கூறுவது ஒத்தது; மேகங்கள் எழுப்பும் ஓசை மிருதங்க நாதம் ஒத்தது; வண்ணமயில்கள் தோகை விரிப்பது, அவை நடனம் ஆடுவது ஒத்தது; நதிகள் மலர்களைச் சுமந்து விரைவாகச் செல்வது, மங்கையர் விரும்பிய கணவனைச் சேரும் முயற்சியில், நழுவிய ஆடைகளைக் கவனியாத நிலை ஒத்தது. தாமரை மலர்களில் தேனருந்தும் வண்டுகள் அங்கிருந்து எழுந்து கடம்ப மலர்களில் போய்த் தங்குகின்றன.

யானைகள் மதங்கொண்டன; காளைகள் மகிழ்ந்தன; சிங்கங்கள் இளைப்பாறுகின்றன. இந்திரனால் கொடுக்கப்பட்ட புண்ணிய நீரை மேகங்கள் என்ற குடங்களில் எடுத்துவந்து மலைகளுக்கு அபிஷேகம்

செய்கின்றன. சரத் காலத்து இரவு, நிலவு என்ற வெள்ளைச் சந்தனத்தால் பூசப்பட்டது போலும்! அன்னங்களும், சக்கரவாகங்களும் மழைக்காலத்தில் பல இடங்களுக்குப் போய்விட்டு வந்து, இறக்கைகளை விரித்துத் தாமரைத் துளிகள் படிந்த ஆற்றின் மணல் திட்டுகளில் விளையாடுகின்றன. இரவுப் பெண் முழுமதி முகத்தையும், விண்மீன் கண்களையும், நிலாக்கதிர் பட்டாடைகளையும் உடுத்தியிருக்கிறாள்.

இத்துணை இயற்கை எழிலும், பறவைகள், விலங்குகள் செயலும் இராமனிடத்தில் விரகதாபத்தை ஏற்படுத்துகின்றன. சீதையை எண்ணி வருந்துகிறான். இராமனின் பிரிவாற்றாமையை, இத்துணை நயம்பட எடுத்துரைக்கிறான் கவிஞன்; சித்திர கூடத்தில், இராமன் சீதையுடன் இயற்கையை மகிழ்ச்சியால் போற்றுகிறான்; இங்கு சீதையின் பிரிவால் எழுந்த சோகத்தால் சாம்பிக் கூறுகிறான்.

இனி அத்யாத்ம இராமாயணத்திலிருந்து இரண்டொரு இயற்கை வருணனைகளைக் காண்போம்.

வீடணன், தனது நான்கு அமைச்சர்களுடன் இராமனைச் சரணடைகிறான். சுக்ரீவன், சாம்பவான், போன்றோர், வீடணனின் சரணாகதியை ஏற்கக் கூடாது எனக் கூறுகின்றனர். ஆனால், இராமன் அடைக்கலம் புகுந்தவனைக் காப்பது கடன் என்பதால் வீடணனை ஏற்பதாகக் கூறுகிறான். வீடணனின் மகிழ்ச்சிக்கும் நெகிழ்ச்சிக்கும் அளவில்லை; அவன் இராமனைப் பார்த்து

"மூலம் நீ! முழுமை நீ
தாயும் நீ! தந்தையும் நீ!
நிர்க்குணத்தன் நீ! நிருவிகற்பர் நீ!
அணுவுக்குள் அணுவும் நீ! எல்லாமாய் ஆகி நின்றாய் நீ!"

என்று போற்றுகிறான்.

மேலும், மக்கள் பாவ புண்ணிய வசத்தால் பிறப்பு இறப்புப் பெறுகிறார்கள். மாயையில் சிக்கி மயங்குகிறார்கள். அவர்களுக்கு முத்துச் சிப்பி, வெள்ளி என்று தோன்றுகிறது என உவமிக்கிறான், கவிஞன்.

(அத்யாத்ம இராமாயணம்,
யுத்தகாண்டம் 3-வது சருக்கம், பக். 296.)

சேதுவில், இராம சேனைகள் அணைகட்ட எண்ணுகின்றன. கடல் கொந்தளிக்கிறது. சமுத்திரராஜன், இராகவனை வந்து காணவில்லை, இராமன் சினங்கொண்டு கோதண்டத்தை வளைத்து நாணேற்றி அம்பைத் தொடுத்துச் சமுத்திர ராஜனைச் சாம்பலாக்குவேன் என்கிறான். இராகவனின் சினம் கண்டு பூமிதேவி நடுங்கினாள்; அட்டதிக்கு யானைகள் திடுக்கிட்டன; பத்துத் திசைகளிலும் இருள் மூண்டது. கடல்கள் கலங்கின. அதில் உள்ள திமிங்கலம், முதலை, மகரம் முதலியவை பரிதவித்தன; முடிவாகக் கடல் ஒரு யோசனை தூரம் தன் இடம் விட்டுப் பின்தங்கியது.

(அத்யாத்ம இராமாயணம், சருக்கம் 3, பக். 300)

கவிஞன் கடலின் காட்சியை இவ்வாறு நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறான்.

இராமனும் இலக்குவனும் பம்பை நதியை அடைகிறார்கள். அந்தப் பம்பை நதி ஆழமானது; அதில் தாமரைகள் மலர்ந்துள்ளன. அல்லிகள் அலர்ந்திருக்கின்றன. பன்னிற மலர்கள் பரந்து நின்றன, அன்னங்களும் இதரப் பறவைகளும், நீந்தி மகிழ்கின்றன. அவை எழுப்பும் இனிய இசை ஒலி கேட்கிறது. அந்நதிக் கரையில் கொடிகள் சூழ்ந்தன, கனிகள் நிறைந்தன. பம்பை நதியின் தண்ணீர், தூயவர் உள்ளம்போல் காட்சியளிக்கிறது. தாமரை தரும் நறுமணமும் வியாபித்திருக்கிறது.

(அத்யாத்ம இராமாயணம்' காண்டம் 1, பக். 648–649)

காளிதாசனின் "இரகுவம்சத்தில்" கூறப்படும் சில இயற்கைக் காட்சிகள் :—

அவையடக்கம் கூறும் கவிஞன், "சூரியவம்சம் என்பது ஒரு இரத்தினம் போன்றது. அதில் வான்மீகி, இராமாயணம் என்னும் ஒரு துளையிட்டார். வஜ்ரத்தினால் துளையிடப்பட்ட இரத்தினத்தில் நூல் எளிதில் புகுந்து செல்லும். அதுபோல் இராமாயணம் என்ற துவாரத்தையுடைய இச்சூர்ய வம்சத்திலும் எனது நூல் செல்ல இயலும், பொன் தூய்மையானதா அல்லது வேறு உலோகக் கலப்பால் ஆனதா என்பது தீயிடையிட்டால் தெரியும். அதுபோலப் பெரியோர்களே ஒரு காவியத்தின் குணத்தையும் குற்றத்தையும் எடுத்துக்காட்ட வல்லவர்கள் என்று கூறுகிறார்.

(இரகுவம்சம் - காளிதாசன், முதல் சர்க்கம், பக். 3)

அடுத்து, பாற்கடலில் பிறந்த சந்திரன் போல, மனுவின் வம்சத்தில் திலீபன் பிறந்தார் என்று திலீபன் என்ற மன்னன் பிறந்ததை இயற்கையோடு தொடர்புபடுத்திக் கூறுகிறார்." (மேலது - பக். 7)

திலீபன் ஆற்றலன்; குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கும் குணம் உடையவன்; அதே நேரத்தில் கருணை அவனிடத்தில் குடிகொண்டிருந்தது, இது எவ்வாறு இருக்கிறது !

திலீபன், கடலைப் போன்றவன்; அதில் திமிங்கிலம் போன்றவை இருப்பதால் அச்சத்தைத் தருகிறது; ஆனால் அதே கடலில் கடல்முத்து, பவளம் இருப்பதால், அக்கடலை, நாம் அணுகுகிறோம். இவ்வாறு, கடல், அஞ்சத்தக்கதாகவும் அணுகத்தக்கதாகவும் இருப்பது போல் திலீபனும் சில குணங்களில் அஞ்சத்தக்கவனாகவும், சில குணங்களில் அணுகத் தக்கவனாகவும் இருந்தான். (மேலது - பக். 9)

திலீபனுக்குச் சுதட்சிணை என்பவள் மனைவி, குழந்தை இல்லை என்ற குறை நீங்க, வசிட்டரைக் கண்டு வர ஒரே இரதத்தில் அமர்ந்து சென்றனர், இருவரும் இரதத்தில் செல்வது, வானவில்லும் மின்னலும் இணைந்து செல்வது போலத் தோன்றியதாம். கானகம் குறுக்கிடுகிறது. மயில்கள் அகவுகின்றன. ஆண் மயில், பெண் மயில் அகவல் வெவ்வேறு குரலாய் ஒலித்தது. அவற்றின் இனிய ஒலி, இசையில் கூறப்படும் ஷட்ஜம் என்ற சுரத்திற்கு ஏற்றாற்போல் இருந்தது. அடுத்து, சாரசப் பறவைகள், இனிய குரல் எழுப்பி வரிசையாகச் சென்றன. அது. திலீபனை வரவேற்கக் கட்டிய தோரணங்கள்போல் தோன்றினவாம். (மேலது பக்கம் 19-21)

இரகு மன்னனின் மகன் அஜன் என்ற சூரிய வம்ச மன்னனுக்கு, இந்துமதி என்ற அழகிய மனைவி. இந்துமதியுடன் இனிது வாழ்ந்தான். தயரதன் என்ற மகன் பிறந்தான். அவன் ஆயிரம் கிரணங்களை உடைய கதிரவனுக்குச் சமமாகத் திகழ்ந்தான் அஜனுக்கு மகன் பிறந்ததால் தேவர் கடன், இருடிகள் கடன், பிதிர் கடன் என்ற மூன்று கடன்கள் உண்டு. முதல் இருகடன்களையும் அஜன் முன்பே முடித்துவிட்டான். தற்போது மகன் பிறந்ததால் மூன்றாம் கடனும் முடிந்துவிட்டது. இது எவ்வாறு இருக்கிறதென்றால், கதிரவனைச் சுற்றி இருக்கும் பரிவேஷம் நீங்கியபின் கதிரவன் ஒளியுடன் விளங்குவதுபோல் உள்ளதாம், (மேலது பக். 381)

அஜன் மனைவி இந்துமதி, உடல்நலமின்றி இருக்கிறாள். அஜன் வருந்தும் கையறுநிலையைக் கவிஞன் மிக இயல்பாக இயற்கையோடு இயைத்துக் கூறுகிறான்.

"இந்துமதி! தாமரை மலரில் தேனருந்தும் வண்டுகள் கதிரவன் மறைவால் அத்தாமரை மலர்களில் சிறைப்படுகின்றன. துன்பத்தால் அவை ஒலி எழுப்பாது; அது போல் உன் குரலொலியும் நின்றது. க்ருஷ்ணபட்சத்தில் சந்திரனுக்கு இரவுடன் சேர்க்கை இல்லை. ஆனால் சுக்ல பட்சத்தில் சேர்ந்து விடலாம் என்று சந்திரனும், பிரிந்த பெண்சக்கரவாகப் பறவையைப் பொழுது விடிந்ததும் அடைந்துவிடலாம் என்று ஆண் பறவையும் நப்புவதால் வருந்தவில்லை. ஆனால் உன்னை முற்றிலும் இழந்த எனக்கு நிம்மதி ஏது? ஆறுதல் எவ்வாறு கிடைக்கும்? நீ! அணிந்துள்ள ஒட்டியாணம் உனது உயிர்த்தோழி! இப்போது அதுவும் ஒலிக்கவில்லை. இதோ இங்கிருக்கும் மாமரத்தையும் அதைச் சார்ந்த ப்ரியங்குக் கொடியையும் கணவனும் மனைவியு மாகச் சேர்த்து வைக்க விரும்பினாய். இவை இனி முடியாமல் போய்விடும்: நீ வைத்து வளர்த்த அசோக மரம் முதல் மலரைத் தரவிருக்கிறது. இனி அதை உன் தலையில் சூடவியலாது" என ஒரு துன்பவியல் காவியமாகவே செல்கிறது இப்பகுதி.

(மேலது பக். 412 — 418)

விசுவாமித்திரர் தம் தவத்தைக் காக்க, இராம இலக்குவர்களை அழைத்துச் செல்கிறார். முனிவர் பின் இராம இலக்குவர் செல்கின்றனர். அக்காட்சி சித்திரைக்குப் பின் வைகாசி வருவதுபோல் இருக்கிறது. சித்திரையும் வைகாசியும் வசந்தத்தின் வாளிப்பான மாதங்கள். கதிரவன் ஒளியுடன் வருகிறான். மரங்களில் தளிரும், மலரும், காய்களும், கனிகளும் கண்கவர் காட்சியாய்த் தோன்றுகின்றன. இந்த இயற்கை எழிலாய் இம் மரங்கள் சிறந்து விளங்குகின்றன. அதுபோல், இராம இலக்குவரும் ஒளியுடன் திகழ்கின்றனர்.

வடமொழியில் "உத்யம்" என்பதற்குத் தண்ணீரைப் பெருக்குவது என்றும், "பித்யம்" என்பதற்குக் கரையைப் பிளப்பது என்பதும் பொருள். மழைநீர் மிகும்போது அந்நதிகள் தங்கள் பெயருக்கேற்ப வெள்ளத்தைப் பெருக்கியும், வெள்ளத்தின் வேகத்தினால் கரைகளை இடித்தும் செல்லும். அதைப்போல் இராம இலக்குவர்கள் தம் இளமைத் தோற்றத்திற்கேற்ப வேகமான நடையுடன் விசுவாமித்திரரைப் பின் தொடர்ந்தனர்.

(மேலது பக். 586 – 587)

இராவணனை வென்ற பின், இராமர் சீதையுடன் விண்ணில் புட்ப விமானத்தில் வந்து கொண்டிருக்கிறார். அப்போது கடலைச் சீதைக்குக் காட்டுகிறார். அதில் தன்னால் எழுப்பப்பட்ட அணையையும் காட்டுகிறார். அந்த அணை மலய பர்வதம் வரை நீண்டிருக்கிறது. அதைச் சீதையிடம் கூறி, "வைதேகி, நுரைகளுடன் கூடிய இக்கடல் இடை எழுப்பப்பட்ட இந்த

அணை, கடலை இரண்டாகப் பிரித்துக் காட்டுகிறது. சரத் காலத்தில் மேகங்களின்றித் தெளிவாக விளங்கும் விண்ணில், விண்மீன்கள் நிறைந்து காணப்படுகின்றன, அதன் இடையில் ஒளிவீசும் வழி ஒன்று தென்படும். அவ்வழியினால் விண்ணகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதுபோல் தோன்றும். அதைப் போன்று இக்கடலும் அலையும் காட்சி தருவதைப் பார்'' என்று கூறுகிறார்.

மேலும், இக்கடல், தனது அலையாகிய உதட்டினால், தனது மனைவி நதிகள் பலவற்றையும் ஒரே காலத்தில் தொட்டுச் சுவைக்கிறது. அவ்வாறே அந்நதிகள் எல்லாவற்றிற்கும் தனது அலையாகிய உதட்டை ஒரே காலத்தில் சுவைக்கவும் வாய்ப்புத் தருகிறது (மேலது பக். 749 – 757)

இப்படி இயற்கை வருணனைக் களஞ்சியமாகத் திகழ்வது இரகுவம்சம்.

கம்பனின் கவித்துவ வீச்சின் முழுப் பரிமாணத்தையும் நாம் அவன் காட்டும் இயற்கையில் கண்டு மகிழலாம். நாட்டுப்படலத்தில் கோசலநாட்டு வளத்தைக் கூற வருகிறார், கவியரசர். கோசல நாட்டின் வரப்புகளில் முத்துக்கள் உள்ளன. மதகுகளில் எல்லாம் சங்குகள் உள்ளன. வாய்கால் களின் செய்கரைகளில் செம்பொன் கட்டிகள் உள்ளன. எருமைகள் படிகின்ற பள்ளங்களில் எல்லாம் செங்கழுநீர் மலர்க் குவியல்கள் உள்ளன. பரம்பு அடிக்கும் இடங்களில் பவழங்கள் உள்ளன செந்நெல் விளைந்த இடங்களில் எல்லாம் அன்னப் பறவைகள் உள்ளன. பக்கத்தில் உள்ள கரும்புகளில் சிறந்த தேன் உள்ளது. அழகிய சோலைகளில் தேன் பருகிக் களித்த வண்டு களின் கூட்டங்கள் நிறைந்தன.

ஆறு பாய்கிற ஒலி, உழவர்கள் கரும்பு ஆலையில் எழுப்பும் ஒலி, கருப்பஞ்சாறு பாயும் ஒலி, எருதுகள் பொருதும் ஒலி, நீரில் எருமைகள் விழுந்து எழுப்பும் ஒலி போன்ற பல ஒலிகள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டு ஒலிப்பன,

அடுத்து, மருதம் வீற்றிருக்கும் அழகு, சோலையே நடன அரங்கு. அதில் மயில்கள் என்னும் ஆடல் அழகிகள் நடனம் செய்கின்றனர், தாமரைக் கொடிகளாகிய பணிப்பெண்கள் தாமரை மலர்களை விளக்குகளாக ஏந்தி நிற்கின்றன. மேகங்கள் மத்தளம் போல் ஒலியை எழுப்புகின்றன. நீர் நிலைகளில் தோன்றும் அலைகள் திரைச்சீலைகளாகக் காட்சியளிக்கின்றன. வண்டுகள் மகர யாழ் இசையெனப் பாடுகின்றன. கருங்குவளை மலர்களே பார்வையாளர்கள்.

மற்றொரு இனிய கற்பனை:—

வயல்களில் அன்னங்கள் குஞ்சுகளைப் பெருமைமிக்க தாமரை மலர்ப் படுக்கையில் கிடத்தின. அங்கு எருமைகள் உள்ளன. அவை தாய் அன்பினால் ஊரில் விட்டுவந்த தம் கன்றுகளை நினைக்கின்றன. அதனால் அவற்றின் மடியிலிருந்து பால் ஒழுகியது. அதை அன்னக்குஞ்சுகள் உண்டு தூங்கு கின்றன, பச்சை நிறத் தவளைகள் தாலாட்டுகின்றன.

அடுத்து அயோத்திக் காண்டத்தில் இராமன், இலக்குவன், சீதை வனம்புகு படலத்தில் இயற்கை வருணனைக் காட்சிகளில் சில:—

கதிரவன் இளநிலாப் போலக் கதிர்களை வீசுகிறான்; செறிந்த மரங்கள் நிழலைத் தருகின்றன. விண்ணில் தோன்றும் மேகம் பனிபோன்ற குளிர்ந்த நீர்த் திவலைகளைத் தருகின்றது; இளந்தென்றல் நறுமண மலர்களின் மணத்தைத் தழுவி மெல்ல வீசுகிறது. மயில்கள் நடனம் ஆடும் காட்டுவழியில் மூவரும் நடந்து செல்கின்றனர். இராமன் சீதைக்கு இயற்கையின் எழிலை வியந்தோதிக் காட்டி வருகிறான்.

இந்திரகோபங்களின் கூட்டங்கள் காடெங்கும் பரவுகின்றன. கொன்றை மரங்களின் மலர்த் தொகுதி மீது படிகின்றன. அது இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற பொன் மாலைகளாய் விளங்குகின்றன. அடுத்து, மலர்மீது சிவந்த வாயையுடைய பைங்கிளிகள் அமர்ந்துள்ளன. மயில்கள் வருகின்றன. மான் இனங்கள் வருகின்றன. குராமரமும் பிடவ மரமும் தரும் மலர்கள் மலர்ந்து உதிர்ந்தன. அங்கு ஓர் ஆண்மயில் உறங்கி எழுகிறது. அதன் தூவி இனிய மணத்தைச் சுமந்து நிற்கிறது. இதை உணரும் அதன் பெண் மயில், இந்த ஆண்மயில் வேறு பெண் மயிலுடன் கூடியதால் இந்த இனிய மணம் கொண்டது என ஊடியதாம்.

இப்படிப் பற்பல காட்சிகள்!

அடுத்து கிட்கிந்தா காண்டத்தில் 'கார்காலப் படலத்தில்', இராம் இலக்குவர்கள் பிரஸ்ரவண மலையில் தங்கியிருக்கிறார்கள். கார்காலம், இராமன், அநுமன் முதலியவர்களைச் சீதையைத் தேட அனுப்பு முன்னரே தெற்குத் திசைகளின் விடுத்த தூதுவன் போல் கதிரவன் வடதிசையினின்றும் தென்திசை நோக்கிச் செல்கிறான். பூமியாகிய அகலில், கடல் நீராகிய நெய்யில், மேரு மலையாகிய திரியில் கதிரவன் ஒளிக் கற்றையில் வானமாகிய

கலயத்தில் மை கூட்டினாற்போன்று நீர்கொண்ட கரிய மேகம் வானின் பரந்த காட்சி தெரிகிறது. கரிய நீருண்ட மேகங்கள் மதயானையை ஒத்தன. மின்னல்கள் போல் வாள்கள் மின்னின; வீரர்கள் பொருதினர்; மின்னல் வீச்சு மதநீர் சொரியும் யானைகள் பட்ட புண்கள் போன்றது; இராமன் மீது மன்மதன் மலர்க்கணைகளைச் சொரிந்தாற் போல் மேகங்கள் நீர்த்தாரைகளைக் குன்றின் மேல் இட்டன. பொருள் ஈட்டச் சென்ற தலைவன் வரவால் துறந்த உயிர் மீண்டது போல் நெட்டுயிர்க்கும் தலைமகள் போல உலவை மரக்கிளைகள் மழைவர மணம் செறிய தழைகளுடன் தனி விளக்கம் பெற முகம் மலர்ந்தன. கார்காலத்தில் செங்காந்தள் மலர்கள் விரிந்து சாய்ந்துள்ளன. அது பூமகள் 'கார்காலம் வசந்தத்தை வென்றது' என வியந்து தடுத்தாற் போன்றிருந்தது.

இப்படி இப்படலம் முழுதும் இயற்கை வளைந்து நெளிந்து வரும் ஆறாகப் பெருக்கெடுத்தோடுகிறது.

(கார்காலப் படலம் — கிட்கிந்தா காண்டம்)

சுந்தர காண்டம், பொழில் இறுத்த படலத்தில், அசோக வனத்தில் சீதையிடம் சூளாமணி பெற்று அங்கிருந்து புறப்பட்டான் அனுமன். விடை பெற்ற அனுமன் அரக்கர்களை வருத்தி ஓடச் செய்து தன் முழு வலிமையினைக் காட்ட விரும்பினான். இங்குள்ள சோலையை அழித்தால் அரக்கர்கள் தன்னை எதிர்த்துப் போரிட வருவார்கள்; இராவணனும் போருக்கு வருவான். அவனை அப்பொழுது அழித்துக்கொன்று தன் மனம் படும் பெருந்துன்பத்தைத் துடைக்கலாம் என எண்ணினான்.

அசோக வனத்தைத் தன் வலிமை மிகுந்த கால்களால் தாக்கி அழித்தான். அனுமனின் கால்பட்ட ஆற்றலால் அசோக வனத்து மரங்கள் பல அழிந்தன; பிளந்து போயின; வளைந்து போயின; நொறுங்கிப் போயின; மடங்கிப் போயின; வீழ்ந்தன; துண்டுகளாய்த் தெறித்தன; எரிந்தன; கரியாய்ப் போயின; ஒடிந்தன; துவண்டு சாய்ந்தன; உதிர்ந்தன. சில மரங்கள் வேரொடு பெயர்ந்தன, சில வானகத்தே மேகத்தோடு நெருங்கின. சில காற்றினால் அடித்துச் சென்று கடலில் வீழ்ந்தன. சில வண்டுகளுடன் வானவரின் ஊரிலே சென்று மோதின; சில சிந்தின; சில உருவிழந்தன. அனுமன் சுழற்றி எறிந்த மரங்கள் எட்டுத் திக்குகளில் உள்ள யானைகளுக்கு உணவாயின, மேல்நோக்கி வீசப்பட்ட சில மரங்கள் தேவர்களின் சிங்காரச் சோலைகளைச் சிதைத்தன. கடலில் வீழ்ந்த மரங்களால் அலைகள்

அலைப்புண்டன. சில மரங்கள் மலைகளில் மோதிப் பொடியாயின. அம் மரங்களின் வெண்ணிற மலர்கள் வானத்தினின்றும் விழும் விண்மீன்களுடன் கலந்து கீழே சிந்தின; சிதறின: ஒளிரும் அசோக வன மரங்கள் பல திசைகள் பரவுவது, மின்னல்கள் திரிவது ஒத்தன. கடலில் வீழ்ந்த மரங்களில் இருந்த பறவைகள், வண்டுகள், தேனீக்கள், மலர்கள், அரும்புகள், தளிர்கள், காய்கள், தேன் ஆகியவற்றை மீன் கூட்டங்கள் விழுங்கி மகிழ்ச்சியால் துள்ளின. விண்ணிலே படர்ந்த மரங்கள் இராவணனது அசோகவனம் போன்றது. அனுமன், அசோக வனத்தை அழித்ததால் பறவைகள் எழுப்பும் ஓசையும், ஒடிபடும் மரங்களால் எழும் பேரோசையும் அனுமனின் பெருமுழக்கம் பிறப்பிக்கும் ஒலியும் இவ்வண்டத்திற்கும் அப்பாலும் சென்று பரவின. இப்பகுதியில் இவ்வாறு கம்பனின் சொல்லும் பொருளும் விரவியும் பரவியும் செல்கின்றன.

இராமன், இளையவனான இலக்குவனுக்கு இலங்கையைக் காட்டும் "இலங்கை காண் படலத்தில்" கம்பன் பல உச்சமான கற்பனையை அடுக்கிக் காட்டுகிறான். இராமன், "சுவேல மலையின" உச்சியில் ஏறித் தம் தம்பிக்கு இலங்கையைக் காட்டுகிறான். இராகவன் அரச சிங்கத்தை ஒத்திருக்கிறான். சுக்ரீவன், விடணன் ஆகிய இருவருடன் போரில் வல்லவீரர்களும் சேர்ந்து வருவது சிங்கங்களும் புலிகளும் வருவதைப் போன்றன. இராமன் கிழக்கை விட்டு வடக்குத் திக்கிலுள்ள மலை ஒன்றில் தோன்றிய கதிரவன்போல் காட்சி அளித்தான். அவனின் திண்மையான கையும் காலும் முகமும் கண்களும் செந்தாமரைமலர்க்காடுகள் போல் விளங்கின. அவன் மேனி கரிய முகில் நிறம் போன்றது. வீரர்கள் நடுவில் விளங்கும் இராமன் பொன்மலை நடுவில் பொலியும் மரகத மலையின் மாட்சியை ஒத்து இருந்தான். சீதையைப் பிரிந்த இராமன் தன் பெட்டையைப் பிரிந்த ஆண் அன்றிலைப் போல் வருந்தினான். பின், இலங்கையின் எழிலை இராகவன் வியக்கிறான்.

அரிய கவிகளைப் புனையும் புலவர்கள், அயோத்தி முதலான நகரங்களுக்கு உவமை கூறும்போது, இந்திரனின் அமராவதியை ஒத்தது அந்நகரம் எனக் கூறுவர். ஆனால் அந்த அமராவதியிலும் பலமடங்கு உயர்ந்த இந்த இலங்கையை உவமையாக எடுத்துக் காட்டவில்லை. அப்புலவர் தன் தேவர் உலகிற்கும் இந்த இலங்கை நகருக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு அறியவில்லை. இலங்கை மாளிகைகளில் ஒளிமிக்க மணிகள் பதிக்கப் பட்டுள்ளன. அவை ஒளியை உமிழ்ந்துகொண்டிருக்கின்றன நாற்புறமும் ஒளி வீசுவதால் அவற்றினின்றும் சொரியப்பெற்ற ஒளிக்கூட்டம், வானம் அளவும் தொடர்கிறது. அது அனுமன் கொளுத்திய தீயால் இன்னும் எரிந்து கொண்டிருக்கும் காட்சியாக விளங்குகிறது. மாளிகைகள் மரகதத் தரையில் கட்டப்பட்டு இடையிடையே செம்மணிகள் பதிக்கப் பெற்று விளங்குகின்றன.

ஒளிக் கற்றைகள் எங்கும் பரந்துள்ளன. இது பொய்கையும், அதில் பூத்த தாமரை மலரும், அங்கு உள்ள அன்னப் பறவைபோல் காட்சி தருகிறது. சினங்கொண்ட யானைகள் செல்கின்றன. அவை பொன்னால் இயன்ற தரையிலே தம் கால் நகங்களால் ஆழமாகப் பதித்து, அதிலிருந்து எழும் பொன் துகளைத் துதிக்கையால் உடலில் பூசிக்கொண்டு பொன்மலை போன்று செல்கிறது. பொன்காம்பைக் கொண்ட சாமரங்கள் வீசுகின்றன. அதனால் உண்டாகும் காற்று அங்குள்ள கொடிகளை அசைக்கிறது. இக்காட்சி விண்ணில் பரவிய மேகமான மாசு நீங்குமாறு துடைத்து வானத்தை விளக்குவதுபோல் உள்ளது. மணிகள் தரும் ஒளி குதிரைகள் மேல் படிகின்றது. குதிரையின் இயற்கை நிறத்தை அறியாதவாறு தடுக்கிறது. அதனால் குதிரை இன்ன இன்ன இனத்தைச் சார்ந்தது என அறிய இயலாததாகவும் உள்ளது.

ஒட்டகங்கள் செல்கின்றன. மாடங்களில் பதிக்கப்பட்ட செம்மணிகள் வீசிய ஒளிக்கற்றையை தே, மா மரத்தின் துளிர்த் தொகுதிகள் என எண்ணி அவற்றைப் பற்ற முயல்கின்றன.

இப்படித் தொடரும் இனிய காட்சிகள்.

மானச இராமாயணத்திலும் இத்தகைய வருணனைகள் மிகுந்துள்ளன. அவற்றில் சில:—

இராமனைச் சீதை காண்கிறாள். இராமனின் அழகில் மயங்குகிறாள். ஆனால் நல்ல எண்ணமுள்ள தன் தந்தையின் முடிவை எண்ணிக் கவலை அடைகிறாள்; இராமனின் மங்கல உருவைத் தன் மனதில் எண்ணியவளாய் அவ்விடத்தினின்றும் திரும்பிச் செல்கிறாள். ஆனால் இராமனைப் பார்க்கத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாள். அதற்கும் ஒரு காரணம் வேண்டுமே! மானைக் காண்பது போலவும், பறவைகளைப் பார்ப்பது போலவும், மரங்களைக் காண்பது போலவும் பார்த்தாள். இனி சீதைமேல் கொண்ட காதலால் வருந்தும் இராமன் நிலையைக் கூறுகிறான் கவிஞன்; இரவு, முழுமதி வருகிறான். சீதையின் சுடர்முகமெனத் திகழும் முழுமதி. ஆனால், இராமன் உள்ளத்தில் கவலையும் பற்றுகிறது; அதாவது சீதையின் முகத்தை முழுமதியோடு ஒப்பிடுவது ஏற்றதல்ல. காரணம் இந்த சந்திரன் அமுதக் கடலில் தோன்றியவன். அமுதமும் நஞ்சும் கூடவே தோன்றின. அதனால் ஒரு வகையில் நஞ்சும் சந்திரனுக்கு ஓர் சகோதரன்தான்; அது மட்டுமா? பகலில் ஒளிவீசும் ஆற்றல் சந்திரனுக்கு இல்லை. முழுமதிகூடக்

களங்கத்தோடு காட்சி தருகிறான். சுக்ல பட்சத்தில் வளர்கிறான்; கிருஷ்ண பட்சத்தில் தேய்கிறான். பிரிவால் வருந்தும் காதலர்களுக்குத் துன்பம் தருகிறான்; கிரகணத்தின் போது பாம்பு அவனைப் பற்றுகிறது; சகோரப் பறவைகள் சந்திரன் பிரிவால் வருந்துகின்றன. தாமரை மலர்கள் மதியைக் கண்டதும் மூடிவிடுகின்றன. இத்துணைக் குறைகள் நிரம்பிய சந்திரன் எவ்வாறு சானகிக்கு நிகராக முடியும்?" என வைதேகியின் அழகினைப் புகழ்ந்து போற்றினான். (பாலகாண்டம், பக்கம் - 431, 432)

அடுத்து, அயோத்தியா காண்டத்தில் இராமன் கானகம் செல்ல ஆயத்தம் ஆகிறான்; நடந்தவற்றை அறிந்த சீதை தன் மாமியார் கௌசல்யாதேவியிடம் ஓடி வந்தாள். மருமகளை ஆசீர்வதித்தாள் கௌசல்யை. இராமனும் கௌசல்யையும் சீதையின் துயரை அறிந்தார்கள். இவ்விருவரும் சீதையை, அழகுக் குவியல்களோடு சேர்ந்த பதிவிரதை மணியெனக் கண்டார்கள்.

இராமனுடன் கானகம் ஏகும் கருத்தைத் தெரிவிக்கிறாள். இராமனின் சரண கமலங்கள் அஞ்ஞான இருட்டைப் போக்கவல்லது; அந்த ஒளியை உள்ளத்தில் எண்ணிக்கொண்டு தன் அழகான பாத நகங்களால் தாயாராகிய பூமியைக் கீறிக்கொண்டிருந்தாள். கௌசல்யாதேவி, தன் மருமகள் சீதை மீது எல்லையற்ற அன்பு பூண்டவர். தன் மருமகளைப் பற்றி மகன் இராமனிடம் கூறுகிறாள்:—

"இந்த சீதை எனும் கற்பக வல்லியைப் பல முயற்சிகளால் பலகாலம் அன்பால் பாற்கடலிலிருந்து கிடைத்த தூய நீரால் வளர்த்துவந்திருக்கிறேன். இந்தக் கொடி பூத்து, காய்த்து, கனி கொடுக்கும் வேளை, கல்நெஞ்சம் கொண்ட பிரமன், இவளை என்னிடமிருந்து பிரிக்கிறார். இவள் சஞ்சீவினிக் கொடி போன்றவள்; அதிக வெப்பம், அதிக குளிர் இல்லாத தூய சூழலில் வளர்ந்தவள். இராமா! இவள் உன் மதி ஒளி முகம் தரும் அழகை சகோர பட்சிகள் மதி ஒளியைக் குடித்து இன்புறுவது போலப் பருகி இன்புறுபவள்; அன்னப் பறவை, தேவர் உலகிலிருந்து அசைந்து நெளிந்து வரும் கங்கையில் பூக்கும் தாமரைக் காடுகளில் வசிக்கும் இயல்பு கொண்டது; அதைக் குட்டையில் வசிக்கத் தூண்டலாமா? அவளது எண்ணம் அறிந்து அவளது நன்மை கருதிச் செயல்படுவாய். சீதை என்னுடன் தங்கினால் எனக்கும் உதவியாக இருக்கும் என்று கூறினாள். இராமன் சீதை வனம் வருவதை விரும்பாதவனாய் வனத்தின் உள்ள இன்னல்களை எடுத்துக் கூறுகிறான். சீதையை நோக்கி, "உன் சரண கமலங்கள் மென்மையானவை; வனம் என்பது

குன்றுகளும், மலைப் பிரதேசங்களும், பயங்கரமான பிளவுகளும், குகைகளும் காட்டாறுகளும், நதிகளும், நீர்த்தேக்கங்களும் நிறைந்தது. கரடிகள், புலிகள், ஓநாய்கள், சிம்மங்கள், யானைகள் போன்ற விலங்குகள் நிறைந்தது. உனக்கு ஏற்றது குயில் கூவும், பூக்கள் நிறைந்த சோலை. முட்செடிகளும், ஒட்டகங்களும் நிறைந்த வனம் எவ்வாறு ஏற்றதாகமுடியும்? அயோத்தியில் கந்தமலர்களையும் பழங்களையுமே உணவாகக் கொள்ளவேண்டும். உனக்குத் தகுந்தது, மாம்பூக்கள் நிறைந்த மதுரசம் கொண்ட பழங்கள் நிறைந்த சோலையும் இதந்தருபவை" இவ்வாறு அவளுக்கு அறிவுரை கூறுகிறான். இந்தக் கருத்திற்கு சானகி உடன்படவில்லை.

இராமனின் அறிவுரைகள் நொந்துபோகும் ஜீவனுக்குக் கூறும் புத்திமதிகள் போலவும், சரத்ருதுவின் இரவில் சந்திரனுடைய குளிர்ந்த கிரணங்கள் பெண் சக்கிரவாகப் பறவையைத் துன்புறுத்துவது போல் இருந்தது. இராமனை நோக்கி, உடலை விட்டுப் பிரியும் உயிர் போலவும், நதியைவிட்டுப் பிரிந்த பிரவாகம் போலவும் நான் உம்மைவிட்டுப் பிரிந்தால் ஆகிவிடுவேன். உன் துன்பம் என் துன்பம். புல் படுக்கை மீதும் கல்லின் மீதும் அமர்ந்து உம்மோடு உரையாடுவது காமனின் அழகிய மஞ்சம் போன்று இனித்து இருக்கும். நீர் சாப்பிடும் கந்தமூல பழங்கள் எனக்கும் அமுதமெனத் தித்திக்கும். நீர் கடந்து செல்லவிருக்கும் வனத்தின் மலைகளும் குன்றுகளும் நாம் இப்போது சுகத்தில் வாழும் அயோத்தியில் உள்ள இன்ப மாளிகையாக இருக்கட்டும். உம்முடன் சமதளத்தில் பரப்பப்பட்ட புல், இலைகள் ஆகிய வற்றால் ஆன படுக்கையை விரித்து உனக்கு அடிமை செய்து உன் சரண கமலங்களை அண்டியிருப்பேன். காமேசுவரி சதாசிவனை நேசிப்பதுபோல் நான் உம்மை நேசிக்கிறேன்" என்றாள். பின் இராகவன் சீதை வனத்திற்கு வர இசைவை அளிக்கிறான். (மேலது, அயோத்யா காண்டம், பக் 86—107)

கிட்கிந்தா காண்டத்தில் சுக்ரீவன், அங்கதன், அனுமன், சாம்பவான் முதலியவர்களிடம் சீதை இருக்குமிடம் கண்டுவர ஆணையிடுகிறான். அப்போது இராமனுடைய உயர்வையும், புகழையும் எடுத்துக் கூறுகிறான். "இராம நாமத்தை உச்சரித்து, அதன் பலனை நாராயணன் அன்பிற்குச் செலுத்துவேன் என எண்ணுகிறவன், வேருக்கு நீர் வார்த்தால், இலை, கொடி, தண்டு, பூ, காய், கனி ஆகிய அனைத்திற்கும் பயன்படும். அந்நீர்போல்

திருமாலுக்கு அன்பு செய்து, அவனுக்குத் திருப்தி ஏற்படுத்தியது என்பது உலகும் திருப்தி அடையப் பெறுகின்றதாகும்" என்றான். இங்கு நீர் கரும் பலன்போல் இராமநாம பலன் எங்கும் வியாபித்திருக்கும் பேற்றைக் கூறுகிறான். (மேலது கிட்கிந்தா காண்டம், பக். 82–83)

சுந்தர காண்டத்தில், அசோக வனத்தில் சீதை படும் துயரை வருணிக்கிறான் கவிஞன். சீதை உயிரைவிடத் துணிகிறாள். அக்னியில் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணுகிறாள். திரிசடை பல நன்மொழிகளைக் கூறி, சீதைக்கு ஆறுதல் கூறுகிறாள். ஆனால், சீதைக்கு மனதில் பல போராட்டங்கள், தன் நிலையை எண்ணி வருந்துகிறாள், புலம்புகிறாள். சீதை, "விண்ணில், விண்மீன்கள் ஒளிவிட்டு மின்னுகின்றன. பூமியில் இத்தகைய ஒளி ஏதும் இல்லை. நிலா என்மீது சுடும் கதிர்களைப் பாய்ப்பு கிறான், அவை என்னிடம் மிகக் குளிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. அசோக மரமே! எனக்கு மகிழ்ச்சியைத் தரவேண்டும். அசோக மரமே! உன் மென்மையான இளந்தளிர்கள்கூட எனக்குத் தீயெனச் சுடுகிறதே. என்னுள் விரகதாபத்தை ஏற்படுத்துகின்றதே! உன் இலைகள் பொன்னிறமானவை. ஆனால் என் மனதை அவை சுடுகின்றனவே!" என்றுகூறி வருந்துகிறாள். பின், "சீதே! உனக்கு நல்லகாலம் வருகிறது; விரைவில் இராமனைச் சேர்வாய்" என்பது போல அந்த அசோகக் கொடி அவளைத் தாவி அணைத்தது. (மேலது, சுந்தரகாண்டம், பக்கம் 146–150)

யுத்த காண்டத்தில், அசுர சேனைகளும், வானர சேனைகளும் மோதுகின்றன; பேரொலி எழுப்புகின்றன. அது சரத் காலத்திலும் வர்ஷ காலத்திலும் பலமான காற்றினால் இழுத்துச் செல்லப்படும் மேகங்கள் ஒன்றோடு ஒன்று மோதி அதனால் ஏற்படும் பேரொலியாய்க் கேட்கிறது.

(மேலது, லங்கா காண்டம், பக்கம் 146)

முடிவாக,

இயற்கை, இன்பத்தை அளிப்பது. முருகியல் உணர்வைத் தருவது. கடவுள் தன்மையைக் காட்டுவது. எல்லா நாட்டுக் கவிஞர்களும் இயற்கையின் குழந்தைகளாகவே தம்மைக் கூறிக்கொள்கின்றனர். நமது சங்ககாலச் சான்றோர்கள் இயற்கையோடு தம்மை இணைத்து மகிழ்பவர்கள்; மலையிலே, அருவியிலே, மரங்களிலே, மலர்களிலே, நிலவினிலே, சோலை ஒளியிலே தம் கவிதையின் காலடியைப் பதித்து மகிழ்பவர்கள். இயற்கை உலகத்தோடு உறவு கொண்டவர்கள்; பாடம் கற்றவர்கள். நற்றிணையில், ஒரு தாய் தன் மகளிடம், அங்கிருந்த புன்னை மரத்தை அம் மகளுக்குத் தமக்கை போன்றவள் என்று கூறுகிறாள். அம்மகள் மணம் முடிகிறது; அம்மரத்தருகில் அவள் நிற்கும்போது அவளுடைய காதலன் காதல் குறிப்பு மலர நோக்குகிறான. அப்பெண், தம் தமக்கையாகிய புன்னை மரத்தருகில் நிற்க நாணி அங்கிருந்து செல்கிறாள்:–

"விளையாடாயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே"

என்ற நற்றிணை 172ம் பாடலில் இந்த இனிய இயற்கை நிகழ்ச்சி, காட்சிக்கும் கருத்திற்கும் விருந்தாக அமைவது.

இதேபோன்று ஆங்கிலக் கவிஞர்களும் இயற்கையைப் போற்றித் தம் பாக்களிலே பதித்து வணங்குபவர்கள். உவர்ட்ஸ்வர்த் (Wordsworth) என்ற ஆங்கிலக் கவிஞரின் இயற்கை ஈடுபாட்டைப் பற்றி அவரது ஆய்வாளர் டிகுவன்சி (De Quency) கூறும்போது "உவர்ட்ஸ்வர்த் கவிஞனின் இயற்கைத் தாகம், அவர் இரத்தத்தில் கலந்தது. பட்டுப் புழுவிற்கு மல்பெரி இலை எப்படி முக்கியமோ அத்துணை முக்கியம் அவருக்கு இயற்கை; இயற்கையிலே வாழ்ந்தும் சுவாசித்தும் கொண்டுமிருப்பவர்" என்று அக்கவிஞனின் இயற்கை ஈடுபாட்டைக் கூறுகிறார்.

"இயற்கைக்கும் வாழ்க்கை உண்டு;
இயற்கைக்கும் இனிய நெறி உண்டு"

என்று கூறுபவர் உவர்ட்ஸ்வர்த் (Wordsworth).

"வசந்த கால
நீலச் செடி தரும்
கோல அசைவிலே
மனிதனின் தீமை நன்மை செறிதல் நெறிகளை
முனிவரினும்
முற்றக் கூறும் முருகியல் இயற்கை."

"One impulse from a vernal woad*
May teach you more of man
of Moral evil and of good
Than all the sages can" (Tables Turned by Wordsworth)

முடிவாக, இயற்கையின் இனிய காட்சி ஓசை, உயர் பண்பு ஆகியவற்றில் குளித்துத் திளைக்கும் கவிஞர்கள் அன்றும் இன்றும் என்றும் தம் படைப்புகளுக்கு இயற்கையையே உற்ற துணையாகவும் பற்றுக்கோடாகவும் கொள்வர்.

---

* Woad – நீல நிறச்செடி.

# சேக்கிழார் காட்டும் வாழ்வியல்நெறி

முதுமுனைவர் ம. சா. அறிவுடைநம்பி,
தலைவர்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 005.

தமிழ் இலக்கிய வரலாற்றில் 'தெய்வப்புலவர்' என்று சிறப்பிக்கப் பெறுபவர் இருவராவர். ஒருவர் 'தெய்வப்புலவர்' திருவள்ளுவர்; மற்றவர் 'தெய்வப்புலவர்' சேக்கிழார். தெய்வ அருள்பெற்று நூல் இயற்றியோர் அல்லது தெய்வத்தன்மை எய்தியோர் என்று இவர்களை இயம்பலாம். 'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' எனப் புகழப்படும் தொண்டை நாட்டில் குன்றத்தூரில் வேளாண்குடியில் தோன்றிய சேக்கிழார் அருளிய பெரியபுராணத்திற்குத் தனியானதொரு சிறப்புண்டு.

பெரியபுராணத்தில் பேசப்பெறும் சிவனடியார்கள், பல்வேறு ஊரினர்; பல்வேறு காலத்தினர்; பல்வேறு மரபினர். அவருள் ஆடவர் உண்டு; மகளிர் உண்டு; அரசர் உண்டு; எளியரும் உண்டு. ஆனால் இவர்கள் அனைவரும் சிவபிரானையே முழுமுதற் பரம்பொருளாகக் கொண்டு ஒழுகியோராவர். தாம் எடுத்த கொள்கையினின்று எத்துணை இடர்ப்பாடுகள் வந்தபோதும் பிறழா மாண்பினர். இவ் அடியார் பெருமை கூறும் இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' ஆகும். ஆயின் இன்று 'பெரிய புராணம்' என்பதே பெருவழக்காயுள்ளது.

தெய்வப்புலவர் திருவள்ளுவர், "ஒத்த பிறப்பினராய மக்கள் இனத்தாருள், மனத்தைத் தீயநெறியினின்றும் விலக்கி நன்னெறியிற் செலுத்து தலாகிய அரிய செயல்களைச் செய்வோரே பெரியர்; அவ்வாறு மனத்தை ஒருநெறிப்படுத்தும் அறிவு வன்மையின்றி மனம்போனபடி எளிய செயல்களைச் செய்வோர் சிறியர்" என்னும் பொருள்பட,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்" (திருக்குறள்—26)

என்று கூறினார். இப்பெரியபுராணத்தில் பேசப்படும் அடியார்கள் அனைவரும் இக்குறளுரைக்கேற்ப வாழ்ந்துகாட்டிய அருளாளர்கள். செயற்கரிய செய்த பெரியவர்கள். எனவேதான் இது 'பெரியபுராணம்' எனப் புகழப்படுவதாயிற்று.

"செயற்கரிய செயல் செய்த பெரியோர் வரலாற்றைக் கூறுவதாலும், ஓதுவோருக்குப் பெருமை சேர்ப்பதாலும், சிவன் பெருமையை, அச் சிவபிரான் அடியார்க்கு எளியனாக எழுந்தருளிய அருமையில் எளிய பெருமையை எடுத்து விளக்குவதனாலும், முன்னும் பின்னும் இதனை யொத்த பெருமையுடைய நூல் தோன்றாமையாலும் பெரியபுராணம் என்று பாராட்டப்பெறுகிறது"

குன்றக்குடி அடிகளார்,
பெரியபுராணச் சொற்பொழிவுகள், ப. 20

என்று குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுவதும் இக்கருத்துக்கு வலுவூட்டுவதாகிறது.

சேக்கிழார் அமைச்சராக இருந்தமையினால் தமிழகம் முழுவதும் களப்பணியாகச் சென்று பல்வேறு செய்திகளைச் சேகரித்துத் தாம் பாடிய காப்பியத்தில் அவற்றைப் பதிவு செய்துள்ளார். தமிழ்நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், நாகரிகப் பண்பாடுகளையும் கருவாகக் கொண்டு, பிற மொழிச் சார்பின்றித் தமிழில் எழுதப்பெற்ற பெருமை இந்நூலுக்குண்டு. சுருங்கச் சொன்னால் தமிழ்ப் பண்பாட்டின் உறைவிடமாகவும் தமிழக வரலாறாகவும் வையத்துள் வாழ்வாங்கு வாழ விரும்பும் மனித குலத்திற்கு வழிகாட்டியாகவும் இந்நூல் விளங்குகிறது. எவ்வெவர் எவ்வத் தொண்டு செய்கிறார்களோ அவ்வத்தொண்டின் வழியே இறைவன் வெளிப்படுவதை நாயன்மார்களின் வரலாறுகளில் காணமுடிகின்றன.

சேக்கிழார் பாட எடுத்துக்கொண்ட காப்பியக் கதைமாந்தர்கள் அடியார்கள், கற்பனைப் பாத்திரங்கள் அல்லர். இவர்கள் இந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் தோன்றிப் பணி செய்தவர்கள். இக்காப்பியத்தில் இடம்பெறும் வாழ்வியல் நெறிகள், கூறுகள் போன்றவற்றை விரிப்பின் பெருகும். எனவே இக்கட்டுரையில் ஒருசில கூறுகளை மட்டும் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமுடையதாக இருக்கும்.

## திருமணம்

பெரியபுராணத்தில் பல்வேறுவகைப்பட்ட திருமணச் சடங்கு முறைகள் குறிப்பிடப்படுகின்றன. திருமணத்திற்கு முன்பு, மணமகனின் வீட்டைச் சார்ந்த முதியோர் சிலர், பெண்ணின் பெற்றோரை நாடி மணம் பேச வருவர் (காரைக்கா. 16, மானக்கஞ்சாற. 16) அங்ஙனம் மணம் பேச வருவோர், அறிவின் மிக்கோராயும் இருப்பர். பெண்ணின் குலம் மட்டுமின்றி அவளின் குணத்தையும் விரும்பினர் (திருநாவுக். 23) இதையே சி. கே. சுப்பிரமணிய முதலியார்,

> "மணம் செய்தற்கண் உளங்கொள்ள வேண்டிய இன்றியமையாத பொருள்கள் 'குலம், குடி, உரிமை' என்ற இம்மூன்றுமாம் என்பது முந்தையோர் வழக்கு" (திருநாவுக். புராணம் 3, 17)

என்பார்.

திருஞானசம்பந்தருக்கு அவரது பெற்றோர் திருமணம் செய்ய நினைத்துச் 'சாதக முறைப்படிச் சடங்கு' பார்த்ததாகச் சேக்கிழார் கூறுவதன் மூலம் சாதகம் பார்த்தலும் உண்டு என்பதை அறியமுடிகிறது.

(திருஞானசம். 1043)

மகட்பேசவரும் முதியோர் ஒத்த குடியும், மரபும் பார்த்தலோடு இவற்றிலும் மேலாய 'சிவனடித் திறமுடைமை'யையும் கருதினர்.

(மானக்கஞ்சாற. 16)

இக்காலத்தில் மணமகனுக்குப் பணம் பெரிதும் தருதலாகிய வழக்கம் இருப்பதுபோல, அந்நாளில் பெண்ணுக்கு விலையாகப் பணம் கொடுத்தனர் என்னும் செய்தியை அறியமுடிகிறது (திருஞானசம். 480).

இருவீட்டாரும் பேசி முடித்தபின், பெண்ணின் பெற்றோர், தம் மகளைக் கொடுக்க இசைவு தெரிவிப்பர் (திருநாவுக். 24).

இவை மணநிகழ்ச்சியின் இன்றியமையாத முதற்பகுதியாகும். இதில் இருந்தே மணவினையும் தொடங்குகிறது.

இங்ஙனம் இருதிறத்தாரும் "இன்னானுக்கு இன்னவள்" எனப்பேசி, உறுதி செய்துவிட்டால், அதில் மாற்றம் எதுவும் நிகழக்கூடாது. எதிர்பாராத விதமாகத் திருமணம் தடைப்பட்டால், பின் விளைவு யாது என்பது குறித்துச் சேக்கிழார் 'திலகவதியார்' வரலாற்றில் பின்வருமாறு கூறுகின்றார்.

"எந்தையும்எம் அனையுமவர்க் கெனைக்கொடுக்க விசைந்தார்கள்
அந்தமுறை யால்அவர்க்கே உரியதுநான் ஆதலினால்
இந்தவுயிர் அவருயிரோ டிசைவிப்பன் எனத்துணிய" (திருநாவுக். 32)

முற்பட்டபோது, மருணீக்கியர், அவர்தம் அடியிணையில் விழுந்தார். எனவே, தம் தம்பிக்காக உயிர் தாங்கினார் திலகவதியார்.

எனவே, திருமணப் பேச்சு முடிவானபோதே, ஆன்றோரால் உறுதி செய்யப்பட்டவனையே மணமகளாக எண்ணி வாழும் பெற்றியும், மணமகளாக ஆகப்போகும் ஒருத்திபால் இருந்தது என்ற நிலையையும் காணமுடிகின்றது. இத்தகு நிலையை இக்காலத்தும் சில குடும்பப் பெண்கள் கடைப்பிடித்து ஒழுகி வருவதைக் காணமுடிகிறது.

பொதுவாகப் பண்டைநாளில் மணப்பருவம் ஆணுக்குப் பதினாறு வயதும், பெண்ணிற்குப் பன்னிரண்டு வயதுமாகக் கணக்கிடப்பட்டது என்பதை இறையனார் களவியல் உரை (சூத். 1) கூறுகிறது. பெரியபுராண காலத்தும் இது வழக்கில் இருந்ததாகக் கருதமுடிகிறது.

நம்பியாரூரர், சிறுதேர் உருட்டும் பருவமாகிய மூன்றாவது வயது முதல் மணப்பருவமாகிய பதினாறாவது வயது வரை அரசரது அரண்மனையில் காதற்பிள்ளையாய் வளர்ந்து வந்தார் (தடுத்தாட் - 6) திருஞான சம்பந்தர் புராணத்தில்,

"திருவளர்ஞா னத்தலைவர் திருமணஞ்செய் தருளுதற்குப்
பருவமிது வென்றெண்ணி அறிவிக்கப் பாங்கணைந்தார்"

(திருஞானசம்—1155)

என்பதில் வரும் 'பருவம்' என்பதற்குச் சிவக்கவிமணி, "திருமணப்பருவம், இஃது ஆண்பாலார்க்குப் பதினாறாட்டைப் பருவத்தில் நிகழுமென்பது தமிழ் மரபு" என்று விளக்கம் தருகின்றார்.

திருமணத்திற்கு உறுதி செய்யப்பட்டபின், மணநாள் குறித்து 'ஓலை' எழுதுதல் மரபு. இதற்கு 'நாளோலை' அல்லது 'திருநாளோலை' என்று பெயர். (காரைக்கா—10)

மணமாகும் ஆடவனின் வலது கையிலும், பெண்ணின் இடது கையிலும் 'கயிறு' கட்டுதல் மரபு. இக்கயிறு 'பொன்நாண்' எனப்படும். கட்டிய

நாளிலிருந்து மணநாள் வரை அவிழ்ப்பது கிடையாது. மணமக்களை எந்தத் தீமையும் அணுகாதபடி காவல் செய்வதாகலின் இதற்குக் 'காப்பு' என்று பெயர். 'வேறுபல காப்பு' 'வரையுறை கடவுட் காப்பு' என்பர் சேக்கிழார், (தடுத்தாட்—12, திருஞானசம்—43, கண்ணப்ப—18)

மணநாளன்று மணமகனைக் குதிரைமீது அமரச்செய்து மணவீட்டிற்கு அழைத்து வருதலும் உண்டு. மங்கல மகளிர் நிறைகுடம், விளக்கு, தூபம், மலர்மாலை, முளைப்பாண்டில், புணுகு, கத்தூரி முதலிய வாசனைப் பொருள் களை நன்கு உறைத்துக் கட்டிய கலவைச் சாந்து ஆகியவற்றை ஏந்தி மணமகனை வரவேற்பது மரபு. (தடுத்தாட்—19, திருஞானசம்—1227, 1228)

திருமண நாளன்று நகரையும் திருவீதிகளையும் திருமனையையும், நிறைகுடம், விளக்கு முதலியவற்றால் அலங்கரிப்பர். (திருஞானசம்—1170)

மணமகனின் கால்களைப் பால்கொண்டு நீர்வார்த்து விளக்குதல், மணமகளைப் பெற்ற அன்னையார் செய்தலும் உண்டு. திருமணத்தின்போது, 'கன்னியைக் கொடுத்தேன்' என்று சொல்லி நீர் வார்த்து, மணமகளை மணமகனது கையில் ஒப்படைத்தல் மரபு. (திருஞானசம்—1232)

இந்நாளில் மங்கலநாண் பூட்டுதலுக்கு நல்ல நேரம் பார்ப்பது போல, அன்றும் இவ்வழக்கம் இருந்தது. இதனைச் சேக்கிழார் 'பழுதில் நற்பொழுது நண்ண' என்பார். (திருஞான—1236) ஆளுடைய பிள்ளையாரின் திருமண நிகழ்ச்சியை,

"பிள்ளையாரது திருவடி விளக்கப்பெற்றது: அவர், தூமலர்த் தவிசின் மேல் எழுந்தருளியிருந்தார்; அகில் தூபம் சுற்றிலும் மணம் பரப்பியது; மணியணி விதானம், மேலே விளங்கிற்று; மடவார் வாழ்த்தொலி எழுப்பினர்; சூழ இருந்த மறையோர் மறைமொழிகளால் ஏத்தினர். வெண்பொரியை வேள்வித் தீயிலிட்டு ஆகுதி செய்து உரிய மந்திரம் பாவனைகளுடன் இறைவனை ஏத்தும் சடங்கு நிகழ்ந்தது"

(திருஞான—1231, 1322, 1237)

என்று சேக்கிழார் விளக்குகின்றார்,

மணமகளது கழுத்தில் மணமகன் மங்கலநாண் பூட்டுவதும் மரபாயிருந்து வந்துள்ளது. மணச்சடங்குகளில் இதுவே மிகமிக இன்றியமையாதது. 'மங்கலநூல்' மட்டுமே அணிதலும், மங்கல நூலுடன் தாலியும் சேர்ந்து அணிதலும் உண்டு எனக் கருதலாம் (குங்குலியக். 9) 'அப்பொன் மணிநூல்' (திருநாவுக். 34) என்று சேக்கிழார் இதனைக் குறிப்பர். திருநாண் பூட்டிய மணமகன், தன் துணைவியின் கையைப் பிடித்தல் மரபு. இதனைப் "பாணிக்கிரகணம்" (பாணி — கை, கிரகணம் — பற்றுதல்) என்று கூறுவதுண்டு (மானக்கஞ்சாற. 20). மணம் முடித்தபின் 'தாம்பூலம்' முதலியன வழங்குவர் (தடுத்தாட். 20) இரு வீட்டு உறவினர்களும் ஒருங்குகூடிப் புறப்படுவர், அக்கூட்டம் முன்பைவிடப் பெருகிக் காணப்படும் (மானக்கஞ்சாற 36).

இவ்வாறு சேக்கிழார் வாழ்ந்த காலத்தில் வாழ்வியல் நெறியோடு தொடர்புடைய திருமண நிகழ்ச்சிகள், சடங்குகள் போன்றவை சிறந்த முறையில் விளங்கின.

## சமுதாயப் புரட்சி

சேக்கிழார் வாழ்ந்த காலம், தமிழகத்தில் சாதி வேறுபாடுகள் மிக்கோங்கிய காலம்; சாதிகளுள் உயர்வு தாழ்வுகள் கற்பிக்கப்பட்ட காலம்.

> "இக்காலத்தில் (பிற்காலச் சோழர் காலத்தில்) ஏற்பட்ட மிக முக்கிய சமூக மாறுதல், கிளைச்சாதிகளின் வளர்ச்சியாகும். ... ... தொழில் மட்டுமின்றி, சமூகப் பழக்கவழக்கங்களும் வாழ்க்கை முறைகளும், இன வேற்றுமைகளை வலுப்படுத்தின. பொது விருந்துண்ணுவதிலும், கோயிலின் பல பகுதிகளுக்குள் செல்வதிலும் தனி உரிமைகள் நிலைபெறலாயின, இடையிடையே உரிமைகளுக்காகச் சாதிகளுக்கு இடையே பகை மூண்டபோதிலும், ஒவ்வொரு வகுப்பைச் சார்ந்தவர்களுக்குள்ளே சமூக வாழ்க்கையில் ஒருவாறு ஒற்றுமை நிலவியது. கீழ் வகுப்பினரின் நிலை வரவரத் தாழ்ந்துகொண்டே போயிற்று என்பது மறுக்கமுடியாத உண்மை."
>
> (கே. கே. பிள்ளை, தென்னிந்திய வரலாறு முதற்பகுதி, ப. 195)

என்று கே. கே. பிள்ளை குறிப்பிடுகின்றார். இதனை மனத்துட்கொண்டு சேக்கிழாரின் பெரியபுராணத்தை ஆராய்ந்தால்தான் அவர், தமது நூல் வாயிலாக எத்தகைய சமூகப் புரட்சிகளைச் செய்துள்ளார் என்பது தெரிய வரும். சேக்கிழார் ஓர் அமைச்சராக இருந்தமையாலேதான், துணிச்சலாகச் சிலவற்றை அவரால் பாடமுடிந்தது என்று கருதமுடிகிறது. இதற்கு ஒரேஒரு சான்றை மட்டும் இவண் காண்பது பொருத்தமுடைத்தாகும்.

தமிழகச் சாதிகளுள் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுவது "ஆதிசைவ அந்தணர்" குலம். இறைவனது திருமேனியைத் தீண்டுதற்குரியர் இக்குலத்தவரேயாவர். உயரிய குலத்தில் அவதரித்தவர் சுந்தரமூர்த்தி நாயனார் என்று அழைக்கப்பெறும் நம்பியாரூரர். இவர் 'பிறந்தார்' அல்லது 'தோன்றினார்' என்று கூறாமல் 'திரு அவதாரம் செய்தார்' என்று சேக்கிழார் கூறுவதைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அவதாரம் செய்தற்குரியவன் இறைவன் ஒருவனே! ஈண்டு இறைவனாக நம்மால் வழிபடுதற்குரியவர் நம்பியாரூரர் ஆதலின், சேக்கிழார் 'திருஅவதாரம் செய்தார்' என நயமாகக் குறித்துள்ளார்.

இவ் உயரிய குலத்தில் தோன்றிய நம்பியாரூரர், அக்காலச் சாதி வழக்கப்படி தமது ஆதிசைவ அந்தணர் குலப்பெண்ணை மணமுடிக்கும் வேளையில், சிவபெருமானே, மனித உருத்தாங்கி வந்து அத்திருமணத்தைத் தடுத்துவிட்டனன்.

திருக்கயிலையில் இருந்த 'அந்தமில்சீர் அனிந்திதை'யும், 'கந்தமாலைக் கமலினி'யும் இறைவன் திருவருளால், தமிழகத்தில் முறையே சங்கிலியாராகவும் பரவையாராகவும் பிறந்தனர். நம்பியாரூரர், இவ்விருவரையும் மண முடித்தார். ஆனால் இவர்கள் ஆதிசைவ அந்தணர் மரபைச் சார்ந்தவரல்லர்.

பரவையார், திருவாரூரில் 'உருத்திர கணிகை' எனப்படும் 'பதியிலார் குலத்'தில் தோன்றியவள். அவளைக் கண்டு காதலுற்றுக் கடிமணம் செய்த ஆரூரர், திருவொற்றியூரில் வேளாண் மரபில் வந்த சங்கிலியாரையும் கண்டு காதல் கொண்டு மணமுடித்தார். இஃது எத்துணைச் சமுதாயப் புரட்சி என்று எண்ணிப் பார்த்தல் வேண்டும்,

இதுபோன்று பல சமுதாயப் புரட்சிகளைச் சேக்கிழார்தம் பெரிய புராணத்தில் காணலாம்.

## இல்லற மாண்பு

பெரியபுராணத்தில் இடம்பெறும் நாயன்மார்களில் 24 பேர் இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தனர். திருஞானசம்பந்தர் திருமணம் செய்தவராயினும் திருமண நாளன்றே "மன்னு சோதியினுட் புக்கார்" (1253) ஆதலின் இல்லற வாழ்வை மேற்கொள்ள வாய்ப்பில்லை. இந்நூலில் காணப்பெறும் இல்லற நாயன்மார்கள் அரன்பணி செய்வதையும், அடியார்பணி செய்வதையுமே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (திருக்குறள் 86)

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (திருக்குறள் 90)

எனும் குறட்பாவுக்கேற்ப இல்வாழ்க்கை வாழ்ந்து, சிவனடியார்க்கு விருந்து பேணியவர் இளையான்குடிமாறர்.

வீட்டுக்குவரும் அடியாரை எதிர்கொள்வார்; கைகுவித்து வணங்குவார்; இன்னுரை பகர்வார்; வீட்டிற்குள் அழைத்துச் செல்வர்; அன்னார்தம் பாதம் விளக்குவார்; ஆசனத்தில் இருத்துவார்; அருச்சனை செய்வார்; நால்வகை உண்டியை அறுசுவையுடன் அளிப்பார்; வறுமை வந்துற்றபோதும் விருப்புடன் செய்து வருவதை உலகம் அறியவேண்டும் எனத் திருவுள்ளம் கொண்ட இறைவன், நற்றவத்தார் வேடம் கொண்டு, மாறனார் மனைக்கு வந்தார். மாரிக்காலம்; வீட்டில் எதுவும் இல்லை. அந்நிலையில் 'ஈர நென்முளைகை வாரிக் கொடுவந்து' மனையாளிடம் கொடுக்க, அவ்வம்மையாரும், அதனை வாங்கி, வறுத்தபின் அரிசியாக்கி, ஆக்கிய உலையில் பெய்து, இன்னடிசிலாக்கி அடியார்க்கு அமுதூட்ட விழைந்த வரலாற்றைச் சேக்கிழார் இனிதெடுத்தியம்புவார். மனைத்தக்க 'மாண்புடையளாகி' (திருக்குறள் 51) என வள்ளுவர் மொழிக்கேற்ப வாழ்ந்து காட்டியவர், இளையான்குடி மாறனாரின் துணைவியராவர்.

மேலும் அப்பூதியடிகள், இயற்பகையார், சிறுத்தொண்டர், திருநீலகண்டர், அமர்நீதி நாயனார், அரிவாட்டாயர், கலிக்கம்பர், கலிய

நாயனார், கழற்சிங்கர், குங்குலியக்கலையர், திருநீலநக்கர், மானக்கஞ்சாறர் மங்கையர்க்கரசியார், புனிதவதியார் போன்றோர்தம் இல்வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சேக்கிழார் எடுத்தியம்பியுள்ளார்.

இல்லறவாழ்க்கை மேற்கொண்டொழுகிய சிவனடியார் அனைவர்க்கும் அங்ஙனம் ஒழுகுதற்கு உறுதுணை புரிந்தவர்கள் அவர்களின் இல்லக்கிழத்தியரேயாவர் என்பது பெரியபுராணம் காட்டும் பேருண்மையாகும். மேலும் தம் இல்லத்திற்கு அடியார் வந்தால் அவரை எதிர்சென்று வரவேற்றல், அவர்தம் திருவடிகளைக் கழுவுதல், அன்போடு உணவருந்துதல், வாழைக்குருத்தில் உணவு படைத்தல், அடியார் முன்பு அமராதிருத்தல், அவர்பால் திருநீறு பெறுதல், தம் வீட்டை அலங்கரித்தல், எங்கேனும் அடியாரைக் கண்டால் நிலமுற வீழ்ந்து வணங்கல் என்பன பெரியபுராணம் காட்டும் பண்புகளாக உள்ளன. பிள்ளைகளுக்குத் தாம் வழிபடும் தெய்வங்களின் பெயரைவைத்து வழங்குவது அந்நாள் மரபாகும்.

திருநீலகண்டர் எனும் அடியார் ஒருநாள் பரத்தைபால் அணைந்து தம் இல்லத்திற்கு வந்தார். இதனையறிந்த இவர்தம் மனைவியார், 'தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்' என்றார். அன்றுமுதல் 'மாதரார் எவரையும் மனத்தினாலும் தீண்டேன்' எனச் சூளுரைத்த திருநீலகண்டர், அடியார் பணியை ஆர்வமுறச் செய்துவந்தார். இவர்தம் இல்லற மாண்பை உலகுக்கு உணர்த்த விழைந்த இறைவன், ஓடு கொடுத்து உண்மையை வெளிப்படுத்தினன் என்பது இவர்தம் வரலாறு. இவர் வாழ்க்கை மூலம் சிறந்ததொரு பண்பாட்டைச் சேக்கிழார் எடுத்தியம்பியிருப்பதைக் காணமுடிகிறது.

**பண்பாடு**

பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் பல்வேறு பண்பாடுகள் குறித்தும் இயம்பியுள்ளார். ஓரேயொரு நிகழ்ச்சியை மட்டும் இவண் சுட்டிக்காட்டுவது நலம் பயக்கும்.

பண்டைத் தமிழகத்தில் களவு மணமும் கற்பு மணமும் மேலோங்கி நின்றன; களவொழுக்கத்தில் ஈடுபடும் காதலர், பெற்றோர் உடன்படாத சமயத்தில் உடன்போக்காகப் போவதுண்டு. தன் மனதிற்கினிய மங்கை நல்லாளை அவளின் பெற்றோர் அறியாவண்ணம் அழைத்துச் சென்று, தன் ஊரில் பல்லோர் அறிய மணமுடித்தல் வழக்கம். இதனைத்

தொல்காப்பியம் முதலான பண்டைத் தமிழ்ப் பனுவல்கள பரக்கப் பேசும். இதனை உட்கொண்டு சேக்கிழாரும் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றார்.

திருச்செங்காட்டங்குடியில் இருந்த திருஞானசம்பந்தர் அதனருகே உள்ள திருமருகல் என்ற தலத்திற்கு வழிபாடு செய்வதற்காக வந்து சேர்ந்தார்.

அந்நாளில், வணிகன் ஒருவன் தனக்கேற்ற கன்னிப் பெண்ணை அழைத்துக்கொண்டு, திருமருகல் வந்தவன், இரவுப்பொழுது ஆனதால். கோயிலருகே உள்ள திருமடம் ஒன்றில் தங்கினான். இரவு அவர்கள் அயர்ந்து தூங்கும்போது. அவ்வணிகனை அரவம் ஒன்று தீண்டியது; விடம் தலைக்கு ஏறியது; அவன் மாண்டுபோனான்; அருகே இருந்த அக்கன்னிப்பெண் உண்மை உணர்ந்தாள்: தளர்ந்தாள்; சோர்வுற்றாள். தன் காதலனை அவ்வரவு தீண்டி அவன் இறந்த நிலையிலும் திருமணமாகாததால், அவனைத் தீண்டவில்லை. முன்பின் அறியாத ஊராயிருந்தமையால், அவளுக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்வாரில்லை. சிங்கம் போலிருந்த அவனை அரவம் தீண்டியது கண்டு அரற்றும் அவளது நிலைக்கிரங்கிய மருத்துவர்களும் மந்திரங் கூறுவாரும் வந்து முயற்சி செய்தும் பலனில்லை. நீண்ட இரவுப் பொழுதும் கழிந்தது. காலை வந்தது. மாலையும் வந்துற்றது. அப்பெண்,

> "மன்னியசீர் வணிகர்குல மாணிக்கமே! உன்னையே நம்பி என்னைப் பெற்ற அன்னையையும் அத்தனை (தந்தை)யும் பிரிந்தேன்; 'நீயே எனக்குப் புகலிடம்' என்றெண்ணி, உன்னுடன் உடன்போக்காக வந்தேன். நீயோ, இப்போது அரவு தீண்டியதால் என்னைவிட்டு உயிர் நீங்கினாய்! இனி, இப்பாவியேன் என் செய்வேன்! இப்பெரிய இன்னலைத் தீர்ப்பார் ஒருவருமில்லையே! இனி யான் உயிர் வாழேன்?"

என்று பலவாறு புலம்பி இறைவனிடம் முறையிட்டழுதாள். அவ்வேளையில் சம்பந்தர் திருமருகல் கோயிலுக்கு வழிபடச் சென்று கொண்டிருந்தார். அக்கன்னிப்பெண்ணின் ஓலம் அவர் காதில் விழுந்தது. அருகிலிருந்த அடியார் வாயிலாக உண்மை அறிந்தார். அவளிருக்குமிடம் சென்றார்; அவளைக் கண்டார்; "நீ அஞ்சேல்! உனக்கு உண்டான துன்பம் யாது? உன் வரலாறு யாது" என்று வினவினார் சம்பந்தர். இதைக்கேட்ட அக்கன்னிப்பெண் தன் வரலாற்றைப் பின்வருமாறு சொல்கின்றாள்.

> "அண்ணலே! என் தந்தையார், வைப்பூர் என்ற ஊருக்குத் தலைவர். 'தாமன்' என்ற பெயரினர். இங்கே அரவம் தீண்டப்பெற்றதால் இறந்து கிடப்பவர், என் தந்தைக்கு மருகர், என் தந்தையர்க்கு ஏழு

பெண்கள்; மூத்த மகளை இவர்க்குக் கொடுப்பதாக என் தந்தை முன்பு வாக்களித்திருந்தார். இவர் ஏழையானதால், இவர்க்குக் கொடுக்க மனமின்றிச் செல்வவளம் மிக்க வேறொருவருக்கு அவளை மணமுடித்து வைத்தார். இவ்வாறே அடுத்தடுத்த பெண்ணையும் தருவதாகக்கூறி இவரை ஏமாற்றிவிட்டார் என் தந்தை. இதனால் இவர் படும் துன்பத்தைக் கண்ணாற் கண்டவளாதலின், இவரது துயரத்தைப் போக்கத் துணிந்தேன்; இவரையே என் கணவனாகக் கொள்ள முடிவு செய்தேன். எனவே என் பெற்றோர் அறியா வண்ணம் "உடன்போக்கு" மேற்கொண்டேன். வரும் வழியில் இம்மடத்தில் தங்கினோம்; அரவு தீண்ட மாண்டார். இப்போது நடுக்கடலில் கலம் கவிழ்ந்தாற்போல் அல்லற்படுகின்றேன். யான் செய்த நல்லூழின் பயனாகக் கருணைக்கடலாகிய தாங்கள் இங்கு வந்து தோன்றியுள்ளீர்கள்; என் பெருந்துன்பம் ஒழியத் திருவருள் புரிய மன்றாடுகின்றேன்."

கற்றவர்கள் தொழுதேத்தும் காழிவேந்தர் இவ்வுரை கேட்டார்; கருணைகூர்ந்து அவளது துன்பம் ஒழியுமாறும், பாம்பு விடம் நீங்குமாறும் திருமருகல் இறைவனை வேண்டிச் "சடையாய் எனுமால்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் (சம்பந்தர் தேவாரம் 2. 18) பாடலுற்றார். எம்பெருமானின் திருவருளால் வணிகனும் விடம் தீர்ந்து எழுந்து நின்றான். அடியார்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இவ்வரிய நிகழ்ச்சியைக் கண்டு விம்மிதமுற்ற அக்கன்னிப்பெண்ணாள், தன் கைகளை உச்சிமேல் வைத்துக்கொண்டே, சம்பந்தப் பெருமான் திருவடி விழுந்தாள்; வணிகனும் விழுந்தான். புகலி வேந்தர் இறைவன் திருமுன்னிலையில் அவ்விருவருக்கும் திருமணமும் செய்து வைத்தார்.

தன் மாமன் மகனாக இருந்தும், அவனையே விரும்பி மணமுடிக்கப் போவதாக இருந்தும், அவனோடு உடன்போக்காக வந்தபிறகும், அவன் அரவு தீண்டி இறந்த நிலையிலும், அவன்மீது விழுந்து புரண்டோ, அவனைத் தீண்டியோ எதுவும் செய்யாமல், அவனுக்கு அப்பாலிருந்தே அரற்றினாள்; கதறினாள். இவ்வரிய தமிழ்ப் பண்பாட்டினைச் சேக்கிழார் "வாளரவு தீண்டவுந்தான் தீண்ட கில்லாள்" (திருஞானசம். 474) எனும் அரிய தொடர் மூலம் காட்டுவது எண்ணியெண்ணி இன்புறத்தக்கது.

அரற்றிக்கொண்டிருக்கும் கன்னிப்பெண்ணை நோக்கிச் சம்பந்தர் "பயப்படேல் நீ! பருவரலும் நும்பரிசும் பகர்வாய்" என்று கேட்ட கேள்விக்கு அக்கன்னிப்பெண், தன் தந்தை வரலாறு, தன் உடன்பிறந்தார் வரலாறு, தந்தை செய்த செயல், அதனால் மனமுடைந்த மருகன், தனது உடன்போக்கு, இப்போது அரவு தீண்டிய அவலநிலை ஆகிய அனைத்தையும் விடாமற் சொல்லிவிடுகின்றாள்.

செத்தவன் உயிர் பிழைத்தான் என்பதைவிட, சமூகம் போற்றும் உயர் ஒழுக்கங்களைப் பின்பற்றி நிற்பார்க்கு, இறைவன் திருவருள் உண்டு என்பதையே இந்நிகழ்ச்சியும் எடுத்துக்காட்டுகிறது.

## முடிவுரை

தெய்வச் சேக்கிழாரின் பெரியபுராணத்துள் நுழைந்தால் இத்தகைய அரிய தமிழ்ப் பண்பாடுகள் பலவற்றைக் கண்டு இன்புறலாம். அந்நாளில் இருந்த ஊர்ச்சபைகளை அறியலாம். அவர்கள் வழக்குரைத்த பாங்கைக் கண்டு களிக்கலாம். அக்காலச் சமுதாயத்தில் நிகழ்ந்த சடங்குகள், விழாக்கள், சமூகப் பழக்கவழக்கங்கள், வழிபாடு, சிவனடியாரை மதிக்கின்ற பாங்கு முதலான பலவற்றையும் கண்டு சுவைக்கலாம். சுருங்கக்கூறின் பெரிய புராணத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை உயிரோட்டமாக விளங்குவது அடியார்கள் ஆற்றிய தொண்டு ஆகும். இவற்றில் சேக்கிழார் காட்டிய வாழ்வியல் நெறிகளில் இன்றும் சில நம்மிடையே இருந்து வருவதை எண்ணி மகிழலாம். இந்நூல் வெறும் சிவனடியார் வாழ்க்கை மட்டும் கூறும் நூலன்று; தமிழகத்தில் தொன்றுதொட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சைவ சமயத் தத்துவங்கள், ஆட்சிமுறை, நாகரிகம் முதலான பலவற்றையும் உலகுக்கு எடுத்துரைக்கும் ஒப்பற்ற காப்பியமாகும். சைவப்பயிர் தழைக்கவந்த தொண்டலாம் சேக்கிழாரின் இப்பெரிய புராணத்தை நாளும் ஓதி உணர்ந்து வழிபட்டால் பிறவிப் பெரும்பயன் கிட்டும் என்பது உறுதி.

# ஒரு வள்ளி

முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்,
பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கம்பனெனும் தெய்வமாக் கவிஞன் கள்ளையும் தீயையும் சேர்த்து வடித்த சொல்லெனும் பகழியால் கற்பனை எல்லைகளாம் மராமரங்களை ஊடுருவச் செய்த கலைவலான். மாந்தரெலாம் அம்பு போன்ற சொல் என்று கூறிக்கொண்டிருந்தபோது கம்பநாடன் 'சொல்லொக்கும் கடுசரம்' என்றான். கவிஞன் தன்கைக் கருவியான சொல்லின் மதிப்பையும் உயர்வையும் அறிந்து போற்றும் நெறியிது.

வீரன் தொடுக்கும் வெய்ய சரம் எப்படிச் செல்லும்? எப்படித் தைக்கும்? என வருணனை செய்வதில் புலவர்கள் தத்தம் திறனைக் காட்டுவது உண்டு. ஓரி என்பான் செலுத்திய கூரிய அம்பு யானையைக் கொன்றதோடு நில்லாமல், புலியை வீழ்த்திக் கலைமானை உருட்டிப் பன்றியைச் சாய்த்து உடும்பைச் சென்று குத்தி நின்றதாம். ஓரம்பின் புடைபெயர்ச்சி இத்தகை யதாயின், வடிவமைந்த பகழி மூன்று போதாதா கொடியன் ஒருவன் உயிர் குடித்திட. தூணிக்கண் தூங்கும் அம்பு வீரனாற் செலுத்தப்படும்போது அவனுடைய உடம்பின் வலி அம்பின் செலுத்து வேகத்தைத் (velocity) தூண்டுகிறது. கலித்தொகையில் ஓர் அம்பின் செல்நெறி மிக அருமையாய் விளக்கப்பெறுகின்றது. கானவன் ஒருவன் விட்ட கவண்கல்

இறுவரை வேங்கை ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராத்
தேன்செய் இறாஅல் துளைபடப் போகி

பரு. — ஒரு.

நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக்
குலையுடை வாழைக் கொடுமடல் கிழியாப்
பலவின் பழத்துள் தங்கும் ...

என முடிக்கிறார் கபிலர். ஒரே கோட்டில் இயங்கும் அம்பு தன் போக்கில் எத்தனைப் பொருட்களை ஊடுருவுகின்றது. இப்படிப் பாடுவதுதான் புலமை என்பது மட்டுமன்று; கற்பனை அறமும்கூட. மரத்திலிருக்கும் இலையெல்லாம் துழாவித் துளைபோட்டு மீண்டும் தூணிக்குள் வந்தடங்கிற்று என்பது நெறியான கற்பனை இல்லை.

வையமெல்லாம் வணங்கும் சீர்த்தி பெற்ற இராமன் கணை தொடுத்துப் பகைவரை வென்ற நிகழ்ச்சிகளைக் கம்பநாடன் வளமைமிக்க தன் புலமையால் வழங்குகின்றான். ஓரியும் கானவனும் அம்பு செலுத்திய நெறியிலேயே இராமன் அம்பு செல்கிறது. தாடகையோடு போர் செய்ய வேண்டிய சூழலில் அவள் பெண் ஆதலின் அவளைக் கொல்லத் தயங்குகிறான். பெண்ணீர்மை எல்லாம் இழந்த பெருந்தீயள் என விசுவாமித்திரன் அவளைக் குறித்து விளக்குகின்றான்.

யாதென்று எண்ணுவது இக்கொடி யாளையும்
மாதென்று எண்ணுவதோ மணிப்பூ ணினாய்!

என்பது அம்மாமுனிவன் கூற்று. அவளைக் கொல்லுதல் அறமே என உணர்ந்த நிலையில் இராமனின் அம்பு அவள் நெஞ்சை ஊடுருவுகின்றது.

சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தினாள்மேல் விடுத்தலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே.

என இராமனின் சுடுசரம் புல்லர் உளத்தில் நல்லோர் உரைத்த பொருள் தங்காது போதல் போல மார்பினில் தங்காது ஊடுருவிப் புறம் போயிற்று என்றனர். பேராண்மை மிகச் செலுத்திய பகழிக்குத் தாடகைக் கொடியள் ஆற்றாது தளர்ந்தமை அச்சரம் ஊடுருவிற்றென்பதால் அறியப் பெறும். இவ்வாறு சரம் ஊடுருவிப் புறம்போன நிகழ்ச்சி சங்க இலக்கியத்தும் உண்டு.

கரிகாலன் செலுத்திய படைக்கலன் பெருஞ்சேரலாதன் அகலம் உருவிப் புறம் போயிற்று. இவ்வாறு போரியல் நடக்கை மாறாது சொல்லோவியப்படுத்தல் கம்பரிடமும் இவ்விடத்தே புலனாயிற்று.

ஏழு மராமரங்களை எய்தக்காலும், அம்மரங்களை ஊடுபுக்குருவி அவை வேர்கொண்ட பாதலத்தை அதிரச் செய்தது இராமன் வாளி. அவனே வாலியின் மீதும் அம்பு தொடுக்கிறான்.

> காரும் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
> சேரும் சூசியிற் சென்றது நின்றதென் செப்ப

என இராகவன் அம்பு வாழைப்பழத்திற் புக்கதோர் ஊசியென மிக எளிதாய்த் துளைத்தது என்றனர். தாடகையைத் துளைத்துப் புறம் போனதுபோல் ஈண்டு வெஞ்சரம் வெளிச்சென்றிலது. அதனின்றும் தாடகையினும் வாலி வலியோன் என்பதறியப்படும்.

ஓர் அணங்கு, ஏழு மரம், ஒரு விலங்கு என இராமன் இவ்வகை இலக்கிலெல்லாம் போர் நெறியே அமைய இராமன் அம்பு துளைத்தது. நான்காவதாய், இராவணனோடு நிகழ்த்திய போரில் கரிய செம்மலின் அரிய கணை எப்படித் தாக்கியது? எப்படித் துளைத்தது? துளைத்து வாலியின் மார்பிற் போல் உள்ளே தங்கிற்றா? தாடகை மார்பிற் போற் புறம் போயிற்றா?

> முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் முன்னால்
> எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரமும் ஏனைத்
> திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும் தின்று மார்பிற்
> புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று இராகவன்தன் புனிதவாளி

என்கிறான் கம்பன். உயிரைக் குடித்து மார்பை ஊடுருவிப் புறத்தே போய் விட்டது. எனவே இவனினும் வாலி வலியன் தான். இவ்வளவோடு நிறுத்தியிருப்பின் சிக்கலில்லை. மண்டோதரி இறந்து கிடக்கும் கணவனைக் கண்டு புலம்புகின்றாள்.

> வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
> எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம்நாடி இழைத்த வாறோ
> கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
> உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி.

என மொழிகிறாள். புறம்போவதற்கு முன் அவ்வாளி உடம்பு முழுதும் சல்லடைக் கண்ணாய் ஓட்டையிட்டு உயிரைத் தேடியதேபோல், அவன் மனத்தகத்தே சீதைபால் வைத்த தவறுடைக் காமம் யாண்டுறைவது கொல் என உடல் முழுதும் பரந்து தடவித் தேடியதோ என்கிறாள். அம்பு துளைத்தது, துளைத்துப் போயிற்று எனப் பாடுதல்தானே அறம்! உடலின் உள்ளே புகுந்து தடவியதோ எனலாமா? இராவணன் அழியவேண்டுமென இராமன் அம்பு விடுத்திலன். உலகுயிர்களெல்லாவற்றையும் தன் தயையாற் புரக்கும் நயத்தக்க பேரருளாளன். ஓருயிரை அழிப்பதினும், அப்பிறப்புக் கொண்டிருக்கும் தீய பண்பையே மாற்ற முயல்வன். தாடகை அறமிலள் என்பதற்காகச் சரம் போக்கினான். வாலி அறம் பிழைத்தனன் என்பதற்காகக் கூர்வெம்பகழி குறித்தனன். ஈண்டு இராவணன் கொண்ட பிறன் மனை நயந்த பெருந்தீமையை அகற்றவே சிலை குனித்தனன். ஒவ்வாக் கொடுங்காமம் இன்றேனும் உன்னைவிட்டு ஒழிந்ததா இல்லையா எனக் கேட்பாள் போல மண்டோதரி மங்கை உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி என்றனள். செலுத்தப்பெற்றது ஒரு மனிதனின் அம்பன்று. ஒரு வன்மையான அம்பு; உலகு இதுகாறும் கண்டறியா வலிமை மிக்க அம்பு, வன்வாளி. அதற்கு உயிர்க்கொலை நோக்கன்று. தீய குணத்தைத் தடவி ஒழிக்கும் வாளியஃது. இதனை மண்டோதரி உணர்ந்து கூறினள் என்பதை எண்ணுதல் தக்கது.

# சிலப்பதிகார இசைப்பாடல்கள்

முனைவர் இ. அங்கயற்கண்ணி,
இணைப்பேராசிரியர் & தலைவர்,
இசைத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தமிழ் இலக்கியத்திற்கு வளம்சேர்க்கும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் உரிய முத்தமிழ்க் காப்பியமாகும். இக்காப்பியத்தின் ஆசிரியரான இளங்கோ அடிகளார் காப்பியத்தின் தொடக்கத்திலேயே மங்கல வாழ்த்துப் பாடலாக, "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்று ஓர் இசைப்பாடலை அமைத்து இசைத்தமிழில் தமக்கிருந்த ஆழ்ந்த ஆர்வத்தையும் புலமையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

சிலப்பதிகாரத்து இசை என்னும்போது பொதுவாக, சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் கூறப்பட்டுள்ள யாழாசிரியன், குழலாசிரியன், தண்ணுமை ஆசிரியன், இசையாசிரியன், கவிஞன், ஆடலாசிரியன் ஆகியோரின் இலக்கணங்களும், யாழிசைக் கரணங்கள், பாலை இலக்கணம் ஆகிய இசை இலக்கணம் தொடர்பான செய்திகளைப் பற்றியே நாம் அறிந்திருக்கிறோம்.

"இலக்கியங்களுக்கு ஏற்ப இயம்பப்படுவதே இலக்கணம்" என்கிற ஒரு நெறி இலக்கிய உலகில் பழங்காலந்தொட்டு நிலவி வருகிறது. இசைத்

தமிழைப் பொறுத்தமட்டில் இலக்கியம் என்னும் போது இசைப் பாடல்களைத் (Musical Compositions) தான் குறிக்கவேண்டியுள்ளது. சான்றாகத் தேவாரம், திருப்புகழ், கீர்த்தனை, பதம் ஆகியவற்றைக் கூறலாம்.

சிலப்பதிகாரத்தில் கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குறவை, வாழ்த்துக்காதை முதலான ஐந்து பகுதிகளில் இசைப்பதற்கு ஏற்ற வரிப்பாடல்களாம் இசைப்பாடல்கள் காணப்படுகின்றன. இப்பகுதிகளிலிருந்து அறுபது இசைப்பாடல்கள் காணக் கிடைக்கின்றன. இவற்றின் இயலிசை அமைப்பு, இப்பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இசை எவ்வாறு தற்போதைய கருநாடக இசைப் பாடல்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன என்பதையும், இப்பாடல்கள் இசையில் பண் இலக்கணத்திற்கு எவ்வாறு ஆதாரங்களாகத் திகழ்கின்றன என்பதையும் ஆராய்ந்து இக்கட்டுரை ஆசிரியரால் அளிக்கப்பட்ட ஆய்வறிக்கை தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்துள்ளது.

**பாடல்களின் அமைப்பு :**

சிலப்பதிகாரத்தில் காணப்படும் பாடல்களில் ஒரு பொருள் மீது மூன்றடுக்கு அல்லது நான்கடுக்கிய அமைப்பைக் காண்கிறோம். சான்றாக, "திங்கள் மாலை வெண் குடையான்" எனத் தொடங்கும் ஆற்றுவரிப் பாடல் அமைப்பைப் பார்க்கலாம்.

"திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி"

(கானல் வரி : 2, 3, 4)

இதே அமைப்பில் மேலும் இரண்டு பாடல்கள் உள்ளன, இவ்வமைப்பு நாட்டுப்புறக் கதைப் பாடல்களை நமக்கு நினைவூட்டுகின்றது. நாட்டுப்புறப்

பாடல்களில் ஒரு பொருள் மீது பல அடுக்குகள் வந்து மிகநீண்ட பாடல்களாக இருக்கும் அமைப்பைக் காண்கிறோம். இதற்கு 'மூன்றடுக்கி வருதல் சிறப்பு' என்ற ஓர் இலக்கண வரையறை செய்து, இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள முறை கருதத்தக்கது இவ்வமைப்பே, பின்னர் 10 தொகுதிகள் (பாடல்கள்) சேர்ந்த தேவாரப் பதிக அமைப்பாகவும், எட்டுத் தொகுதிகள் சேர்ந்த திருப்புகழ் அமைப்பாகவும், கீர்த்தனைகளில் சரணங்களாகவும் வளர்ச்சியடைந்தன என்று கருதலாம்.

பாடல்களின் பொருள் ;

சிலப்பதிகாரத்தில் கானல்வரி பகுதியில் தலைவி பொழுது கண்டு ஆற்றாமல் புலம்பும் பாடல்கள் உள்ளன. சான்று :

இளையிருள் பரந்ததுவே யெற் செய்வான் மறைந்தனனே
களைவரும் புலம்புநீர் கண் பொழீஇ யுகுந்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார் நாட்டுளதாங்கொல்
வளைநெகிழ வெரிசிந்தி வந்தவிம் மருண்மாலை

(கானல் வரி - 40)

மேலும் தலைவியை வருணித்துப்பாடும் பாடல்கள் சில உள்ளன. சான்று ;

பவள உலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய (கானல் வரி - 20)

இவ்வகையான பாடல்கள் உவகைச் சுவையை (சிருங்கார ரசம்) வெளிப்படுத்தும் பாடல்களாகத் திகழ்கின்றன.

பிற்காலத்தில் 'பதம்' என்னும் இசைப்பாடல் வகை எழுந்தது. இது கடவுளை நாயகனாகவும். மனித ஆன்மாவை நாயகியாகவும் கொண்டு உவகைச் சுவையை வெளிப்படுத்தும் வகையில் இயற்றப்பட்டுள்ளது.

இவ்வகைப் பதம் என்னும் இசைப் பாடல்களுக்குரிய கருவாகவும் மேலும் திரையிசைப் பாடல்களுக்குரிய கருவாகவும், மேற்கண்ட கானல் வரிப் பாடல்கள் திகழ்கின்றன.

ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள், குன்றக் குரவை, வேட்டுவவரி ஆகிய பகுதிகளில் இடம்பெற்றுள்ள பாடல்களில் பக்தி உணர்வு வெளிப்படுகின்றது.

சான்று :

"மூவுலகு மீரடியான் முறை நிரம்பா வகைமுடிய
தாவியசே வடிசேப்பத் தம்பி யொடுங் கான்போந்து
சோவரணும் போர் முடியத் தொல்லிலங்கை கட்டழிந்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே"

(ஆய்ச்சியர் குரவை - 53)

இவ்வகையான பாடல்கள் பிற்காலத்தில் 'கீர்த்தனை' என்னும் இசை உருப்படிக்கு முன்னோடியாக விளங்கியவை என்று கூறலாம்.

சான்று : திருமால் பற்றிய கீர்த்தனைகள் வருமாறு :

"யாரென்று ராகவனை எண்ணினீரய்யா இதை
அறிந்து சொன்னீரோ அறியீரோ ... "

(இராகம் : யதுகுலகாம்போதி, தாளம் : ஆதி,
அருணாசலக் கவிராயர் இயற்றியது)

இதேபோன்று தேவாரம், திருப்புகழ் போன்ற இசை உருப்படிகளுக்கு எல்லாம் இப்பகுதிகளில் அமைந்த பாடல்கள் பொருள் அடிப்படையிலும் முன்னோடியாகவே இருந்துள்ளன.

## பழந்தமிழர் இசை முறையில் சிலப்பதிகாரப் பாடல்கள் :

பழந்தமிழர் தங்களுடைய நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம். நெய்தல், பாலை என்று ஐந்து பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் யாழ், பறை போன்ற இசைக்கருவிகளைக் கருப்பொருளாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இங்கு "யாழ்" என்பது இசைக்கருவி என்னும் பொருளோடுகூட அந்தந்த நிலங்களின் இசை முறையையும் குறிக்கிறது. இந்த இசைமுறையை அடியொற்றியே சிலப்பதிகாரத்திலும் இசைப்பாடல்கள் காணப்படுகின்றன என்று கூறலாம். எவ்வாறெனில், கானல்வரியில் கோவலனும் மாதவியும் பாடுகின்ற வரிப்பாடல்கள் நெய்தல் நிலத்து இசைமுறையைப் பிரதிபலிப்ப தாகக் கருதலாம். அதேபோன்று வேட்டுவ வரியில், வேட்டுவ மகளாகிய சாலினி கொற்றவைக்கோலம் பூண்டு ஆடிய நிகழ்ச்சியில் பாடப்படுகின்ற பாடல்கள் பாலை நிலத்து இசைமுறையைப் பிரதிபலிப்பதாகக் கருதலாம் மதுரைக் காண்டம் ஆய்ச்சியர்குரவையில் ஆய்சேரியில் ஏற்பட்ட உற்பாதங் களைக்கண்டு கலங்கிய ஆய்ச்சியர், உற்பாத சாந்தியாகக் கண்ணனை நினைத்து ஆடிய குரவைக்கூத்தின்கண் பாடப்பெற்ற பாடல்கள் முல்லை நிலத்து இசைமுறையைப் பிரதிபலிப்பனவாகக் கருதலாம். குன்றக்குரவையில், குறமகளிர் வேங்கைமர நிழலில், கண்ணகியார் தம் கணவனுடன் விண்ணுலகம் சென்ற வியப்பான நிகழ்ச்சிகண்டு பின்னர் உற்பாதசாந்தியாக ஆடிய குரவைக் கூத்தின்கண் பாடப்பெற்ற பாடல்கள் குறிஞ்சி நிலத்தின் இசை முறையை விளக்குவனவாகக் கருதலாம். மருத நிலத்து இசை முறையை வாழ்த்துக் காதையில் வரும் சில பாடல்கள் உணர்த்தும்.

சிலப்பதிகாரத்தில் ஆசிரியர் இளங்கோவடிகள் இசைப்பாடல்களைக் குறிப்பாக இந்த ஐந்து பகுதிகளில் அமைத்திருப்பது பழந்தமிழரின் ஐவகை நிலத்து இசை முறையை விளக்குவதற்காகவே எனலாம், எனவே தேவார காலத்தின் முற்பட்ட, தொன்மையான இசை முறையைச் சிலப்பதிகாரப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன எனத் தெளியலாம்.

தமிழ் இசை இலக்கணத்தில் காணப்படும் 103 பண்களும் இந்த ஐவகை நிலத்தில் அடிப்படையிலேயே வகைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப் பிடத்தகுந்தது.

பரு. — சில. 6

பெரும்பண்களாவன : பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், இவை ஒவ்வொவ்வொன்றிலும், நான்கு வகைகள் சேர்க்க 16 பண்களாகின்றன. இவற்றோடு 'தாரப்பணம்' என்ற பண் சேர்ந்து மொத்தம் 17 நிறை நரம்புகள் (சம்பூர்ண பண்கள்) கொண்ட பண்களாகின்றன.

நாற்பெரும் பண்களிலிருந்து 21 திறங்கள் பிறக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| அவை ; | பாலை யாழ்த் திறம் | — | 5 |
| | குறிஞ்சி யாழ்த் திறம் | — | 8 |
| | மருத யாழ்த் திறம் | — | 4 |
| | முல்லை யாழ்த் திறம் | — | 4 |
| | | | 21 |

இந்த 21 திறங்கள் ஒவ்வொன்றிலும் 4 வகைகள் சேர்க்க 84 பண்களாகின்றன. இவற்றோடு பையுள் காஞ்சி, படுமலை என்னும் இரண்டு பண்களை மேலும் சேர்க்க 103 பண்களாகின்றன.

இந்த 103 பண்களின் பெயர் விவரங்களைப் பிங்கல நிகண்டு போன்ற நிகண்டு நூல்களில் காணலாம். இந்த 103 பண்களின் வகைப்பாட்டிற்கு அடிப்படை, தமிழக ஐவகை நிலப்பிரிவுகளே என்பது கருதத்தக்கது. இவ் வகைப்பாட்டிற்குச் சிலப்பதிகாரப் பாடல்களே இலக்கிய ஆதாரங்களாகத் திகழ்ந்துள்ளன எனக் கருதலாம்.

**சிலப்பதிகாரப் பாடல்களின் இசை வடிவம் :**

சிலப்பதிகாரப் பாடல்கள் தொன்மையான தேவார காலத்திற்கு முற்பட்ட இசைமரபை நமக்கு விளக்கி நிற்பனவாக இருப்பினும் சிலப்பதிகாரக் காலத்திற்கும் தற்போதுள்ள காலத்திற்கும் இடையே உள்ள இசையின் வளர்ச்சி நிலையை நாம் கருத்தில் கொள்வோமேயானால் சிலப்பதிகாரப் பாடல்களின் மூல இசை வடிவங்களோ அல்லது மரபு வழியிலான இசை அமைப்புக்களோ நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லை என்னும் முடிவுக்கு வரலாம். எனவே, இப்பாடல்களை இசைக் கலைஞர்களின் கற்பனைக்கு ஏற்றவாறு இசையமைக்கப்படுவது பொருத்தமாகும்.

இப்பாடல்களுக்கு இசையமைக்கும் வழிமுறைகளைப் பார்க்கும்போது பாடல்களின் இசைத் தொன்மை கருதி சொல்லிசை அடிப்படையில் தற்போது நடைமுறை வழக்கிலுள்ள 23 பண்களில் இசையமைக்கலாம். சான்றாக "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்ற பாடலுக்குப் பண் வியாழக்குறிஞ்சியில் இசையமைக்கப்பட்டுள்ளது.

பண் : வியாழக்குறிஞ்சி
இராகம் : சௌராஷ்ட்ரம் (17வது மேளகர்த்தாவாகிய சூரியகாந்தத்தில் பிறந்தது)

சிலப்பதிகாரம் இயல் இசையோடு நாடகமும் சேர்ந்த காப்பியம். ஆதலால், இப்பாடல்கள் வெளிப்படுத்தும் சுவைகளையும் கருத்தில் கொண்டு அவற்றிற்கேற்ற இராகங்களைத் தேர்ந்தெடுத்து இசையமைக்கலாம். கமாசு, அடானா, சகானா போன்ற இராகங்கள் இவ்வகையில் பொருத்தமாக இருக்கும். சான்றாக, "பொழிறரு நறுமலரே" என்னும் முரிவரிப் பாடல், கானடா இராகத்தில் இசையமைக்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரப் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல் மரபை அடியொற்றி இருப்பதால் தற்போது வழக்கிலுள்ள கும்மி, ஆனந்தக்களிப்பு போன்ற நாட்டுப்புற இசை மெட்டுக்களிலும் இசை அமைக்கலாம். சான்று: "என்றொன்றும் காணோம்" எனத் தொடங்கும் குன்றக்குரவைப் பாடல். இப்பாடல் நாதநாமக்கிரியை இராகத்தில் ஆனந்தக்களிப்பு மெட்டில் இசை அமைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை :**

இதுகாறும் கூறியவற்றால், சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப் பாடல்கள் அவற்றின் பொருள் அடிப்படையிலும், அமைப்பு அடிப்படையிலும் தற்கால வழக்கில் உள்ள தேவாரம், திருப்புகழ், கீர்த்தனை, பதம் போன்ற இசை உருப்படிகளுக்கு முன்னோடியாகத் திகழும் பெற்றிமை அறியமுடிகிறது.

தமிழ் இசை இலக்கணத்தில் காணப்படும் 103 பண் வகைப்பாடுகளுக்கு இலக்கிய ஆதாரங்களாகச் சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப்பாடல்கள்

இருந்துள்ளன. மேலும் இவை தேவார காலத்தின் முற்பட்ட இசை முறையை விளக்கி நிற்கும். தொன்மைப்பாடல்களாகத் திகழ்கின்றன. சிலப்பதிகார இசைப் பாடல்கள் செவ்விசை, நாட்டுப்புற இசை, திரையிசை ஆகிய முறைகளுக்கு ஏற்ப இசையமைக்கக்கூடியதாக உள்ளன. ஆக இப்பாடல்கள் எக்காலத்து இசை முறைக்கும் பொருந்தக்கூடிய இனிய இசைப் பாடல்கள் என்று கருதலாம்.

இவற்றை இசை நிறுவனங்களில் நடைமுறைப்படுத்துதல் இன்றியமையாததாகும். தமிழில் தரமான இசைப் பாடல்கள் இல்லை என்னும் குறையை இதன் மூலம் நிறைவு செய்யலாம்.

**துணை நூல்கள் :**

1. சாமிநாதய்யர் உ. வே. (ப. ஆ.) சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும் அரும்பதவுரையும், உ. வே. சா. நூலகம், சென்னை 1978.

2. அங்கயற்கண்ணி இ. "சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப் பாடல்கள்", தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு. தஞ்சாவூர். 1994.

# பெண்கள் கல்வி மேம்பாடு

பேராசிரியர் **ஆறு. காளிதாசன்,**
பி. லிட்., எம். ஓ. எல்., பி. எட்., எம். ஃபில்., பி. எச்.டி,
த. உ. க. கலைக்கல்லூரி,
தஞ்சாவூர் - 2

முன்னுரை :

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபத்தோராவது நூற்றாண்டின் தலைவாயிலிலும் நிற்கும் மனிதகுலம் தன்னில் ஒரு பாதியாகத் திகழும் பெண்ணினத்திற்கு முழு உரிமைகளையும், சமத்துவத்தையும் இன்னும் அளித்தபாடில்லை. இது மனித குலத்தின் சரித்திரத்தில் மனிதமையின் வரலாற்றில் இன்னமும் சரி செய்யப்படாத சரித்திரப் பிழையாகவே உள்ளது. பெண்களை சக்தியின் வடிவம் எனப் போலியாகப் போற்றிப் புகழ்ந்தாலும் அவர்களைப் போகப் பொருள்கள் எனவும் உடைமைப் பொருள்கள் எனவும் எண்ணுகிற இழிநிலை இன்னமும் நீங்கியபாடில்லை. பெண் கல்வியின் அவசியத்தையும் அதன் பெருமையினையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆண்மக்களினும் பெண்மக்கள் நுண்ணிய பொருளை விரைவில் உணரும் ஆற்றல் பெற்றவர்கள் என்பது அறிஞர்களால் ஒப்பப்பட்ட உண்மை. இதனையே பாரதியும்,

"அறிவை வளர்த்திட வேண்டும் — மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய்"

என்று கல்வியிலும் சமத்துவத்தை வலியுறுத்துகிறார்.

கல்வியின் பொருள் :

கல்வி என்பது எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வதல்ல. வாழ்வின் போக்கைப் புரிந்துகொள்ள, மாற்றி அமைக்க, சிறக்கச் செய்ய வல்லமை உடையதே வாழ்க்கைக் கல்வி. இந்த நடைமுறைக் கல்வி அனைவருக்கும் வேண்டும். இக்கருத்தையே வள்ளுவரும்,

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள் — 391)

என்று கூறி உள்ளார்.

**பெண் கல்வியின் பொருள்:**

பெண்மையாவது யாது ? அடக்கம், பொறுமை, தியாகம், பிறர் நலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும். அப்படிப்பட்ட பெண் உலகில் இல்லை. நம் நாட்டில் பிறந்துவிட்டால், "ஐயோ பெண்ணா" என்று தாய் தந்தையரும் உற்றார் உறவினரும் இடிகேட்ட நாகம் போல கலக்கம் உறுகின்றனர். இஃதென்ன அறியாமை?

"மங்கைய ராகப் பிறப்பதற்கே — நல்ல
மா தவம் செய்திட வேண்டுமம்மா"

என்னும் கவிமணியின் சொல்லுக்கிணங்க, பண்டைய காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு இணையாக கல்விபெற்று திகழ்ந்தார்கள். இடைப்பட்ட காலத்தில் பெண்கள் அடிமையாக வாழ்ந்தனர். பெண்கள் கல்வி பெற பாரதியார், பாரதிதாசன், திரு. வி. க. மற்றும் பெரியார் போன்றவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டனர். பாரதிதாசன் பிறந்த குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுவதைக் கேளுங்கள்.

"ஆராரே ஆரிரரோ ஆரிரரோ ஆராரே
வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே
நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே"
(பாரதிதாசன் கவிதைகள்)

என்கிறார். இப்படிப்பட்ட பெண் குலத்திற்கு அறிவு வெளிச்சத்தை ஏற்றி வைப்பது அவசியம் அல்லவா !

**பெண் ஒரு பல்கலைக்கழகம்**

தாய்மைக்குரிய ஒழுக்கம் உயிர் போன்றது. அந்த ஒழுக்கத்தைக் கற்றுத்தருவது கல்வியேயாகும். ஒழுக்கமே பெண்ணாக வளரக் கல்வி பெரிதும் துணைபுரிகின்றது. பெண்ணின் பெருமைக்குச் சிறப்பு ஊட்டுவது கற்பு.

கற்பின்மையே பெண்ணின் கேட்டிற்குக் காரணமாகிறது. கற்பின்மைக்கு அடிப்படைக் காரணம் நல்ல கல்வியின்மையே. ஆதலால் பெண்கள் கற்புடன் வாழச் சிறந்த கல்வியைக் கற்கவேண்டும். அடுப்படியில் வெந்து தணிவது மட்டும் பெண்களின் செயல் அல்ல. பெண்கள் பல்கலைக்கழகமாக விளங்க வேண்டும்.

**பெண் கல்வி பற்றிப் பாரதியார் கூறுவன :**

பெண் விடுதலைக்காகவும், பெண் கல்விக்கும் குரல் எழுப்பிய புலவன் பாரதியார்தான். பெண்ணைப் பாடாத புலவனும் இல்லை; பெண்ணைப் போற்றாத கவிஞனும் இல்லை. வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டி வைக்கும் நிலையைக் கண்டு வருந்திய பாரதி,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்."

என்று பாடுகிறார். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு" என்று இருந்த நிலை மாறவேண்டும் என்று கூக்குரலிட்டார். ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று பறைசாற்றினார். இதனை,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்ற இவரது பாடல்மூலம் அறியமுடிகிறது.

**பாரதிதாசன் பெண் கல்விபற்றிக் கூறுவன :**

பெண்ணின் கல்வியறிவு தீய குணங்களைக்கொண்ட கணவனைத் திருத்துகிறது. தனது குழந்தைகளை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்க்க உதவுகிறது. கணவன் தேடிவரும் செல்வத்தை அள்ளிவிட்டுச் செலவு செய்யத் தூண்டுகிறது. பெண் கல்வியின்மையின் இழிவையும், இன்றியமையாமையையும் விளக்க நினைத்த பாவேந்தன் குடும்ப விளக்கு என்னும் சிறுகாப்பியம் படைத்துள்ளார். பெண்கள், சமுதாயத்தில் உள்ள அனைவரும் மதிக்கத்தக்க வகையில் உயர்ந்து விளங்கவேண்டும் என்பதை,

"பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே

என்று பெண்கள், கல்வியைப் பேண, உலகினைப் பேண, குடித்தனம் பேண 'கல்வி' இன்றியமையாதது என பாரதிதாசன் கூறுகின்றார்.

களர் நிலத்தால் எந்த நன்மையும் இல்லை. அது போலக் கல்வியறிவு இல்லாத பெண்களால் அவர்களது குடும்பத்துக்கும், சமுதாயத்துக்கும் எந்த நன்மையும் இல்லை. ஆனால் கல்வியறிவுடைய பெண்கள் செழித்து விளங்கும் கழனியைப் போல் சமுதாயத்துக்குப் பயன் தருவார்கள் என்பதை,

" கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில
புல்விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவுடைய மக்கள்
விளைவது நவிலவோ நான் ?"

என்று பாரதிதாசன் கூறுகிறார்.

**பெண் கல்வி பற்றி திரு. வி. க. கூறுவன :**

மனித குல வாழ்விற்குக் காரணமாயிருப்பவர் மாதரே. மாதரே இவ்வுலகத்தின் இனியகீதம். அவர்களே இவ்வுலகை ஆள்கிறார்கள். இத்தகைய பெண்ணுலகம் ஒரு தெய்வீகமானது. அதன்கண் ஒரு கறை படிந்துள்ளது. அதுதான் கல்வியறிவு இல்லாத பெண் ஆகும்.

" உலகியற்கல்வியும், இடவுயர்கல்வியும் பெண்கள் பெறுவார்களாயின் அவர்கள் உடல்நிலை, ஒழுக்கநிலை, அன்புநிலை முதலியவற்றை நன்குணர்வர். நற்றாய் மார்களாகி அறத்தொண்டு செய்து இன்பம் நுகர்வார்கள் "

என்று, பெண் கல்வி கற்பதால் ஏற்படும் பயன் குறித்துத் திரு. வி. க. கூறுகின்றார்.

## பண்டைக்காலப் பெண்களும் பெண்கல்வியின் தேவையும் :

பழந்தமிழ் நூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்தால் அவற்றில் கால் ஊன்றிய பெண்ணுரிமையைக் காணலாம். பெண்கள் தாழ்ந்தவர்கள், அடிமை என்ற உணர்வு அற்ற நாளாக இருந்த "ஒத்த கல்வி" என்ற குறிப்பு அக்காலப் பெண்கல்வி சிறப்பை உணர்த்துகிறது. பண்டைக்காலம் தொட்டே ஆண்பாற் புலவர்களுக்கு இணையாக, ஔவையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், வெள்ளிவீதியார், பெருங்கோப்பெண்டு, பாரி மகளிர், எயினிமார் முதலியவர்கள் கல்வி அறிவு பெற்றுச் சிறப்புற்று வாழ்ந்தவர்கள்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற குறளுக்கு இணங்கத் தொண்டருள் தனி வரலாறு குறிக்கப்படும் பேறு பெற்ற பெண்டிர் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசை ஞானியார் என்னும் மூவரேயாவர். தனி வரலாறன்றியும் தொண்டில் தனி இடம்பெறத்தக்க திலகவதியார், நீலகண்டகுயவனார் மனைவி, சிறுதொண்டர் மனைவியார், திருவெண்காட்டு நங்கை போன்ற பெண்கள் ஆடவருக்கு நிகராக அருஞ்செயல் ஆற்றினார்கள் என்பதை அறியமுடிகிறது.

## வரலாற்றுப் பெண்கள்

முதன்முதல் ஒருபெண் அரசு செலுத்திய இடம் எகிப்து என்று வரலாறு கூறுகிறது. சீனத்தில் ஹதாசு செயிராமிஸ் என்பவர்கள் ஆட்சி நடத்தி இருக்கின்றனர். இந்தியாவில் ரிஜியா நூர்ஜஹான் முதலியோர் ஆட்சி நடத்தினர். அரபிய நாட்டில் காலஸ், ஒபிரா என்ற அரபிய பெண்மணிகள் நாட்டிய வீரத்தை நூல்களில் காணலாம்.

## இடைக்காலப் பெண்கள் :

அக்காலத்தில் பெண்கள் முதலில் தந்தைக்கு அடிமை, பின் கணவனுக்கு அடிமை, பின் மகனுக்கு அடிமை என்று பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்.

"பெண் அடிமை தீரும்வரை
மண் அடிமை தீராது"

என்று புரட்சிக்கவிஞர் பெண்களின் அடிமைதீர உழைத்தார்.

**பெண்ணின் முன்னேற்றம் :**

பெண்கள் இன்று எல்லாத் துறைகளிலும் ஆணுக்கு இணையாகச் செயலாற்றி வருகின்றனர். எடுத்துக்காட்டாக முன்னேற்றம் அடைந்த பெண்மணிகள், "அன்னை தெரசா, அன்னை இந்திரா காந்தி, ஜான்சிராணி. தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் ஜானகி அம்மாள், புரட்சி செய்த முதல் பெண் சித்தூர் ராணி சென்னம்மா, சட்டசபை முதல் பெண் உறுப்பினர் டாக்டர் முத்துலெட்சுமி, மாநில மந்திரி முதல் பெண் விஜயலக்ஷ்மி பண்டிட், மத்திய மந்திரி முதல் பெண் ராஜகுமாரி அமிர்தகௌரி (உ. பி.), கேரளாவின் உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி அண்ணா சாமுண்டி, வழக்கறிஞர் முதல் பெண் ரெஜினாகுகா, சுப்ரீம் கோர்ட்டின் முதல் நீதிபதி பாத்திமா பீவி, முதல் பெண்டாக்டர் ஆனந்தபாய் ஜோசி, முதல் பெண் விஞ்ஞானி அபாலா போஸ், முதல் பெண் மேயர் சென்னை தாரா செரியன், முதல் பெண் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பத்மினி (கேரளா), ஓட்டப்பந்தய வீராங்கனை சைனி ஆபிரகாம், தங்கப்பெண் உஷா, முதல் பெண் பாதிரியார் மரகதவள்ளி, முதல் பெண் யானைப்பாகி காளியம்மாள், முதல் பெண் ஐ. பி. எஸ். அதிகாரி கிரண்பேடி இதைப் போன்று பல்வேறு துறைகளில் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

**அன்றும் இன்றும் பெண்கல்வி :**

சங்க காலத்தில் கூட ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இருந்தனர். வேற்றரசுக்குத் தூது செல்லக் கூடிய அளவிற்குத் தொண்டாற்றிய ஔவையார் போன்ற பெண் புலவர்கள் இருந்துள்ளனர்.

இன்று அடுப்பின் நெருப்புடன் தங்களுடைய விம்மும் பெருமூச்சுகளை வெளிப்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அரசியல் துறை, விளையாட்டுத்துறை, மருத்துவத் துறை, என எல்லாத் துறைகளிலுமே

பெண்களின் வியாபகம் பெருகியுள்ளது. பிரதம மந்திரிகளாக, பிஷப்புகளாக, தொழிலதிபர்களாக கவிஞர்களாக, பத்திரிகையாளர்களாக எனப் பன்முகம் கொண்டு இன்று பெண்கள் பாரெங்கும் படர்ந்துள்ளனர்.

முடிவுரை :

மனித நாகரிகத்தை மேம்படுத்த வந்த பெண்களுக்கு இட ஒதுக்கீடு தந்து அவர்களது கல்விக்கு ஊக்கமளிப்பது நமது ஒவ்வொருவரின் கடமையும் உரிமையும் ஆகும். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற காலம் கடந்துவிட்டது. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பலதாரம் புரிந்த ஆண்களுடன் வாழவேண்டிய நிர்பந்தம் உள்ள பெண்கள், கேலி, கிண்டல் ஆகியவற்றிற்கு இலக்காகும் பெண்கள் போன்றவர்களுக்கு உதவ வலிமை மிக்க சட்டங்கள் இருக்கின்றன. அச்சட்டங்களை நீக்குவதற்குக் கல்வி அவசிய மாகிறது. இதனால் பெண் கல்விக்கு வித்திட்ட அத்தனை செம்மல்களையும் நினைவுகூர வேண்டும்.

புரையோடிய சமூகத்திலிருந்து மீட்ட தியாகிகளுக்குச் செய்யும் அஞ்சலி பெண் கல்வியை நிலைநிறுத்துவதுதான். பெண்மை வாழ்க ! என்று போற்றுவோமாக.

## அடிக்குறிப்புகள்

1) ரோஜா முத்தையா — பெண்ணே உன்னைத்தான், ப. 82
2) பாரதியார் — பாரதியார் கவிதைகள், ப. 182
3) ,, ,, ப. 182
4) பாரதிதாசன் — குடும்ப விளக்கு, ப. 69
5) ,, ,, ப. 69, 70
6) திரு. வி. க. — பெண்ணின் பெருமை. ப. 88

## உதவிய நூல்கள்

1) பாரதிதாசன் — குடும்ப விளக்கு
தாயக வெளியீடு
சென்னை – 7

2) பாரதியார் — பாரதியார் கவிதைகள்
14, பீட்டர்ஸ் சாலை, சென்னை.

3) ரோஜா முத்தையா (தொகுப்பாசிரியர்) — பெண்ணே உன்னைத்தான்
செல்வி பதிப்பகம்
காரைக்குடி.

4) திரு. வி. க. — பெண்ணின் பெருமை (அ)
வாழ்க்கைத் துணை
சாது அச்சுக் கூடம்
சென்னை - 14
பதிப்பு - 1952

# வேத இலக்கியங்களில் மனிதநேயம்

டாக்டர் R. **கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி**, M. A., Ph. D,
முதல்வர்,
ஸம்ஸ்க்ருதக் கல்லூரி, சென்னை-4.

மனிதப் பிறப்பின் சிறப்பை எல்லாச் சான்றோர்களும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். "அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது" இத்தகைய பிறப்பில்தான் நாம் பெறவேண்டிய பேறுகளைப்பெற நல்ல வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. எனவேதான் உபநிஷத்துக்களில் இவ்வாறு கூறப்பட்டு உள்ளது:— "இந்த உடல்தான் விவேகம் என்ற பகுத்தறிவு உடையதாகும். இதன்மூலம் நன்னெறிகளைக் கடைப்பிடித்து அறம், பொருள், இன்பம் வீடு என்ற நான்கு மனிதப்பலன்களையும் முறையே நாம் பெறமுடியும். எனவே இந்தப் பிறவிக்கே "ஸுக்ருதம்" (welldone) என்று பெயர்.

**உலக சகோதரத்வம்:**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கூற்றைப் போலவே வேதத்தின் புருஷஸூக்தம் என்ற பகுதியில் உலகின் படைப்பைக் கூறும்போது, "மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் போன்ற எல்லாப் பொருள்களும் ஒரே பரம்பொருளினின்று உண்டாயின" என்று கூறப்பட்டுள்ளது. உலக உடன் பிறப்பு (Universal brotherhood) என்ற பெரிய மனிதநேயம் நம் நூல்களில் தான் வலியுறுத்தப்படுகின்றது.

இந்த நேயம் பற்றி நமக்கு ராமாயணம், பாரதம் போன்ற இலக்கியங்கள் விரிவாகச் சொல்கின்றன. இராமன், வேடுவன், குரங்கு, கழுகு போன்ற எல்லா வர்கத்தினருடனும் மிகுந்த அன்புடன் உடன்பிறந்தவன் என்றே கூறி

தழுவிக்கொள்ளும் காட்சியை நாம் கம்பராமாயணத்தில் படிக்கும்போது தற்காலத்தின் அவலநிலையின் வருத்தம் சற்றே தணிகிறது. ராமனுக்குக் குகன் 5ஆம் சகோதரன், விபீஷணன் 6ஆம் சகோதரன், குரங்குகள் எல்லாம் எண்ணற்ற சகோதரர்கள். யாவரிடமும் உயிரெனப் பழகும் நேயத்தை இராமனிடம் நாம் பார்க்கிறோம்.

### நட்பு :

யுத்த காண்டத்தில் ஒரு காட்சி. கடலைத் தாண்டிய பிறகு இலங்கையில் நுழையும் முன்பு சேனையை அணிவகுக்கும் முன்பு இராமன் சுவேலம் என்ற மலையின் மீது ஏறி இலங்கையைப் பார்வையிடுகிறார். அப்பொழுது ஒரு உபரிகையின் மீது ராஜோபசாரத்துடன் இராவணன் சிங்காசனத்தில் அமர்ந்து சாமராதி உபசரணை நடக்கும் காட்சியைக் கண்ட சுக்ரீவன் உடனடியாக இராமனுக்குத் தெரியாமல் திடீரெனப் பாய்ந்து இராவணனுடன் குத்துச்சண்டையிட்டு அவனது கிரீடத்தைத் தட்டிவிட்டுத் திரும்புகிறான். இதனிடையில் இராமன் சுக்ரீவனைக் காணாமல் மிகுந்த வருத்தத்துடன். "தன் நண்பனுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் ஸீதையை அடைந்தாலும், அயோத்திக்குத் திரும்பி ஸ்வராஜ்யத்தைப் பெற்றாலும் கூட மனம் ஆராது. நண்பனின் பிரிவை எவ்வாறு தாங்க முடியும் ?" — என்றெல்லாம் தவிக்கிறார். அவரது கூற்றைப் பாருங்கள். உனக்கு ஏதேனும் நேர்ந்தால், ஸீதை. பரதன், சத்ருக்னன், என் உடல் இவற்றால் என்ன பயன் ? நீ வரும் முன்னால் நான் என்ன நினைத்தேன் என்றால் — "ஸீதையைத் திரும்பப் பெற்று, அயோத்தி திரும்பி பரதனிடம் ராஜ்யத்தை ஸ்தாபித்து உயிரை நீத்து விடுவோம்." (யுத்த காண்டம் — 41, 4–6) உடன்பிறப்பைவிட நட்பின் ஏற்றம் இங்கு காணப்படுகிறதன்றோ !

### சஹோதரத்தன்மை :

பரதன் தனக்குத் தாயுரை கொண்டு தந்தை வரமளித்து இராமனால் சம்மதிக்கப்பட்ட அயோத்தி மாநகரின் ராஜ்யலக்ஷ்மியைத் தான் ஏற்பது மிக மிகப் பாவச் செயல் என்று கருதுகிறான் ! இதற்காகத் தனது தாயையும் பழிக்கிறான். நாட்டு மக்களின் பேராச்சர்யத்திற்குப் பாத்திரமாகி அனைவருடனும் தன் அண்ணனைத் திரும்பி அழைத்துவரக் கானகம் (சித்திர கூடம்) புறப்படுகிறான். கங்கை நதிக் கரையில் உயிர் நண்பன் குகனை சந்திக்கும்

தருணத்தில் பரதன் மீது குகனுக்கு ஐயப்பாடு தோன்றியதும் — 'பரதா ! நீ பெருஞ்சேனையுடன் வருவதால் உன்மீது எனக்குச் சற்று ஐயம் எழுகிறது ? நீ தீய எண்ணத்துடன் வரவில்லையே ?' — என்று வினவுகிறான். உடனடியாக பரதன் தனது தூய எண்ணத்தைக் கூறியதைக் கேட்ட குகன் மிகுந்த மகிழ்ச்சியுடன் புகழும் வார்த்தைகளை வான்மீகி இவ்வாறு சொல்வார் —

"உனக்கு உவமையாக மற்றொன்றை இந்தத் தரணி தன்னில் பார்க்கவில்லை. தானாக வந்து ராஜ்ய செல்வத்தைத் தியாகம் செய்யும் எண்ணம் எத்தகையது !!" (அயோ. 85. 12)

இந்த இடத்தில் கம்பநாட்டாழ்வான் கூறும் பாங்கு இணையாகக் காணத் தக்கது —

"தாயுரை கொண்டு தாதையுதவிய தரணிதன்னை
தீவினை யென்ன நீக்கி, சிந்தனை முகத்தில் தேக்கி,
போயினை என்ற பொழுது புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா"

மகாகவி காளிதாசனும் இவ்விடத்தில் "அண்ணனுக்கு முன்னமே தான் ராஜ்யம் பெறுவது என்பது தமயனுக்கு முன்பு தம்பி திருமணம் செய்து கொள்ளும் பாவச் செயலாகும் என்று பரதன் எண்ணினான்" (பரிவேத்தாரமாத்மானம் மன்யே ஸ்வீகரணாத் புவ:) என்று கூறியுள்ளார்.

**கருணை**

பிறர் துயர் துடைப்பது மிகுந்த பண்பாகும். ஆனால் நாம் நமது நெருங்கிய மனைவி, மக்கள், மைத்துனன் போன்ற சில உறவினர்களின் துயரைத்துடைக்கத்துடித்தெழுகிறோம் என்றாலும் உறவினர்கள் யாவரிடமும் அப்படியிருப்பது அரிது. மேலும் பழக்கமற்ற புதிய முகத்திடம் கருணை காட்டுவது முயல் கொம்பு போல் இன்று தோன்றினாலும் நம் முன்னோர்களான முனிவர்கள் வாழ்க்கையில் கானகத்தில் வாழும் மரம், செடி, கொடி, விலங்குகள் போன்ற உயிரிகள் அனைத்திடமும் அன்பும் கருணையும் வைத்திருந்தார்கள். இதற்குச் சான்றாக மகாகவி காளிதாஸனின் இலக்கியமாகிய ரகுவம்சத்தில் ஒரு காட்சியைப் பார்ப்போம்.

"மாலைப் பொழுதில் திலீபன் வசிஷ்டரின் குடிசைக்கு (ஆச்ரமம்) வரும் போது அங்கே முனிக்கன்னிகைகள் குடங்குடமாக நீரைச் செடி - கொடிகள் - மரங்களுக்கு ஊற்றிவிட்டு உடனடியாகத் திரும்பினார்கள். ஏனெனில் பாத்திகளில் தங்கும் தண்ணீரைப் பருகுவதற்காகப் பறவைகள் மாலைப் பொழுதில் அங்கு வருமாதலால், அவைகளுக்குப் பயமற்று விசுவாசம் (நம்பிக்கை) ஏற்படவேண்டும்" என்று சித்திரித்துள்ள இக்காட்சி என்றென்றும் நம் மனதில் பசுமையை ஆழமாக ஏற்படுத்துகிறது.

"சாகுந்தலம்" என்ற நாடகத்தில் மற்றொரு அருமையான காட்சியைத் தருகிறான் காளிதாஸன். சகுந்தலை வெகுநாட்கள் கழிந்த பிறகு நாயகனின் (துஷ்யந்தனின்) வீட்டிற்கு கண்வ முனிவரால் அனுப்பப்படுகிறாள். அச்சமயம் கண்வர் இவ்வாறு செடி-கொடிகளிடம் கூறுகிறார் :— "செடி-கொடிகளே! நீங்கள் நீர் அருந்தாவிடில் சகுந்தலை, தானும் ஜலம் குடிக்கமாட்டாள். தனக்குத் தலையில் தளிருடன் கூடிய பூவை வைத்துக்கொள்ளும் அணியில் (அலங்காரத்தில்) பிரியம் இருப்பினும்கூட உங்களுடைய தளிரைக் கிள்ள மாட்டாள். மேலும், கொடிகளிலும் செடிகளிலும் முதன்முதல் மலர்கள் மலர்ந்தால் உடன் சகுந்தலை அதைக் கொண்டாட்டமாகக் கொண்டாடுவாள். அத்தகைய சகுந்தலை தன் கணவன் இல்லத்திற்குப் புறப்படுகிறாள். நீங்கள் யாவரும் அன்பு விடைகொடுங்கள்.

**உபகாரம் :**

பிறருக்கு உதவும் மனப்பான்மைதான் தலைசிறந்த புண்ணியம் என்று வியாஸ முனிவர் எண்ணற்ற புத்தகங்களின் சாரமாக அறுதியிட்டுக் கூறுகிறார். கோடிக்கணக்கான நூல்களில் கூறியுள்ள நற்செயல்கள் கணக்கிலடங்கா. ஆனால் சுருக்கமாக நாம் இரண்டே வாக்கியங்களில் கூறுவோமானால் — "பிறருக்கு உதவி புரிதல் புண்ணியம்
பிறருக்கு தீமைசெய்தல் பாவம்"

பெரும்பாலும் நாம் நமக்கு உதவியவர்களுக்கு பதிலுதவி செய்வதைக் கடைபிடிக்கிறோம். ஆனால் இது செய்நன்றிக் கடனில் அடங்கும். பரோபகாரம் என்பது எவ்விதமான முன்பின் பயனையும் கருதாமல், புதிய முகங்களுக்கு, அதுவும் எவ்விதமான வேறுபாடும் இன்றி, இயற்றப்படும் உதவிச் செயல், ஒரு புறாவைக் காப்பாற்ற சிபிச்சக்கரவர்த்தி கழுகுக்குத் தன்

உடலை அறுத்துத் தந்த வரலாறு நமக்குத் தெரியும். ஒரு அரசன் பாம்புக் குட்டியைக் காப்பாற்றுவதற்காகத் தனது உயிரைக் கொடுக்கத் தயாராகி உயிர் பிரியும் தருணத்தில் தேவர்கள் அமுத மழை பெய்து உயிர் பெற்ற வரலாறு "நாகாநந்தம்" என்ற நாடகத்தில் ஸ்ரீ ஹர்ஷன் கூறுகிறார்.

உபகாரத்திற்கு நல்லவர் மட்டுந்தான் பாத்திரம் என்பதில்லை. நல்லோர்க்கு உதவி புரிவது போற்றத்தக்கது அல்ல. இன்னா செய்தவர்க்கும் (எதிரிக்கும்) உதவும் மனப்பான்மைதான் சிறந்தது என்ற ஸம்ஸ்கிருத பழமொழிக்கு ஒப்பாகத் திருவள்ளுவரும் மிக அழகாக ஆழமாகக் கூறுகிறார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

மக்கள் நான்கு வகைப்படுவர் :

பர்த்ருஹரி என்ற பெரியவர் அரசராகவும் சிறந்த புலமை வாய்ந்தவராயுமிருந்தவர், "நீதி சதகம்" என்ற சிறந்த நூலில் மனித நேயம் பற்றியே விவரித்துள்ளார். அங்கு அவர் மக்களை நான்கு விதமாகப் பிரித்துள்ளார்.

ஸத்புருஷர்கள் — உத்தமர்கள் என்பவர்கள் தனக்குக் கஷ்டம் வந்தாலும், தன்னலத்தைத் தள்ளிப் பிறருக்கே உதவுவார்கள்.

ஸாமான்யர்கள் — தன்னலத்திற்கு விரோதமில்லாமல் பிறருக்கும் உதவுவதற்கு முற்படுவார்கள்.

மனித அரக்கர்கள் : தான் நன்கு வாழ்வதற்காகப் பிறருக்கு வரும் (ஏற்படும்) நன்மைகளைத் தடுப்பார்கள் இவர்கள்.

பெயர் தெரியாதவர்கள் (லைக்கப்படாதவர்கள்) — தனக்குச் சிறிதும் பயன் இல்லாவிடினும்கூடப் பிறருக்கு வரும் நன்மைகளைக் கெடுப்பதில் முனைந்தவர்களுக்கு இனிமேல்தான் பெயர் சூட்டவேண்டும். எனக்கு இவர்களின் பெயர் தெரியவில்லை.

மனிதநேயம் என்பது முதல் இரண்டு வகையில்தான் இருப்பதால் நாம் யாவரும் அந்த இரண்டு வகையினருள் அமைய முயலவேண்டும்.

**மனிதச்சிறப்பு:**

பர்த்ருஹரி என்ற அதே புலவர் நீதி சதகத்தில் சுருக்கமாக மக்கள் — மாக்கள் — வேறுபாட்டை, இலக்கணத்தைத் துல்யமாக வரையறுத்துக் கூறியுள்ளார். “கல்வி, அடக்கம், கொடை, நுண்ணறிவு, ஒழுக்கம், குணம் (பரோபகாரம்), அறம் ஆகிய ஏழு பண்புகள் (அல்லது) சிறப்புக்கள் இருந்தால்தான் **மனிதன்** என்று கூறப்படத் தகுதி பெறுகிறான். இல்லாவிடில் பூமிக்குப் பாரமாக, மனித வடிவத்தில் உலாவும் மிருகங்களாகவே எண்ணப்படுவர்.

நாம் அனைவரும் இறையருளால் முழுப்பொருளில் மனிதர்களாக அமைவோமாக.

# பாணினி ஸம்ஞா சூத்திரங்களில் புதைந்துள்ள கணினி பற்றிய செய்திகள்

**Dr. K. RADHA** M. A., Ph. D.'
Reader of H. O. D.
Department of Sanskrit,
Rajah's College,
Thiruvaiyaru 613 204.

தற்போது வழக்கிலுள்ள சொல்லிலக்கண நூல்களுள் பழமையானது பாணினியின் அஷ்டாத்யாயி ஆகும். அதனுள் எட்டு அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் நான்கு பாதங்கள் உள. அம்முப்பத்திரண்டு பாதங்களுள் இருபத்திஒன்பது பாதங்களை ஒரு பகுதியாகவும்; எஞ்சிய மூன்று பாதங்களை மற்றொரு பகுதியாகவும் ஆசிரியர் கொண்டனர். பாணினி சூத்திரங்கள் — 'ஸம்ஞா' 'பரிபாஷா', 'விதி', 'நியமம்', 'அதிதேசம்', 'அதிகாரம்' என ஆறு வகைப்படும். இதில் 'ஸம்ஞா' சூத்திரங்கள் என்பது பெயரை குறிப்பிடும் சூத்திரங்கள் ஆகும்.

கணிதம் சம்பந்தப்பட்ட செய்திகள் பாணினியின் இலக்கணத்தில் அமைந்துள்ளதால் அவை கணினி விஞ்ஞானிகளின் கவனத்தை மிகவும் கவர்ந்துள்ளது. இது தீவிரமாக ஆராய வேண்டிய செயல் ஆகும். இதில் உள்ள இறுதியான விதிமுறைகள் இலக்கணத்தின் எண்ணற்ற உண்மைகளை தெளிவுபடுத்துவதே ஆகும். அதே நேரத்தில் குறிக்கோளை எட்டுவதற்கு முன் பல இடையூறுகளைத் தாண்டி செல்லவேண்டியிருப்பதால் இதனை கடினமான செயல் என்றும் கூறலாம்.

'ஸம்ஞா சூத்திரங்கள்' பாணினியின் விதிமுறைகளை அறிந்து கொள்வதற்கு உதவியாக அமைகிறது. எடுத்துக்காட்டாக அஷ்டாத்யாயியின் முதல் சூத்திரமாக 'விருத்திராதைச்' என்பது 'ப்ரத்யாஹாரம்' 'தபரகரணம்' இவைகளின் அடிப்படை அறிவினைக்கொண்டு அமைந்துள்ளமையால் இவைகளைப் பற்றிய அறிவு மிகவும் தேவையாகிறது. பாணினியின் 'ஸம்ஞா' சூத்திரங்களை கணினி அறிவின் தொடர்பாக புரிந்துகொள்வதற்கு இலக்கண முறைப்படி 'எண்ணிக்கை', 'நிலை', 'வேற்றுமை' போன்றவைகள் அடிப்படை தேவையாக அமைந்துள்ளது. சரியான முறையில், காரக ஸம்ஞாக்களை (வேற்றுமைப் பெயர்களை) புரிந்துகொள்வதற்கு கணினியில் வேறுபட்ட மொழிகளில் பயன்படுத்தும் சொற்களை பொருளின் அடிப்படையில் (Semanties or meaning) தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது.

'ஸம்ஞா' சூத்திரங்களை ஆய்வு முறையில் நோக்கினால் பாணினி பல்வேறு முறைகளில் விதிமுறைப்படுத்தியுள்ளார். சில பெயர்களை (A) எளிய முறையில் கையாளுகிறார். வேறு சிலவற்றை அதன் (B) வடிவத்தின் அடிப்படையில் கூறுகிறார். வேறு சில 'ஸம்ஞா' சூத்திரங்களை (C) செயல்பாட்டின் அடிப்படையில் பிரித்துள்ளார். சில ஸம்ஞா சூத்திரங்களை (D) வரிசைப்படுத்துதல் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளார். சில ஸம்ஞா சூத்திரங்களை அதன் (E) பொருளின் அடிப்படையில் விளக்கியுள்ளார். இவ்வாறு பாணினி ஸம்ஞா சூத்திரங்களை எளிய முறை (Simple formula), வடிவம் (Structure), செயல்பாடு (Function), வரிசைப் படுத்துதல் (Enumeration), பொருள் (Semanties or meaning) அடிப்படையில் கூறியுள்ளார். இவை அனைத்தையும் ஒரே அடிப்படையைக் கொண்டு கையாளுவதற்கு இவ்வாறு அமைக்கலாம்.

I. "ஸம்ஞா சூத்திரங்கள்" இரண்டு பகுதிகளாகக் காணப்படுகின்றன. "ஸம்ஞா" (பெயர்) என்றும், "ஸம்ஞின்" (Samjuin - பெயரால் குறிப்பிடப் படுவது) என்றும் ஆகும்.

II. 'ஸம்ஞா', 'ஸம்ஞின்' (Samjna, Samjnim) இவைகள் இரண்டும் முதல் வேற்றுமையில் காணப்படுகின்றன.

III. "ஸம்ஞாவை — ஸம்ஞின்" லிருந்து வேறுபடுத்துவதற்காக இவ்வாறு கூறலாம்:

a) 'ஸம்ஞா' என்பது விரிவான கருத்தினைச் சுருங்கக்கூறுவதாகும்.

b) 'ஸம்ஞா' என்பது ஒரே சொல்லில் அமைந்ததாகும். ஆனால் 'ஸம்ஞின்' என்பது ஒரு சொல்லிற்கு அதிகமான சில வார்த்தைகளைக் (a phrase containing more than one word) கொண்டதாகும்.

c) 'ஸம்ஞா' என்பது பொருளற்ற குறியீட்டுச் சொல்லாக அமையும். (a code-word without any literal meaning).

IV. பொதுவாக ஒரு 'ஸம்ஞா சூத்திரம்' ஒரு பெயரை மட்டுமே குறிப்பிடும். ஆனால் இதற்கு விதிவிலக்காக 'ஊகாலோச்சரஸ்வதீர்க்கப்லுத;' என்ற ஒரே சூத்திரத்தினால் குறில், நெடில், ப்லுதம் (short, long, prolated) போன்ற மூன்று பெயர்களும் விளக்கப்படுகின்றன.

V. இலக்கண எண்ணிக்கையான ஒருமை, இருமை, பன்மை போன்றவைகள் ஒரு பொருட்டு அல்ல. ஆதலால் "ஸர்வாதீனி, ஸர்வநாமானி" என்ற சூத்திரத்தினால் விளக்கப்படுகின்ற "ஸர்வநாமம்" என்ற பெயர் பன்மை நிலையில் கூறப்பட்டுள்ளதால் இதனைத் தொடர்ந்து இந்நிலையிலேயே குறிப்பிட வேண்டும் என்பது விதிமுறையல்ல.

VI. ஸம்ஞா சூத்திரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஸம்ஞின் அமைந்தால் ஒவ்வொரு ஸம்ஞின் உடனும் அந்தப் பெயரை (ஸம்ஞாவை) குறிப்பிடவேண்டும். உதாரணமாக 'குண:' என்ற பெயர் அ, ஏ, ஓ என்ற மூன்று உயிர் எழுத்துக்களையும் தனித்தனியே குறிப்பிடும். 'ஸம்யோக ஸம்ஞா' என்பது எந்த இரண்டு மெய் எழுத்துக்கள் கூட்டாக அமைந்தாலும் அவைகளை ஸம்யோகம் என்றே குறிப்பிடும் ஒட்டு மொத்தமாக 'ஸம்ஞா' என்ற பெயரால் குறிப்பிடப்படுவதை 'ஸம்ஞின்' என்று அழைக்கலாம்.

இந்த வழிமுறை கணினியில் 'ஸம்ஞா' 'ஸம்ஞின்' என்ற உறவு முறையை தெளிவு படுத்துவதற்கு உதவியாக அமைந்துள்ளது. சில சூத்திரங்களில் 'ஸம்ஞின்' எது என்று தெரிந்துகொள்ள இயலாமல் இருக்கும். இவ்விடங்களில் வேறு வழிகளின் வாயிலாக அறிந்துகொள்வதனையே 'ஸம்ஞின்' என்று குறிப்பிட வேண்டும். எ. கா. "தத்புருஷ ஸமாநாதிகரண: கர்மதாரய:," (1—2—42) இங்கு "தத்புருஷ:" (2—1—22) என்ற சூத்திரத்தின் வாயிலாக 'தத்புருஷ ஸம்ஞா' என்பது அறிந்துகொள்வதால் 'தத்புருஷ:' என்பதை 'ஸம்ஞின்' என்றும் 'கர்மதாரய:' என்பது வேறு சூத்திரத்தின் வாயிலாக தெரிந்துகொள்ள இயலாததால் இதனை 'ஸம்ஞா' என்றும் கூறலாம்.

'ஸம்ஞா' என்பது விரிவானதற்கு சுருக்கமான விளக்கமாக அமைந்தாலும் ஒரு சில இடங்களில் வேறுபட்டு அமைகிறது. உதாரணமாக 'ஸர்வநாமஸ்தானம்' என்ற ஸம்ஞா. இதனை தடைசெய்ய வேறு ஒரு வழியை கையாளவேண்டியுள்ளது. ஸம்ஞா இரு வகைப்படும். ஸ்வரூப ஸம்ஞா என்றும், அரூபஸம்ஞா, என்றும், ஸ்வரூபஸம்ஞா என்பது ஒலி அடிப்படையாகக் கொண்டது ஆகும். 'அரூபஸம்ஞா' என்பது ஒலி அடிப்படையில் அமையாதது. ஐச், யண் போன்றவைகள் 'ஸ்வரூபஸம்ஞா' என்றும், 'விருத்தி' 'ஸர்வநாமஸ்தானம்' போன்றவைகள் 'அரூப ஸம்ஞா' என்றும் கூறலாம். ஒரே சூத்திரத்தில் இவ்விரண்டு ஸம்ஞா (பெயர்களும்)க்களும் இணைந்து அமைந்தால் 'அருபஸம்ஞாவை' 'ஸம்ஞா' என்றும், ஸ்வரூப ஸம்ஞாவை ஸம்ஞின் என்றும் அழைக்கலாம் இவ்வாறு கூறும்போது 'ஸர்வநாமஸ்தானம்' என்ற ஸம்ஞா 'சி' (S) (ஶி) என்ற 'ஸம்ஞினைக்காட்டிலும் நீளமாக அமைந்தாலும் தவறு ஏதும் இல்லை என கூற இயலும்.

'ஸமான ஸம்ஞா' என்பது 108 சூத்திரங்களால் விளக்கப்படுகின்றது. இவை அனைத்தும் ஸம்ஞா சூத்திரங்களின் அடிப்படையில் புரிந்துகொண்டு விளக்கப்பட வேண்டியுள்ளது. 'காரகம்' பற்றிய அறிவு பெறுவதற்கு பொருள் (meaning) தேவைப்படுகிறது. உதாரணமாக த்ருவமபாயே அபாதானம் (1—4—24) என்ற சூத்திரம். ஒரு பொருளில் இருந்து பிரிவு (அபாயம்) ஏற்படும்போது நிலையாக (த்ருவமாக) இருப்பதை 'அபாதானம், என்று குறிப்பிடப்படுகிறது. இங்கு 'க்ரியா' 'த்ருவம்', 'அபாயம்' என்பதை தெளிவாக தெரிந்துகொண்டால் மட்டுமே 'அபாதானம்' என்பதை தெளிவாக சொல்ல முடியும். இவ்வாறு பல்வேறு நிலைகளில் உள்ள சூத்திரங்களின் விதிமுறைகளை ஒருமைப்படுத்தினால் கணினியில் புகுத்துவதற்கு எளிமையாக அமையும்.

இதுபோன்று எண்ணற்ற கணினி தொடர்பான செய்திகள் ஸம்ஸ்க்ருத இலக்கணத்தில் புதைந்து கிடக்கிறது என்பது வெள்ளிடைமலை.

குறிப்பு :—

A. அதேங்குண — அ, ஏ, ஓ — இவைகள் குணம் என அழைக்கப்படுகின்றது. 1 - 1 - 2. அஷ்டாத்யாயி முதல் அத்தியாயம் முதல் பாதம் இரண்டாவது சூத்திரம்.

B. "யசியம்" - 1 - 4 - 18 (ஸி-யிலிருந்து தொடங்கி, கப் வரையில் ஸர்வநாமஸ்தானத்தைத் தவிர்த்து) கூறப்பட்டிருக்கும் ஒட்டுக்களில் "ய், அச்" (உயிர்கள்) ஆகியவைகளை முதலாகக்கொண்ட ஒட்டுக்களுக்கு முன் நிற்பவை 'பம்' எனப்பெயர்.

C. "உபஸர்கா: க்ரியாயோகே" - 'ப்ர', முதலியவைகள் ஒரு வினையுடன் சேர்ந்து வரும்போது (க்ரியாயோகே) 'உபஸர்கம்' என பெயர் பெறும்.

D. "ப்ராக்கடாராத்ஸமாஸ" (2 - 1 - 3) 'கடாரா: கர்மதாரயே" என்ற சூத்திரத்திற்கு முன்வரை (2 - 2 - 38) ஸமாஸ: என்ற (பெயரை) சேர்த்துச் சொல்லவேண்டும். இது ஒரு அதிகார சூத்திரமாகும்.

E. "ஸ்வதந்த்ர; கர்த்தா", "கர்துரீப்ஸிததமம் கர்ம" "ஆதாரோ அதிகரணம்" போன்றவைகள்.

F. "ஸர்வாதீனி ஸர்வநாமானி" (1—1—27) என்ற சூத்திரத்தினால் ஸர்வ, விச்வ போன்ற 35 சப்தங்களுக்கு "ஸர்வநாமம்" என்ற பெயர் அளிக்கப்படுகிறது.

# ஸ்ரீ வேதாந்ததேசிகனின் கவிதை இலக்கியங்கள்

**Dr. T. N. ARAVAMUDHAN,**
M. A., M. Phil., Ph. D.,
P. G. & Research Department of Sanskrit,
Rajah's College, Thiruvaiyaru.

ஜீவனம் ஜகதாம் ஜீயாத் கிமப்யபகதஸ்ப்ருஹம் ।
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேங்கடேசாஹ்வயம் மஹ: ॥

ஸ்ரீமத்வேதமார்கப்ரதிஷ்டாபநாசார்யராய், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராய், உபயவேதாந்தாசார்யராய், ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமராய், திருவேங்கடமுடையானின் கண்டாவதாரமாய், கவிதார்கிக ஸிம்ஹமாய் விளங்கிய வேங்கடநாதன் என்னும் பெயர் பெற்ற வேதாந்த தேசிகர் காஞ்சியில் உள்ள தூப்புலில் அனந்தஸூரி என்பவருக்கும், தோதாரம்பை என்பவருக்கும் புதல்வராய், கி. பி. 1268ம் ஆண்டு, புரட்டாசித் திங்கள், ச்ரவண நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இவர் இருபது வயதிற்குள்ளாகவே எல்லா சாஸ்த்ரங்களையும் கற்றார். கனகவல்லி என்னும் மங்கையை மணந்து குமாரவரதன் என்னும் புதல்வனைப் பெற்றார். இவர் தம் காலத்தில் ப்ரசித்தராய் இருந்த பண்டிதர்களை வாதில் வென்றார். மேலும் இவர் தம் வாழ்வில் பற்பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார் என்று குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன. இம்மஹான் கி. பி. 1369ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் ஹஸ்த நன்னாளில் ஆசாரியன் திருவடிகளை அடைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள் ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும், தமிழும் — ஸம்ஸ்க்ருதமும் சேர்ந்த மணிப்ரவாள நடையிலும் நூற்றுக்கும் மேற்பட்டவை ஆகும்.

இவைகளுள் வேதாந்த தேசிகரின் கவிதை இலக்கியங்கள் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

**யாதவாப்யுதயம் :**

இக்காவியம் வேதாந்த தேசிகரின் கவிதை இலக்கியங்களுள் தலைசிறந்த ஒரு மஹாகாவியமாகும். ஆசிரியர் தாமே ஒரு சிறந்த கவியின் இலக்ஷணங்களைக் கூறும்போது இக்காவியத்தின் முதல் ஸர்கத்தில், வாக், எக்கவியிடம் ரமிக்கிறதோ அவனே சிறந்த கவி என்கிறார்.

ஸ கவி: கத்யதே ஸ்ரஷ்டா ரமதே யத்ர பாரதீ ।
ரஸ பாவ குணீபூதை: அலங்காரைர்குணோதயை: ॥ (1 - 5)

மேலும் அத்வைத சாஸ்த்ரத்தில் அற்புதமான அறிவு பெற்ற அப்பய்ய தீக்ஷிதர் இக்காவியத்திற்கு உரை இயற்றியுள்ளார். இதனாலும் இக்காவியத்தின் மேன்மை உணரப்படுகின்றது. இது ஸ்ரீகிருஷ்ணனின் சரிதையைக் கூறுவதாய் 24 ஸர்கங்களில் உள்ளன. இக்காவியம் ரசிகர்களுக்கு அவர்கள் மனதில் எழும் பாவனா சக்திக்கேற்பப் பல அர்த்தங்களைக் கொண்டு மிளிர்கிறது. இதற்கு உதாரணமாக,

எம்பெருமான் இம்மாபெரும் உலகத்தையே தனது மனதில் ஒரு சித்திரமாக வரைந்தார். இச்சித்திரம் வரைவதற்குத் தனது கருணையை மையாகவும், தன் லீலையைக் குச்சியாகவும் கொண்டு இப்பெரிய செயலை, அவர் ஸர்வ சக்தனானதால் ஒருவனாகவே செய்து முடித்தார் என்பதைக் கவி வருணித்துள்ளார்.

க்ரீடாதூலிகயா ஸ்வஸ்மின் க்ருபாருஷிதயா ஸ்வயம் ।
ஏகோ விச்வமிதம் சித்ரம் விபு: ஸ்ரீமாநஜீஜநத் ॥ (1. 9)

இந்த சுலோகத்தின் வ்யாக்யானத்தில் அப்பய்யதீக்ஷிதர் கவிதார்க்கிக சிங்கமான வேதாந்த தேசிகரின் லலிதமான காவ்யங்களிலும் இவ்வாறான பற்பல பாவங்கள் காணக்கிடைக்கின்றன என்கிறார்.

**இத்தம் விசிந்த்யா: ஸர்வத்ர பாவா: ஸந்தி பதே பதே ।**
**கவிதார்கிகஸிம்ஹஸ்ய காவ்யேஷு லலிதேஷ்வபி ॥**

ஒரு சமயம் ஆயர்பாடியில் வேடுவப் பெண் ஒருத்தி காட்டில் கிடைக்கும் நாவல் பழம் போன்றவற்றை விற்றுச் செல்கிறாள். பழத்தில் ஆசைப்பட்ட கண்ணன் நெல்லைத் தன் சிறிய அழகிய கைகளால் கொண்டுசெல்ல, சிறு கைகளின் விரல்களுக்கிடையே அவன் எடுத்து வந்த நெல் அனைத்தும் கீழே விழுந்துகொண்டே வந்தது. பழக்காரியிடம் கொடுக்கும்பொழுது அவன் கையில் சங்கு சக்ர ரேகைகள்தான் அவளுக்குத் தெரிந்தது. அதைக்கண்ட அப்பெண் இவன் குழந்தையல்ல ஸாக்ஷாத் எம்பெருமானே என்று உணர்ந்து தன்னையே அவனிடம் அர்ப்பணித்துக்கொள்ள நினைத்தாள்.

ஆரண்யகாநாம் ப்ரபவ: பலாநா
மரண்யஜாதாதி பலாந்யபீப்ஸந் ।
விஸ்ரம்ஸிதாந்யஞ்ஜலிநா கரேண
வ்யாதாத்மஜாம் விச்வபதி: வஸேவ ॥ (4. 30)

ஸௌஜாதரேகாத்மக சங்கசக்ரம்
தாம்ரோதரம் தஸ்ய கராரவிந்தம் ।
விலோகயந்த்யா; பலவிக்ரயிண்யா:
விக்ரேதுமாத்மாந மபூத்விமர்ஸ: ॥ (4. 31)

இப்படி உலகில் உள்ள அனைவரையும் தன் லீலையால் உய்வித்த உயர்ந்த கல்யாண குணங்களைப் பல படியில் இக்காவியத்தில் கவி மிகமிக அழகாய்ச் சித்தரித்துள்ளார்.

பாதுகாஸஹஸ்ரம் :

ஸ்ரீரங்கநாதனின் திவ்யமணிபாதுகா விஷயமான 1008 சுலோகங்களைக் கொண்ட இத்தோத்திர காவியமானது வேதாந்த தேசிகரால் ஒரே இரவில் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீராமபிரான் பதினான்கு ஆண்டுகள் வனவாஸம் செய்தபொழுது பரதன் ஸ்ரீபாதுகையை ஆராதிக்க, அதன் பெருமையால் பதினான்கு ஆண்டுகளும் நாடு பல்வளங்களும் பெற்றுச் செழிப்பாய் இருந்தது. இதன் மூலம் பாதுகையின் ப்ரபாவத்தை இப்பூவுலகில் முதன்முதலில் பரவச் செய்த பெருமை பரதனையே சாரும். எனவே இந்தக் காவியத்தின் முதலில் வேதாந்த தேசிகர் பரதனுக்கு ப்ரணாமம் செய்கிறார்.

பரதாய பரம் நமோऽஸ்து தஸ்மை
ப்ரதிமோதாஹரணாய பக்திபாஜாம் ।
யதுபக்ஞமசேஷத: ப்ருதிவ்யாம்
ப்ரதிதோ ராகவ பாதுகாப்ரபாவ: ॥ (1 - 2)

ஹம்ஸ ஸந்தேஶம் :

மஹாகவி காளிதாஸன் இயற்றிய மேகஸந்தேசத்தைப் பின்பற்றி வேதாந்த தேசிகரும் இக்காவியத்தை மந்தாக்ராந்தா என்ற வ்ருத்தத்தில் இரண்டு ஆச்வாசங்களில் 110 சுலோகங்களில் இயற்றியுள்ளார். மேலும், ஆழ்வார்கள் தங்களை நாயகியாகவும், எம்பெருமானை நாயகனாகவும் பாவித்து கிளி, அன்னம் போன்றவைகளைத் தூது அனுப்பியதுபோல், வேதாந்த தேசிகரும் அன்னத்தை இராமபிரான் சீதைக்கு தூது அனுப்பியதாக இக்காவியத்தில் கூறியுள்ளார். சீதையைப் பிரிந்த ஸ்ரீராமபிரான், ஹனுமன் மூலம் சீதை இலங்கையில் இருப்பதாக அறிந்து இராவணனுடன் யுத்தத்திற்குச் செல்லுமுன் ஹம்ஸத்தை இரண்டாவது தூது அனுப்பியதாக எழுந்த ஒரு கற்பனை காவியமே "ஹம்ஸஸந்தேச"மாகும்.

ஹனுமன் வாயிலாக சீதையின் செய்தியைக் கேட்ட இராமபிரான் பிரிவுத் துன்பத்தால் தவிக்கிறார். இந்நிலையில் தாமரைப் பொய்கையில் ஓர் அன்னத்தைக் கண்டார். அதன் நடை, ஒலி, வடிவம் போன்றவைகள் சீதையைப் போன்றிருந்ததால் அவள் நினைவுகளால் இராமபிரான் மிகவும் வருந்தினார்.

தஸ்மிந் ஸீதாகதிமநுகதே தத்துகூலாங்கஶுப்ரௌ
தந்மஞ்ஜீரப்ரதிமநிநதே ந்யஸத் நிஷ்பந்தத்ருஷ்டி: ।
வீரச்சேதாவிலயமகமத் தந்மயாத்மா முஹூர்தம்
ஸங்கேதீவ்ரம் பவதிஸமயே ஸாஸநம் மீநகேதோ: ॥ (1-3)

இங்கு கவி விப்ரலம்பச்ருங்காரத்தை வருணித்துள்ளது கவனிக்கத்தக்கதாகும். ரஸங்களில் ச்ருங்காரம். அதிலும் விப்ரலம்ப ச்ருங்காரம் மிகவும் ஸுகுமாரமானதாகும். இது அலங்கார சாஸ்த்ரங்களில் வல்லுனர்களான ஆனந்தவர்தனர் போன்றவர்களின் கருத்து.

ஸுபாஷிதநீவி:

இக்காவியம் இராஜ மஹேந்த்ரபுரத்தை ஆண்ட சிங்க பூபாலனுக்குப் பொதுவான தர்மங்களை உபதேசிக்கத் தோன்றியது என்று உணரப்படுகிறது. இது 12 பத்ததிகளைக் கொண்டது. ஒவ்வொரு பத்ததிக்கும் 12 சுலோகங்களும், ஒவ்வொரு சலோகத்திலும் பல பொருள்களும் அமைந்திருப்பதை அறியலாம். உதாரணமாக மஹாகவி பத்ததியில் ஆசிரியர் ஒரு கவியைப் பற்றிக் கூறுவது நினைவில் கொள்ளத்தக்கதாகும். அதாவது ஸம்சயம். விபர்யயம் அற்ற உறுதியான ஆழ்ந்த அறிவு உள்ளவர்கள் வேதவிருத்தமற்ற தத்துவ விஷயங்களை ஒன்பான் சுவைகளுடன் கூடிய வ்யங்கியமான கருத்தை முக்கியமாகக்கொண்டு தொனி என்ற காவியத்தை இயற்றுகின்றனர். மேலும் ரஸபங்கம் ஏற்படாது. மாதுர்யம் முதலான குணங்களும், உவமை முதலான அலங்காரங்களும் சேர்ந்து ரஸத்தைத் தோற்றுவிக்கும் விஷங்களைக் கூறும் கவி, உணமையே சொல்பவன் ஆவான் என்கிறார்.

அபங்கிலதிய;சுத்தா: லாாதுமாநவ வ்ருத்தய: I
வமந்தி ச்ருதிஜீவாதும் த்வநீம் நவரஸாஸ்பதம் II (11. 1)

விசுத்தவர்ணலலிதா குருலங்கார ஸாலிநீ I
ஸரஸா பாரதீயஸ்ய ஸா ஸத்யேக:ப்ரதிஷ்டித: II (11. 3)

வேதாந்ததேசிகரின் கவிதை இலக்கியங்களான ஸ்தோத்திரங்கள் வைணவ இலக்கியத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. அவை தெள்ளிதின் விளங்காத நுட்பமான ஸமயக் கருத்துக்களைப் பிறருக்கு எளிதில் விளங்கும் வண்ணம் அமைந்துள்ளன. இவர் இயற்றிய ஸ்தோத்திரங்கள் 28, இவைகளுள் முதன்மையானது ஹயக்ரீவ ஸ்தோத்திரம். விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்று ஹயக்ரீவ அவதாரம். இவ்வெம்பெருமானே கல்விக்கு முதல் கடவுளாவர். இவ்வெம்பெருமானை வேதாந்த தேசிகர் அன்றாடம் ஆராதித்து வந்தார். அதனால் மகிழ்ந்த ஹயக்ரீவர் இவர் எதிரில் ஸேவை ஸாதித்து அருளினார். அச்சமயத்தில் அவரைப் பற்றி துதித்ததே இந்த ஹயக்ரீவ ஸ்தோத்ரமாகும் இத்தோத்திரத்தின் முதலிலேயே, உலகில் மக்களை மக்களாக வாழவைக்கவல்லது கல்வி. எல்லாக் கலைகளையும் தரவல்லவன் ஸ்ரீ ஹயக்ரீவனே. அவன் திருமேனி மாசு மருவற்று ஸ்படிகம்

போன்று தூய்மையான வெண்ணிறமுள்ளது என்றார், அவனை உபாஸனம் செய்பவன் மனமும் ஐயம் திரிபற மாசுமருவற்ற அறிவைப் பெற்று விளங்கும் என உரைத்துள்ளார்.

க்ஞாநானந்தமயம் தேவம் நிர்மலஸ்படிகாக்ருதிம் ।
ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே ॥

இதைப்போன்றே மஹாலக்ஷ்மியைப் பற்றி ஸ்ரீஸ்துதி, பூமிப்பிராட்டியைப் பற்றி பூஸ்துதி, விஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றி தசாவதார ஸ்தோத்ரம், கண்ணனைத் துதிப்பதாக அமைந்த கோபால விம்சதி, ஸ்ரீகாஞ்சி வரதனைப் பற்றி வரதராஜ பஞ்சாசத், கருடனைப் பற்றிய கருடதண்டகம், ஸ்ரீநிவாஸனுடைய தயையைப் பற்றிய தயாசதகம் போன்ற ஸ்தோத்திரங்கள் குறிப்பிடத் தகுந்தவைகளாகும். இவைகளுள் தயாசதகம் என்னும் ஸ்தோத்திரம் இவருடைய மற்ற ஸ்தோத்திரங்களைக் காட்டிலும் ஒரு தனிச் சிறப்பு பெற்றது. ஏனெனில் இது திருவெங்கடமுடையானின் தயாகுணத்தை ஒரு பிராட்டியாக வர்ணித்து 108 சுலோகங்களில் அமைந்துள்ளது. மேலும் தயை என்னும் ஒரு குணம் இல்லாதிருந்தால் க்ஞான, பல, ஐச்வர்யம்போன்ற பகவானுடைய குணங்கள் தோஷங்களாகவே கருதப்படும் என்பதையும், அவைகள் துன்பப்படும் ஜீவராசிகளுக்குப் பயன்படா என்பதையும் விளக்கி உள்ளார்.

வ்ருஷகிரிக்ருஹமேதிகுணா: போதபலைச்வர்ய வீர்யசக்திமுகா: ।
தோஷாபவேயுரேதே யதி நாமதயே த்வயா விநாபூதா: ॥ (சு. 15)

ஸ்ரீ வேதாந்த தேசிகருக்கு ஸம்ஸ்க்ருதம், தமிழ் மற்றும் ப்ராக்ருதத்திலும் நல்ல பரிசயம் இருந்ததால் திருவயிந்தையில் வீற்றிருக்கும் தெய்வ நாயகன்மீது ப்ராக்ருத பாஷையில் "அச்யுத சதகம்" என்னும் ஸ்தோத்திரத்தை இயற்றினார். இத்தோத்திரத்தில் தெய்வ நாயகனின் திருமுகமண்டலத்தை ஒரு சந்த்ர பிம்பம் போன்றும், இவ்விரண்டிற்கும் நடுவேயுள்ள திருக்குழற் கற்றை அடர்ந்த இருள்போன்றும் காட்சி தருகின்றன என விவரிக்கிறார். இதனால் உலகில் சேர்க்கமுடியாத வஸ்துக்களை ஒன்றாகச் சேர்த்துவைக்கும் திறமை பகவானிடமுள்ள அகடிதகடநாசக்தி புலனாகும்படி உத்ப்ரேக்ஷா அலங்காரத்தால் வர்ணித்திருப்பது சுவைத்தற்குரியதாகும்.

முகசந்த்ரமௌளி திநகரமத்யஸ்தித:
தவ சிகுரபாராந்தகார: ।
அகடிதகடநாசக்திம் ஸத்யம்
ஸ்தாபயதி தாஸைத்ய மைக்ராத் ॥ (சு. 34)

ஸ்ரீ தேசிகன் ஒரு மஹாகவியாய்த் திகழ்ந்ததோடு மட்டுமல்லாது ராமானுஜ தயாபாத்ரராய், க்ஞானவைராக்ய பூஷணத்தைப் பெற்று ஸதாசார்ய லக்ஷணங்களுடன் வாழ்ந்து வந்தார். இவ்வளவு பெரிய மஹானாய் இருந்தும் ஒரு சாதாரண மனிதன் போன்று மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார் என்பது சிந்திக்கத் தக்கதாகும். விஜய நகர மன்னனின் ராஜகுருவான வித்யாரண்யர் என்ற மஹான் தம் இளம்பருவத்தில் தேசிகனுக்கு நண்பராய் இருந்தார். இவர் தம் நட்பினால் தேசிகனின் புலமைக்கேற்ற செல்வத்தைப் பெறச்செய்து அவர் ஏழ்மையைப் போக்க வேண்டும் என்று எண்ணித் தம் அரசனின் ஆஸ்தானத்தை அலங்கரிக்க வந்தருளும்படி ஒரு கடிதத்தை எழுதியனுப்பினார். ஸ்ரீதேசிகன் அந்தக் கடிதத்திற்குப் பதிலாக, மன்னர்கள் பூமியின் ஒரு பாகத்தை ஆளும் வாய்ப்பைப் பெற்று கர்வமுற்று மனம் மயங்குகின்றனர். அவர்கள் தம்மைப் புகழ்ந்து பேசுவது பெரும் பாக்யமெனக் கருதுகின்றனர். அவர்களை ஒரு பொருளாக மதியாது, ஒரு பிடி அவல் கொடுத்த குசேலருக்குக் குபேர செல்வத்தையளித்த எம்பெருமானைத் துதிப்பதே சிறந்தது, போற்றத் தக்கதென உறுதி கொண்டுள்ளோம் என்றும், தந்தை ஈட்டிய பொருளோ சிறிதும் கிடையாது. ஆனால் அத்திகிரியின் உச்சியில் பித்ரார்ஜிதமான செல்வம் (பிதாமஹர் என்று சொல்லப்படும் பிரமனால் தேடிவைக்கப்பட்ட செல்வமாகிய ஸ்ரீ பேரருளாளன் என்னும் சொத்து) எனக்கு இருக்கிறது. இதுவே எனக்குப் போதுமானது என்று விரக்தியுடன் ஐந்து சுலோக ரத்னங்கள் கொண்ட "வைராக்ய பஞ்சகம்" என்னும் போற்றத் தகுந்ததை வித்யாரண்யருக்குப் பதிலாக அனுப்பினார்.

க்ஷோணீகோணசதாம்ச பாலநகலா துர்வார கர்வாநல
க்ஷுப்யத்க்ஷுத்ர நரேந்த்ர சாடுரசநா தந்யாந் ந மந்யாமஹே ।
தேவம் ஸேவிதுமேவ நிச்சிநுமஹே யோ ஸௌ தயாளு: புரா
தாநாமுஷ்டிமுசே குசேலமுநயே தத்தே ஸ்ம வித்தேசதாம் ॥ (சு. 1)

நாஸ்தி பித்ரார்ஜிதம் கிம்சித் ந மயா கிம்சிதார்ஜிதம் ।
அஸ்திமேஹஸ்தி சைலாக்ரே வஸ்து பைதாமஹம் தனம் ॥ (சு. 6)

வேதாந்த தேசிகரின் இலக்கியங்களின் நடை ஆழ்ந்த கருத்துக்களுக்கும், இனிமைக்கும் எளிமைக்கும் பெயர்போனது. அதே ஸமயத்தில் உயர்வானதும் அரும்பெரும் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் உள்ளது என்பதை "கடோர ஸுகுமார கும்ப கம்பீரம்" என்று ரகுவீர கத்யத்தில் இக்கவியே கூறிய வாக்யத்தால் தெளிவாகிறது. மேலும் ஸரளமான இசையுடன் கூடிய பதங்களும் எண்ணிலடங்காத இனிய வாக்கியங்களின் தொகுப்பும் மிகப் பொருத்தமான சொல்லும் பொருளும் வேதாந்ததேசிகரின் கவிதைகளில் காணக்கூடிய சிறந்த அம்சங்களாகும்.

# ஸம்ஸ்கிருத மொழியில் இசை நூல்கள்

கலைமாமணி **பி. எம். சுந்தரம்,**
(இசை ஆராய்ச்சியாளர்)
சிறப்புக்கேளமைப் பதிப்பாசிரியர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**த**ஞ்சை சரசுவதி மகால் நூலகம், உலக அளவில் மிகப்பெரிய, சிறந்த நூலகங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது. அறிவின்பாற்பட்ட பேராய்வு எனும் ஸாகரத்தில் பயணிப்பவர்களுக்கு இந்நூலகம் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. இந்தச் சிறப்புக்கெல்லாம் முக்கியக் காரணம், மன்னர் சரபோஜி என்றால் அது மிகையாகாது. அவரது 222-ஆவது ஜனன விழாவை நூலகம் கொண்டாடி இவ்விதக் கருத்தரங்குகளை நடத்துவது, அம்மன்னனுக்குக் காட்டும் நன்றியேயாகும்.

ஸம்ஸ்க்ருதம் என்னும்போது, அம்மொழிக்கும் ஸங்கீதத்துக்குமுள்ள உறவு நெருக்கமானதும், தொன்மையானதுமாகும். இசை பற்றிய செய்திகளை இலக்கணத்தை விளக்கவந்த "தொல்காப்பியம்" ஓரளவும், "பஞ்சமரபு", "சிலப்பதிகாரம்" போன்ற பழந்தமிழ் நூல்கள் விரிவாகவும் விளக்குகின்றன. இவற்றுக்கெல்லாம் காலத்தால் மூத்ததென, ஆய்வறிஞர்கள் கருதும் "நாட்ய சாஸ்த்ரம்" என்ற வடமொழி நூல், இசைக் கலைக்கென்றே தோன்றிய ஒன்று. தமிழ் மொழியில் எழுந்த இசை இயல் நூல்கள் மிகப்பலவெனினும், அழிந்து மறைந்து, எஞ்சி நிற்பவை மிகச்சிலவே. ஆயினும், ஸம்ஸ்க்ருத மொழியில் இப்பொருள் பற்றி விளக்கும் நூல்கள் ஏராளமாக உள்ளன.

"ஏழிசையாய், இசைப்பயனாய்" என்று பாடி, இறையும் இசையும் ஒன்றெனப் போற்றினர் நமது முன்னோர். இறையைப் பேசத் தொடங்கும் போதெல்லாம், இசையையும் இணைத்து வடமொழியில் போற்றியவர்கள் பலர். "ஜயஸங்கீதரஸிகே" என்று அம்பிகையை அழைத்தான், காளிதாஸன். வீணையினொலியைப் பழிக்கும் குரலாளாகிய அவள், ஸங்கீதத்தைச் சுவைப்பதிலும் முதலிடங்கொண்டவள் என்பது அக்கவிஞனின் கூற்று.

वीणारवानुषङ्गं विकचमुखाम्भोज माधुरी भृङ्गम् .... नखमुखमुखरित

वीणानाद् रसास्वाद .... सरिगमपधनिरतां तां वीणा संक्रान्तकान्तहस्तां ...

என்றெல்லாம் இறைவியைத் துதித்தார் ஸ்ரீசங்கரபாவத்பாதர் அவர்கள்.

ஸங்கீதத்துக்கு அடிப்படையாக அமைந்துள்ள ஸ-ரி-க-ம-ப-த-நி என்ற ஏழும் முதன்முதலாகக் காணப்படுவது "நாரதபரிவ்ராஜக உபநிஷத்" என்ற வடமொழி நூலில்தான் என ஆய்வாளர்கள் எழுதுகின்றனர்.

ஸம்ஸ்க்ருத இசை நூல்கள் மட்டுமன்றி வேறு பலவும் இசைக் கருவிகளைப் பற்றியும் ஆங்காங்கே குறிப்பிட்டிருப்பதைக் காணமுடிகின்றது. வாத்ஸ்யாயனரின் "காம ஸூத்ரம்", மற்றும் சிரௌத ஸூத்ரங்களில், இன்று, அருகிய நிலையை எய்தியிருக்கும் ஜலதரங்கம் பற்றிய செய்தி உள்ளது. 'உதகவாத்யம்' அல்லது 'உதககும்ப வாத்யம்' என்ற பெயர் கொண்டிருந்த இந்த இசைக் கருவிக்கும், வீணைக்கும் தனித்தவொரு சிறப்பு உண்டு. யாக, யக்ஞங்கள் நடத்தப்பெறும் சாலைகளில், இவ்விரு வாத்யங்களில் ஒன்றின் இசையாவது சூழ்ந்திருக்கவேண்டுமென்பதே அச்சிறப்பு.

புராணங்கள் பல உண்டு. மிருதங்கத்துக்கென்றே ஒரு புராணம். 'மிருதங்க புராணம்' எழுந்தது ஸம்ஸ்க்ருத மொழியில்தான். குழற் கருவிகள், தந்திக் கருவிகள், தோற்கருவிகள், கஞ்சக் கருவிகளென வாத்யங்களை வகைப் படுத்தி இசை நூல்கள் பேசுகின்றன. நமது கர்நாடக இசையின் 'ஆணிவேர்' என்று கூறுமளவில் சிறப்புப் பெற்று விளங்கிய குழற்கருவி நாகஸ்வரம். ஆலயமாகட்டும், சமுதாயச் சடங்குகளாகட்டும் – நாகஸ்வரத்துக்குத்தான் முதலிடம் தரப்பட்டுள்ளது. இந்த நாகஸ்வரம் பற்றிய செய்தி பழமையான நூல்களில் காணப்படாத காரணத்தால், இக்கருவி, கி. பி. பதினேழாம் நூற்றாண்டில்தான் தோன்றியதென்று பல அறிஞர்கள், குறிப்பாகத் தமிழறிஞர்கள் கூறியும், எழுதியும் வந்திருக்கிறார்கள்.

ஸம்ஸ்க்ருத மொழியிலமைந்த தொன்மையான 'ஸ்கந்த மஹா புராண'த்தில் நாகஸ்வரம் – அதே பெயருடன் - பேசப்பட்டிருக்கின்றது. வைணவ ஆகமங்களில் ஒன்றான 'ஸ்ரீப்ரச்ன ஸம்ஹிதை'யில் இக்கருவி 'நாகவாத்யம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது அண்மையில் ஒரு பழமையான சிதிலமாகிவிட்ட, சுவடியொன்று எனக்குக் கிடைத்தது. அது பல ஏடுகளைக் கொண்டிருக்கவில்லை. இந்தச் சுவடியோ அதன் பிரதியோ எந்த நூலகத்திலுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 'ப்ருஹந்நந்திகேசியம்' என்ற பெயரைக்கொண்ட இந்நூல், நாகஸ்வரம் பற்றி மட்டுமல்லாமல், அக்கருவியைக் கையாள்பவரின் பரம்பரை போன்ற செய்திகளையும் தருகின்றது. அதில் சில ச்லோகங்களை, உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

स्वतन्त्रं अस्वतन्त्रं च मिश्रमुत्तमं भवेत् त्रिधा ।
नागस्वराभिधं इदं स्वतन्त्रवाद्यमुच्यते ॥

गन्धर्वाणां पतिः पूर्वं नारदस्येव शापतः ।
कावेर्यां नदीतीरे तु नर्त्तकायकुलेऽभवत् ॥

सतदानीं वाद्यमिदं स्वीयरनेवान्वशिक्षवत् ।
ततश्च देवतागारं गत्वास्तौषीत्सतैस्सह ॥

तेन तुष्टस्तु भगवान् वरं तस्मै ददौ शिवः ।
मे भक्तस्य गात्रेण कृतं वाद्यमिदं पुरा ॥

त्वं चापि वाद्येनानेन मम प्रियकरोऽह्यसि ।
अतस्त्वद्वंशजास्सर्वे वाद्यस्यास्य तु वादकाः ।

என்று கூறிப்போகிறது இந்நூல். நாரதரின் சாபத்தால், கந்தர்வர்களின் தலைவன், காவிரித் தீரத்தில் ஆடற்கலைஞர்கள் குலத்தில் தோன்றி, நாகஸ்வரத்தைத் தானும் இசைத்துப் பிறருக்கும் பயிற்சியளித்துவர, மகிழ்ந்த சிவபெருமான், 'என பக்தனின் தேஹத்தைக் கொண்டு உருவமைக்கப்பட்ட இந்த நாகஸ்வர வாத்யத்தைப் பாரம்பரியமாகக் கையாண்டுவந்து எம்மை மகிழ்விப்பீர்களாக' என்று வரம் தந்ததாக இது நமக்கு உணர்த்துகின்றது. நூலின் முழுமையும் கிடைக்காதிருப்பதால், 'பக்தனுடைய தேஹத்தால் உருவாக்கப்பட்ட'தென்பதின் விளக்கத்தை அறியமுடியாமலிருக்கிறது.

இவ்வாறு இசைக்கருவிகளையும் வர்ணிக்கும் நூல்கள், இசைத் தொடர்பான சில கிரியைகளையும் விளக்குகின்றன. உதாரணத்துக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும், ஒரு இசைக் கச்சேரியென்றால், இடையே மிருதங்கம் அல்லது இன்னும் பல முழவினங்கள் "தனி ஆவர்த்தம்" வாசிப்பது வழக்கமென்பது. "தனி ஆவர்த்தம்" என்பது சரியான பெயரல்ல; ஆயினும் உங்களுக்கு எளிதில் புரியச்செய்யவே இந்தச் சொல்லாட்சியைக் கூறுகிறேன். இந்த நிகழ்வின் முடிவில் "மோஹரா" (இதை final என்பார்கள்) வாசிப்பார்கள். இது 'மோஹரா'வா அல்லது 'மோரா'வா — இப்படியொரு பெயர் எவ்வாறு எழுந்தது — இதற்கெல்லாம் தமிழ்மொழியிலமைந்த எந்த இசை நூலுமே விளக்கவில்லை. அங்கே நமக்குக் கைகொடுக்க முன்வருவது ஸம்ஸ்க்ருதம்.

पाठवर्णसुवैचित्र्य तालयत्यादि च शोभितः ।
मोहाद्रञ्जयति श्रोतृचित्तं तन्मोहरः स्मृतः ॥

தாளமெனும் அஸ்திவாரத்தின்மீது, முழவுச் சொற்களை யதியென்ற க்ரமத்தோடு அழகுற இயக்கிக் கேட்போரின் சித்தத்தை மோஹத்துடன் ரஞ்ஜிக்கச் செய்வதே 'மோஹர' என்பதாகும் கூறுவது "நர்த்தன நிர்ணயம்", என்ற ஸம்ஸ்க்ருத நூல்.

பொதுவாக ஒரு பாடலைப் பாடும்போது, நெடில் எழுத்தைக் குறிலாகவும், குறிலை நெடிலாகவும் கையாளுவது சகஜம். இதை மூத்த இசைக் கலைஞர்களாகட்டும், இசை அறிஞர்களாகட்டும் தவறு என்று,

"பதச்சேதம்" எனும் குற்றங்கொண்டதாயும் குறைகூறுவர். உதாரணமாக "ராம நீ ஸமானமெவரு" என்ற தியாகராஜ கீர்த்தனையைப் பாடுகையில், அநேகமாக எல்லோருமே "ரம நீ ஸ்மானமெவரு" என்றே பாடுவார்கள். இதைப்பற்றி ஒருசமயம் காஞ்சி மாமுனிவர் அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது என்னிடம், "இதுவொன்றும் பெரிய குற்றமாகாது; இலக்கணத்திலேயே இதில் தவறு கிடையாது எனக் கூறப்பட்டிருக்கிறது. "பாண்டீர வியாகரணத்தைப்பார்" என்றார்கள். நம் நூலகத்துக்கு வந்து அந்த வியாகரணத்தைப் பார்த்தேன். இசைப்பற்றிய ஒருகட்டத்தில்,

पदादौ पदमध्ये च पदान्ते वर्त्तमानयोः ।
वैपरीत्यं विकल्पे न भवति ह्रस्वदीर्घयोः ॥

என்று குறிப்பிடப்பட்டுள்ளது பதத்தின் முதல் அல்லது இடை அல்லது இறுதி எழுத்து – நெடிலைக் குறிலாகவோ குறிலை நெடிலாகவோ ஒலிப்பதில் எவ்வித விபரீத மாறுபாடும் ஏற்படுவதில்லை. எனவே இவ்வாறு இசை பற்றிய ஏராளமான விவரங்களை நமக்கு ஸம்ஸ்க்ருத மொழியிலமைந்த நூல்கள் வாரிவழங்குகின்றன. இம்மொழியை வளர்த்துப் பாதுகாப்பது ஒவ்வொரு இந்தியனுக்கும் கடமையாகும். காலத்தின் மாற்றத்தால், செம்மையான அம்மொழி வெறுக்கப்படுவதும், ஒதுக்கப்படுவதுமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அம்மொழிப் பண்டிதர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? எத்தனையோ பண்டிதர்கள், புலவர்கள், கவிஞர்கள் நாட்டிலிருந்தாலும், ஸம்ஸ்க்ருத பண்டிதர்களின் நிலை, மற்றோரைவிடத் தாழ்த்தப்படும் அவலமான நிலையாக இருக்கிறது அதிலும் இறையருளாகிய அதிருஷ்டம் தேவைப்படுகிறது நீலகண்ட தீக்ஷிதர்,

तुल्यं कर्षन्ति पृथिवीं तुल्यं शास्त्राण्यधीयते ।
उन्मज्जन्ति निमज्जन्ति दैवस्यैकस्य चेष्टया ॥

என்றார். நிலத்தைப் பலர் உழலாம்; சாஸ்திரங்களைப் பலர் கற்றுத் தேறலாம்; ஆனால் எல்லோருக்கும் உரிய பலன் கிடைத்துவிடுவதில்லை அதற்கும் இறைவனின் திருவிளையாட்டு தேவையாகிறது. அதைப் போல், உரிய மதிப்பு சற்று குறைந்த நிலையில்தான் ஸம்ஸ்க்ருதப் பண்டிதர்கள் உள்ளனர். நமது ஸரஸ்வதி மஹால் நூலகம் எம்மொழியையும் போற்றுவதாகும். எனவே இங்கேயுள்ள ஸம்ஸ்க்ருதத் துறையினருக்கு அனைவரும் மதிப்பு தருவது சகஜம். இவ்வித நிலை இனியும் மாறாமல், மேன்மேலும் வளரவேண்டும் என்பதோடு, அப்பண்டிதர்களும், நூலகத்திலுள்ள சுவடிகளெனும் கடலில் அமிழ்ந்து, பல அரிய ரத்னங்களை மேலே கொணர்ந்து உலகத்துக்கு வழங்கவேண்டுமென்பது என் வேண்டுகோள்.

# சம்ஸ்கிருத இசை இலக்கண நூல்கள்

முனைவர். ரா.மா. கௌசல்யா,
முதல்வர்,
தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி,
திருவையாறு.

ஒரு நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டில் நடைபெற்ற போர்களையும், ஆட்சி செய்த அரசர்களையும் மையமாகக் கொண்டே எழுதப்படுகிறது. இவை அவ்வப்போது முறையாகப் பதிவு செய்யப்பட்டும் வந்திருக்கின்றன. ஆனால் அந்நாட்டிற்கே உரித்தான கலைகளுக்கும் வரலாறு உண்டு என்பதும் அவை தொடர்பான செய்திகள் முறையாகப் பதிவு செய்து காக்கப் படவில்லை என்பதும் மறுக்கப்படமுடியாத உண்மைகளாகும். குறிப்பாக, நம் நாட்டில் இசைக்கலை தொன்றுதொட்டே சிறப்புடன் விளங்கி வந்திருக்கிறது. நான்கு உபவேதங்களுள் ஒன்றாகக் "காந்தர்வவேதம்" என்று இசை போற்றப்பட்டது

லக்ஷியம் லக்ஷணம் ஆகிய இரு வழிகளிலும் நம் முன்னோர் வல்லவர்களாகத் திகழ்ந்து வந்திருக்கிறார்கள்..

இசைக்கலையின் அடிப்படைக் கலைக் கூறுகளான மேளம், இராகம், இராகப்பகுப்பு, கருவிகள், சுருதிகளின் விநியோகம் போன்றவை பற்றிய கருத்துக்கள் காலந்தோறும் மாறுதலடைந்து வந்திருக்கின்றன. இவற்றை உள்ளிட்ட கருநாடக இசையின் வரலாறு முறையாக எழுதிவைக்கப்படாவிட்டாலும் பல வழிகளில் இவ்வரலாற்றினை அறிந்துகொள்ள முடியும். அவை இலக்கிய நூல்கள், இசை இலக்கண நூல்கள், பாடல்கள், கல்வெட்டுக்கள், ஓவியங்கள், சிற்பங்கள், நாணயங்கள், அரசு ஆவணங்கள், தனிப்பட்டோரது குறிப்புகள், செவிவழிச் செய்திகள் போன்றவையாகும். கருநாடக இசையின் வரலாற்றினை வரிசையாக முறைப்படுத்திப் பார்க்க உதவும் மூல வாயில்களாக இவை உதவுகின்றன.

இவற்றுள் இசை இலக்கண நூல்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். கருநாடக இசை வரலாற்றினை அறிந்துகொள்ள இவை பேருதவி புரிகின்றன.

அறிஞர்கள், இசைக் கலைஞர்கள் ஆகியோர் இத்தகைய நூல்களில் அவ்வக் காலத்து இசை முறைகளையும், அவர்கள் காலத்திற்கு முன்னால் வாழ்ந்த பெரியோர்கள் கூறியவற்றையும், தமது கருத்துக்களையும் நூல் வடிவில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். சமஸ்கிருதத்தில் இத்தகைய நூல்கள் காலந் தோறும் இயற்றப்பட்டவை நமக்குக் கிடைத்திருக்கின்றன. காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி வரை வாழ்ந்த பல பெரியோர்கள் இசை இலக்கண நூல்களை எழுதி இருக்கிறார்கள். இவற்றுள் பல மறைந்துவிட்டன. பலவற்றின் பெயர் மட்டுமே தெரியவருகின்றது; சில பல முழுமையாகக் கிடைக்கவில்லை, இருந்தபோதிலும், கருநாடக இசையின், வரலாற்றினை, அதன் அடிப்படைக் கூறுகளின் வளர்ச்சியினை, அறிந்துகொள்ள சமஸ்கிருதத்தில் உள்ள இசை இலக்கண நூல்கள் பெரிதும் உதவுகின்றன. இவற்றுள் சிலவற்றின் செய்திகளை இக்கட்டுரை சுருக்கமாக ஆய்கிறது.

கிடைக்கும் சமஸ்கிருத நூல்களில் காலத்தால் பழைமையானது, பரதரது நாட்டிய சாஸ்திரம் ஆகும், இந்நூலுக்கு முன்னாலும் நாரத சிக்ஷா போன்ற நூல்கள் இருந்திருக்கின்றன. நாட்டிய சாஸ்திரம் நாரத சிக்ஷாவிலை மேற்கோள் காட்டுகிறது.

**நாட்டிய சாஸ்திரம் :** (கி. மு. நான்காம் நூற்றாண்டு)

இது ஒரு நாட்டிய சாத்திர நூல் ஆகும். நாட்டியம் தொடர்பான செய்திகளைக் கூறும்போது, அதற்கு இன்றியமையாததான இசை இடம் பெறுகிறது. 36 அத்தியாயங்கள் கொண்டது இந்நூல். இவற்றுள் 7 அத்தியாயங்கள் இசை பற்றிப் பேசுகின்றன கிராம – மூர்ச்சனை – ஜாதி முறையை பரதர் விவரிக்கிறார். இன்றைய இராகத்தை ஒத்ததாக ஜாதியைக் குறிப்பிடலாம், துருவ வீணை, சல வீணை என்ற இரு பரிசோதனைக் கருவிகளை அறிமுகப்படுத்துகிறார்.

ஏழு ஸ்வரங்கள் அவற்றின் நான்கு வகைகள், வாதி, சம்வாதி, அனுவாதி, விவாதி, ஷட்ஜ கிராமம், மத்திம கிராமம், துரித – மத்ய – விளம்ப காலங்கள், கருவிகள் போன்றவை இந்நூலில் விவரிக்கப்படுகின்றன. 22 சுருதிகள், அவற்றின் விநியோகம் ஆகியன விரிவாகக் கூறப்படுகின்றன. பரதர் தொடங்கிவைத்த 22 சுருதிகள் குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

இன்றைய கமகத்தை ஒத்த அலங்காரங்கள் பற்றிக் கூறுகிறார். அலங்காரம் இல்லாத இசை நிலவில்லாத இரவு; தண்ணீரில்லாத நதி; நகை அணியாத பெண் ஆகியவற்றை ஒத்தது என்று உவமை கூறுகிறார்.

शशिना रहितेव निशा
विजलेव नदी लता विपुष्पेव ।
अविभूषितेव कान्ता
गीतिरलङ्कारहीना स्यात् ॥ அத். 29, ஸ்லோ. 75

நாட்டியத்தில் பயன்படுத்தப்பட்ட உருப்படிகளைக் குறிப்பிடுகிறார்.

**தத்தில்லம் :**

சிறிய நூலான இது தத்தில்ல முனிவரால் இயற்றப்பட்டது. 12 அத்தியாயங்களில் 243 செய்யுட்கள் காணப்படுகின்றன. ஷட்ஜ, மத்திம கிராமங்கள் இவற்றில் மூர்ச்சனைகள், ஜாதிகள், ஜாதிகளின் 10 லக்ஷணங்கள் அலங்காரங்கள், தாள தசப்பிராணங்களில் சில போன்றவை இந்நூலில் கூறப்பட்டுள்ளன. தாளத்தின் அடிப்படைக் கூறு மாத்திரை என்று இந்நூல் சுட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**பிருஹத்தேசி ;** (கி. பி ஐந்தாம் நூற்றாண்டு)

மதங்க முனிவரால் இயற்றப்பட்ட இந்நூல் கருநாடக இசை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். இவர்தான் முதன் முதலில் இராகம் என்ற கலைச் சொல்லைப் பயன்படுத்தியவர். இதன் காரணமாகவே மதங்கர் இராகப் பத்ததியின் தந்தை என்று போற்றப்படுகிறார். இவர் காலத்தில் பரதர் கூறிய ஜாதிகள் மறைந்துவிட்டன. இராகத்தை வரையறுத்தவரும் இவரே

यो सौ ध्वनिविशेषस्तु स्वरवर्णविभूषितः ।
रञ्जको जनचित्तानां स च राग उदाहृतः ॥

இவ்வாறே, கமகம் என்ற கலைச்சொல்லைப் பயன்படுத்திய முதல் நூலும் இதுவே ஆகும். இசையை நாட்டியத்தோடு இணைத்துப் பார்க்காமல் தனிக்கலையாக அதன் இலக்கணத்தை விவரித்த இசை இலக்கணியும் மதங்கரே ஆவார்.

நாதோத்பத்தி, சுரம், மூர்ச்சனை, வர்ணம், அலங்காரம், கீதி, ஜாதி, இராகம், பிரபந்தம் ஆகிய தலைப்புகளில் செய்திகள் விளக்கப்படுகின்றன.

இராகங்களை சுத்த சாயாலக, சங்கீர்ண இராகங்கள் என்று பகுத்துக் காட்டுகிறார். இப்பகுப்பு முறையே பின்னால் வந்த பல இராகப் பகுப்பு முறைகளுக்கு முன்னோடியாக விளங்குகிறது. பிருஹத்தேசியில் வாத்தியத்திற்கென்று தனியானதொரு அத்தியாயம் இருந்திருக்கிறது. பின்னால் வந்த பல அறிஞர்கள் பிருஹத்தேசியின வாத்திய அத்தியாயத்தைப் பற்றி மிக உயர்வாக எழுதுகின்றனர். வாத்ய சங்கீத ஆதார புருஷராகவும் இவர் போற்றப் பட்டிருக்கிறார்.

**சங்கீத மகரந்தம் :** (பதினொன்றாம் நூற்றாண்டு)

இதனை எழுதியவர் நாரதர் என்பவர் ஆவார். இராகங்களை, புருஷ, ஸ்திரீ, நபும்சக என்றும் மூக்தாங்க கம்பித, அர்த்த கம்பித, கம்ப விஹீன என்றும் பகுத்துக் காட்டப்பட்டுள்ளது. நாதம் வரையறுக்கப்பட்டுள்ளது. பதினெட்டு வகையான வீணைகள் கூறப்பட்டுள்ளன.

**சங்கீத சுதாகரம் :** (கி. பி. பதினான்காம் நூற்றாண்டு)

ஹரிபாலர் என்பவரால் எழுதப்பட்டது இந்நூல். ஹரிபாலருக்கு வீணாதந்த்ர விசாரத, விசாரசதுர்முக ஆகிய பட்டங்கள் அளிக்கப்பட்டிருந்திருக்கிறது. அங்காபிநயம், தாளம், கருவிகள், நாட்டியம், கீதம் ஆகிய ஐந்து பகுதிகளைக் கொண்டது. இந்நூல் வீணைகள், குழல்கள் குறித்து விவரிக்கிறது.

**சங்கீத சமய சாரம் :**

பார்ஸ்வ தேவரால் எழுதப்பட்ட இந்நூலில் பத்து அத்தியாயங்கள் காணப்படுகின்றன. நாதத்தின் பிறப்பு கூறப்படுகிறது. தத, சுஷிர, அவனத்த, சன வாத்தியங்கள் கையாளும் முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

**சங்கீத சாரம் :** (கி. பி. பதினான்காம் நூற்றாண்டு)

வித்யாரண்யர் (1320 — 1380) எழுதிய இந்த நூல் இராகத்திற்கு முக்கியத்துவம் தந்த முதல் நூல் ஆகும். இராகங்களை மேளங்கள் என்றும் ஜன்யங்கள் என்றும் பகுத்துக் காட்டுகிறார். 15 மேளங்களையும். அவற்றிற்கான 50 ஜன்யங்களையும் தருகிறார். சுர அமைப்பின் அடிப்படையில் மேளங்களையும், ஜன்யங்களையும் கொள்ளும்முறை இங்குதான் முதன்முதலில் கால்கோள் கொள்ளுகிறது. இராக ஆலாபனை முறைக்கான விதிமுறைகள் இராகங்களுக்கான பாடும் நேரம் ஆகியன இந்நூலின் மற்றைய சிறப்பு அம்சங்களாகும்.

**சங்கீத ரத்னாகரம் :** (கி. பி. பதிமூன்றாம் நூற்றாண்டு)

'நிஸ்ஸங்க' என்ற பட்டம் பெற்ற ஸாரங்க தேவரால் எழுதப்பட்ட சங்கீத ரத்னாகரம் இசைக்கெனவே எழுந்த முதல் நூல் ஆகும். ப்ரம்மக்ரந்தியிலிருந்து புறப்படும் வாயு நாதமாக மாறும் நாதப் பிறப்பு விவரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் 7 அத்தியாயங்கள் கொண்டது. பிரபந்தங்களின் 6 அங்கங்களும் மூன்று வகைகளான சூட, விப்ரகீர்ண, அவிக்ரமப் பிரபந்தங்களும் விளக்கப்பட்டுள்ளன. மூன்று வகை எடுப்புகள், மூன்று காலங்கள், இரண்டு வகைக் கிரியைகள், பதினைந்து வகை கமகங்கள் ஆகியன பேசப்படுகின்றன.

பஞ்சதச கமகங்கள் என்று அழைக்கப்படும் பதினைந்து வகை கமகங்கள் இந்நூலில் வரையறுக்கப்பட்டபடியே, பின் வந்த அறிஞர்களாலும் கொள்ளப்பட்டு இன்று வரை வழக்கில் உள்ளன.

स्वरस्य कंपो गमकः श्रोतृचित्तसुखावहः ।
तस्य भेदास्तु तिरिपः स्फुरितः कम्पितस्तथा ॥

लीन आन्दोलित वलि त्रिभिन्न कुरुलाहताः ।
उल्लासितः प्लावितश्च गुम्फितो मुद्रितस्तथा ॥

नामितो मिश्रितः पञ्चदशेति परिकीर्तिताः ।

இராகங்கள் ஆதுனப் பிரசித்த இராகங்கள், ப்ராக் பிரசித்த இராகங்கள் என்று பகுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**ஸ்வரமேள களாநிதி :** (கி. பி. 1550)

இராமாமாத்யரால் இயற்றப்பட்ட நூல். முன்னுரை, சுரம், வீணை, மேளம், இராகம் ஆகிய 5 அத்தியாயங்கள் உள்ளன. சுத்த, விக்ருத சுரங்களின் அடிப்படையில் மேளங்களை முதன்முதலில் கருதிப் பார்த்த நூல். வேங்கடமகியின் 72 மேளப் பட்டியலுக்கு இது ஒரு முன்னோடி ஆகும். ஸ்வரமேள களாநிதியின் வீணைப் பகுதி முக்கியமானது. 4 பிரதானத்

தந்திகளும், 3 பக்கத் தந்திகளுமான இன்றைய முறை இந்நூலில் காணப்படுகிறது. ஸ்ருதி சேர்க்கும் முறையின் அடிப்படையில் சுத்த மேள வீணை, மத்ய மேள வீணை அச்சுத ராஜேந்திர மேள வீணை என்று மூவகைப் பட்டன. இவை ஒவ்வொன்றும் ஏக ராக மேள வீணை, சர்வராக மேள வீணை என இரு வகைப்பட்டன. மத்ய மேள வீணையின் ஸ்ருதி சேர்க்கும் முறையே இன்றைய வீணையில் காணப்படுகிறது. 20 மேள ராகங்கள் குறிப்பிடப்படுகின்றன. நிறைய இலக்கண கீதங்கள் காணப்படுகின்றன.

**ராகவிபோதம்:** (கி. பி. பதினேழாவது நூற்றாண்டு)

சோமநாதர் எழுதிய நூல். இந்நூல் சுருதிசுர விவேகம், வீணாபேத விவேகம், மேள விவேகம், இராக விவேகம். இராகரூப விவேகம் என்ற ஐந்து அத்தியாயங்களைக் கொண்டது. 96 மேளங்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு இராகத்திற்கும் ஒரு வடிவம் உண்டு என்றுகூறி இராகங்களுக்கு தியான ஸ்லோகங்களும் தரப்பட்டுள்ளன. வட இந்தியாவில் இராகங்களுக்கு அவற்றின் உருவை விளக்கும் ஓவியங்கள் உண்டு என்பது இங்கே கருதத்தக்கது. இங்கும் சுத்த விக்கு சுரங்களின் அடிப்படையில் மேளங்களை உருவாக்கப்பட்டு உள்ளது. ஆனால் முழுமை பெறவில்லை.

**சங்கீத சுதா:** (கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி)

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னரான ரகுநாத நாயக்கர் (1614 – 28) அவர்களால் இயற்றப்பட்ட நூல். தற்போதுள்ள வீணையை வடிவமைத்தவர் ரகுநாத நாயக்கர்தான். இதன் காரணமாகவே இன்றைய வீணை ரகுநாத வீணை, தஞ்சாவூர் வீணை என்று வழங்கப்படுகிறது. 3½ ஸ்தாயி, நிலையான 24 மெட்டுக்கள், 4 பிரதான, 3 பக்க தந்திகள் என்ற அமைப்பு இந்நூலில் காணப்படுகிறது.

**சதுர்தண்டிப் பிரகாசிகை:** (கி. பி. 1635)

இந்திய இசை வரலாற்றின் ஒரு திருப்புமுனையை அளித்த 72 மேளப் பத்ததியை அளித்த இந்நூலின் ஆசிரியர் வெங்கடமகி ஆவார். 12 சுரத் தானங்களை அடிப்படையாகக் கொண்டு 72 மேளமுறை வகுக்கப்பட்டதே அன்றி, பெயர்கள் தரப்படவில்லை. அக்காலத்து பிரபல இராகங்கள்

பெயராலேயே மேளங்கள் அழைக்கப்பட்டன. அதனால் பல ஜன்ய இராகங்களும் மேளங்களாகக் கருதப்பட்டன. அவர் காலத்தில் வழக்கில் இருந்த 19 கல்பித மேளங்கள் + 53 கல்பியமான மேளங்கள் = 72 என்று கொடுக்கப்பட்டுள்ளது. அறிவியல் பூர்வமாக சுரத்தானங்களைப் பரிவர்த்தனை (Permutation combination) செய்து 72 மேளங்களை அமைத்தமுறை மிகப்பெரிய சாதனை. இன்றுவரை இதுவே நிலைத்து நிற்கிறது.

**சங்கீத பாரிஜாதம்:** (கி. பி. 1650)

அகோபலரால் இயற்றப்பட்ட இச்சிறிய நூல் இந்துஸ்தானி இசையிற் குறிப்பிடத்தக்க நூல். வீணைத் தந்தியின்மேல் சுரத்தானங்கள் ஒவ்வொன்றும் ஒலிக்கும் நீளத்தைக் கணக்கிட்டுக் காட்டிய முதல் நூல் சங்கீத பாரிஜாதம்.

**சங்கீத சாராம்ருதம் :**

தஞ்சைத் துளஜா மன்னரால் (1728 - 1736) எழுதப்பட்டது. இந்நூல் 14 அத்தியாயங்களைக் கொண்டது. வெங்கடமகியின் 72 மேளத் திட்டத்தை ஆதரிக்கிறார். ஆனால் அவர் குறிப்பிட்ட மேளங்களை ஒப்புக்கொள்ளவில்லை. இராகம், தானம் குறித்து ஆழ்ந்து சிந்திக்கிறது இந்நூல்.

**சங்கிரக சூடாமணி :** (கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு)

சமஸ்கிருதத்தில் எழுந்த ஆதாரபூர்வமான இசை நூல்களில் இதுவே இறுதியானது. ஆனால் மிகப் பெரிய சாதனை படைத்த நூல். இவர் காலம் வரை மேளங்கள் என்று வகுக்கப்பட்டனவே தவிர, மேளத்தின் இலக்கணம் வரையறுக்கப்படவில்லை. இன்றைக்கு நாம் கூறுகிற மேளத்தின் இலக்கணம் கோவிந்தாச்சாரியாரால் படைக்கப்பட்ட சங்கிரக சூடாமணியிலேயே காணப்படுகிறது. ஆரோகண - அவரோகணங்கள் சம்பூர்ணமாகவும், கிரமமாகவும் இருக்க வேண்டும். ஆரோகணத்தில் காணப்படும் சுர வகையே அவரோகணத்திலும் வரவேண்டும் ஆகிய சட்டங்கள் மேளத்திற்கு வகுக்கப்பட்டது. கடபயாதி சூத்திரத்தைப் பயன்படுத்தி மேளங்களின் வரிசை எண்களைக் கணக்கிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குத் தக்கவாறு சில மேளங்களுக்கு முன்னொட்டுக்களும் தரப்பட்டன. வெங்கடமகியினால் வகுக்கப்பட்ட 72 மேளங்களுக்கும் கனகாங்கி, ரத்னாங்கி என்று தொடங்கி

ரசிகப்ரியா வரையிலான பெயர்கள் முறையாகத் தரப்பட்டன. தஞ்சை அரண்மனை ஆஸ்தான வித்துவானாக விளங்கிய கோவிந்தாச்சாரியார் மேளப்பத்ததியை முழுமைப் படுத்தித் தந்த பெருமைக்குரியவர் ஆவார்.

இவ்வாறு பல சிறந்த இசை இலக்கண நூல்கள் காலந்தோறும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு வந்துள்ளன. இவ்வாறு எழுந்த சமஸ்கிருத இசை இலக்கண நூல்களில், சங்கீத சுதா (ரகுநாத நாயக்கர்), சதுர்தண்டிப் பிரகாசிகை (வெங்கடமகி), சங்கீத சாராம்ருதம் (துளஜா), சங்கிரக சூடாமணி (கோவிந்தாச்சாரியார்) -ஆகிய நான்கு நூல்களும் தஞ்சையைச் சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய கருநாடக இசையின் அடிப்படைக் கூறுகள் இந்நூல்களிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மேளம், ஜனக ராகம், ஜன்ய ராகம், மேளங்களின் எண்ணிக்கை, பெயர்கள், வீணையின் அமைப்பு ஆகியவற்றைத் தெளிவுபடுத்தியவை இந்நூல்களே ஆகும். சமஸ்கிருத இசை இலக்கண நூல்களின் வாயிலாக இசையின் பல கூறுகள் காலந்தோறும் அடைந்த மாற்றங்களையும், பின்னர் அவை பெற்ற முழுமையையும் தெரிந்துகொள்ளமுடிகிறது.

# கல்வெட்டுக்களில் சமஸ்கிருதம்

குடவாயில் பாலசுப்ரமணியன்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தமிழ் எழுத்துக்களின் தொன்மையான 'தாமிழி' அல்லது 'தமிழ் பிராமி' கல்வெட்டுக்கள் ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பெற்ற சமண முனிவர்களின் சல்லேகன நோன்புப்படுக்கைகளில் காணப்பெறுகின்றன. அத்தகைய கல்வெட்டுக்களில் சில இடங்களில் கிரந்த எழுத்துக்களின் தொன்மையான வடிவைக் காண முடிகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை தமிழையும் சமஸ்கிருதத்தையும் இரு கண்களாகவே போற்றிக்காத்த மரபு இருந்துள்ளது. இரு மொழிகளும் கொண்டும் கொடுத்தும் மாறாத தோழமையோடு வளர்ந்து செழித்ததை வரலாறு நமக்கு எடுத்துக்காட்டு கின்றது. தமிழ் நாட்டில் எண்ணிலா சமஸ்கிருத கல்வெட்டுக்கள் காணப் பெறுகின்றன. இருப்பினும் இலக்கியச் சிறப்புடைய ஒரு சில கல்வெட்டுக் களை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். மேலும் எனது ஆய்வால் புதிதாகக் கண்ட மூன்று வரலாற்றுச் சிறப்புடைய வடமொழிக் கல்வெட்டுக்களைப் பற்றிய செய்திகளையும் இங்குக் காண்போம்,

''மத்த விலாச பிரகசனம்''. 'பகவத் தஜ்ஜுகம்'' எனும் சிறந்த சமஸ்கிருத நூல்களை யாத்த பெருமை மகேந்திர பல்லவனைச் சாரும் அப்பெருந்தகையாளன் திருநாவுக்கரசரால் சமணம் விடுத்துச் சைவம் ஏகியவன். திருச்சிராப்பள்ளி மலையின் மேல் ''லலிதாங்குர பல்லவ ஈஸ்வர க்ருகம்'' எனும் குடைவரைக் கோயிலை அமைத்தான். அதில் சிவலிங்கத் திருமேனியையும் கங்காதரர் திருவடிவினையும் இடம்பெறுமாறு செய்தான்.

கங்காதரமூர்த்தியின் அருகே தான் யாத்த அற்புத சம்ஸ்கிருதப் பாடல்களைக் கல்வெட்டாகப் பொறித்தான். பொருள் பொதிந்த அந்தப் பாடல்களுக்குச் சமஸ்கிருத இலக்கிய வரலாற்றில் தனி இடம் உண்டு.

சோழநாட்டின் பேரெழிலை அந்தப் பரமன் என்றென்றும் காணவேண்டும் என்பதற்காகவே அந்நாட்டின் மகுடமாகத் திகழும் சிராமலை உச்சியில் அக்கோயில் அமைக்கப்பெற்றதாகவும், அதன் உச்சியில் அமர்ந்த வண்ணம் காவிரியின் அழகைக் கண்டுகளித்துக் கொண்டிருக்கின்ற கங்காதரன், எங்கே அவன் 'நதிப் பிரியன்' என்ற காரணத்தால் அவளையும் தழுவிவிடுவானோ என அச்சமுற்ற மலையரையனின் மகளான பார்வதி தேவி அவளது இமயமலையை விட்டு விட்டு, இந்த மலைக்கு வந்து அவனருகில் நீங்காமல் அமர்ந்துகொண்டு "இந்தக் காவிரியானவள் பல்லவனுக்கு உரியவள்! உரியவள்! என்று தொடர்ந்து கூறிக்கொண்டே இருக்கிறாள்" என்று முதற்பாடல் கூறுகின்றது. இவ்வாறு இலக்கியச் சுவை பயக்கும் அப்பாடல்களில் சில அரிய வரலாற்றுத் தகவல்களும் பொதிந்துள்ளன. மகேந்திர பல்லவன் சமணம் விடுத்து இலிங்கத்தைத் தழுவினான் என்ற தகவலும் மற்றொரு பாடலால் அறிய முடிகிறது.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் கல்வெட்டில் எழுதப் பெற்ற இப்பாடலின் தாக்கம் ஒரு தமிழ்ப் புலவனைப் பாடச் செய்தது. கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாராயணன் எனும் அக்கவிஞன் "சிராமலை அந்தாதி" எனும் அருந்தமிழ் நூலொன்றை 103 பாடல்களாகப் பாடினான். பாடியதோடு மட்டுமல்ல, அவன் கவிதையை மகேந்திர பல்லவனின் கல்வெட்டுப் பாடலை ஒட்டி அக்குடைவரையிலேயே கல்வெட்டாகப் பொறித்தான். கடைப்பாடல்களில் "தமிழ் நாராயணன் கற்பந்தர் கீழ் வைத்த கவி" என்ற குறிப்பும் எழுதினான்.

தமிழும் சமஸ்கிருதமும் காலத்தால் அழியாத கவிதைகளாகத் திருச்சிராப்பள்ளி மலை உச்சியில், கற்பந்தல் கீழ் கங்காதரனோடு கல்வெட்டுக்களாகத் திகழ்வதைக் காணும்போது தமிழகம் இருமொழிகளையும் இரு கண்களாகப் பாவித்துப் போற்றியது என்ற பேருண்மையை அறிகிறோம்.

மகேந்திர பல்லவனுக்குப் பின்பு வந்த "அத்யந்தகாமன்" எனும் இராஜசிம்ம பல்லவனது, கல்வெட்டுக்களில் இலக்கிய ஆழம் இருப்பதோடு கலையழகும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அவன் எடுத்த ஒவ்வொரு கோயிலிலும் கலையமைப்பில், கட்டுமானத்தில் ஒரு புதுமையைப் படைப்பது அவனுக்கே உரிய தனித்தன்மையாகும். அது போன்றே அங்கு அவன் வெட்டுவித்த சமஸ்கிருதக் கல்வெட்டுக்களின் எழுத்தமைதியிலும் எண்ணிலாப் புதுமைகளைச் செய்துள்ளான்.

வடமொழியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் மிகப்பெரிய கல்வெட்டாகத் திகழ்வது திருவரங்கம் திருக்கோயிலில் உள்ள ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் கிரந்தக் கல்வெட்டாகும். அக்கோயில் கருவறையில் இருபுறமும் இரண்டு மீன்கள் திகழ நெடிய கல்வெட்டாகக் காட்சி தருகின்றது. திருவரங்கனுக்கு அப்பெருமன்னன் செய்த பொற்கொடைபற்றி விவரிப்பதே அதன் சாரமாகும். சரளமான சமஸ்கிருதப் பாடலமைதியோடு, பல வரலாற்றுத் தகவல்களைச் சுமந்து அக்கல்வெட்டுக் காட்சி நல்குகின்றது.

**இராஜராஜ சோழனின் இரண்டு கல்வெட்டுக்கள்:**

1896ஆம் ஆண்டில் ஹுல்ஷ் என்ற பேரறிஞர் தஞ்சாவூர் பெரிய கோயில் கல்வெட்டுக்களைப் படி எடுத்தார். அதற்குப் பின்பு பல பேரறிஞர்களும், கல்வெட்டாய்வாளர்களும் விட்டுப்போன கல்வெட்டுக்களைப் படி எடுத்தனர். அவர்கள் கண்களிலெல்லாம் படாத ஒரு அரிய வடமொழிக் கல்வெட்டைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. "இராஜராஜன் திருவாயில்" எனும் இரண்டாம் இராஜகோபுர வாயில் நிலைக்காலில் அந்தக் கல்வெட்டு உள்ளது. பிற்காலக் கட்டுமானம் ஒன்று அக்கல்வெட்டின் ஒரு பகுதியை மறைத்துவிட்டது.

"சுனங்கா முலையுடை உமைபங்கர்க்கு ஆளாகி ..." எனத்தொடங்கும் அடிகளோடு அப்பாடல் காணப்பெறுகிறது. அதன் முடிவில் சமஸ்க்ருதப் பாடல் தொடங்குகின்றது. கேரள நாட்டை வென்று மேலைக் கடலின் அருகே இராஜராஜன் நின்றுகொண்டிருந்தபோது அக்கடலின் அலைகள் அவனது திருவடிகளில் வந்து வீழ்ந்து வீழ்ந்து, "நான் உன்னிடம் சரணடைகிறேன்! சரணடைகிறேன்!! என்று கூறிய வண்ணம் இருக்கின்றன" என்று விவரிக்கின்றது அப்பாடல். "காந்தளூர் சாலை கலமறுத்தருளி" என்பதன் பொருள் இப்பாடலால் மட்டுமே விளங்கிக்கொள்ளமுடியும்.

1989ஆம் ஆண்டு தஞ்சாவூர் சீனிவாசபுரத்தில் ஒரு வீட்டிற்குக் கடைக்கால் தோண்டும்போது 10 அடி ஆழத்திற்குக் கீழாக 20 அடி உயரம், நான்கு அடிக்கு நான்கடி சுற்றளவு உடைய மிகப்பெரிய கருங்கல்தூண் ஒன்று கிடைத்தது. அதனைத் தோண்டியவர் அதன் அருமை அறியாது கல் தச்சர்களைக் கொண்டு 80 துண்டுகளாக உடைத்துக் கட்டட வேலைக்காகத் தயார் செய்துகொண்டிருந்தபோது நான் கண்டு அந்த அரிய பொக்கிஷத்தைக் காப்பாற்றினேன்.

80 துண்டுகளையும் இணைத்துக் கல்வெட்டைப் படி எடுத்தோம். தூணின் மூன்று புறங்களிலும் கிரந்தத்தில் எழுதப்பட்ட பன்னிரண்டு பாடல்கள் கிடைத்தன. இராஜராஜ சோழனின் ஜெயஸ்தம்பமாக விளங்கிய தூண் அது. அவனது வெற்றிகள் முழுவதும் அதில் கூறப்பெற்றுள்ளன. தமிழக வரலாற்றுக்குக் கிடைத்த மாபெரும் செல்வமது. இதனை ஒத்த கல்வெட்டுப் பாடல்கள் இதுவரை கிடைத்ததில்லை. இலக்கண அமைதியோடு பல்வகை அலங்காரங்கள் அமைய இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ந்த டாக்டர். இரா. நாகசாமி அவர்கள் "இராஜராஜ காவியம்" என்றே குறிப்பிடுகின்றார்.

திருவாரூர்க் கல்வெட்டு ;

மூன்றாவதாகக் கல்வெட்டில் கிடைத்த அரிய இலக்கியச் செல்வம் திருவாரூர்க் கல்வெட்டாகும். ஆரூர் மூலட்டானேஸ்வரரின் திருக்கோயிலின் மகா மண்டபத்துப் புறச்சுவரில் இக்கல்வெட்டு இருப்பதைக் கண்டு வரலாற்று உலகத்திற்கு அறிமுகம் செய்தோம். கி. பி. 1426 — 1446 வரை விஜய நகரப் பேரரசராக விளங்கிய இரண்டாம் தேவராயரின் குடும்பத்தைச் சேர்ந்த திருமலைதேவ மகாராயரும், அவரது சகோதரர் சாளுவதிப்பதேவ மகாராயரும் தமிழகத்தில் மகாமண்டலேசுவரர்களாக விளங்கினர். திருமலைராயன் ஆறு, திருமலைராயன் பட்டினம், திப்பராஜபுரம் (திப்ப தேவ மகாராயபுரம்) திப்பதேவ சமுத்திரம் ஆகிய ஊர்கள் இவர்கள் பேரால் அமைந்தவை.

திப்பதேவமகாராயர் வடமொழிப் பாண்டித்யம் பெற்றவர். பரதக் கலையில் நிறைந்த ஞானம் பெற்றவர். அவர் எழுதிய "தாள தீபிகை" என்ற அரிய நூல் ஏட்டுச் சுவடியாகச் சரஸ்வதி மகாலில் உள்ளது. கும்பகோணம் சார்ங்கபாணி கோயில் கோபுரத்தை கட்டியவர். அதில் அழிந்த ஒரு

சிவாலயத்தைச் சேர்ந்த 108 கரணச் சிற்பங்களைப் பரதரின் சுலோகக் கல்வெட்டோடு காப்பாற்றி அழியாமல் அக்கோபுரத்திலேயே இடம்பெறு மாறு செய்துள்ளார். இதனை அண்மையில் நான் கண்டுபிடித்த ஒரு கல்வெட்டு வாயிலாக அறிய முடிந்தது. திப்பதேவராயரைப் புகழும் ஒரு வடமொழிக் கல்வெட்டு செந்தலை ராஜகோபுரத்தில் உள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ் மொழியின் கூறுகளில் ஒன்றான அணி என்பதனைச் சமஸ்கிருதம் அலங்கார சாஸ்திரம் என்று கூறும். அலங்கார சாஸ்திரம் பற்றி அக்னி புராணம் சிறப்புறப் பேசும். தமிழில் மலர்ந்த தண்டியலங்காரமும, மாறனலங்காரமும் இம்மரபு பற்றி விரிவாக உரைக்கின்றன. பொருளமைதி யும், யாப்பமைதியும் கொண்டனவாய்ச் சித்திரங்களுள் அமைத்துப்பாடப் பெறும் கவிகள் "சித்திர கவிகள்" எனப்பெறும். இவ்வகையில் ஏகபாதம், மாலை மாற்று, சதுரபந்தம், சக்கர மாற்று, சுழிகுளம், நாகபந்தம், மத்தள பந்தம், கோமுத்திரி, எழுகூற்றிருக்கை என்பன அடங்கும்.

இத்தகைய வகைபாடுகளில் திகழும் சித்திர கவிதைகளில் இரட்டை நாகபந்தம், மாலை மாற்று, சக்கர மாற்று ஆகிய மூன்று கவிதை அமைப்பு களில் படங்களோடு கல்லில் எழுதப்பெற்ற கவிதைகள்தான் திருவாரூரில் கண்ட கல்வெட்டுக்களாகும். இவை அனைத்தும் தியாகராஜப் பெருமானின் சிறப்பையும் திப்பதேவ மகாராயரின் புகழினையும் உரைப்பவையாகும். அங்கு இரண்டு மாலை மாற்றுக் கவிதைகள் உள்ளன.

"தாஸ யாத த்யாக ராஜ
ஜரா கயாத் தயா ஸதா"

என்பது முதற்கவிதை.

"கதி லாதத தாந ரக்ஷா
க்ஷார நதா நத ஸாதிகா"

என்பது இரண்டாம் மாலைமாற்று.

இரட்டை நாகபந்தமாக,

"த்யாக ராஜ நமஸ்து சிவாபதே
காலகால கமலா நிலயோஜ்ஜ்வல !"

என்ற பாடலும்.

"கோபுரமுந்தப் புரம் பர
ந்ருட் புரம்பி நைவ வித்விஷாம் ஸஹஸே ।
ஸ்ரீ கோப திப்ப ந்ருபதே
த்ருபுராந்தக நமதே ஸார்த்தம் ॥

என்ற பாடலும் அங்குக் கல்வெட்டாகத் திகழ்கின்றது.

சித்திரங்கள் வரையப்பெற்று அவற்றோடு சித்திரக் கவிதைகளையும் கல்வெட்டில் காணும் வாய்ப்பு திருவாரூரில் மட்டுமே கிட்டும்.

இவ்வாறு தமிழும் சமஸ்கிருதமும் இணைந்தே இலக்கியவளம் கண்டு வளர்ந்ததைக் கல்வெட்டுக்களில் காண்கிறோம். கல்வெட்டுக்களில் காணப் பெறும் வடமொழிக் கவிதைகளைப் பற்றி மேலும் மேலும் நாம் ஆராய வேண்டும்.

# சம்ஸ்கிருத நாட்டிய சாஸ்திர நூல்கள்

**என். விசுவநாதன்,**
தெலுங்கு பண்டிதர் (ஓய்வு),
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

गीतं वाद्यं नर्तनं च त्रयं सङ्गीतमुच्यते ।
मार्गं देशी विभागेन सङ्गीतं द्विविधं स्मृतम् ॥

நாட்டியம், இசை, வாத்திய ஒலி என்கிற இம்மூன்றும் சேர்ந்ததே சங்கீதம் என்பதில் கருத்து வேறுபாடில்லை. நாட்டியம் என்றாலே நாடகமும் அதினில் தென்படும். நாட்டிய சாஸ்த்ரம் என்பது.

सर्वशास्त्रार्थ सम्पन्नं सर्व शिल्पप्रवर्तकम् ।
नाट्याख्यं पञ्चमं वेदं सेतिहासं करोम्यहम् ॥

धर्म्यमर्थ्यं यशस्यं च सोपदेश्यं ससङ्ग्रहम् ।
भविष्यश्च च लोकस्य सर्वकर्मानुदर्शकम् ॥

योयं स्वभावो लोकस्य सुखदुःख समन्वितः ।
सोऽङ्गाद्यभिनयोपेतो नाट्यमित्यभिधीयते ॥

இக்கருத்திற்கேற்ப நமது பரத நாட்டிய சாஸ்திரத்தில் உலக இயல்புகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து காணப்படுகின்றன. இதிகாசம், புராணம், நாடகம், இலக்கணம், அலங்காரம், ஆகமம், சிற்பம், காவியம் முதலிய பண்டைய இலக்கியங்களுக்கெல்லாம் பயன்பட்டது நாட்டிய சாஸ்திரம் என்றால் அது மிகையாகாது.

நாட்டிய சாஸ்திரம் பாரத நாட்டில் தோன்றியவிதம் எப்படியென்றால்

एकं द्वादशसहस्रैः श्लोकैरेकं तदर्धतः ।
षड्भिश्लोक सहस्रैश्च नाट्यवेदस्य संग्रहः ॥

நாட்டிய சாஸ்திரம் 12 ஆயிரம் சுலோகங்கள் கொண்ட நூலென்றும் பின்பு அந்நூல் ஆறு ஆயிரம் சுலோகங்கள் கொண்ட சங்கிரக தொகுப்பு

நூலாக மலர்ந்தது என சான்றோர் கூறுவர். விருத்தபரதம் எனும் 12 ஆயிரம் சுலோகங்கள் அடங்கிய துவாதச ஸஹஸ்ரீ எனும் நூல் முழுதும் கிடைக்கவில்லை. ஷட்ஸாஹஸ்ரீ பரதம் எனும் ஆறாயிரம் சுலோகங்கள் அடங்கிய நூல்தான் பரதர் இயற்றினார் என்பதும் நன்கு தெரிகிறது.

பரதர் இயற்றிய நாட்டிய சாஸ்திரத்தை இன்று நமது நாட்டில் உபவேதம் அல்லது பஞ்சம வேதமென்றும் அழைக்கப்படுகிறது.

एकं हि नाटयवेदेऽस्मिन् भरते नोच्यते तथा ।

तथा भरतमद्धेन कथित गद्यमीश्वरम् ॥

என பஹுரூபமிச்ரர் குறிப்பிடுகிறார். மேலும், பஹுரூபமிச்ரர் பரதருக்கு முன்பாகவே பல நாட்டிய (நட) சூத்திரங்கள் இருந்தமையையும் சுட்டிக்காட்டுகிறார்.

सूत्राणां सकलङ्काणां ज्ञेयमङ्गमुखं बुधैः । — इति षट् सहस्रीकारः ॥

समाप्यमानमेकस्मिन्नङ्के सन्यायार्थत्व सूचनम् ।
समाप्यति हि नाटयज्ञैरङ्कावतार इष्यते ॥ — इति द्वादशसहस्रीकारः ॥

பரதருக்கு முன்பாகவே நட சூத்திரங்கள் நமது நாட்டில் பரவலாக இடம்பெற்றுள்ளன என்பதும் தெரிகிறது. அபிநவகுப்தர் தமது உரை நூலில்

"षट्त्रिंशकं भरतसूत्रमिदं विवृण्वन् वन्दे शिवं तितर्थविवेकधाम"

எனவும் குறிப்பிடுகிறார். முதன் முதலில் நட சூத்திரங்களை உருவாக்கியவர் சிவாலி, சிலூஷகர் என்றும் தெரிகிறது. பாணினியின் 4 – 3 – 110 – 111 சூத்திரங்களே இதற்குச் சான்றாகத் தெரிகிறது. சிவாலி சிலூஷகர்களின் சூத்திரங்கள் கிடைத்திருந்தால் நமது தென்னக பரத சூத்திரங்கள் மிகவும் பயன் தந்திருக்கும். நட சூத்திரங்கள் முதன்முதலில் நடேசன் ஆடலின் மூலமாகவே தோன்றிற்றென்பர்.

नृत्तावसाने नटराजराजो ननाद ढक्कां नवपञ्चवारम् ।
उद्धर्तुं काम सनकादिसिद्धानेतद्विमर्शे शिवसूत्रजालम् ॥

பரதக்கலை வளர்ச்சிக்காக மிக ஆர்வங் காட்டியவர்கள் தென்னக சான்றோர்கள் என்றால் அதுவும் மிகையாகாது. நாட்டிய சாஸ்திரத்தில் இடம்பெற்ற உலகியல் விஷயங்கள் எவ்வாறுள்ளதென இனி காண்போம்.

முதலில் கூத்து உருவானமுறை தாண்டவம், நிருத்தம், நிருத்தியம் எனும் ஆடல்களின் வகை, கூத்து நிகழும் மண்டபங்களின் அமைப்புகள், அரங்கில் நிகழும் தெய்வ வழிபாட்டு முறை, தாண்டவம் நிருத்தம் மற்றும் 108 கரணங்களின் விசேஷங்கள், பூர்வாங்கம் எனும் விதிமுறை, நவரசம் முதலிய ரசங்களுக்கு விளக்கம், அங்கங்களின் அபிநயங்கள், சாரிகள் தென்படும் விதிமுறை, மண்டலங்களின் விளக்கம், கெதி எனும் உலக சிருஷ்டி மற்றும் பாத்திரப் படைப்புகளின் விளக்கம், தர்மி உலோகதர்மி எனும் பாகுபாடுகள், இலக்கணம், சந்தஸ் முதலிய இலக்கணம் மற்றும் விருத்தப்பாக்களின் இலக்கண விளக்கம் இடம் பெற்றிருக்கும்.

மேலும் அலங்கார வகைகள் அதனில் ஏற்படும். குணதோஷங்கள், பிராகிருதம் மற்றும் பண்படுத்தப்பட்ட மொழி விளக்கம், தசரூபகம் எனும நாடக பேதங்கள், இலாச்யாங்கம், நாடக சங்கிரகம், பாரதீ. சாத்வதீ. கைசிகீ. ஆரபடீ முதலிய ரசங்கள் அடங்கிய விருத்தி வகைகள், பொதுவான ஆகார்யாபிநயம் மற்றும் ஆண்பெண் இருபாலரும் அணியும் அலங்கார விசேடங்கள், ஆடலில் பொதுவாக வரும சாத்விகம், வாசிகம், ஆங்கிக அபிநயங்கள், நாயிகை அவஸ்தைகள், நாயகாதி குணங்கள், தூது இரக்தி விரக்தி மற்றுமுள்ள காமதந்திர சேட்டைகள். நாயகாதி பலபேத லட்சணங்கள் இடம் பெற்றிருக்கும். அதோடல்லாமல் நாயகனின் லட்சணங்கள், ஆடவரின் கூத்து வகைகள், நபும்ஸகரின் குணங்கள் மற்றும் நாயகன், நாயகியரின் பரிவார லட்சணங்கள் சித்திராபிநயங்கள், நடிகரின் இயற்கையான குணாதிசயங்கள், நாட்டிய சித்திகள், ஸ்வரங்களின் கிரமம், சுருதிகள் மூர்ச்சனைகள், தானங்கள், ஸ்தானங்கள் முதலிய இசையின் கோட்பாடுகள் மற்றும் அதனில் அடங்கிய வர்ணம் கெதி தாது முதலிய விசேடங்களும் வீணை, விபஞ்சி முதலிய வாத்திய விசேடங்களை பற்றிய நுண் கருத்துக்கள், காலம் கலை, லயம், தாளம் முதலிய தாளக் கோட்பாடுகள் முதலிய விஷயங்கள் நாட்டிய சாஸ்திரத்தில் இடம் பெற்றிருக்கும்,

தரவுப் பாடல் வகைகள் (துருவா கான அமைப்புகள்) அதனில் வரும் கால முறைகள், யதிகள் முதலிய பண்டைய பாணிகள், (தொன்று தொட்டு வரும் பண்டைய வழிமுறைகள்) பாடகனின் குரல் வளம் மற்றும் குணதோஷங்கள், பாடகியின் குணவிசேடங்கள், வாத்தியம் வாசிப்பவரின் குணங்கள் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. சாமாஜிகரின் லட்சணங்கள், நாட்டிய அவதரணம் நாட்டியக் கலையின்பால் அன்பு கொண்டவரின் விளக்கங்கள், இவ்வாறு உலக அனுபவ விஷயங்களெல்லாம் நாட்டிய சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

பரதருக்குப் பின்பு தத்திலர், கோஹளர், மதங்கர் போன்றோர் இசைக் கலைக்கும் நாட்டியக் கலைக்கும் பல தொண்டுகள் புரிந்துள்ளனர். இவர்களைப் பற்றி புராணக் குறிப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது.

ஸ்ரீமுஷ்ணம் தலபுராணம் —

शुक्ला कृष्णेति नद्यौ द्वे विमानदुत्तरेशुभे
झिल्लिकातनये पुण्ये मतङ्गस्य स्नुषे उभे
तयोः पतीच विख्यातौ दत्तिलः कोहलेऽपिच
मतङ्गस्यमुनेः पुत्रौ गीतशास्त्र विशारदैः
तयोः पत्न्यौच तौ नद्यौ झिलिकातनये उभे
कालदेवस्य पूजार्थं नदीरूपमवापहि

என்பதாக எடுத்தியம்புகிறது. அதாவது இப்புராணத்தின் கூற்றின்படி மதங்கர், கோஹளர், தத்திலர் போன்றவர்கள் தென்னகத்தைச் சார்ந்தவர்கள் என்பது தெரிகிறது. கோஹளரைப்பற்றி ஓர் குறிப்பு கீழ்க்கண்டவாறுள்ளது.

अस्यामेकं भरतोद्रावंकाविति कोहलः ।
व्यासाञ्जनेय गुरवः प्राहुरङ्कत्रयं यदा ॥

பரதர், வியாசர், ஆஞ்சநேயர், கோஹளர்கூட இசை நாட்டியக் கலையைப் பயின்றவராம். கோஹளர் தத்திலர் இயற்றிய முழு நூல்களும் கிடைக்கவில்லை. கோஹளீயம், தத்திலம், மற்றும் பிரகர்தேசி என்கிற சிறு தொகுப்பு நூல்கள்தான் நமக்குக் கிடைத்துள்ளது கோஹளர் தர்ம மார்க்கத்தைக் கடைபிடித்தவர். சித்திராபிநயம் எனும் ஆடல்வகை இவரால் தோற்றுவிக்கப்பட்டது. இரசங்களைப் பற்றியும் குறிப்புகள் எழுதியுள்ளார் கோஹளர். இவர் மேலும் தசரூபகங்கள் மட்டும் ரூபகங்கள் அல்ல. அதற்கு மேல் பல ரூபகங்கள் உள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளார். அவை தோடக, ஸட்டக, ராஸகாதிகள் என்றும் தெரிகிறது. இராகுலர் என்பவர்கூட இந்தக் கலைகளைக் கற்றுணர்ந்ததாகக் கூறுவர். பௌத்த மதத்தைப் பின்பற்றிய இராகுலரைப் பற்றி ஓர் குறிப்பு இவ்வாறுள்ளது. ஹேமசந்திரரின் காவ்ய சாஸனத்தில் வரும் குறிப்பு பின்வருமாறு :—

शाक्यचार्य सहलादयस्तु मौग्ध्यमाविक्तत्व परितपनादीन ।
प्यलङ्कारा नचक्षते तेऽस्माभिः भरतमतानुसारिभिरुपांक्षिताः ॥

இராகுலகர் என்பவரின் கருத்துக்கள் முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. அதேபோல் தென்னகத்தில் வசித்துவந்த அகத்திய முனிவரின் இசை நாட்டியத்தைப் பற்றிய குறிப்பு ஸூத்திரங்களும் நமக்குக் கிடைக்கவில்லை. நாட்டியக் கலையின் பல ஸூத்திரங்கள் தென்னகத்தில் பரவியிருத்தல் வேண்டுமென்றும் தெரிகிறது.

நாட்டியக்கலை பலவிதமான ஆகமங்களுக்கும் பயன்பட்டதெனத் தெரிகிறது. யாமலா தந்திரத்தில் இக்கலைகளைப் பற்றி இவ்வாறு குறிப்பு உள்ளது

गान्धर्ववेदः षट्त्रिंशत्सहस्र ग्रन्थसम्मितः ।
यत्र सप्तस्वरोत्पत्तिकथनं परिकीर्त्यते ॥

वीणातन्त्रं कलातन्त्रं रागतन्त्रमनुत्तमम् ।
मिश्रतन्त्रं तालतन्त्रं गीतिकातन्त्रमेवच ॥

लासिकोल्लासिकातन्त्रं मेळतन्त्रं महत्तरम् ।
जातिग्रहलयस्थानं मार्गाङ्ग प्रक्रियाक्रिया ॥

कालज्ञानं वाद्यवल्ली त्रिभिन्नाध्यायमेवच ।
तुरङ्गगति सारङ्ग सिंहलीला विजृम्भणम् ॥

अङ्गहार प्रविक्षेपाध्यायस्संक्षोभणक्रिया
एवमादीनि गन्धर्ववेदे सन्ति संग्रहः ॥

காலதந்திரத்தில் இரசம் பாவம் - நாட்டியம் முதலியவை உள்ளடக்கியவை என்றும் யாமலாஷ்டகம் கூறுகிறது. ஆதிசங்கரர் கூறும் விதம் எவ்வாறுள்ளது என இனி காண்போம். அவர் கூறுவது அபிநய ஆடல்களால் மனமகிழ்ச்சி யாவருக்கும் கிடைக்குமென்கிறார்.

अभिनयकमनीयेर्मर्दनर्नर्तकीनां
क्षणमपि रमयित्वा छेदयेस्त्वदीयम् ।
स्वयमहमितिचित्तैर्नृत्तवादित्रगानैः
भगवति भवदीयं मानसं रञ्जयामि ॥

ஸ்ரீ ஆதிசங்கரர் லலிதா த்ரிசதியில் हल्लीस लास्य सन्तुष्टा என ஓர் திருநாமத்தை இயற்றி அந்நாமத்தை அம்பிகைக்கு சமர்ப்பணம் செய்துள்ளார். அவர் குறிப்பிடுவது கோலாட்டம் என்கிற ஆடலென்றும் தெரிகிறது.

"हल्लीसैः चित्रदण्डैः कुमरिकाभिः एकतालादियुक्ता गीतपूर्वकम्
यल्लास्यं नर्तनं तस्मिन्सन्तुष्टा प्रीतिमतीत्यर्थ नारीणां
मण्डली नृत्ताम्बुधा हल्लीसकं विदुः" इति हयवळी कोशम्
मण्डलाकार नृत्य सन्तुष्टेत्यर्थः

பெண்கள் வண்ணம் தீட்டிய கோலாட்டக் குச்சிகளைத் தம் கையில் பிடித்துக் கொண்டு ஏகதாள நடையிலும், அதற்கேற்ப வரும் "கொலென்னாகோலே" எனும் பாடலுடனும் நர்த்தனம் ஆடினார் என்றும் நமக்குத் தெரிகிறது. பகவதியே இப்பாடலுக்கும் மனமகிழ்வடைகிறாள் என பரமாசிரியர் கூறுகிறார். அன்று சிவன் ஆடிய ஆடலில் அம்மேளம் அல்லது சங்கீத அமைப்பு எவ்வாறு உள்ளதென தெலுங்கு, தமிழ், மராட்டிப் பாடல்களை இனி காண்போம். சிவபெருமான் பங்கேற்ற வாத்திய பிருந்தம் இவ்வாறுள்ளதாம்.

रागम् : सारङ्गा | आदि ताळम् | वैराग्यपर पद

कपटनाटक सूत्रधारि यांचे कौसल्य पहा ॥ प ॥

आपण व्यापून अखिलभुवन अहर्निशी नाचवितो ऐसे ॥ अ प ॥

भुवन रङ्गभूमि आकाश मण्टप
पुष्पवन्तौ सतत दीविया लावून
विविधगर्भ यवनिका धरून
नवनववेष आणितो कान्तिसर्पन्यावे ॥ १ ॥

अनुपद ऋतुसंवत्सर नटवा करून
आयुष्य परिणमिति कथा रचून
धनकर्म वरमांदळ्या करून
कालरोग लय करून नाचवितो

कळत्र मित्रपुत्र बंधू मणून
कमनीय मातापिता [illegible]

बाळ भावूं त्याहि जवाई मणून
बहुविध नामठेवून पात्र नाचवितो

मद्मात्सर्य कोप मणून
काम लोभ मोह आशा मणून
अधिक तृष्णा इच्छा दम्भा मणून
आवेश मणून भहुमान नाचवितो

தியாகையர் எனும் தியாகபிரம்மம் இசை மற்றும் நாட்டியம் போன்ற கலை நூல்கள் எழுதிய ஆசிரியர்களையும் மற்றும் இக்கலைகளின்பால் அன்பு கொண்ட சான்றோர்களையும் எவ்வாறு குறிப்பிடுகின்றார் எனக் காண்போம்.

இராகம்: மாயாமாளவ கௌளை — தேசாதி: தாளம்

விதுலகு ம்ரொக்கெத சங்கீதகோ — விதுலகு ம்ரொக்கெத ‖ ப ‖

முதமுன சங்கர க்ருத ஸாமநிகம
விதுலகு நாதாத்மக ஸப்தஸ்வர — விதுலகு ம்ரொக்கெத ‖ அ ப ‖

கமலா கௌரீ வாகீச்வரி விதி
கருடத்வஜ சிவநாரதாதுலு
அமரேச பரத காச்யப சண்டீ சாஞ்சனேய
குஹ கஜமுகுலு

ஸௌம்ருகண்டுஜ கும்பஜ தும்புரு
வர சோமேச்வர சார்ங்கதேவ நந்தீ
பிரமுகுலகு தியாகராஜ வந்த்யுலகு
பிரஹ்மானந்த ஸௌகாம்புதிமர்ம — விதுலகு ம்ரொக்கெத ‖ ச ‖

மற்றொரு பாடல்

இராகம்: தன்யாசி — ஆதி தாளம்

ஸங்கீத ஞானமு பக்திவினா ஸன்மார்கமுகலதே மனஸா ‖ ப ‖

பிருங்கி நடேச ஸமீரஜ கடஜ
மதங்க நாரதாதுலு பாஸிஞ்சு — சங்கீத ஞானமு ‖ அ. ப. ‖

பரதேவதைகளான கமலா கௌரீ வாகீச்வரி போன்ற தெய்வங்களும் ஸதா சாமகானம் பொழியும் சான்றோரும், நாதக் கலையை உபாசனை செய்து ஸப்தஸ்வரங்களை ஆராதனை செய்த சான்றோர் அனைவருக்கும் எனது வணக்கங்கள், திருமால் சிவபெருமான் நாரதர் அமரேசன் பரதன் காச்யப முனிவர் சண்டீசர் முதல் ஆஞ்சநேயர் முதலிய கண தேவதைகளுக்கும் மற்றும் குஹன் கணபதி போன்ற கண தேவதைகளுக்கும் மார்க்கண்டேயர் கும்பஜர் (அகத்தியர்) தும்புரு போன்ற முனிவர்களுக்கும் சோமேச்வரர் சார்ங்கதேவர் நந்தி முதலிய புகழோடு விளங்கும் இசை மற்றும் நாட்டிய சாஸ்திரங்கள் எழுதிய ஆசிரியப் பெருமக்களுக்கும் அதோடல்லாமல் இக்கலைகளின்பால் அன்புகொண்டு பரமானந்த அனுபவம் கண்ட புகழுடைந்த பெருமக்களுக்கும் என் உளமார்ந்த வணக்கம் என்கிறார். இசைக்கலையை உபாசனை செய்த நடேசன், பிருங்கி வாயுமைந்தரான ஆஞ்சனேயன் நாரதர் மதங்க முனிவர் போன்றவர் ஆவர் என்கிறார் தியாகய்யர்.

நந்தி தேவரின் பரதார்ணவம் - அபிநயதர்ப்பணம் குஹேச பரத லட்சணம், பரதநாட்டிய சாஸ்திரம் மார்கண்டேய புராணம், விஷ்ணு தர்மோத்திரம், வாயு புராணம், சார்ங்கதேவர் இயற்றிய சங்கீத ரத்னாகரம், நாரத தும்புரு சம்வாதம், நாரத சிக்ஷா, நடேசன் பார்வதி சம்வாத ரூபமான பிரம்ம பரதம் மற்றும் சதாசிவ பரதம், கும்பஜர் எனும் கடஜர் எனும் பெயர்களில் விளங்கும் அகஸ்திய சம்ஹிதை அல்லது அகத்தியம் எனும் நூல், யாஷ்டிகரிடத்தில் கல்வி பயின்ற ஆஞ்சநேயர் இயற்றிய நூல், சோமநாதர் இயற்றிய இராக விபோதம் அல்லது பூலோக மல்லர் எனும் சோமேச்வரர் இவர் இயற்றிய நூல் இசை மற்றும் நாட்டியத்தைப் பற்றி தெளிவாக எடுத்தியம்புகிறது.

இவ்வாறு நாட்ய சம்பந்தமான நூல்கள் பல ஸம்ஸ்க்ருத மொழியில் இருப்பது ஈண்டு நோக்கத் தகுந்த ஒன்றாகும், இவைகளை ஸம்ஸ்க்ருத மொழியிலிருந்து நமது தமிழ் மொழியில் கொணர்ந்து அனைவரும் அறிந்து அனுபவிக்க வழிவகை செய்வோம்.

# மராட்டியர் வரலாறு கூறும் சம்ஸ்கிருதச் சுவடிகள்

ஸாஹித்ய சிரோமணி
திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி, எம். ஏ.,
ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சம்ஸ்கிருதச் சுவடிகள் தஞ்சை நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும், தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும் இயற்றப்பெற்ற மற்றும் சேகரிக்கப்பெற்ற வைகளே ஆகும். போசலகுல மராட்டிய மன்னர்களின் ஆட்சியில் தஞ்சை மண்டலம் ஒரு சிறந்த கல்விக் கேந்திரமாக விளங்கியது. சம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, மராட்டி ஆகிய பன்மொழிப் புலவர்களால் எண்ணிறந்த நூல்கள் படைக்கப்பட்டன. இவர்கள் இயற்றிய நூல்களில் ஆங்காங்கே மன்னர்கள் ஆற்றிய பணிகளையும், தொண்டுகளையும் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இச்செய்திகள் தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரலாற்றை அறிய உதவுகின்றன. அவற்றை இனிக் காண்போம்.

முதலாம் ஏகோஜியின் பட்டத்து இராணியாக விளங்கியவர் தீபாம்பாள். இவரது வரலாற்றுச் செய்திகளைக் கொண்டு எழுதப்பட்ட நூலே "தீபாம்பா மாஹாத்மியம்" என்னும் சிறு காப்பியமாகும். தஞ்சை மராட்டிய அரசின் சரித்திரத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பவரும் மராட்டிய மன்னர்களின் வாழ்வுக்கும், வரலாற்றுக்கும் ஓர் ஒளிவிளக்காகவும், திகழ்ந்தவர் அரசி தீபாம்பாள். தொன்னெடுங் காலமாகப் பாரதப் பண்பாட்டில் பெண்களுக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. அவர்கள் கடைபிடிக்கவேண்டிய நெறிகளைப் பல தர்ம சாஸ்திரங்களில் இருந்து தொகுத்து எளிமையாக மக்களுக்கு வழங்கவேண்டும் என்று கருதினார் தீபாம்பாள். இக்கருத்தை அமைச்சரும், பெரும்புலவருமான திரயம்பகராயமகி என்பவரிடம் தெரிவித்து, அதைப்பற்றிய நூல் ஒன்றைப் படைக்குமாறு கேட்டுக்கொண்டார். அரசியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமைச்சர் திரயம்பகராயமகி அரும்பாடுபட்டு வேதம், புராணம், ஸ்ம்ருதி, தர்ம சாஸ்திரம் ஆகியவைகளை ஆராய்ந்து "ஸ்திரீ தர்மபத்ததி" என்னும் நூலை இயற்றி அரசி தீபாம்பாளிடம் சமர்ப்பித்தார். இதைப்பெற்று அரசி தீபாம்பாள் தனது அரசவைப் புராணிகரான "துண்டி வியாசர்" என்பவர் மூலமாக மக்களிடையே பரவச்செய்தார்.

மேலும் காசியிலிருந்து இராமேச்வரம் வரையிலுள்ள பகுதிகளில் பாத யாத்திரை செய்வோருக்கும், மற்றோருக்கும் உதவும் பொருட்டு தங்கும் விடுதிகளையும் (சத்திரம்) தண்ணீர்ப்பந்தல்களையும் ஏற்படுத்தினார். மேலும் பல அக்ரஹாரங்களையும் ஏற்படுத்தி அதில் சாஸ்திரம், வேதம், இசை ஆகிய துறைகளில் பாண்டித்யம் பெற்ற வல்லுநர்களை அவற்றில் குடியிருக்கச் செய்து, அவர்களின் வாயிலாகப் பல அரிய கருத்துப்பேழைகளான நூல்களை எழுதச் செய்தார்.

தஞ்சை மராட்டியர்கள் காலத்தில் நடைபெற்ற போர்கள் பற்றிய பல குறிப்புகள் சரசுவதி மகால் நூலகத்திலுள்ள சம்ஸ்கிருதச் சுவடிகளில் காணப் படுகின்றன. குறிப்பாக இரண்டாம் சகஜியின் (1684 — 1710) காலத்திலும் அவரது தம்பி முதலாம் சரபோஜியின் (1711-1728) காலத்திலும் நடைபெற்ற போர்கள் பற்றிய விளக்கமான செய்திகள் காணப்படுகின்றன. ஆயினும், இத்தகைய போர்களைப் பற்றிய செய்திகள் அச்சில் வெளிவந்துள்ள தமிழக வரலாற்றுப் போர்களின் வரிசையில் காணப்பெறவில்லை.

குறிப்பாக மதுரையை அரசாண்ட ராணிமங்கம்மாவிற்கும், ராமநாதபுரத்தை அரசாட்சி செய்த கிழவன் சேதுபதி என்று சொல்லப்படுகின்ற ரகுநாத சேதுபதிக்கும் நடைபெற்ற போரைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன, இப்போருக்குத் தஞ்சை மன்னன் இரண்டாம் சாஹஜி தனது படைகளை அனுப்பி உதவிசெய்து வெற்றிபெற்ற செய்திகளை "சாஹேந்திரவிலாசத்தின்" ஆறாவது காண்டத்தின் [47-55] வரை உள்ள சுலோகங்கள் வாயிலாக அறியமுடிகிறது. இச்செய்தி 'காந்திமதி பரிணயம்' என்ற நாடகத்திலும் காணப்படுகிறது. இதற்கு மகிழ்ந்த கிழவன் சேதுபதி, தஞ்சை மன்னன் சாஹஜியை ராமநாதபுரத்திற்கு வருமாறு அழைத்ததாகவும், அதனை ஏற்றுக்கொண்ட தஞ்சை மன்னன் சாஹஜி, தனது தாய் தீபாம்பாளுடன் இராமநாதபுரம் சென்றதாகவும், அங்கு சகஜி மன்னர் தன்னுடைய தாயாருக்குச் சொர்ணதுலாபாரம் கொடுத்தார். அந்தத் துலாபாரத்தில் கிடைத்த பொருளைக் கொண்டு, பெண்களின் வளர்ச்சிப் பணிக்கும் மற்றும் அவர்களுடைய வாழ்க்கைக்கும் தீபாம்பா செலவிட்டுள்ளார் மேலும் அரண்மனையில் பணியாற்றிக்கொண்டிருந்த இசைக்கலைஞர்களுக்கும் இப்பொருள்களைக் கொண்டு உதவிகள் செய்ததாகவும் "தீபாம்பா மாகாத்மியம், என்ற குறுஞ்சுவடியால் அறியமுடிகிறது. மேலும் இப்போர் கி பி, 1700க்கும் 1702க்கும் இடையில் நடைபெற்ற போராகக் கருதலாம். தனக்கு உரிய நேரத்தில் உதவிசெய்த சகஜி மன்னனுக்குக் கிழவன் சேதுபதி, சேது நாட்டில் வடகிழக்குப் பகுதியிலுள்ள பாம்பாற்றுக்கு வடக்கேயும், பட்டுக்கோட்டைக்குத் தெற்கேயுமுள்ள நிலப்பகுதியை அளித்துள்ளான் என்றும் அறியலாகும். இப்போர் பற்றிய ஓவியக் காட்சிகள் இராமநாதபுரம் அரண்மனை இராமலிங்க விலாசத்தில் காணப்பெறும் ஓவியத் தொகுதியில்

சித்தரிக்கப்பெற்றிருப்பதை இங்கு ஒப்பிட்டு நோக்கலாம். இந்தப் போர் பற்றிய செய்திகளை இம்மன்னர் காலத்தில் தோன்றிய பல இலக்கியங்களிலும் நாடகங்களிலும் காணலாம்.

கிழவன் சேதுபதிக்குப்பின் இராமநாதபுரம் அரசுகட்டிலுக்குப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டி கட்டையத் தேவருக்கும், பவானி சங்கரத் தேவருக்கும் நடந்த போட்டியாகும். இதற்காகத் தஞ்சையின் அரசுப் படையை உதவிக்குக் கேட்டுக்கொள்ள முதலில் சரபோஜி தனது படைகளை தஞ்சையின் எல்லையில் இருந்து அறந்தாங்கிக்கு அனுப்பினான் என்றும், அது சமயம் அறந்தாங்கிக் கோட்டை மராட்டிய ஆட்சிக்கு உட்பட்டு இருக்க வில்லை என்றும், இதனை மீட்க முதலாம் சரபோஜி கடும்போர் புரிந்த தாகவும் 'சரபோஜி சரித்திரம்' என்னுப் குறு நூலில் காணப்படுகிறது. இப் போரில் யானைப் படைகளை ஏவி அறந்தாங்கிக் கோட்டை தகர்க்கப்பட்ட தாகவும், அதில் தஞ்சை படை வெற்றிப்பெற்று முன் போலவே இழந்த நிலப் பகுதியைச் சேதுபதியிடமிருந்து மீட்டதாகவும் இச்சுவடியால் அறிய முடிகிறது.

**சரபராஜவிலாசம்* :**

இந்நூலில் முதலாம் சரபோஜியின் காலத்திய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவர் காலத்தில் தஞ்சை வளம் மிக்கதாக விளங்கியது மட்டும் இன்றி நகரைச் சுற்றிலும், அகன்று பரந்த ஆழம் மிக்க நீர் நிறைந்த அகழிகள் பெரிய முதலைகளுடன் விளங்கின. உயர்ந்த மதிற் சுவர்களில் பல்லோரை ஒருசேரக் கொல்லும் திறன் படைத்த பீரங்கி போன்ற ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருந்தமையாலும், பகையரசர்களின் யானைகள் முட்டி மோதித் திறக்க இயலாதவாறு கோட்டைக் கதவுகளில் கூர்மையான ஆணிகள் வெளியில் நீட்டிக்கொண்டிருந்தமையாலும், பகை அரசர்களால் எளிதில் புக முடியாததாக விளங்கியது.

வயல்களில் நாற்று நடும்போதும், களை எடுக்கும்போதும், அறுவடையின் போதும், தமிழகத்துப் பாடல்கள் பற்றிய செய்திகளையும், பரண்கள் மேலிருந்து பயிர்களைப் பாதுகாக்கும் மகளிர் பற்றிய செய்திகளையும் சரபராஜவிலாசம் என்னும் நூல் சுட்டிக் காட்டுகிறது.

மேலும் இந்நூலில் அரண்மனையில் முதல் சுற்றுப் பிரகாரத்தில் வேற்றுநாட்டு அரசர்களால் அனுப்பப்பட்ட தூதர்கள் பல கடிதங்களைத் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டு மன்னனை நேரில் கண்டு சமர்பிக்க

---

* சுவடி எண். D. No. 4240 சுரசுவதி மகால் வெளியீடு 1987.

காத்துக்கொண்டு இருக்கின்றனர் என்றும், இரண்டாம் சுற்றுப் பிரகாரத்தில் சற்றே உயரமான, பொன்மயமான இருக்கைகளில் வேற்று நாட்டு மன்னர்கள் நவரத்ன கற்கள் பதித்த பலவகை அணிகளையும் அணிந்துகொண்டு மன்னர் சரபோஜியின் தரிசனத்திற்காக காத்திருந்தனர் என்றும், மூன்றாம் பிரகாரத்தில் வரவு செலவு கணக்குகளை எழுதும் கணக்காயர்களும், காவலர்களும், அரசருக்கு மிகவும் நெருக்கமானவர்களும், வக்கீல்களும், அரசாங்க அலுவலர்களும் நிறைந்து இருந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

### அனங்க விஜய பாணம்* :

இந்நூல் நாடக வகைகளுள் ஒன்று. இத்தகைய பாணங்கள் மற்ற அரசர்களை துதிபாடும் இலக்கியங்கள் போலல்லாது, அக்கால சமுதாய வாழ்க்கையையும், மக்கள் வாழ்க்கை நிலையையும், தெளிவுபட உணர்த்துகின்றன. விழாக்காலங்களில் ஒரு நகரின் தோற்றம் எப்படி இருக்கும் என்பதையும், அவற்றில் மாதர்களின் பங்கைப் பற்றியும், இவற்றில் இருந்து நாம் அறிய முடிகிறது. மக்களின் பொழுதுபோக்கிற்காக நடத்தும் ஆட்டுக்கடா சண்டை, சேவற்சண்டை, யானைப்போர், மல்யுத்தம் போன்ற கிராமிய விளையாட்டுக்களையும், பூம்பூம் மாட்டுக்காரன், குடுகுடுப்பாண்டி, கழைக்கூத்து, சூதாட்டம், சதுரங்கம் போன்ற பல்வேறு விதமான மக்களின் கலாச்சாரங்களைப் பற்றிய செய்திகளைக் காணமுடியும்.

### தர்மவிஜயசம்பூ[1] :

இந்நூலில் இரண்டாம் சகஜி மன்னரின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. இந்நூலில் சகஜி மன்னர் காலத்தில் நடைபெற்ற இசை விழாக்கள், நாட்டியங்கள், நாடகங்கள் போன்றவைகளைப் பற்றியும், அக்காலத்திய புலவர்கள் பற்றியும் விவரிக்கின்றது.

### போசல வம்சாவளி சம்பூ[2] :

தஞ்சை மராட்டிய மன்னர்களில் மூன்றாவது மன்னராகத் திகழ்ந்தவர் முதலாம் சரபோஜி (கி. பி. 1711—1729). இவர் தமது ஆட்சி காலத்தில் பின்வரும் சந்ததியினர் வளமும், பெருமையும் பெறத்தக்க பல்வேறு பணிகளை நிறைவேற்றியுள்ளார். அவற்றுள் கரிகால் பெருவளத்தான் எழுப்பித்த கல்லணையைச் செப்பனிட்டதும், தஞ்சை பெரியகோவிலுக்குக்

---

* சுவடி எண் D. No. 4577, சரசுவதி மகால் வெளியீடு 1986.

1. சுவடி எண். D. No. 4231, சரசுவதி மகால் வெளியீடு, 1980.

2. ,, ,, 4240, ,, ,, ,, 1987.

குடமுழுக்கு செய்வித்ததும் குறிப்பிடத்தக்கவை. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மாமன்னர் சரபோஜியின் புகழ் காவியமாக எழுதப்பட்டுள்ளது. அரசர்கள் கல்வி கலையில் கொண்ட ஈடுபாடு, அவர்கள் பயின்ற போர் பயிற்சிகள் முதலியன குறிக்கப்படுகின்றன.

உதாரணமாக அவர்கள் அசைந்துகொண்டே இருக்கும் இலக்கை அம்பெய்தி வீழ்த்தவும், சக்தி தோமரம் முதலிய ஆயுதங்களைப் போர்களில் பயன்படுத்தும் முறைகளையும், யானையேற்றம், குதிரையேற்றம் ஆகிய வற்றையும், இசைநாட்டியம், நாடகம் முதலிய நுண்கலைகளின் நுட்பங்களை யும், காவியம், அலங்காரம், முதலிய நூல்களையும், இராமாயணம், மஹாபாரதம் முதலிய இதிஹாசங்களையும், சகுனம், கணிதம் ரத்னபரீக்ஷ ஓவியம் முதலிய கலைகளையும் கற்று பன்மொழிகளிலும், சிறந்து விளங்கினர். மன்னர்கள் பட்டத்து யானையான "சத்ருஜ்ஜயம்" என்ற யானையின் மீது ஆரோகணித்து, பேரீ, மிருதங்கம், கொம்பு, சங்கு ஆகியவைகள் ஒலிக்க ஊர்வலம் செல்வார்கள். அவ்வமயம் மக்கள் மனமகிழ்வுடன், வீதியில் குழுமி இருந்ததாகவும், முத்துக்களை தோரணங்களாகக் கட்டி இருந்ததாகவும், வாழை, கமுகு, கொடி முதலியவைகளால் தஞ்சை நகரம் அலங்கரிக்கப்பெற்று இருந்ததுவுமாகிய பல செய்திகள் இந்நூலில் இருந்து அறியப்படுகின்றன.

காந்திமதி பரிணயம்*:

இந்த நாடகம் சொக்கநாத கவி என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இவர் சகஜி மன்னரின் அவைப்புலவர். இந்நூல் காந்திமதிக்கும், சகஜி மன்னனுக்கு நடந்த காதல் (கற்பனை) திருமணத்தைப் பற்றிக் கூறுகிறது. இதில் பல சரித்திரச் செய்திகள் உள்ளன. அவை வருமாறு:

இந்நாடகத்தின் மூன்றாவது அங்கத்தில் சேது மன்னனுக்கு சகஜி உதவி செய்ததும், அதில் தஞ்சைப்படை வெற்றிபெற்ற செய்தியும் கூறப்பட்டு உள்ளது. இதில் குறிப்பிட்டுள்ள சேது மன்னன், கிழவன் சேதுபதி. இவர் கி. பி. 1674 முதல் 1708 வரை ஆட்சிசெய்தான். இவரது ஆட்சி காலத்தில் மதுரைப்படை சேது நாட்டின்மீது படை தொடுக்கவே, மதுரையை எதிர்த்துப் போரிடத் தஞ்சையின் உதவி கேட்டுத் தூது அனுப்பினான் சேது மன்னன். அப்பொழுது சகஜி தனது படைத்தலைவன் "பாவாஜி"யின் தலைமையில் மறவர்களுக்கு உதவப் பெரும்படையை அனுப்பி, இப்போரில் வெற்றிபெறச் செய்தான். இப்போர் கி. பி. 1700க்கும் 1702க்குமிடைப்பட்ட காலத்தில் நடைபெற்றிருக்கும் என்று கருதலாம். உரிய நேரத்தில் உதவிய தஞ்சை மன்னன் சகஜிக்குக் கிழவன் சேதுபதி, பாம்பாற்றுக்கு வடக்கேயும், பட்டுக்கோட்டைக்குத் தெற்கேயும் உள்ள நிலப்பகுதிகளைத் தஞ்சைக்கு அளித்தார்.

---

* சுவடி எண். D. No. 4339 சரசுவதி மகால் வெளியீடு 1984.

பாண்டிச்சேரியின் அருகில் "பாகா" என்ற நகரம் உள்ளது. இதை முகமதியர் ஆக்ரமித்தினர் என்ற செய்தி இந்நாடகத்தின் மூன்றாவது அங்கத்தில் கூறப்படுகிறது. மேலும் பாகா நகரின் அருகில் "ரணதீரன்" என்பவன் சகஜியின் குறுநில மன்னனாக ஆட்சி செய்தவன் என்றும், இவன் மூலமாகவே மொகலாயரிடமிருந்து ஏற்பட இருந்த இடர் களையப்பட்டது என்பதும் ஆராய்ச்சிக்குரிய செய்திகள்.

**அற்புதபஞ்ஜரம்:**

இந்த நாடகத்தை இயற்றியவர் நாராயணன் என்பவராவர். இந்த நாடகம் மன்னன் சகஜிக்கும், லீலாவதிக்கும் நடைபெற்ற திருமணத்தைப் பற்றிக் கூறும் கற்பனை நாடகமாகும். தஞ்சை மன்னர்களின் வரலாற்றுத் தொடர்புடைய பல செய்திகளை இந்த நாடகத்தில் காணலாம்.

**இந்துமதீ பரிணயம் :**

இந்த நாடகம் தஞ்சாவூர் பெருவுடையார் திருக்கோயிலின் சித்திரைப் பெருவிழாவில் புலவர்களும், பொதுமக்களும் கூடியுள்ள அரங்கில் நடைபெற்று உள்ளது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆலயங்களில் நாடகங்கள் நடத்தப்பட்டு வந்துள்ளன. இந்த நாடகங்களில் பல சம்ஸ்கிருத நாடகங்களும் மக்கள் முன்னிலையில் நடிக்கப்பட்டு வந்ததற்கான சான்றுகள் பல உள்ளன. குறிப்பாக பாரிஜாத நாடகம், வித்யாபரிணயம், நீலாபரிணயம் போன்ற நாடகங்களைக் கூறலாம்.

**சாஹேந்திர விலாசர்[1]:**

இந்த நூலை இயற்றியவர் ஸ்ரீதரவெங்கடேச அய்யாவாள் ஆவார். இவர் சமஸ்கிருத மொழியில் சிறந்த புலமை பெற்றவர். சகஜியின் அரசவைப் புலவராக விளங்கியவர். 'சாஹேந்திர விலாசம்' என்னும் இந்நூல் சிறு காப்பியம் எனினும் இம்மன்னன் காலத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் பிணைய யாத்துள்ளமை குறிப்பிடத் தக்க ஒன்றாகும். மேலும் தஞ்சை அரண்மனையின் கட்டிட அமைப்புகளைப் பற்றிய செய்தியும், தர்பார் வர்ணனை போன்ற பிற செய்திகளும் இந்நூலில் காணக்கிடைக்கின்றன.

---

1 சுவடி எண் D. No. 4230. சரசுவதி மகால் வெளியீடு 1952.

**ரகுநாத விலாசம்[1] :**

இந்த நாடகத்தை இயற்றியவர் யக்ஞ நாராயண தீக்ஷிதர். இவரது தந்தை கோவிந்த தீக்ஷிதர். இவர் நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்து நற்பணிகளைச் செய்துள்ளார். மிகப் பெரிய அறிஞர், "சங்கீத சுதா" என்ற நூலை இயற்றியவர். இவருடைய மகன் 'யக்ஞநாராயண தீக்ஷிதர்' அவர்களால் இந்த நாடகம் இயற்றப்பட்டு மன்னன் முன்னிலையில் தஞ்சை அரண்மனையில் நடித்துக் காட்டப்பட்டது. மன்னன் ரகுநாதனின் ஆட்சிக் காலம் கி. பி. 1614 — 1633. இம்மன்னனின் சரித்திரக் குறிப்புகளுடன் கூடிய நாடகம் இது. இவர் இயற்றிய வேறு நூல்கள் ரகுநாத பூப விஜயம், சாஹித்ய ரத்னாகரம்.

**சந்திரசேகர விலாசம்[2] :**

இந்த நாடகத்தை இயற்றியவர் தஞ்சை மன்னரான இரண்டாம் சகஜி. பல நாடகங்களை இயற்றியவர். தெலுங்கு, மராட்டி, சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இசை நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார். "பஞ்சாக்ஷர விலாசம்" என்னும் நாடகம் ஐந்து மொழிகளில் (சம்ஸ்கிருதம், தமிழ், மராட்டி, கன்னடம், தெலுங்கு) இயற்றப்பட்டுள்ளது. இம்மன்னரால் இயற்றப்பட்ட "சந்திரசேகர விலாசம்" தஞ்சையில் நடைபெற்ற இசை நாட்டிய நாடகத்தின் தொன்மை மரபைக் காத்து நமது ஆராய்ச்சிகளுக்கு சான்றாகத் திகழ்கின்றது.

**செஞ்சி மராட்டியர் பற்றிய நூல்கள் :**

**ராஜாராம சரிதம்[3] :—** கேசவ பண்டிதரால் எழுதப்பட்டுள்ள இந்த சமஸ்கிருத நூல் வீரசிவாஜியின் குமாரர்களில் ஒருவரான இராஜாராமின் வரலாற்றில் ஒரு சிறு பகுதியைத் தெள்ளத் தெளியக் காட்டுகிறது. 1690ஆம் ஆண்டுக்குச் சில ஆண்டுகள் முன்பிருந்து மராட்டிய வரலாற்றை உள்ளபடி அறிவதற்கு இந்நூல் பேருதவிபுரிகின்றது.

இந்நூலாசிரியர் மராட்டிய வீரராக விளங்கிய சத்ரபதி சிவாஜியிடமும் அவருடைய மைந்தர்களான சம்பாஜி, இராஜாராம் ஆகியோரிடமும் கருவூலக் காப்பாளராகப் பதவி வகித்தவர்.

**சாஹித்யமஞ்சுஷா[4] :—** தாஜி என்னும் புலவர் மராட்டிய வம்சாவளியினை "சாஹித்யமஞ்சுஷா" என்ற சிறு நூலாக சம்ஸ்கிருதத்தில் எடுத்தியம்பியுள்ளார்.

---

1 சுவடி எண் D. No. 4487.
2 V. சுந்தர சர்மா, (பருவ இதழ்), சரசுவதி மகால் வெளியீடு.
3 சுவடி எண் D. No. 4229 சரசுவதி மகால் வெளியீடு 1994.
4 சுவடி எண் D. No. 4223 ,, 1984.

**சத்ரபதி சிவாஜியின் வரலாறு கூறும் நூல்கள் :**

**சிவபாரத சரித்திரம்**[1] : மராட்டிய சாம்ராஜ்யத்தை நிறுவிப் புகழ்பெற்ற சத்ரபதி சிவாஜியின் சரித்திர நிகழ்ச்சிகளைக் கூறுவது இந்நூல். இந்நூலில் விரித்துரைக்கப்பட்டுள்ள செய்திகள் பல ராஜாக்களுடைய சரித்திரங்களும். யானை, குதிரைகளுடைய இலட்சணங்களும், கோட்டை கொத்தளங்களுடைய இலட்சணங்களும், ராஜாக்களுடைய நீதிமுறைகளும், சூரிய வம்சத்திலே உதித்தவர்களுடைய கதைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

**பர்ணால பர்வத க்ரஹணாக்யானம்**[2] :

சத்ரபதி சிவாஜி புனேயின் அருகிலுள்ள பர்ணாலக் கோட்டையை கைப்பற்றிய வரலாற்றுத் தொடர்புடைய செய்தியைக் கூறுகிறது. இந்நூலின் ஆசிரியர் ஜயராமகவி. இந்த நூலின் செய்திகளை தஞ்சை மராட்டிய மன்னரும் சத்ரபதி சிவாஜியின் இளவலுமான ஏகோஜி எனும் வெங்கோஜி யிடம் கூறியதாகவும் அச்செய்திகளையே காவியமாக எழுதியுள்ளதாகவும் இந்நூலாசிரியர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டிய சங்கீத சம்மந்தமான பரதார்ணவம், மதங்கபரதம், அர்ஜுனபரதம், ஆதி பரதம், ஹஸ்த்த லட்சணம், நர்தனநிர்ணயம், சங்கீத மகரந்தம், ராகரத்னாகரம், தாளதீபிகா, தாள இலட்சணம், கீதம், பதம் முதலிய நூல்கள் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. ஆக தமிழகத்தில் வரலாறு, கலை போன்ற சுவடிகளைப் பற்றிய செய்திகள் பல உள்ளன. இது போன்று ஏனைய பிரிவுகளையும் ஆராயும் போது பல அரிய செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

---

1 சுவடி எண் D. No. 4223 to 4226 சரசுவதி மகால் வெளியீடு 1972.

2 ,, ,, 4227 — கல்யாண்டாணே (பம்பாய்) 1923.

# புராணங்களில் காணப்பெறும் வரலாற்றுச் சான்றுகள்

ஆ. வீரராகவன், M. A., B. Ed.,
சம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

साक्षात्कृत्य पराशरस्य तपसा पद्मातटिज्ज्योतिषो
भूत्वा नीलवलाहकद्युति पयःपीत्वाऽमृतं सारसम् ।
हत्वा तञ्जकदण्डकप्रभृतिकान् यः पाति लोकत्रयं
तं तञ्जापुरवासिनं कमलया श्रीनारसिंहं भजे ॥ (तञ्जपुरीमाहात्म्यश्लोकः)

ஸாக்ஷாத்க்ருத்ய பராசரஸ்ய தபஸா பத்மா தடிஜ்ஜ்யோதிஷ:
பூத்வா நீலவலாஹகத்யுதிபய:பீத்வாऽம்ருதம் ஸாரஸம் ।
ஹத்வா தஞ்சக தண்டக ப்ரப்ருதிகான் ய:பாதி லோகத்ரயம்
தம் தஞ்சாபுரவாஸினம் கமலயா ஸ்ரீர்நாரஸிம்மம் பஜே ॥
(தஞ்சாபுரிமாகாத்மிய சுலோகம்)

புராணம் என்றால் மிகப் பழமையானது என்பது பொருள், புராணமே அனைத்து சாஸ்திரங்களுக்கும் முந்தையது என்பதை மத்ஸ்யபுராணமும்,

यस्मात्पुराह्यनतीतं पुराणं तेन तत्स्मृतम् (அத்யாயம் - 53, சுலோகம் - 3)

இதற்குமுன்னர் எதனாலும் அறிந்திராத ஒன்றாகையால் புராணம் என்பதாகப் புராணத்தின் லக்ஷணத்தை வாயுபுராணமும் (1;2:3) விளம்புகின்றது. அத்தகைய புராணங்களைப் பற்றி அறிந்த அறிஞரை (அ) பௌராணிகரைத் தனது அலுவலின் பொருட்டு ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் அமர்த்திக் கொண்டான் கௌடில்யன் என்பதை அர்த்தசாஸ்திர நூல் (5;3) தெரிவிக்

கின்றது. அவ்விதம் பணியில் அமர்த்திய பௌராணிகருக்கு சாஹித்யம், சங்கீதம், சர்காதிபஞ்சகம் ஆகியவற்றில் புலமை பெற்றிருத்தல் அவசியம் என்பதை

साहित्यशास्त्रनिपुणः सङ्गीतज्ञश्च सुस्वरः ।
सर्गादि पञ्चज्ञाता च स वै पौराणिकः स्मृतः ॥

என்று சுக்கிரநீதி (2 : 178) குறிப்பிடுகின்றது.

ஸர்காதி பஞ்சகங்களைக் குறிப்பிடும் புராணலக்ஷண சுலோகம் கீழ்வருமாறு :

सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणि च ।
वंशानुचरितं चेति पुराणं पञ्चलक्षणम् ॥

(**पुराणविमर्शः** ப. எண். 125) என்று அந்த சுலோகத்தின் பொருள் கீழ்வருமாறு :— புராணம் என்ற சொல் உலகத்தோற்றம், உயிரினங்களின் தோற்றம், ரிஷிகளின் வம்ச பரம்பரை, மன்வந்தரங்கள், அரசர்களின் பரம்பரை ஆகிய ஐவகை லக்ஷணங்களுடன் கூடியதாகும்.

**புராணங்களில் காணப்பெறும் வரலாற்றுச் சான்றுகள் :**

புராணம் என்ற சொல்லில் நிறைவுறும் பெரிய புராணம், பூத புராணம், புலவர் புராணம் ஆகியவை இலக்கிய வகையைச் சார்ந்தவையாகும்.

பெரிய புராணம் என்னும் நூல் அறுபத்து மூன்று சிவனடியார்களின் சரிதத்தை விவரிக்கின்றது. இதன் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ஆவார். அவர் முதல் குலோத்துங்க சோழனின் (கி. பி. 11ம் நூற்றாண்டு) முதலமைச்சரும் தொண்டை நாட்டைச் சேர்ந்தவருமாவார். அவருக்குக் குடந்தைக்கருகிலமைந்த திருநாகேசுவரத்தில் அருள்பாலித்துவரும் சிவபெருமானிடத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அவர், அறுபத்துமூவருள் ஒருவராம் சிறுத்தொண்டரைப் பற்றிக் கூறும்போது பெரியபுராணத்தில் ஒரு வரலாற்று நிகழ்வினை நம் கண்முன்னே நிறுத்துகின்றார் அதாவது. ''வடபுலத்து வாதாவித் தொன்னகரம்'' என்றழைக்கப்பெறும் பாதாமி பம்பாய் ராஜதானியில் பெல்காம் என்ற ஜில்லாப்பிரதேசத்தில் உள்ளதென்று வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. சாளுக்கிய மன்னர்களின் தலைநகர

மான இதில் அவர்களுடன் மகேந்திரவர்மனின் (கி. பி. 600—630) மகனான முதலாம் நரசிம்ம வர்மன் (கி. பி 630 — 668) போரிட்டு மும்முறை வெற்றி கண்டான்.

ஒருமுறை மணிமங்கலத்திலும் மற்ற இரு முறைகள் வாதாபியிலும் இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்தான். இரண்டாம் வாதாபிப் போரில் அவனுக்குத் தானைத் தலைவராய்ப் பணியாற்றியவர் சிறுத்தொண்டர் நாயனார் என்றழைக்கப் பெறுபவரான பரஞ்சோதியார். இவர் மாமாத்திரர். வைத்தியம் செய்யும் குடியில் பிறந்தவர். இவருக்கு ஆயுள்வேதக்கலை. வடநூற்கலை, படைக்கலத் தொழிற்கலை ஆகியவற்றில் வல்லமை உண்டு. சிவபெருமான் மீதும் சிவனடியார்களிடமும் இவர் எல்லை யற்ற பக்திகொண்டவர். அரசனுக்கு பதிலாக இவர் வாதாபி சென்று பல்லவ மன்னன் நரசிம்மவர்மனுக்குச் சார்பாகப் போர்புரிந்து, யானைப் படையினைச் செலுத்தி அழித்துப் பல அரிய சின்னங்களையும் யானை முதலிய வற்றையும் கொண்டுவந்து அரசனால் சிறப்பாகப் பாராட்டப்பெற்றவர். என்பதனை கல்வெட்டுக்களால் அறிகின்றோம்* அச்செய்தியினைத் தெரிவிக்கும் பெரியபுராணப் பாடல் கீழ்வருமாறு.

"மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரந்துகளாகத் துளைநெடுங்கைவரையுகைத்துப்
பன்மனியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண்ணில கவர்ந்திங்கு அரசன் முன்கொணர்ந்தார்

என்று அந்த வரலாற்றினைத் தெரிவிக்கும் வகையில் இடிபாடுகளுடன் காணப்பெறும் கோட்டைதனை இன்றும் நாம் அங்கே கண்டு மகிழலாம்.

புராணத்தின் மற்றொரு வகை என்றால் அவை திருத்தலப் பெருமை பேசும் தலபுராணங்களாகும். புராண இதிகாசங்கள் கதை வடிவிலும் வரலாற்று வடிவிலும் சாத்திர நுட்பங்களையும், தத்துவக் கூறுபாடுகளையும் மெய்ஞான மந்திரங்களையும் அமைத்து விளக்குவனவாகும். அதற்கு திரு. சடகோப ராமானுஜம் பிள்ளை அவர்கள் பதிப்பித்த "கும்பகோணப் புராணம்" என்னும் நூலை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அந்நூல் தலப்பெருமைதனை விளம்புவதோடு சைவ சித்தாந்த செய்திகளையும் விவரிக்

---

* பல்லவர் வரலாறு ப. எண். 116 (மா ராசமாணிக்கம் பிள்ளை) & Indian Antlguary Vol. IX P. No. 100.

கின்றது. அத்தகைய தல புராணங்கள் 14ம் நூற்றாண்டில் கிளைத்துப் பெருகியிருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. தல புராண வரிசையில் பிருஹதீச்வர மாகாத்மியமும் ஒன்று. அதில் காவிரியின் நடுவில் கல்லணை அமைத்த செய்தி காணக் கிடைக்கின்றது.

कुरुत्वं चोलभूपाल तिष्ठत्वाचन्द्रतारकम् ।
अखण्डायाः सखण्डायाः कावेर्याश्चप्रसादतः ॥

पञ्चलोहैस्तथा सेतुं चक्रे श्रीरङ्गपूर्वतः ।

சங்க காலச் சோழ மன்னர்களின் வரிசையில் கரிகாலன் தலைசிறந்தவன். அவனது தந்தை இளம்சேட்சென்னி என்பவன். கரிகாலன் காவிரியின் நடுவில் ஓர் அணை கட்டி வரலாற்றில் சிறப்பிடம் பெற்றான். (வாழ்வியல் கலஞ்சியம் 6 ; 730)

அந்த வரலாற்றுச் சான்றினைத் தெரிவிக்கும வகையில் காவிரிதேவியின் அருளால் எக்காலமும் நிலைத்திருக்கும் வண்ணம் ஓர் அணை கட்டினான் என்று பிருஹதீச்வர மாகாத்மியம் தெரிவிக்கின்றது அதனால் கரிகாற் சோழனுக்கு "காவிரிக்கரைகண்ட சோழன்" என்ற பெயர் வந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.* மேலும் சோழ மன்னர்களின் தேவாரத் திருப்பணி களைக் குறிப்பிடும்போது கற்களை வரிசை வரிசையாய் அடுக்கி அதன் நடுவே கடுக்காய், வெல்லம், தேத்தாங்கொட்டை, கமுகு ஆகியவற்றைச் சேர்த்து அரைத்த அம்ருதம் போன்ற சுண்ணாமபுக் குழைவினை அந்தக் கற்களின் நடுவே பூசுவார்கள் என்பதைத் தெரிவிக்கும் சுலோகம் :—

हरीतकीगुडरसकतकक्रमुकैरसैः ।
केशप्रमाणं पाषाणसन्धि स सुधयाऽयधत् ।
नवनीतोपमया सुधया सन्धिबन्धिनाम् ॥**

என பிருஹதீச்வரமாகாத்மியத்தில் இடம்பெற்றுள்ளது. மேலே கூறப்பெற்ற அந்த சாந்துக் குழைவினை வஜ்ஜிரக்காரை என்றழைப்பர். வஜ்ஜிரக்காரையை குறிப்பிடுவதும் நாயக்க மன்னர்களின் காலத்யதி கட்டடக்கலையினைப் புகழ்ந்து பாடுகின்றதுமான பாடல்:

* தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்—50, பக்க எண், 120,
** அத்யாயம் 14, சுலோகம் 31-b, 32.

உரக்கவெகு ரொக்கம் குடுத்துப் படங்குதூண்
உத்திரமுதற்பழங்கல்
ஓடிந்தன பிடுங்கி நலமாயமைத்துக் காரை
யோடு சீரணம் அகற்றி
அரைத்த சுண்ணாம்பை வெல்லச்சாறுவிட்டு
நன்றாய்க் குழைத்துச் செங்கல்லும்
அடுக்காகப் பரப்பிக் கடுக்காயோடு ஆமலகம்
அரியதான்றிக்காய் உழுந்து
ஒருக்கால் இருக்கால் இடித்து நன்னீரில்
ஊறிய கடுஞ்சாறும்விட்டு
ஊழிக்காலங்களிலும் அசையாத வச்சிரக்
காரை[1]யிட்டோங்கும் அம்மை
சிரக்காலம் வாழவே மீனாட்சிகோயிலும்
செப்பமிடுவித்து நன்றாய்ச்
செய்வித்துப் புண்ணியம் சதகோடிப் புண்ணியந்
திருமலை மகீபனுக்கே

என்பதாய் மதுரைத் திருப்பணி மாலையில் இடம் பெற்றுள்ளது.[2] இந்த வரலாற்றுக் குறிப்பினைப் பகர்ந்த பிருஹதீச்வர மாகாத்மியம் தஞ்சாவூரின் எட்டுத்திக்கிலும் எட்டுசக்தி தேவிகளைக் குறிப்பிடுகின்றது. அதனை விவரிக்கும் சுலோகங்கள் கீழ்வருமாறு —

कुबेराय प्रसन्नोऽभूयत्र तञ्जापुरेश्वरः ।
यत्राऽनन्दमहावल्ली देवी तञ्जासुरं रणे ॥

निधायाष्टमहाशक्तीनष्टदिक्ष्वपि तत्र वै ।
एकवीरा जयन्ती च मर्दिनी महिषार्दिनी ॥

---

1 தமிழகக் கோயிற்கலை மரபு - பருவ இதழ் - 41, கட்டுரை - 3, ப- எண் - 4

2 கல்வெட்டும் கோயிற்கலையும் (பி. லிட் - தாள் - 10) ப. எண் - 277
பரு. — 23

मारी च रेणुका[1] काली कोटी च परितस्थिता ।
शूलेन पातयामास तञ्जं तन्नामतः पुरम् ॥ (பக்க எண். 21)
प्राच्यां मारीं तथा दुर्गां नराणां स्फोटनाशनीम् ।
विजयामेकवीरां च रेणुकां कालिकामपि ॥
मर्दिनीं कोटिकाख्यां च .... .... ॥ (பக்க எண். 41)

தஞ்சபுரீச்வரர் என்று போற்றப்பெறும் சிவபெருமானை குபேரன் வழிபட்டு அருள்பெற்றான். அந்த சிவபெருமானின் கட்டளையால் ஆனந்த வல்லி அம்மன் தனது சக்தியை எட்டு விதமாகப் பிரித்துக்கொண்டு தஞ்சக அசுரனுடன் போரிட்டாள் என்றும், பிறகு தஞ்சகாசுரனின் தோத்திரம் கேட்டு மகிழ்ந்து அவனைச் சுவர்க்கத்திற்கு அனுப்பிவைத்தாள் என்றும் சோழ சம்பூ கூறுகிறது.

மேலும் தஞ்சகன், தண்டகன், தாரகன் ஆகிய மூன்று அரக்கர்களைக் குறித்துக்கூறும் தஞ்சபுரி விஷ்ணுஸ்தல மான்மியத்தில்* தஞ்சையின் அஷ்ட சக்தி தேவிகளுள் "ஏகவீரா" மற்றும் "கோடி" ஆகிய தேவிகளின் குறிப்புக் காணக்கிடைக்கிறது. இனி, ஏகவீராதேவியைக் குறித்துச் சிறிது பார்ப்போம்.

ஒருசமயம் பராசர முனிவர் தவம் மேற்கொள்ள இதுதான் சிறந்த இடமென்று இங்கு வந்தார். அவ்வாறு இத்தலமேகித் தவம் புரிகையில் தஞ்சகன், தண்டகன், தாரகன் என்ற அரக்கர்கள் மனைவி மக்களுடன் பசியினால் எங்குமலைந்து இறுதியில் தபோவனமான இங்கு வருகின்றனர். அப்போது அவர்கள் நல்லவர்களைத் துன்புறுத்தி வந்தனராகையால் நீரருந்த வந்த அரக்கர்களுக்குப் பராசரர் —

संरक्षणं च साधूनां परमो धर्म उच्यते ।
परोपकारसदृशो धर्मो नास्ति न संशयः ॥

तथैव परहिंसाभिः तुल्यं पापं न विद्यते ।
सुखस्य कारणं धर्मं पापं दुःखस्य कारणम् ॥

---

1 The best known of the eight is Renuka called Ellaiamman in Tamil (Cholachampu preface p. no xix. Dr. V. Raghavan)

* பதிப்பாசிரியர் : S. ராஜலக்ஷ்மி அவர்கள், சரசுவதி மகால் வெளியீடு.

तस्मात्परेषां कर्तव्या नैव हिंसा सुखार्थिभिः ।

என்று நல்லுரை நவின்றார். இருப்பினும் அவர்கள் பிறருக்குத் தீங்கிழைப்ப திலிருந்து சற்றும் மாறினார்களில்லை. ஆதலால் பராசர முனிவர் பிரம்மதேவரையும், சிவபெருமானையும் துதித்தார். சிவபெருமானும் பிரத்யக்ஷமாகி, "காளிகாதேவியை சிருஷ்டி செய்து தஞ்சாதியர்களை வதம் செய்விக்கிறேன்" என்று கூறி மறைந்தார். பராசர மகர்ஷியின் முன்பு காட்சி நல்கிய காளிகாதேவி "உமக்கு என்ன வேண்டும்" என்று கேட்க, அதற்குப் பராசரர், "தஞ்சாதியர்களிடமிருந்து இந்த தபோவனத்தைக் காத்து வாருங்கள்" என்று கூறினார். அப்படியே தஞ்சாதியர்களையும் தன் சூலாயுதத்தால் தாக்கி அழித்தாள். ஆனால் அவர்கள் அம்ருத புஷ்கரிணீ நீரைப் பருகி மீண்டும் உயிர்த்தெழுந்தனர். இதைக் கண்ட முனிவர் திருமாலிடம் சென்று வேண்ட, திருமாலும் நீலமேகனாக அவதாரம் செய்தார். பிறகு விஷ்ணுவிற்கும் அரக்கர்களுக்கும் பெரும் யுத்தம் நடைபெற்றது. அப்போது தஞ்சகன் —

मतङ्गजत्वमास्थाय तञ्जकोऽपि ययौ ततः ।
करेणोद्‌धृतसालेन दन्तैर्मुसलभीषणैः ॥

யானை உருக்கொண்டு தன் தந்தங்களால் பெரிய சால விருக்ஷங்களைப் பிடுங்கி எடுத்து வந்து திருமாலுடன் போர் புரிந்தான், அதைக் கண்ட திருமால் —

तमापतन्तमालोक्य (स) ततो वज्रभिर्नखैः ।
नृसिंहत्वमुपास्थाय हरिश्चाहत्य वेगतः ॥

உடன் விரைவாய்த் தன் உருவை ஆளரியாக மாற்றிக்கொண்டு அவனோடு போர் புரியவந்தான். உடனே தஞ்சகன் —

नृसिंह यदिदं रूपं मदर्थं तु भवाहृतम् ।
अनेनैव स्वरूपेण उपवेष्टुमिहार्हसि ॥

किञ्चेयं नगरी पुण्या प्रथिता लोकपावनी ।
तञ्जापुरीति भगवन् प्रथितास्तु ममाख्यया ॥

என்ற "ஓ! நரசிம்மனே! இந்த உருவை எனக்காகவேதானே உம்மால் எடுக்கப்பட்டது. ஆகையால் நீ இப்படியே இங்கமர்ந்து இத்தலத்தை ஆள்வாயாக. இதனால் இந்த நகரமானது தஞ்சாபுரீ என்று பெயர்

பெறட்டும்'' என்று கேட்டுக்கொண்டான். அதனால்தான் இந்நகருக்குத் தஞ்சையாளிநகர் என்று பெயர் வந்தது. இத்தலத்தெம்பெருமானைத் திருமங்கை மன்னன் போற்றிப்பாடுங்கால், "தஞ்சையாளியைப் பொன் பெயரோன் தன் நெஞ்சமன்றிடந்தவன்'' என்று பெரிய திருமொழியில் (7-3-9) திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

தஞ்சகன் மாண்ட செய்தியறிந்து தண்டகன் அச்சத்தோடு கைகளால் பூமியைப் பிளந்து சென்று மறைய வராக உருவெடுத்து திருமால் அவனையும் மாய்த்தார். எஞ்சிய அரக்கனான தாரகனைக் காளிகாதேவி தான் ஒருவராகவே எதிர்த்து மாய்த்திட அதனைக் கண்டு மகிழ்ந்த திருமால் அந்த தேவியை "ஏகவீரா'' என்று பெயரிட்டழைத்தார். பின்னர் பராசர முனிவர் திருமகள் கேள்வனாக நீலமேகனை அத்தலத்தில் ஸ்ரீவைகானஸ ஆகம முறைப்படி நிறுவி வழிபட்டு வந்தார். (தஞ்சபுரீ மா. ப. எண். - 33) இந்த தஞ்சபுரியைச் சுற்றிலும் 8 தேவிகளைக் குறிப்பிட்ட பிருஹதீச்வர மாகாத்மியம் "நிசும்பசூதனி'' என்னும் தேவியின் ஸ்தானத்தில் மகிஷமர்தினியைக் கூறியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. ஏனெனில், நிசும்ப சூதனி குறிப்பே பிருஹதீச்வர மாகாத்மியத்தில் காணப்பெறாததாலும் அது விஜயாலய சோழன் எடுத்த கோயிலில்[1] காணப்படுகின்ற தேவி ஆகையாலும் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

நிற்க! வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக்கோயில், தஞ்சையாளியைப் பொன்பெயரோன் நெஞ்சமன்றிந்தவன், பொன்செய் மால்வரை மணிக்குன்றன், தமருள்ளம் தஞ்சை என்றவாறெல்லாம் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற தஞ்சபுரி விஷ்ணு ஸ்தலங்கள் பண்டொருகால் வேறிடத்திலிருந்து பின்பு வெண்ணாற்றங்கரைக்கு இடம் பெயர்க்கப்பட்டுள்ளன. அதற்கு "வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி, நம்பிகாளுய்ய நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்'' என்ற திருமங்கை மன்னனின் பெரிய திருமொழிப் பாடலே (1 : 1 : 6) சிறப்பானதொரு சான்றாகும்.

---

1 தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு By குடவாயில் M. பாலசுப்ரமணியம் (சரசுவதி மகால் வெளியீடு)

மேலும், சிங்கபெருமாள் கோயிலில் காணப்பெறும் மராத்தி மொழிக் கல்வெட்டு அக்கோயிலை மேலசிங்கப்பெருமாள் என்று சுட்டுவதாலும் "தஞ்சையாளியைப் பொன்பெயரோன் தன்னெஞ்சமன்றிடந்தவனையும்" 'மணிக்குன்றனையும்" சேர்த்து திருமங்கை ஆழ்வார் ஒரே பாடலில், (பெரிய திருமொழி – பா. எண் 7 : 3 ; 9) குறிப்பிட்டுள்ளதாலும், நாயக்கர் காலத்து நூலான தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சியில் "சிங்கப் பெருமாள் மணிகண்டப் பெருமாள்" (பக்க எண். 4, பாடல் எண் 2) என்று அடுத்தடுத்துக் கூறியிருப்பதாலும் அவ்விரண்டு கோயில்களும் பண்டு தஞ்சை மேற்குப்பகுதியில் இருந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. தஞ்சபுரீசுவரர் என்றழைக்கப்பெறும் சிவபெருமானின் தேவாலயம் பிற்காலத்தில் வெண்ணாற்றங்கரைக்கு இடம்பெயர்க்கப்பட்டிருக்கலாம் என்பது கீழ்க்காணும் செய்தியின் மூலம் தெரியவருகிறது. This tradition is perpetuated by the temple of Sri Thanjapurisvara and Anandavalli Amman and the temple of Sri Nilameghapperumal originally built in Vambulamsolai, and later removed to the bank of Vennar, two miles north of the city* என்று தஞ்சாவூர் பெரிய கோயிலைப் பற்றிய நூலொன்று தெரிவிக்கின்றது.

மேலும் கந்துகாபுர மாகாத்மியம்** எனப்படும் பந்தணைநல்லூர் வரலாறு சரசுவதி மகால் வெளியீடாக வெளிவந்துள்ளது. அந்நூலில் சூரிய வம்சத்தின் வழிவந்தவனும் ரகு என்ற பெயருடன் கூடியவனுமான ஓர் அரசன் பந்தணைநல்லூர் தேவாலயத்தைப் புதுப்பித்ததோடு அங்கே அகழி சூழ்ந்த புதிய நகரையும் நிருமாணித்தான் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. அந்த தேவாலயத்தின் எதிரேயுள்ள சூரிய புஷ்கரிணிக்கருகில் இடிபாடுடன விளங்கும்கோட்டை நாயக்க மன்னர்களுள் ஒருவரான விஜயராகவ நாயக்கரால் கட்டப்பெற்று பின்பு அதுவே மராட்டிய மன்னர் கோட்டையாகவும் திகழ்ந்துள்ளது. ஆதலால் பசுபதீச்வரர் கோயில்கொண்டுள்ள அந்தப் பகுதி இன்றும் "கோட்டை" என்ற பெயரால் அழைக்கப்பெற்று வருகின்றது.

பந்தணை நல்லூரில் முதலாம் இராஜராஜன் தொடங்கி மூன்றாம் இராஜராஜன் காலம் வரையிலானதும் விஜயநகர வேந்தர் காலத்தியதுமான

---

* The Great temple at Tanjore By J. M. Somasundaram. Page No. 1

** பதிப்பாசிரியர் திரு ஆ வீரராகவன்.

கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் பந்தணைநல்லூரைக் குறிப்பிடும் போது "வடகரை விருதராஜபயங்கர வளநாட்டுப் பந்தணைநல்லூர்" என்று கூறப்பட்டுள்ளது. இராஜராஜனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று இராசேந்திரசிங்கன் என்பது. இராசேந்திர சிங்க வளநாடு என்பது காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதியைக் குறிக்கும். இந்த வளநாட்டின் மேற்பகுதி உலகுய்ய வந்த சோழநாடு என்றும், கீழ்ப்பகுதி விருதராஜபயங்கர வளநாடு என்றும் அழைக்கப்பெற்றன. மேற்கூறிய அமைப்பின் அடிப்படையில் காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்டதாயும், விருதராஜ பயங்கர வளநாட்டின் பகுதியாகவும் பந்தணைநல்லூர் விளங்குகின்றது. இந்த வரலாற்றுச் செய்திகளை மனத்தே கொண்ட கந்துகாபுர மாகாத்மியத்தின் ஆசிரியர்—

> दक्षिणोत्तरकावेरीमध्यदेशे शुभप्रदम् ।
> आभाति कन्दुकं क्षेत्रं सिद्धगन्धर्वसेवितम् ॥

> தக்ஷிணோத்தர காவேரீ மத்யதேச சுபப்ரதம் ।
> ஆபாதி கந்துகம் க்ஷேத்ரம் ஸித்தகந்தர்வ ஸேவிதம் ॥

என்று இரண்டாம் அத்யாயத்தில் அந்தத் திருக்கோயிலின் அமைப்பை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு புராணங்களையும் வரலாற்றினையும் இணைத்து ஒப்பாய்வு செய்தோமானால் இன்னும் பற்பல அரிய செய்திகள் புலனாகும்.

# சம்ஸ்கிருதக் கீர்த்தனங்களின் வளர்ச்சி

**என். ஸ்ரீநிவாசன்**
ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

இந்திய சாஸ்திரீய ஸங்கீதம், 1. கர்நாடக ஸங்கீதம், 2. இந்துஸ்தானி ஸங்கீதம் என்ற பிரிவுகளைக் கொண்டது. இந்துஸ்தானி ஸங்கீதத்தில் ராக ஆலாபனைகள் அதிகமாகவும், அதில் பாடப்படும் ஸாஹித்தியங்கள் ஓரிரு வரிகளில் முடிந்துவிடும் அளவில் அமைக்கப்பட்டு இன்றளவும் பாடப் படுகின்றன. இதில் தும்ரி, கயால், பஜன் போன்ற பல்வேறு வகை ஸாஹித்தியங்கள் பாடப்படும்.

ஆயின் கர்நாடக சாஸ்திரீய ஸங்கீதத்தில் வர்ணம், கீர்த்தனம், பதம், தேவரநாமா, அஷ்டபதி (கீதகோவிந்தம்) போன்ற பல்வேறு மொழிகளில் அதாவது தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம், கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் அமைந்த ஸாஹித்யங்கள் பாடப்படுகின்றன. இந்துஸ்தானி இசையில் காணப்படும் ஸாஹித்தியங்களைப்போல ஓரிரு வரிகளைக் கொண்டதாக இல்லாமல் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற அமைப்புக் களைக் கொண்டு இயற்றப்பெற்றுள்ளன. இத்தகைய ஸாஹித்தியங்கள் கச்சேரி மேடைகளில் மட்டுமின்றி பரததாட்டிய மேடைகளிலும், ஹரிகதை மேடைகளிலும், பஜனோத்ஸவ ஸம்பிரதாயங்களிலும் பாடப்பட்டு வருகின்றன.

'கீர்த்தனம்' என்ற சொல்லுக்குப் பொருள், புகழப்படுவது (कीर्त्यते इति) எதுவோ அது கீர்த்தனம் எனப்படுகிறது. இதில் பாடப்படும் பொருள் இறைவனாகவோ, மன்னனாகவோ, தலைவியாகவோ இருக்கலாம். பாடப்படுபவரின் செயல்பாடுகளைக் குறித்துப் புகழும்வண்ணம் அமைக்கப் பட்டு இருப்பதைக் கீர்த்தனம் என்ற சொல்லால் அழைக்கின்றனர். இத்தகைய கீர்த்தனங்கள் பல்வேறு மொழிகளில் அமைந்திருந்தாலும், ஸம்ஸ்க்ருத மொழியிலமைந்த கீர்த்தனங்களின் வளர்ச்சி பற்றிய ஒரு கண்ணோட்டமாக இக்கட்டுரை வரையப்பட்டது.

ஸம்ஸ்கிருத மொழியிலமைந்த கீர்த்தனங்களுக்கு முன்னோடியாகத் திகழ்வது ஜயதேவர் இயற்றிய அஷ்டபதிகளே. இந்த அஷ்டபதி தோன்று

வதற்கு முன்னர் இது போன்ற ஸாஹித்தியங்கள் இருந்ததா இல்லையா கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம் உரிய நூல்கள் கிடைக்காமையே. ஜயதேவரின் காலம் 12ஆம் நூற்றாண்டு. அஷ்டபதியில் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற வேறுபாடுகள் இல்லை. 'த்ருவம் என்று கூறப்படும் வரியையே பல்லவிபோல பாடப்படும் வழக்கம் இருந்து வருகிறது*.

ஜயதேவரின் அஷ்டபதி மக்களிடையே புகழ்பெற்று பிரபலமானதால் அஷ்டபதியைப் பின்பற்றி பல புலவர்கள் பல்வேறு அஷ்டபதிகளை ஸம்ஸ்க்ருத மொழியில் இயற்றியுள்ளனர். இன்று நமக்குக் கிடைத்த வகையில் சுமார் 22 அஷ்டபதிகள் உள்ளன. சிவாஷ்டபதி, ராமாஷ்டபதி போன்ற நூல்கள் ஸம்ஸ்கிருத இசை இலக்கிய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன. இறைவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்ட அஷ்டபதிகள் பிற்காலத்தில் மன்னனையே பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடியுமுள்ளனர். இதற்கு எடுத்துக் காட்டாக சாஹராஜ அஷ்டபதியைக் கூறலாம். இம்மன்னன் தஞ்சையை அரசாண்ட மராட்டிய மன்னராவார். இதைப் போலவே கீர்த்தனைகளும் இறைவன் மீது பாடியதிலிருந்து மன்னனைப் பாடும் நிலைக்கு வந்துள்ளது

ஆகவே, கீர்த்தனை என்றதொரு இலக்கியத்திற்கு இன்றுவரை அடிப்படைச் சான்றாக விளங்குவது ஜயதேவரின் அஷ்டபதிகளாகும் ஜயதேவருக்குப்பின் வந்த கவிஞர்களில் இறையுணர்வு கொண்ட அடியார்களும் இறைவன்மீது கீர்த்தனைகளை இயற்றிய இயல்புலவர்களும், இசைப் புலவர்களும் பலராவர், அவர்களில் 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புரந்தரதாஸர் குறிப்பிடத்தக்கவர். இவர் இயற்றிய தேவர நாமாக்களில் சில பாடல்கள் ஸம்ஸ்கிருத மொழியில் அமைந்தவைகளாகும். இவர் பாடியவைகளில் அதிகம் கன்னட மொழியிலமைந்தவை, உதாரணமாக ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் பாடியுள்ள கீர்த்தனங்களில் தெலுங்கு மொழியிலமைந்த கீர்த்தனங்கள் அதிகமாகவும், ஸம்ஸ்கிருத மொழியிலமைந்த கீர்த்தனங்கள், திவ்யநாம ஸங்கீர்த்தனங்கள் குறைவாகவும் காணப்படுகின்றன. தவதாஸோஹம், சம்போ மகாதேவா போன்ற பல கீர்த்தனைகளை உதாரணமாகக் கொள்ளலாம். இவருடைய காலத்திற்கு முன் வாழ்ந்த பத்ராசல ராமதாஸரின் கீர்த்தனைகளையும், மெலட்டூர் வெங்கட்டராம

---

* सकृद् द्वितीय उद्ग्राहो गीयते च ततो ध्रुवः ।
ध्रुवो वारद्वयं गेयः पश्चादाभोग इष्यते ॥ — मानसोल्लासः

மீண்டும் மீண்டும் பாடுவது அல்லது அதே வரியை இரு முறை பாடப் படுவது எதுவோ அதனை த்ருவம் என்ற சொல் (பதம்) குறிக்கும்.

சாஸ்திரிகள் இயற்றியுள்ள பாகவதமேளா நாட்டிய நாடகங்களில் அமைந்துள்ள ஸாஹித்தியங்களையும் உதாரணமாகக் கொள்ளலாம். ஆதலால் அவர்கள் தங்களது தாய்மொழியில் அதிக ஸாஹித்தியங்களையும் அதே சமயத்தில் ஸம்ஸ்கிருத மொழியில் அமைந்த சில ஸாஹித்தியங்களையும் இயற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாராயண தீர்த்தரின் கிருஷ்ணலீலா தரங்கிணி, 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சதாசிவப்ரும்மேந்திரர், 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அம்பி சாஸ்திரி போன்றவர்கள் ஸம்ஸ்க்ருத மொழியில் பல கீர்த்தனங்களை இயற்றியுள்ளனர்.

ஸங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சியாமா சாஸ்திரிகள் பல கீர்த்தனைகளை தெலுங்கு மொழியில் இயற்றியபோதிலும் ஒருசில ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார். அவற்றில் கனகசைல விஹாரிணி — புன்னாகவராளி; சங்கரி சம்குரு சந்த்ரமுகி — ஸாவேரி போன்ற கீர்த்தனங்கள் புகழ்வாய்ந்தவை.

பல்லவி கோபாலையரின் ஸ்ரீராமா ரமணீ — மோஹனம்; ராமசாமி சிவன் இயற்றிய ஜனரஞ்ஜனி ராகத்திலமைந்த பாஹிமாம் ஸ்ரீராஜராஜேஸ்வரி; மஹாவைத்தியநாதய்யர் இயற்றிய ஸ்ரீசங்கர குருவரம் — நாகஸ்வராளி; மைசூர் ஸதாசிவராவ் இயற்றிய ஸாகேதநகர — ஹரிகாம்போதி, வானமாமலை ஜீயர் இயற்றிய மதிம் தேஹி — கல்யாணி மற்றும் ஜானகீரமண — காபி ராகத்தில் அமைந்த கீர்த்தனங்கள் மார்கதர்சி ஸ்ரீரங்கம் சேஷையங்கார் இயற்றிய பாஹி ஸ்ரீராம — அடாணா; வெங்கடாத்ரி ஸ்வாமிகள் இயற்றிய ஸ்ரீருக்மிணீச மாம் பாலய — அடாணா; புலியூர் துரைஸ்வாமி அய்யங்கார் இயற்றிய ஸாரஸீருஹாஸநப்ரியே — நாட போன்ற ஸம்ஸ்கிருத கீர்த்தனங்கள் மக்களிடையே புகழ்பெற்று விளங்குவன.

தஞ்சையை அரசு செலுத்திய மராட்டிய மன்னர்களில் இரண்டாம் சகஜி, முதலாம் துளஜா, இரண்டாம் ஏகோஜி போன்றவர்களும். எட்டையபுரம் மன்னரான குமார எட்டேந்திரர் முருகன்மீது இயற்றிய கீர்த்தனங்களும், கேரள நாட்டின் மன்னர் ஸ்வாதித்திருநாள் போன்றவர்களின் ஸம்ஸ்கிருத மொழியில் இயற்றிய கீர்த்தனங்களும் புகழ்வாய்ந்தவை.

ஹரிகதா காலக்ஷேபங்களை இயற்றிய பல பாகவதர்கள் ஸம்ஸ்க்ருத மொழியில் கீர்த்தனங்களையும், நிருபணங்களையும் இயற்றியுள்ளனர். இவைகளில் ஒருசிலவே அச்சாகி வெளிவந்துள்ளன. பல இன்னும் அச்சாகாமல் ஏட்டளவிலேயே வாழ்ந்து வருகின்றன. ஹரிகேசநல்லூர் முத்தையா

பாகவதர், கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதர், சிறுகமணி சிவராமகிருஷ்ண பாகவதர், தஞ்சாவூர் ஜகன்னாத பண்டிதர் போன்றோர் பல ஸம்ஸ்க்ருத கீர்த்தனங்களை இயற்றியுள்ளனர்.

தஞ்சாவூர் ஜகன்னாத பண்டிதரைப் பற்றிய ஒருசில செய்திகளை குறிப்பிட விரும்புகிறேன். சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் இவர் தஞ்சையில் வாழ்ந்தவர். சதாவதானம் செய்கின்றவர். பன்மொழிகளிலும் புலமை வாய்ந்தவர். ஆசுகவி, தன்னடக்கம் மிக்கவர். இவரை மக்கள் தக்கபடி ஆதரிக்கவில்லை. இதனால் வறுமையிலேயே தனது வாழ்க்கையைக் கழித்தவர். இவருக்கு, ஸங்கீத வித்வான்களில் எம்பார் ஸ்ரீரங்காச்சாரியாரிடம் மிகுந்த நட்புண்டு. இதனால் ஸ்ரீரங்காச்சாரியார் அவர்கள் தனது ஹரிகதைகளில் இவருடைய ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள் பலவற்றைப் பாடி பிரசாரம் செய்தார். இவர் மகன் ஸ்ரீரங்கம் எம்பார். எஸ். விஜயராகவாச்சாரியார் தனது ஹரிகதைகளில் ஜகன்னாத பண்டிதரின் கீர்த்தனங்களையும், நிருபணங் களையும் பாடி வந்தார். இவரைப் பற்றிய செய்திகளையும், இவரின் மேதமையைப் பற்றியும் என்னிடம் கூறியதுடன், இவரியற்றிய "சித்ரம் சரித்ரம் சிவம்கரம் சிவ" என்னும் கரஹரப்ரியாவிலமைந்த கீர்த்தனத்தையும் பாடிக் காட்டினார். கீர்த்தனத்தில் சந்த அமைப்பைக் கொண்டது இது. தற்போது டாக்டர். பாலமுரளீகிருஷ்ணா அவர்கள் ஸம்ஸ்கிருத மொழியில் பல கீர்த்தனங்களை இயற்றிவருகிறார். ஓம்காராகாரிணி, ப்ருகதீஸ்வர போன்ற கீர்த்தனங்கள் நுட்பமும் சிறப்பும் வாய்ந்தவை.

ஆகவே, 13ஆம் நூற்றாண்டு தொடங்கி, இன்றளவும் பல வாக்கேய காரர்கள் ஸம்ஸ்க்ருத மொழியில் கீர்த்தனங்கள் பலவற்றை இயற்றியுள்ளனர். அவற்றைப் பாதுகாப்பதுடன் அச்சில் வராமலுள்ள கீர்த்தனங்களையும் தொகுத்து வெளியிட்டு எதிர்கால சந்ததிகளுக்கு அளிக்கவேண்டியது நமது கடமை. இத்தகைய ஆய்வை மேற்கொள்ள மைய — மாநில அரசுகளும், சரசுவதி மகால், மியூஸிக் அகாடமி போன்ற நிறுவனங்களும் உதவிசெய்ய வேண்டும் என்றும், உதவி செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.

* * * *
* * *
* *
*

॥ श्रीः ॥

॥ श्रीमद्विखनसमहागुरवे नमः ॥

# ஆகமத்தில் ஆலய க்ராம நிர்மாணவிதி:

## ( ஸ்ரீவைகானஸம் )

எஸ். சுதர்ஷன் M. A., B. L. I. S.,
நூலகர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

श्रीवेङ्कटेशं लक्ष्मीशं गर्भ वैष्णव सेवितम् ।
नमामि विष्णुं देवेशं सर्वकाम्य हितप्रदम् ॥

अखण्ड मण्डलाकारं व्याप्तं येन चराचरम् ।
तत्पदं दर्शितं येन तस्मै श्रीगुरवे नमः ॥

ஸ்ரீவைகானஸ ஆகமம் என்பது ஸ்ரீமத்விகனோ முனியினால் ப்ருகு, அத்ரி, காச்யபர், மரீசி என்ற நான்கு ரிஷிகளுக்கு உபதேச ரூபமாக அனுக்ர ஹிக்கப்பெற்ற ஒன்றாகும். இந்த ஆகமம் ச்ரௌத-ஸ்மார்த்தாதி கர்மாக் களாலும், ச்ருதி - ஸ்ம்ருதி நதிகளாலும் நிரம்பப்பெற்ற ஸமுத்ரம் போன்றது ஆகும். இந்த ஆகமத்தை முழுமையாகப் படித்து அறிந்துகொண்டவர்கள் ஒருசிலர்தான் எனில் அது மிகையாகாது. இருப்பினும் இக்கடலில் ஒரு சிறு துளி என்று சொல்லக்கூடிய விஷயமாகிய க்ராம ஆலய நிர்மாண விதியைப் பற்றிக் காண்போம்.

ஸ்ரீமத்விகனோ முனியிடமிருந்து விசதமாகப் பெற்று காலம் கருதி நமக்கு நான்கு லக்ஷமாகச் சுருக்கித் தந்தவர்கள் ப்ருக்வாதி ரிஷிகள். அவர் களிலுள் மரீசி மஹரிஷி உரைநடை வடிவிலும், அனைத்து விஷயங்களையும் மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் தனது விமானார்ச்சன கல்பம் என்னும் நூலில் எடுத்தியம்புகிறார்.

விசிஷ்ட ஆசார்ய நியமனம்:

முதலில் எந்த ஒரு கார்யத்தையும் நிறைவு செய்யவேண்டுமாகில் ஆசார்யன் வேண்டும். அவர் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற கேள்வி எழும்போது, மரீசியானவர் — "அனைத்து கார்யங்களும் உபதேசம் மூலம் பெறப்பெற்றவரும், ஸ்ரீவைகானஸ ஸூத்ரத்தில் சொல்லப்பட்டுள்ளதான நிஷேகாதி ஸம்ஸ்காரங்களால் ஸம்ஸ்கரிக்கப் பெற்றவராகவும், ப்ராமணனும் வேதமறிந்து, தனது வேதத்தைத் தினமும் அத்யயனம் செய்பவராகவும், பத்னியுடன் கூடிய க்ருஹஸ்தராயும், நல்ல லக்ஷணமாக இருப்பவராகவும், பூபரிக்ஷை செய்யும் முறையை நன்கு அறிந்திருப்பவரும், ஞானயோகம் அறிந்தவரும், புலனடக்கம் உள்ளவரும், தினமும் த்யானம் செய்பவரும், மனதை ஒருநிலைப்படுத்தியவரும், தினமும் எம்பெருமானுக்கு திருவாராதனம் செய்பவரும், பக்தியுள்ளவருமான ஒரு ஸ்ரீவைகானஸரை ஆசார்யராக நியமிக்கவேண்டும்.

இப்படிப்பட்ட விசேஷணங்களோடு கூடிய ஆசார்யனானவர் யஜமானனுடன் பூமியை நன்கு பரீக்ஷிக்கவேண்டும். உகந்த மாதத்தில் சுக்ல பக்ஷத்திலோ, க்ருஷ்ணபக்ஷத்திலோ முதல் மூன்று நாட்களிலோ, விஷ்ணுவுக்கு உகந்த தினத்திலோ, யஜமானனுக்கு அனுகூலமான தினத்தில் பூபரீக்ஷையைச் செய்யவேண்டும்.

அதற்கு முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து, சில்ப சாஸ்த்ரம் நன்கு அறிந்தவரும், நல்ல லக்ஷணமானவரும், வ்யாதிகளில்லாமல் சௌக்யமாக இருப்பவருமான சில்பியை அழைத்து வைஷ்ணவர்களுடன்கூட "ப்ரீயதாம் பகவான்" எனத் தொடங்கும் ப்ரார்த்தனா ஸூக்தத்தைச் சொல்லி பகவானிடம் ப்ரார்த்தனை செய்துகொண்டு; "விஷ்ணுர் மாம் ரக்ஷது" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி ஆத்ம ரக்ஷணத்தைச் செய்துகொண்டு; நன்கு அலங்கரிக்கப்பட்டவளும், தீபம், தாமரை மலருடன் கூடிய குடத்தைத் தாங்கியிருப்பவளுமாகிய கன்னிகையுடன்கூட "பூ" பரீக்ஷையைச் செய்யும் இடத்திற்குச் சென்று, வலம் வந்து சகுனம் பார்க்க வேண்டும்.

**மண் எடுத்துக் கொள்ளத்தகாத இடங்களும் சகுனம் பார்க்கும் முறையும்:**

நபும்ஸக மரங்களுள்ள இடம். எலி, மண்டையோடு, எலும்பு, கற்கள், பெருமணல், கரையான் புற்று, கிணறு, சாம்பல், கரி, உமி, முடி, கீழ்க்குடி மக்கள் வசிக்கும் இடம் ஆகிய அனைத்திலும் எது இருந்தாலும் அங்கு

ம்ருத்ஸங்க்ரஹணம் (மண்ணானது எடுத்துக்கொள்ள)க் செய்யக்கூடாது. முன்பு சொல்லப்பட்ட உகந்த இடத்தில் கையளவு பள்ளம் தோண்டி அதில் அந்த மண்ணை இடவேண்டும்,அதிகமானால் வ்ருத்தி. குறைந்தால் கெடுதல். ஸமமாக இருப்பின் சமம் என்பதாகவும், மற்ற சகுனங்களையும் அறிந்து நல்ல சகுனத்தைப் பார்த்து சதுரமாகவோ நீண்டதாகவோ, கிழக்கிலோ, வடக்கிலோ, சமமானதாகவோ பூமியைச் செய்து, சப்தம், ஸ்பர்சம், ரூபம், கந்தம் ஆகியவை உள்ளனவா ? என்பதாக நன்கு பரீக்ஷிக்க வேண்டும். நல்ல ஸ்பர்சம் உள்ளவளும், வெளுப்பு, மஞ்சள், சிவப்பு, கருப்பு முதலிய வர்ணங் களுடன் கூடியவளும், இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு, உவர்ப்பு ஆகிய ருசியுடையவளும், நல்ல மணமுடன் கூடியவளும், சுற்றிக்கொண்டே இருப்பவளும், பால் மரங்களும், துளசி, குசம் (குசமூ) தர்பம், விச்வாமித்ரம், விஷ்ணுக்ராந்தம், ரோஜாபுஷ்பம், தூர்வா ஆகியவற்றுடன் சேர்ந்திருப்பவளு மான பூமியை தியானித்து நல்ல முகூர்த்தத்தில் மண்ணை எடுத்துக்கொண்டு ஆசார்யன் கிழக்கு முகமாகவோ, வடக்கு முகமாகவோ சென்று குறிப்பிட் டுள்ள இடத்தில் "ஜீவந்த" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி ஜலத்தை விடவேண்டும். மேதினியைத் (பூமாதேவி போன்ற உருவத்தை மண்ணால் செய்து அதனைத்) தொட வேண்டும். பிறகு "இதம் விஷ்ணு:" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி மண்ணை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிறகு க்ராமத்தின் பரப்பளவை 64 பாகமாகவோ, 81 பாகமாகவோ, 256 பாகமாகவோ செய்து அதன மத்தியில் ப்ரம்ம பாகத்தை நான்காகச் செய்து, அதன் வாயுபாகத்தின் மேற்கிலோ, கிழக்கிலோ அல்லது மத்யத்திற்கு வடக்கிலோ, தெற்கிலோ மத்யபாகம் பெருமாளுக்கு தெற்குப் பகுதிக்கு அருகிலோ அல்லது நீண்ட (ப்ரகார) சுற்று மதில் சுவர் உள்ளதாக அமைந்த தாகவோ கோவில் அமைத்து; பெருமாளை விஷ்ணும், புருஷம், சத்யம், அச்யுதம், அநிருத்தம் என்பதாக பஞ்சமூர்த்தி விதானமாகவோ, ஆறு மூர்த்திகளை எழுந்தருளச் செய்து ஆராதிக்கும் முறையான ஷண்மூர்த்தி விதானமாகவோ; விஷ்ணு, புருஷ, ஸத்ய, அச்யுத, அநிருத்த, கபில, யக்ஞ, நாராயண, புண்யன் என்பதான ஒன்பது மூர்த்திகளை எழுந்தருளச் செய்து ஆராதிக்கும் முறையான நவமூர்த்தி விதானமாகவோ ப்ரதிஷ்டை செய்து அர்ச்சிக்க வேண்டும்.

**ஆலய நிர்மாண விதி:**

ஊரின் வடகிழக்கில் ஈசான கோஷ்டத்தில் சிவன் கோவிலையும், வருண பதத்தில் (ஊர் எல்லையின் மேற்கின் மத்யப் பகுதி ஸரித்பதிக்கு உரிய கோஷ்டம். அதற்கு அக்னி திக்கில் உள்ளது வருண பதமாகும். (பதம் — கோஷ்டம் இரண்டும் பொருள் ஒன்றாகக் கொள்ளவேண்டும்) கிழக்கு முகமாக நின்றவாறோ, அமர்ந்தவாறோ தேவேசனுக்கு (விஷ்ணுவுக்கு) கோவிலையும். மஹேந்த்ர பதத்திற்கு வடக்கில் அமைந்துள்ள ஆதித்ய பதத்தில் (ஊர் எல்லையின் கிழக்கின் மத்யப்பகுதி மஹேந்த்ர பதமாகும். அதற்கு வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது ஆதித்ய பதமாகும்) பாஸ்கரனுக்கு (சூரியனுக்கு)க்கோயிலையும்; யம பதத்தில் (ஊர் எல்லையின் தெற்கின் மத்ய பாகம் யம பதமாகும்) துர்கையின் கோயிலையும்; பூதேச பதத்தில் (யம பதத்தின் வாயு பாகம் பூதேச பதமாகும்) [விக்னேசனையும்) விநாயகருடைய கோயிலையும், ஸுக்ரீவ பதத்தில் (ஊர் எல்லையின் மேற்குப் பகுதியின் மத்யபாகம் ஸரித்பதிபதம். அதன் தெற்கிலமைந்துள்ள புஷ்ப தந்த பதத்திற்கு அடுத்தாற் போல் (தெற்குப்புறத்தில்) அமைந்துள்ளது ஸுக்ரீவ பதமாகும்) முருகனின் கோயிலையும், அதிதிபதத்தில் (ஊர் எல்லையின் வடக்கின் மத்தியில் அமைந்துள்ளது ஸோமபதம். அதன் கிழக்கில் அமைந்துள்ள அர்கள பதத்தினையும் அடுத்து கிழக்கிலேயே அமைந்துள்ளது அதிதி பதமாகும்) ஸப்த மாத்ருக்களின் கோவிலையும் ஜயந்த பதத்திலோ (ஜயந்த பதம் என்பது மஹேந்த்ர பதத்திற்கு வடக்கிலுள்ளது ஆதித்ய பதம். ஆதித்யபதத்தை அடுத்து வடக்கிலமைந்துள்ளது ஜயந்தபதமாகும். ஊர் எல்லையின் தென்மேற்கிலுள்ள நிர்ருதிபதத்தின் மேற்கிலமைந்துள்ளது தௌவாரிகபதமாகும்.) தௌவாரிக பதத்திலோ கிருஷ்ணனின் கோயிலையும். புஷ்பதந்த பதத்திலோ ஸரித்பதி பதத்திற்கு (வடக்குப் பகுதியில்) அடுத்தார் போலுள்ளது புஷ்பதந்தபதம். ஸரித்பதி பதத்திற்கு தெற்கிலுள்ளது அசுர பதம். அதனை அடுத்து (தெற்கில்) அமைந்துள்ளது சோஷணபதமாகும். சோஷணபதத்திலோ ராகவனுடைய (ஸ்ரீராமர்) கோயிலையும், மாஹேந்த்ர பதத்தில் (ஊர் எல்லையின் கிழக்கு எல்லையின் மத்யகபாகம் மாஹேந்ரபதம் ஆகும்) மத்ஸ்யாவதாரமுள்ள கோவிலையும். ஸத்யக பதத்தில் (மாஹேந்த்ர பதத்திற்கு (தெற்கில்) அடுத்தார்போலுள்ளது ஸத்யபதமாகும்) கூர்மாவதார மூர்த்தியின் கோயிலையும்; நிர்ருதி பதத்தில் (ஊர் எல்லையின் தென்மேற்கு பாகம் நிர்ருதி பதமாகும்) வராகமூர்த்தியின் கோயிலையும், ஜவன பதத்திலோ — அந்தரிக்ஷ பதத்திலோ (ஜவனபதம் என்பது ஊர் எல்லையின்

வடமேற்கு பாகமாகும் அந்தரிக்ஷபதமென்பது தென்கிழக்கில் அமைந்த அக்னிபதத்தின் அடுத்தார்போல் (வடக்கில்) அமைந்துள்ளது) நரஸிம்ம மூர்த்தியின் கோயிலையும், நாகபதத்தில் (ஊர் எல்லையின் வடமேற்கிலுள்ள ஜனைபதத்தின் அடுத்தார்போல் வடக்கில் அமைந்துள்ளது நாகபதமாகும்) வாமன மற்றும் த்ரிவிக்ரம மூர்த்தியின் கோயிலையும், கந்தர்வபதத்தில் (ஊர் எல்லையின் தென்திசையின் மத்ய பாகம் யமபதம். அதனையடுத்து மேற்கில் அமைந்துள்ளது கந்தர்வபதமாகும்) பலராமமூர்த்தியின் கோயிலையும், முக்யபதத்தில் (நாகபதத்திற்கு அடுத்தார்போல் வடக்கில் அமைந்துள்ளது முக்யபதம்) பரசுராமன் கோயிலையும், ஸௌரிதேவனுடைய பதத்தில் (ஊர் எல்லையின் வடக்கிலுள்ள ஈசான பதத்தின் அடுத்தார்போல் வடக்கில் உள்ளது ஸௌரிதேவபதமாகும்) கல்கியினுடைய கோயிலையும், ஸோமபதத்தில் (ஊர் எல்லையின் வடக்கின் மத்யபகுதி ஸோமபதமாகும்) சயனமூர்த்தியின் கோயிலையும், க்ருஹாக்ஷத பதத்தில் (யமபதத்தை அடுத்து கிழக்கிலுள்ளது க்ருஹாக்ஷத பதமாகும்) தைவிக வாஸுதேவனுடைய கோயிலையும், விதத பதத்தில் (க்ருஹாக்ஷத பதத்தின் கிழக்கில் அமைந்துள்ளது விதத பதமாகும். மாநுஷ வாஸுதேவனையும்; ப்ருங்கராஜ பதத்தில் (ஊர் எல்லையின் தெற்கு திசையின் மத்யப் பகுதியின் மேற்கில் இரண்டாவதாக அமைந்துள்ளது ப்ருங்கராஜ பதமாகும்) உஷ்ணசாலாதி மூர்த்தியின் கோயிலையும், மேற்படி (ப்ருங்கராஜ) பதத்திலோ அல்லது க்ராமத்திற்கு வெளியிலோ பஞ்சபாண்டவர்களின் கோயிலையும் அமைக்கவேண்டும்.

பொதுவாக க்ராம மத்தியிலோ, வெளியிலோ எட்டு திக்குகளில் ஏதாவது ஓரிடத்திலோ அல்லது எட்டு திக்குகளிலேயுமோ; நின்ற—இருந்த—கிடந்தவாரோ; வாகனத்தில் அமர்ந்தவாரோ த்ருவ கௌதுகபேரமாகவோ அல்லது த்ருவ, அர்ச்சாபேரமாகவோ க்ராமத்தைப் பார்த்திருக்குமாறு விஷ்ணுவை ஸ்தாபிக்கவேண்டும். அல்லது க்ராமத்திற்கு வெளியிலோ எங்கு ப்ராம்மணர்கள் வசிக்கின்றார்களோ அங்கு நடுவில் அல்லது எட்டு திக்குகளிலுமோ, பெருமாளை மட்டுமோ தேவிகளுடனோ ஸ்தாபிக்கவேண்டும், காட்டிலோ நதிக்கரையிலோ, ஸமுத்ரத்திற்கு அருகிலோ, வேறு குளக்கரையிலோ, தோட்டத்திலோ அல்லது வேறு இடத்திலோ பெருமாளை ஸ்தாபிக்கலாம்.

## ஆலயங்களில் வாயிற்புறத்தின் சிறப்பு

மேற்படி ஆலயங்களின் வாயில்கள் கிழக்குமுகமாக இருப்பது உத்தமோத்தமம் (மிகச்சிறந்தது). மேற்கு முகமாக வாயிலிருப்பது உத்தமம், தெற்கு முகமாக வாயிலிருப்பது மத்யமம் (நடுத்தரமானது). வடக்கு முகமாக வாயிலிருப்பது அதமம் (கூடாதது).

பொதுவாக ஆலயங்களின் ஆயிரத்திற்கும் அதிகமான ப்ராமணர்கள் வசிக்கும் கிராமங்களில் விஷ்ணுவை அனேகமூர்த்தி விதானமாக அர்ச்சிக்க வேண்டும். இயலவில்லையாயின் ஓரே மூர்த்தியை எழுந்தருளச் செய்து அர்ச்சிக்கவேண்டும். ப்ராம்மணர்கள் ஐம்பது எண்ணிக்கைக்கும் குறைவாக வசிக்கக்கூடிய கிராமத்தில் ஐந்து மூர்த்திகளை கிழக்கு முகமாகவோ, அனேக மூர்த்திகளை மேற்கு முகமாகவோ, மற்ற நகரங்களில் மேற்கில் ஒரு மூர்த்தியை முறைப்படி ப்ரதிஷ்டை செய்து அர்ச்சிக்கவேண்டும்.

அவ்வாறு ப்ரதிஷ்டை செய்வதன் பொருட்டு ஆலயங்களை அமைக்கும் பொழுது க்ராமம், நகரம், பட்டணம் ஆகியவற்றைப் பற்றி சற்று நோக்கி பிறகு ஆலயம் அமைக்கும் முறையைக் காண்போம்.

### க்ராமங்களின் லக்ஷணம் :

ப்ராமணர்கள் வேலையாட்களுடன் வசிக்கும் இடம் க்ராமம், ப்ராமணர்கள் மட்டும் வசிக்கும் இடம் அக்ரஹாரம், அதிகமான மக்கள் வசிப்பதாயும், பல சிற்பிகளும், பொருட்களை வாங்குபவர்களும், விற்பவர்களும் வசிப்பதாயும், அனைத்து தேவதைகளுக்கும் உரிய கோயில்களுடன் திகழ்வது நகரம். வெளிநாட்டுப் பொருட்களை வாங்குபவர்களும், விற்பவர்களும் வசிக்கும் இடம் பட்டணம். நகரத்தில் வசிப்பவர்களாக சொல்லப்பட்ட மக்களும், பட்டணத்தில் வசிப்பவர்களாகச் சொல்லப்பட்ட மக்களும் சேர்ந்து வசிக்குமிடம் கர்ப்படம். தனது வேலையாட்களுடன் க்ராமத்தின் தலைவனோடு வசிக்கும் இடம் குடிகம். அரசனுடன் அனைத்து ஜாதி மக்களும் சேர்ந்து வசிக்கும் இடம் ஸேனாமுகம். நாற்படையுடனும் அரசன் தன் வேலையாட்களுடனும் வசிக்கும் இடம் ராஜதானீ. அரசு சேனைத் தளபதிகள் வசிக்கும் இடம் சிபிரம்.

**க்ராம — அக்ரஹாரங்களின் விதம் :**

கிழக்கு முகமாகவோ, வடக்கு முகமாகவோ ஒரே தெருவைக் கொண்டது தண்டகம். கிழக்கு முகமாக இரண்டு தெருக்களைக் கொண்டது கரீதண்டகம். தென்மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு போன்ற திக்குகளில் வீதிகள் அமைந்திருந்தால் ஸ்வஸ்திகம். பெருமாள் கோயிலுடன் ஐந்து தெருக்களைக் கொண்டது பத்மவீதிகம். கிழக்கு முகமாக நான்கு முதல் பத்து தெருக்களும், அதற்கும் மேலான சிறு தெருக்களையும கொண்டது ப்ரகீர்ணம். ஒன்று முதல் இருபது வரையிலான தெருக்களைக் கொண்டது உத்கீர்ணகம்.

**தண்டகம் — ஸ்வஸ்திகம் முதலானவற்றில் ஆலயம் அமைக்கும் முறை :**

தண்டகத்தில் மேற்கில் கிழக்கு முகமாகவும், வடக்கில் தெற்கு முகமாகவும், ஸ்வஸ்திகம் முதலியவைகளில் மேற்கில் பைசாச பதத்திற்குள்ளோ அதற்கு வெளியிலோ, ப்ரம்ம ஸூத்ரத்திற்கு வடக்கில் ஸ்ரீவத்ஸம் முதலியவைகளுள் ப்ரம்ம பதத்தின் வாயு திக்கில் பஞ்சமூர்த்தி விதானமாக தேவேசனான விஷ்ணுவுக்குக் கோயிலை அமைத்து ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். எட்டு திக்குகளிலும் எப்படி தெற்கு முகமாக க்ராமத்தைப் பார்த்திருக்குமாறு இருக்குமோ அப்படி க்ராமத்தின் நடுவில் க்ராமத்தைப் பார்த்து திருமுக மண்டலம் இருக்குமாறும் ஸ்தாபிக்க வேண்டும். இவ்வாறு ப்ரதிஷ்டை செய்தால் ஹரியின் (பெருமாளின்) பார்வையும்; சிவனின பின்புறமும் ஊரை நோக்கி சுபத்தை கொடுக்கக் கூடியதாக அமையும். மற்ற இடங்களில் வராக, நரஸிம்ம, வாமன, ராம, கிருஷ்ண போன்ற அவதார மூர்த்தங்களை க்ராமத்தை ரக்ஷிக்கும் பொருட்டு ஸ்தாபிக்க வேண்டும். க்ராமங்களில் இருநூற்றி ஐம்பத்தாறு பதங்களில் பைசாச பதத்தைத் தவிர மற்ற இடங்களில் மேற்கில் பைசாச பதத்திற்கு வெளியே விஷ்ணுவினுடைய ஆலயத்தை அமைக்க வேண்டும். பைசாச பதத்திற்குள் ப்ரதிஷ்டை செய்தால் தந்த்ர விதானமாக அர்ச்சிக்க வேண்டும். வைதீக ப்ரதிஷ்டை செய்தல் கூடாது. தாழ்ந்தோறும், நாடோடி மக்களும் வசிக்கும் இடங்களில் விஷ்ணுவிற்குக் கோயிலை அமைக்கக்கூடாது. ஸ்ரீவத்ஸம் முதலியவைகளில், விததம், ப்ருங்கராஜம், பல்லாடம், மஹேந்த்ரம் போன்ற பதங்களில் மட்டும் ப்ரதிஷ்டை செய்யவேண்டும். சொல்லப்படாத இடங்களில் கோயிலை அமைத்தால் க்ராமத்திற்கும், யஜமானனுக்கும் சீக்கிரம் அழிவு ஏற்படும்.

## ப்ரமாணத்துடன் வீட்டின் வரிசையை அமைக்கும் இடமும் — விஷ்ணுபூஜை இல்லாத கிராமத்தில் வசிக்கத் தடையும் :

வாஸ்து சாஸ்த்ரப்படி அளவை மேற்கொண்டு தேவதைகளுக்கான ப்ராகாரத்துடன் அமைந்த கோவிலும் மற்றும் வீடும் அமைக்கவேண்டும். விஷ்ணு பூஜை இல்லாத இடத்தில் ஒருபொழுதும் வசிக்கக்கூடாது. அங்கு தாமதிக்காமல், அந்தக் கிராமத்தில் பெருமாளை ஸ்தாபித்து வைதிக முறைப்படி ப்ரதிஷ்டை செய்யவேண்டும். அழகும், இஹலோக சுகமும் மோக்ஷமும் கிடைக்கும் என்பதாக வைதிக ப்ரதிஷ்டையின் பலச்ருதி கூறுகிறது. எனவே வைதிக ப்ரதிஷ்டைக்கு முக்கியத்துவம் சொல்லப்படுகிறது.

## அர்ச்சகர் முதலானோரின் இடங்கள்

முன்பு சொல்லப்பட்ட கோயில், அதற்கு அருகாமையிலேயே அர்ச்சகர்களுக்கு வீடும், மத்ய பாகத்தின் ஈசான பாகத்தில் சபையின் இடமும், அக்னி மூலையில் மடப்பள்ளியும், நிர்ருதி திசையில் கடையும், கிழக்கில் பைசாச பாகத்திற்கு வெளியில் குலாலருக்கும் (மண்பாண்டங்கள் செய்பவர்களுக்கும்) அதற்குமேல் முடிதிருத்துபவர்களுக்கும், தெற்கில் நெசவாளர்களுக்கும், மேற்கில் பொருள் வாங்கி விற்கும் வியாபாரிகளுக்கும், வடக்கில் ப்ராமணர்களின் வேலையாட்களுக்கும் மேலும் இதே திசையில் (வாத்யம் வாசித்துப் பிழைப்பவர்களுக்கும்) இசை வேளாளர்களுக்கும், அக்னி மூலையில் சிறிது தூரத்தில் தச்சுத் தொழில் மேற்கொள்ளும் ஆசாரியார்களுக்கும், நிர்ருதி திசையில் சிறிது தொலைவில் சண்டாளர்களுக்கும் மற்றுமுள்ள தனித்தனி பிரிவினருக்கும் வீடுகள் அமைக்க இடம் (அளிக்க) ஒதுக்கித்தர வேண்டும். பைசாச பாகத்தின் வெளியில் கோயிலின் திருச்சுற்றின் வாயிற்புற கதவிற்கு ஈசான பாகத்திலோ நதிக்கரையிலோ ஊருக்கு தூரத்திலோ, கிராமத்திற்குத் தெற்கிலோ இடுகாடு அமைக்க வேண்டும். மேற்கில் மூவாயிரம் தண்டம் அளவுள்ள (24000 அடி) ஏரியையும், அதில் பாதியளவோ, கால் பங்கோ அதன் கரையாகவும் மேலும் அந்த கரையானது மிகமிக உறுதியானதாகவும், நீரினால் அசைக்க முடியாததாகவும் நன்கு அமைக்க வேண்டும்.

வாஸ்துவில் சொல்லப்படாத இடங்களில் தேவதைகளை ப்ரதிஷ்டை ஒருபொழுதும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அரசன் க்ராமத்தின் தலைவன் யஜமானன் ஆகியோருக்கு ஆபத்து ஏற்படும்.

### கோயிலை அமைக்க பூமியை உழும் காலமும், கலப்பையைச் சேர்க்கும் விதமும்:

மார்கழி முதலான பன்னிரெண்டு மாதங்களில் சிறந்த மாதத்தில் சுக்லபக்ஷத்தில் யஜமானனுக்கு அனுகூலமான நாளில் எங்கு கோவில் அமைக்கலாமோ அங்கு மூன்று அடி (கையால் அளக்கும் அடி) முதல் ஐம்பத்தி ஒன்பது அடிவரை எவ்வளவு விருப்பமோ அவ்வளவு உயரமுள்ள (கோபுரமும்) விமானமும், மண்டபத்துடனும், (திருச்சுற்றுடன்) ப்ராகாரத்துடனும், நான்கு புறமும் எல்லைகளுடனும் கோயிலை அமைக்கவேண்டும். இங்குள்ள புல், கொடிகள் போன்றவற்றைச் சுத்தம் செய்து. மேடுபள்ளங்களை சரி செய்து, கலப்பை நுகத்தடியைக் கொண்டுவரவேண்டும். அது மூங்கிலால் இணைக்கப் பட்டதாயும், பன்னிரெண்டு அடியுள்ளதாயும், அல்லாமு கடினமான மரத்தாலானது ஐந்து தாள அளவும், கலப்பையின் கூர்மை நான்கு தாள அளவும், (நீண்ட) தண்டு ஐந்து அடி நீளமும், அதற்குரிய அங்குல அளவிற்குக் குறைவு இல்லாமல் யுக்தியுடனும் செய்யவேண்டும்.

### உழும் விதம்

மிஞ்சியால் மூன்றாக முறுக்கிய கயிற்றைக்கொண்டு வெண்மையானதோ, சிவப்பு நிறமுடையதாகவோ, கருப்பு நிறமுடையதாகவோ, எல்லா வர்ணங்களும் கலந்ததாக இல்லாததாயும், அங்கஹீனம் இல்லாததாயும் வ்யாதியற்றதாயும், நல்ல லக்ஷணமான முகமுள்ளதாகவும், கோபமற்றவைகளாகவும், தங்கத்தினால் செய்யப்பட்ட கொப்பிகளுடன் கூடிய கொம்புகள் உள்ளதாயும், வெள்ளியால் செய்யப்பட்ட குளம்புகளோடுமுள்ள இரண்டு காளைகளைக் கட்டி, அனைத்து வாத்யங்களுடன், யஜமானனும், குருவும், வைஷ்ணவர்களுடன்கூட குறிப்பிட்டுள்ள இடத்திற்குச் சென்று, அங்கு மேற்கில் சிறிய மேடை அமைத்து, அதன் நடுவில் தான்ய பீடத்தில் விஷ்வக்ஸேனரை கிழக்கு முகமாகவும், விஷ்வக்ஸேனருக்குத் தெற்கில் சக்ரத்தையும். வடக்கில் கருடனையும் ஆவாஹனம் செய்து. கருடனுக்கு வெண்பொங்கலும் (முத்தான்னம்), மற்ற தேவதைகளுக்கு சுத்தான்னமும், அதற்கு எதிரில் கிழக்கு முகமாக காளைகளை நிறுத்தி, ஒருபிடி புல் கொடுத்து ஆசார்யன், யஜமானரால் வஸ்த்ரோத்தரீயங்கள் ஆபரணங்கள் கொடுத்து, பூஜித்து தக்ஷிணையைப் பெற்ற பிறகு மிஞ்சியால் (கோரைப்புல்லால்) செய்யப் பெற்ற கயிறைக்கொண்டு காளைகளை (மாடுகளை) "ருத்ரபன்யம்" எனத்

தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி நுகத்தடியில் பூட்டவேண்டும். "த்ரயம்பகம்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி நுகத்தடியைக் கலப்பையில் பூட்டவேண்டும். வைஷ்ணவ மந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு, பூமியை மேற்கிலிருந்து கிழக்காக மூன்று கோடுகள் விழுமாறு உழவேண்டும்.

**விதை விதைத்தல் :**

பிறகு உழுபவரைக் கூப்பிட்டு அவரை அலங்கரித்து (சந்தனம் முதலானவை கொடுத்து பூசிக்கொள்ளச் செய்து) அனைத்து இடங்களையும் உழுது, அனைத்து நெல்லையும் (தெளித்து) விதைத்துவிட வேண்டும். தெளிக்க வேண்டிய விதைகளில் ஷாஷ்டிகம் (இது ஒரு தான்ய விசேஷம் — க்ஷீரான்னம் செய்ய உகந்தது) ப்ரியங்கு (தினை அல்லது சாமை) போன்றவைகளைப் பயிரிடுதல் மத்யமம். பச்சைப் பயறு, வெண் கடுகு போன்றவைகளைப் பயிரிடுதல் அதமம். இவைகளில் (மேலே விதைக்கச் சொல்லப் பெற்ற தான்யங்களில்) ஸோமனை ஆவாஹனம் செய்து அர்ச்சித்து விஷ்ணு ஸூக்தத்தைச் சொல்லி அபிமந்த்ரித்து, "ஸோமகும்ராஜானம்" எனத் தொடங்கும் "வைஷ்ணவ" மந்த்ரங்களைச் சொல்லி நிர்ருதி மூலை முதலான இடங்களிலும் எல்லா இடத்திலும் தெளித்து, வருணமந்த்ரத்தால் நீர் இறைக்கச் செய்து பிறகு அதற்கு (வேலி அடைப்பு) பாதுகாப்பு வைத்து விட்டு பெறப்பட்ட பயிர்களில் மேற்கில் முன்போலவே விஷ்வக்ஸேனர் முதலியோரை நன்கு ஆராதித்து ஹவிர் நிவேதனம் செய்து, பசுக்களை அழைத்து வந்து வணங்கி "ஆகோ தானா" எனத் தொடங்கும் கோதான ஸூக்தத்தால் அந்தப் பயிர்களை பசுக் கூட்டத்திற்கு நிவேதனம் செய்ய வேண்டும். (பசுக்கள் மேயுமாறு விட்டுவிட வேண்டும்)

சீக்கிரமாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தாலோ, மிக அதிக காலதாமதமாகும் என்ற பயத்தாலோ கர்ஷணம் (உழுதல்), பீஜாவாபம் (விதை விதைத்தல்) முதலியன விதிப்படி (செய்ய இயலாவிடில்) செய்யாவிடில் கீழ்க்கண்டவாறு பத விபாகம் செய்து, பூஜித்து புண்யாஹவாசனம் செய்ய வேண்டும்.

நிலத்தை உழுது வைக்கோல் கட்டு, அருகம்புல், பச்சைப்புல் இவைகளில் ஏதாவது ஒன்றைக் கொண்டுவந்து முன்சொன்னது போல பசுக்

கூட்டத்திற்குக் கொடுத்து. தெற்கிலும் கிழக்கிலுமாக பத்து கயறுகளைக் கொண்டு எண்பத்தொரு பத விபாகம் செய்து, அதன் நடுவில் உள்ள ஒன்பது பாகம் ப்ராம்மம், அதற்குக் கிழக்கில் ஆறு பாகம் அர்யம்ணம் முதலிய தேவதைகளும். தண்டதரர்களுக்கு அதற்குத் தெற்கில் ஆறுபாகமும், பாசப்ருதர்களுக்கு அவ்வாறே மேற்கில் ஆறு பாகமும், அவ்வாறே தனதனுக்கு வடக்கில் ஆறுபாகமும், அக்னி மூலையில் ஸவித்ரு, ஸாவித்ரி ஆகிய இரு தேவதைகளுக்கும் இரண்டிரண்டு பாகமும். அவ்வாறே நிர்ருதி மூலையில் இந்தரன், இந்த்ரானுஜன் ஆகிய இரு தேவதைகளுக்கும், வாயு பதத்தில் ருத்ர ருத்ராஜயன் ஆகிய இரு தேவதைகளுக்கும், அவ்வாறு ஈசான பதத்தில் அபம், ஆபவத்யம் ஆகிய இரு தேவதைகளுக்கும் ஒவ்வொன்றிற்கும் இரண்டிரண்டு பாகமும் நைவேதனம் சமர்பித்து அர்ச்சிக்க வேண்டும்.

அதற்கு வெளியில் ஈசானம் முதல் பர்ஜன்யம், மாஹேந்த்ரம், ஆதித்யம், ஸத்யகம், ப்ருசம், அந்தரிக்ஷம், அக்னிம், பூஷணம், விததம், க்ருஹக்ஷதம், யமம், கந்தர்வம், ப்ருங்கராஜம், ரிஷிம், நைர்ருதிம், தௌவாரிகம், ஸுக்ரீவம், புஷ்பதந்தம், ஸரித்பதிம், அஸுரம், சோஷணம், யோகம், ஜவனம், நாகம், முக்யம், பல்லாடம். ஸோமம், அர்களம், அதிதிம், ஸுரி தேவம் என்பதாக சொல்லப்பட்டுள்ள முப்பத்திரெண்டு தேவதைகளையும் தனத்தனி பதங்களில் அர்ச்சித்து, முன்சொன்ன நாற்பத்தைந்து தேவதை களுக்கும் இரண்டு ப்ரஸ்தமளவு (1kg. 120 gms.) அரிசியை எடுத்துக்கொண்டு அத்துடன் வெல்லமோ, நெய்யோ, தயிரோ சேர்த்து பக்குவம் செய்வது உத்தமம். ப்ரம்மண் அர்யம்ணாதிகளான நான்கு தேவதைகளுக்கும், ஸாவித்ரீ முதலான எட்டு தேவதைகளுக்கும் செய்வது மத்யமம். ப்ரம்மணுக்கு மட்டும் தளிகை செய்து நிவேதனம் செய்வது அதமம். மற்ற தேவதைகளுக்கு த்ரோணமளவு (8 kg., 960 gms) அரிசியை ஒரே பாத்திரத்தில் பக்குவம் செய்து முதலில் தீர்த்தம், புஷ்பம், பலி சாதித்து. பிறகு யதாஸ்தானம் செய்து விட்டு, பூஜித்த புஷ்பங்கள் முதலானவைகளை அந்த இடத்தைவிட்டு அகற்றச் செய்து நன்கு சுத்தம் செய்து. கருவறையில் (கர்ப்பக்ருஹத்தில்) கிழக்கு முதல் வடக்கு வரையாக ஐந்து கயிறுகளைக் கொண்டு பதினாறு பதவிபாகம் செய்து அந்த கயிறுகள் சேருமிடங்களான இருபத்தைந்து இடங்களிலும், ஈசானம் முதல் நாகம், பூதம், யக்ஷம், துர்க்காம், கோடமுகீம், தாத்ரீம், வபுஷம் ராக்ஷஸம், ஜயம், க்ருஷ்ணம், ஸுருண்டம், ப்ராணம், கபிம், சக்ரம், புருஹூதம் வித்யாம், யசஸம், பத்ராம், வேதப்ருதம், தாபஸம், ஸிந்துஷாம், வித்யாம்,

அமிதம், பாஞ்சபௌதிகம் என்பதான இருபத்தைந்து தேவதைகளுக்கும் ஒரே பாத்திரத்தில் த்ரோணத்தில் பாதியளவு அரிசியைப் பக்குவம் செய்து அந்தந்த தேவதைகளின் பெயரைச் சொல்லி முன்போலவே பலி சாதித்து பிறகு புண்யாஹவாசனம் செய்யவேண்டும்.

பாலாலயம் செய்து ப்ரதிஷ்டை செய்யமுடியாவிடில் தருணாலயம் இல்லாமல் விமானம், த்ருவபேரம், கௌதுகாதி மூர்த்திகள் ஆகியவற்றை முன்சொல்லப்பெற்றதுபோல் சுத்தி செய்து ப்ரதிஷ்டை செய்யவேண்டும். இப்படி ப்ரதிஷ்டை செய்வதற்குத் தகுந்த ஆலயங்களையும், ஆலயங்கள் அமைக்கச் சொல்லியுள்ள இடங்களில் முறைப்படி அமைத்து அனைத்து தேவதைகளுடன் கூடிய நகரத்தை உருவாக்கி ஸகல ஸௌபாக்யங்களையும் அடைவோமாக.

* * * *
* * *
* *
*

# The Concept of Communication as developed in the Sanskrit Drama

Dr. S. RAMARATNAM
Principal & Professer of Sanskrit
R. K. M. Vivekananda College
Chennai-4

Communication is an important aspect of human life. As a study, it has gained prominence in recent times, with the development of Management Science According to an estimate about 75% of human activity is spent in Communication, speaking or writing. Most of the problems of the world can be traced to misunderstanding and misunderstanding arises due to lack of communication, improper communication or wrong communication. Effective communication can bring about better interpersonal relationship. It can improve the Industrial relations and pave the way for optimum use of human resources. It can even bring about better Inter-national understanding and mutual faith.

What is Communication? According to American Society of Training Directors, communication is the interchange of thoughts and information that brings about mutual understanding and confidence on good human relations. According to Newman, Communication is an exchange of facts, ideas, options or emotions by two or many persons.

Communication is made through symbols like facial expression, hand and body gestures, groaning, sereeming and the like. But by far, the most important and effective means of communication is through words.

According to Indian tradition, there exists a permanent relationship between word and its sense नित्यः शब्दार्थसम्बन्धः । (V. P. - I. 23) Just as the sense organs perception have a natural power to perceive what comes into their purview, so also words have a natural capacity to convey ideas.

इन्द्रियाणां स्वविषयेष्वनादिर्योग्यता यथा ।
अनादिरर्थैः शब्दानां सम्बन्धो योग्यता तथा ॥ (V. P. - III 3-29)

According to the Nyaya and Vaisesika systems, the words have a peculiar power called "Sakti" which is responsible for conveying the fixed sense. In latter Nyaya — Vaisesika texts, this Sakti is attributed to God, अस्मात् पदात् अयमर्थो बोद्धव्य इति ईश्वरसंकेतः शक्तिः । (Tarkasamgraha) Kalidasa says that the word and sense are united together like Siva and Parvati.

वागर्थाविव सम्पृक्तौ वागर्थप्रतिपत्तये ।
जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ ॥ (Raghuvamsa I - 1)

Communication is not just passing on information to somebody. Unless the information is well understood by the receiver. in the same sense as intended by the sender. the process of communication is not complete. The process of communication can be represented thus :

( Words )

Sender — ideas — Encoding — channel — Receiver
|                                                   |
— Feedback — Decoding

The Sender decides the subject matter of the communication and sets about the task of encoding his ideas, generally in the form of words. Then a channel is selected. It may be a letter or telephonic call. It reaches the receiver, who decodes it and understands the massage. The instruction is carried out and that is how the sender gets the feedback.

What are the marks of a good communication? The Arthasastra gives the following list: अर्थक्रमः (arrangement of subject matter) सम्बन्धः (connection between the words), परिपूर्णता (completeness), माधुर्यं (sweetness), औदार्यं (exaltedness) and स्पष्टत्वं (clarity). All these fully with the principles of communication as dealt with in management studies as well. For example, with respect to clarity, one is expected to avoid unfamiliar words and use familar words instead. An illustration drawn from the industry may be given.

> "The machine has a tendency to develop excessive and unpleasant audial symptoms when operating at elevated temperatures' may very well be rendered crisply as. The machine tends to get noisy when it runs hot".

Illustrations for a good communication can be drawn from Sanskrit drama which may serve as a model for Business as well as General purposes.

a) In the arrangement of subject matter, one should be careful to decide which should come first and what should follow and in what order. An illustration for this can be found in Kanva's message to Dusyanta sent through his disciple. The marriage of Dusyanta and Sakuntala was beset with problems.

i) It was a secret marriage.

ii) Sage Kanva was absant during the marriage.

iii) On his return too, Kanva may not approve of the marriage

iv) Even if he approves it may not be a whole hearted consent.

v) Sakuntala is nowhere near Dusyanta in status.

The sage has to given an answer to there problems. He should also convince the king of accepting Sakuntala immediately. All there ideas are fully explained in Kanvas Message.

यन्मिथः समयादिमां मदीयां दुहितरं भवान्

उपायंस्त तन्मया प्रीतिमता युवयोः अनुज्ञातम् ।

त्वं अर्हतां प्राग्रसरः ... ... ... । (V - 15)

तदिदानीं आपन्नसत्त्वा प्रतिगृह्यतां सहधर्मचरणाय ।

By reciprocal agreement, you have married this daughter of mine, which I have, with pleasure, approved.

You are the best of worthy men. Sakuntala is virtue itself in human form; Brahman, who has united a bride and bridegroom of equal merit, has after a long time incurred no censure.

Therefore, acccpt her, who is already pregnant. She will be your faithful partner in the performance of ritual duties.

ii) सम्बन्ध is the statement of subject matter with complete compatabitity between the parts of the statement. In a statement like कुन्तीपुत्रोविनायकः, this is absent. On the other hand,

श्लिष्टा क्रिया कस्यचिदात्मसंस्था

संक्रान्तिरन्यस्य विशेषयुक्ता ।

यस्योभयं साधु स शिक्षकाणां

धुरि प्रतिष्ठापयितव्य एव ॥

(Malavikagnimitra - I - 16)

(some exhibit their skill very well in their own sphere; while others show flair for teaching others. He who excels in both there qualities, deserves a supreme place among teachers)

iii) परिपूर्णता or completeness results when a statement is self-explanatory with reason, illustrtion and the like. For eg.

भव हृदय साभिलाषं संप्रति संदेहनिर्णयो जातः ।
आशङ्कसे यदग्निं तदिदं स्पर्शक्षमं रत्नम् ॥ (Abh. Sak. I - 28)

[My heart, be hopeful ( — statement for now all doubts are clarified (reason) what you thought of to be fire, the same is a gem capable of being touched (illustration) ]

Likewise examples can be found in Sanskrit drama for other aspects of good communication like माधुर्य, औदार्य and स्पष्टत्व.

As to what can be communicated through an official document, Arthasastra says:

निन्दा प्रशंसा पृच्छा च तथाख्यानं अथ अर्थना ।
प्रत्याख्यानं उपालम्भः प्रतिषेधोऽथ चोदना ॥

सान्त्व अभ्युपपत्तिश्च भर्त्सन - अनुनयौ तथा ।
एतेष्वर्थाः प्रवर्तन्ते त्रयोदशसु लेखजाः ॥ (2 - 10 - 23 - 24)

Censure, praise query, statement of facts, request, refusal, blaming, prohibition, injunction, appeasement, help, Threatening and propitiasion while there can be expressed plainly in day to day talk, the same have to be conveyed in a different tone in an official communique.

For example a teacher may censure a student for late coming by saying, "Get Lost, I cannot admit you inside the classroom. I will report the matter to the Principal" ... ... etc., But such a shouting in the presence of the other students will not have the desired effect on the student. On the otherhand, if the teacher were to say, "My dear young man, you are too early for the next hour, Please go to the Library and spend your time usefully till the next hour begins." The student will realise his mistake and may immediately apologise.

In the Abhijnana Sakuntala example, for Dusyanta and Sakuntala censure each other but with a high degree of politeness.

दुष्यन्तः – स्त्रीणां - अशिक्षितपटुत्वं - अमानुषीषु संदृश्यते किमुत याः प्रतिबोधवत्यः प्रागन्तरिक्षगमनात् स्वं - अपत्यजातं अन्यैर्द्विजैः परभृताः खलु पोषयन्ति ।

शकुन्तला – अनार्य, आत्मनो हृदयानुमानेन पश्यसि क इदानीं अन्यो धर्मकञ्चुकप्रवेशित - तृणच्छन्नकूपोपमस्य तवानुकृतिं प्रतिपत्स्यते ।

On how a request is made. we can take an instance from the play Mrcchakatika. Vasantasena requests Carudatta to keep a deposit with him. Carudatta feels that his house is not safe enough Vasantasena convinces him by saying, deposits are made with the confidence on men and not their houses (पुरुषेषु न्यासाः निक्षिप्यन्ते, न पुनर्गेहेषु) Likewise suitable illustrations for Injunction, prohibition, Propitiation and the like can be found in Sanskrit dramas.

Arthasastra also points out certain defects in communication, which have to be avoided — अकान्तिः, व्याघातः, पुनरुक्तं, अपशब्दः, संप्लवः, (Absence of charm, contradiction, repetition, incorrect use of a word and confusion.)

**Examples :**

| | Avoid | Use |
|---|---|---|
| 1 | Absence of charm : | |
| | We are in receipt of your order. | We are pleased to receive your order. |
| 2 | Contradiction : | |
| | We are honoured to be dishonoured by you. | We regret to be dishonoured by you. |
| 3 | Repetition : | |
| | The consensus of opinion is that the tax is imfair. | The consensus in that the tax in imfair. |

4 Incorrect use of a word :

| | |
|---|---|
| We must take steps to boost the morality of the workers. | We must take steps to boost the morale of the workers. |

5 Confusion :

| | |
|---|---|
| Knowing that there would be objection to the price we fixed was the reason we fixed a lower price. | The price was lowered in order to avoid objection on its like. |

Illustrations to these can be found in plenty through the words of Vidusakas in Sanskrit drama. The दोषप्रकरण in the Alankara works also give a list of such expressions that one to be avoided. For eg.,

(i) कार्तार्थ्यं लभते कदा when will be attain the fulfilment of his desires ? Here the कार्तार्थ्यं is harsh to hear, which results "absence of charm.

(ii) अरण्यमहिषाद्यविषाणोदरजन्मनाम् ।

महत्यर्घेऽपि मुक्तानां स्त्रियो मुक्ताविभूषणः ॥ (PR. V. 84)

In the forest the womenfold decorated themselves with pearls that were procured from the horns of the bisons. Here the possibility of getting pears from the horns of the bisons is contradictory to nature.

(iii) Eg. जीर्णकाननेसङ्कीर्णे विन्ध्ये काननवृत्तयः । (PR. V. 29)

Here the repetition of the word कानन has no significance.

(iv) Eg. कदा भविष्यते वासः? (PR. V. 14)

Here the word भविष्यते is a wrong usage.

(v) कदा भविष्यते वासः कटकेषु महीभृताम् ।

When will the kings get back to their city (कटक) life? Here confusion arises due to another meaning of the word कटक, that is, mountains.

Arthasastra also gives a list of thirty two devices of preparing a document (like अधिकरण विधान and योग) They are selection of topic. statement of contents, employment of technical terms, reasons for establishing something, mention of rules explanation caution, reference, application, indication. analogy, implication, doubt, existence of similar situations, corollary, agreement, emphasising derivation of terms, illustration, exception, the prima facie view, the correct view, reference to a future proposal, restriction, options available, summary of the proposal and conclusion.

It may be seen from the list that the approach given by Arthasastra agrees with the modern concepts of systems Analysis Examples to the majority of these items can be found in dramas like Malavikagnimitra and Mudraraksasa.

It is clear, therefore, that the principles of communication were known to the ancient Indians and were put to effective use in the official circles as well as in literary works, especially the Drama.

# ஆகமங்களும் சிற்பநூல்களும்

**R. சுப்ரமணியம்,**
*பிரஞ்சு கலைச் கழகம்,*
*பாண்டிச்சேரி.*

உயிரினங்கள் வாழ்வதற்காகத்தான் இறைவனால் உலகம் படைக்கப் பட்டுள்ளது. உலகில் வாழும் மனிதனும் ஒருவன். மனிதனின் சிறப்பு. பகுத்தறிவும், பேசும் ஆற்றலும்தாம். நன்றிது. தீதிது எனப் பகுத்தறிவது தான் பகுத்தறிவு. "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்துள் அலகையாய் வைக்கப் பெறும்" என்ற பொய்யாமொழிக்கொப்ப இருப்பது பகுத்தறிவன்று. மனிதன் எந்தெந்த பிரதேசத்தில் தோன்றியுள்ளானோ, அததற்குத் தக்கபடி அவனுடைய உடலமைப்பு, பண்பாடு, இவைகள் அமைகின்றன. அதனால், நாம் இந்தியராக அதிலும் சிறப்பாகத் தமிழராக வாழவேண்டும்.

உலகிலுள்ள எல்லா மொழிகளும் நம்முடையவைதாம். இவைகளுள் தமிழ் நம்முடைய தாய்மொழியாம். உலகிலுள்ள எல்லா மதங்களும் ஒன்றான பரம்பொருளிடம் நம்மைக்கொண்டுசெல்லும் நெறிகள்தாம். இவற்றுள் நாம் ஹிந்து நெறியைச் சார்ந்தவர்கள். ஒவ்வொரு பிரதேசத்தில் விளையும் பொருள்களைக் கொண்டு அங்கங்கு வாழும் மக்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களைக் கொள்ளும் வண்ணம் அவ்வப் பிரதேச மக்களின் உணவு முறைகள் அமைந்திருக்கின்றன. பிராணிகளும் இவ்வாறே கொள்ளுகின்றன, இதைப்போலவே அவரவர் பின்பற்றும் நெறி அவரவர் உய்வடையப் போதுமானது.

பாம்புக்கு உணவு தவளை. ஆனால் சில இடங்களில் துன்பப்படும் தவளைக்குப் பாம்பே உதவுகிறது. ஓநாய் மனிதனைக் கொல்லும். சில இடங்களில் மனிதக் குழந்தையை ஓநாய் வளர்க்கும். இவற்றைப் போலவே எல்லாப் பிராணிகளும் செய்கின்றன. இதனால் அன்பு உயிர்களுக்குப்

பொதுவானது. அன்பே வடிவான சிவபெருமான் உயிர்களிடத்தில் நிறைந்திருக்கிறான். என்பதைப் பிராணிகள் காட்டுகின்றன இந்த அன்பு தாவரங்களுக்கும் உண்டு. **ईशावास्यमिदं सर्वं यत्किञ्च जगत्यां जगत्** என்பது வேதம்.

பிராணிகளிடம் நன்றியுணர்வு, சோம்பலின்மை, பருவம் தவிர்ந்த மற்ற காலங்களில் இனம் சேராமை யஜமானனுக்காக உயிரையும் கொடுக்கும் விசுவாசம், காலம் தவறாமை, தனக்கெனப் பொருளைப் பதுக்கிவைத்துக் கொள்ளாமை போன்ற அரிய குணங்கள் உள்ளன. உண்மை ஞானிகள் சிவ சான்னித்தியம் இவைகளை தாவரங்களும், விலங்குகளும், பறவைகளுமே முதலில் உணர்கின்றன. மனிதன் பொதுவாக, அதிலும் உணர்த்த உணரும் ஆற்றலைத்தான் பெற்றிருக்கிறான். நாம் உய்ய வேண்டும் என்று உண்மையாக எண்ணினால் உய்யலாம்.

வாய்மை, ஒழுக்கம், சிவபக்தி, சோம்பலற்ற உழைப்பு, எல்லாரிடத்திலும் அன்புடைமை, ஒப்புறவு, நன்றி, ஒற்றுமை இவை எல்லா பிராணிகளுக்கும் பொது. இவையே மனிதன் உய்ய வழி.

பிறந்த குழந்தைக்குத் தாயைக் காட்டியவர் யார்? தாய் தன் குழந்தைக்குத் தன்னைத்தானே காட்டிக்கொண்டாலன்றி தாயை மற்றவர் காட்டமுடியாது. தந்தையை, தாய்தான் காட்டுகிறாள். இவ்விருவரும் மற்றவர்களைக் காட்டுகின்றனர். தாய், தான் பெற்றெடுத்த குழந்தையை அணைத்துப் பால் கொடுத்து தன்னைக் காட்டிக் கொள்கிறாள். தாயின் வயிற்றில் உருவானது முதல் ஊண், உதிரம், உருவம் எல்லாம் தாயிடமிருந்தே தோன்றுகிறது. கருவிலேயே தாயின் இதய ஒலியைக் கேட்டு வளர்கிறது. தாயின் உணவே குழந்தைக்கு உணவு. தாயின் சுகக் குறைவே குழந்தைக்கு சுகக் குறைவு. தாயின் ஆரோக்யமே குழந்தையின் ஆரோக்யம். இவ்வாறு கலந்திருப்பதால் குழவிக்குத் தாயைப் பிறர் காட்டி உணர்வதில்லை. குழந்தையைத் தாய் அணைத்த உடன் இதய ஒலியைக் கேட்டு இவள் தன் தாய்தான் என்று உணர்ந்துகொள்கிறது. இது எல்லா பிராணிகளுக்கும் பொது.

இவ்வாறே "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியும் காற்றுமாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாயமாய் அட்டமூர்த்தியாகி" நிற்கும் சிவபெருமான் தன்னைத்தானே காட்டிக்கொண்டால் அன்றி மற்றவர்களால் காட்ட முடியாது. இறை தானே தாய், தானே தந்தை, அதனால் குழந்தை பிறந்தால் பசிக்கும் என்று பிறக்கு முன்பே

உலகியல் தாயிடம் பாலை வைத்து குழந்தையை வெளியில் அனுப்புகிறான். ஊன், உதிரம் போன்றவை எவ்வாறு பௌதிகத் தாயிடமிருந்து பெறப்படுகின்றனவோ. இதைப் போலவே தன்னுடைய திருமேனிகளால் உயிர்களுக்குத் தேவையான எல்லாம் பெறப்படுகின்றன. தானே உயிர்ப்பாகியிருந்து வாழ வைக்கிறான். प्राणिजः प्राणवन्तः என்கிறார் காளிதாஸர். 'பரமாத்மாவை சிவன் என உபாசிப்பவர்கள் ஞானியின் நிலையை எய்துவர்' என இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுகிறார். நமக்குத் தேவையான எல்லாவற்றையும், நாம் தோன்றுவதற்கு முன்பே படைத்துவிட்டு நம்மைப் படைக்கிறான். இடையிடையே நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்கிறான். எனவே சிவனடியைச் சேர்ந்தால் 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்கிறார் ஞானசம்பந்தர்.

இறை எண்ணம் என்பது இயல்பானது. சமய பேதங்களை மனிதர்கள் ஏற்படுத்தியவை. ஆனால் இன்று சமயத்தின் வாயிலாகத்தான் இறை உணர்வைப் பெற முடியும் 'சமயங்கள் பொய் சொல்லவில்லை' என்ற ஸ்ரீராமகிருஷ்ணரின் அனுபவத்தையும், 'இறையனுபவம் என்பது இயல்பானது, என்ற ஸ்ரீரமணரின் அனுபவத்தாலும் உணரலாம்.

नानाप्युपाया बहवोऽप्यदिष्टा
महर्षिभिस्तस्य महात्मनो नु ।
तेष्वाशुयत्नः क्रियतां भवद्भिः
न हेतुवादैर्भवितात्मलाभः ॥

என்பது ருக்வேத-ப்ராதிசாக்யம். பலப்பல உபாயங்களை நாம் உய்வதற்காக மஹர்ஷிகளால் உபதேசிக்கப்பட்டுள்ளன. ஏதாவது ஒரு வழியில் முயற்சி செய்யுங்கள். வீண் பேச்சுப் பயன்படாது என்பதே இதன் பொருள். இதே கருத்தைத் திருமூலரும் கூறியுள்ளார்.

செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
வெல்லும் அளவும் விடுமின் வெகுளியை
இல்லையெனினும் பெரிதுளன் எம்மிறை.

என்பது திருமந்திரம். இன்று நமது சநாதன தர்ம மார்க்கம் சைவாகம வழியில் செல்லும். சைவம் என்றும், பாஞ்சராத்ர நெறியில் வைஷ்ணவம் என்றும், மநு முதலியவர்கள் அருளிய அறநூல் வழியில் செல்லும் ஸ்மார்த்தம் என்றும் பிரிந்துள்ளது.

இங்கு கூறிய மூன்று நெறிகளும் உயர்வானவைகள்தாம். ஆனால் பிரிவு என்று வந்துவிட்டால் வேற்றுமை வரத்தானே செய்யும். இந்த வேற்றுமைகள் இறை நிலையில் இயல்பானதன்று. உதயம், அஸ்தமனம் எதுவுமில்லாமல் சூரியன் வானத்திலிருக்கிறான். ஆனால் நமது நன்மையைக் கருதி உலகில் உதயம் - மத்யமம் - அஸ்தமனம் என்ற மூன்று நிலைகளை அடைகிறான். காலையில் அதனதன் செயல்களில் பிராணிகளைத் தூண்டியும், நண்பகலில் காத்தும், மாலையில் ஓய்வு கொள்ள அதனதன் இடங்களில் ஒடுக்கியும் ஒருவனே மூவராய்ச் செயல் புரிகிறான். காலை செவ்வண்ணத்துடனிருப்பதால் பிரமன் என்றும், நண்பகலில் நீல வண்ணத்துடன் காணப்படுவதால் திருமால் என்றும், மாலையில் பொன்னார் மேனியனாக ருத்ரன் என்றும் கூறப்படுகிறான். இந்த வேற்றுமைகள் எவ்வாறு கதிரவனிடம் இல்லையோ, நமது நன்மையின் பொருட்டு இவ்வுலகில் எவ்வாறு காணப்படுகின்றனவோ இதேபோன்றதுதான் இறை நிலையும், நாம் உய்வடைய சைவாகமங்கள் என்றும், வைஷ்ணவ ஆகமங்கள் என்றும் ஏற்பட்டுள்ளன. அவற்றைச் சிறிது பார்ப்போம்.

இன்று நமது இந்து சமயத்துள் ஏன், அகில இந்திய அளவில் ஆயிரக் கணக்கான தெய்வங்கள் வழிபடப்பெறுகின்றன. இத்தெய்வங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை உலகியல் தெய்வங்கள் என்றும், சாஸ்திரங்களால் அறியப்பெறும் தெய்வங்கள் என்றும் கூறப்பெறும். இதைக் காடகக்ருஹ்ய சூத்ர வியாக்யானத்துள்,

"देवतायै बलिं हरेदिति । ते शास्त्रचोदिताः लौकिकाश्च [1]"

என்பதால் அறியலாம். இதே சூத்திரத்திற்கு பிரம்மபாலர் என்பவர் எழுதிய வியாக்யானத்தில்

"यथा नागविनायकदुर्गादीनां देशाचारप्रसिद्धं बलिकर्माणिकर्तुमुपक्रमे [2]"

நாகம், விநாயகர், துர்கை முதலானவர்கள் உலகியல் தெய்வங்கள். இவர்களை வழிபடும்பொழுது உலகியல் வழக்கின்படி வழிபாடு செய்யவேண்டும் என்று வருவதால் வேதமந்திரங்கள் இல்லை என்பது அறியப்படுகிறது.

சாஸ்திரம் என்பது இங்கு வேதத்தைக் குறிக்கும். நம் காலத்தில் வேதத்தால் அறியப்பெறும் தெய்வங்களுள் சிவன், விஷ்ணு என்ற இருவர் மட்டுமே உள்ளனர். உலகியல் தெய்வங்கள் வரலாற்றுக்கு உட்பட்டவர்கள்.

---

1. & 2. काटकगृह्यसूत्रम् — आनन्दपालव्याख्यानम् । 50 - 1 - 2

வைதிக தெய்வங்கள் இயற்கையானவர்கள். யாஸ்கரின் நிருக்தம் தேவதா காண்டத்திலிருந்து வைதிகதெய்வங்கள் இயற்கையானவர்கள் என்ற கருத்தை அறியமுடிகிறது. இயற்கைப் பொருள் வடிவில் பரமாத்மா, வேத மந்த்ரங்களால் துதிக்கப்பெறுகிறது. தேவதைகளைப் பற்றிய கருத்துக்களை யாஸ்கர் மூன்று விதமாகப் பிரிக்கிறார்.

"महाभाग्यात् देवताया: एक आत्मा बहुधास्तूयते [3]"

தேவதையின் பெருமை காரணமாக ஒரே ஆத்மா பலவிதமாகத் துதிக்கப் படுகிறது என்பது அத்யாத்மவாதிகளின் கருத்து.

"तिस्र एव देवता इति नैरुक्ता:[4]"

மூன்று தேவதைகள் என்று நிருக்தக்காரர்களின் கருத்து. அக்னி, வாயு, ஆதித்யன் என்பவர்கள் அந்த மூன்று தேவர்கள். பல தேவதைகள் என்று இதிகாசிகர்கள் கூறுகிறார்கள் என்று வைதிக தேவதைகளைக் கூறுகிறார். ஒரே அக்னியே பூமியில் அக்னி என்றும், அந்தரிக்ஷத்தில் வாயு என்றும், வானில் சூரியன் என்றும் கூறப்படுகிறது என்பது யாஸ்கரின் கருத்து.

"नाना लिङ्गत्वान्नानासूर्यत्वम्[5]"

ஒரே சூரியனிடம் பல அடையாளங்கள் இருப்பதால் பல சூரியர்களாக எண்ணப்படுகிறார். இதனால் ஒரு பொருளையே பல பெயர்களாக வழிபட்டார்கள் என்று தெரிகிறது.

"एकं तद्विप्रावहुधावदन्ति[6]"

என்று ருக் வேதம் கூறுகிறது.

"यदा यदा विषित: व्याप्तोऽयमेव सूर्यो रश्मिभिर्भवति तदा तदा विष्णुर्भवति[7]"

சூரியன் தன்னுடைய ரச்மியால் எங்கும் வியாபிக்கும்பொழுது விஷ்ணு வாகிறார்.

"अथ यद्विषितो भवति तद्विष्णुर्भवति । विष्णुर्विशतेर्वा व्यशनतेर्वा तस्यैषा भवति"[8] ।

இதேபோல சிவனைப் பற்றி நிருக்தம் பொருள் கூறுகிறது.

"रुद्रा रौतीति रुद्र: । रोरन्यमाणो द्रवतीति वा । रोदयतेर्वा । यदरुदतत् तद्रुद्रस्यरुद्रत्वमिति काटकम् । यदरोदीत् तत् रुद्रस्य रुद्रत्वम् इति हारिद्रवकम्" ।

---

3 & 4. यास्कनिरुक्तम् । 5. तैत्तिरीय आरण्यकम् । 6. ऋग्वेद: ।
7 & 8. निरु 12 - 18 ।

சத்தமிடுபவன், சத்தமிட்டுக்கொண்டே ஓடுபவன், அழுபவன் என்னும் பொருளைக் காடகமும், ஹாரித்ரவிகமும் கூறுகிறது. ருத்ரன் சப்தமிடுபவர். சப்தத்தால் எங்கும் நிறைந்தவர். இதனாலேயே **ईशानः सर्वविद्यानां ... ... ... सदाशिवोम्** போன்ற இடங்களில் ருத்ரன் சப்தமாக—நாதமாக இருப்பது கூறப் படுகிறது. ருத்ரபத்னிக்குப் பெயர்களாக நிருக்தம் **रोदसी मीदुषी गौरी** என்ற சொற்களை மாத்யமிக ஸ்தான வாக்கின் பெயராகக் கூறுகிறது. ருத்ரன் சப்தத்தால் எங்கும் வியாபிக்கும் சூரிய நிலை. இதனாலேயே வியாகரணம் மகேச்வரனுடன் சம்பந்தம் பெறுகிறது. அழுகை என்பது நீண்ட சப்தம். சப்தம் அனைத்தும் சூரியனைத்தான் ஆச்ரயித்திருக்கிறது என்பது நமது சாஸ்திரம்.

ஒன்றான ஒரு பொருள் அவஸ்தா பேதத்தால் சிவன் என்றும், விஷ்ணு என்றும் இரு உருவமுடையதாக வழிபடப்படுகிறது. "ஒருவன் அங்கத் தொருவன் உளன்" என்று ஆழ்வார் கூறியதை ஒப்ப ஒரு பொருளேயாகும். இதை வேறுவிதமாகவும் கூறலாம்,

श्वेतद्वीपे त्वहं विष्णुः कुशद्वीपे महेश्वरः ।
पुष्करे च स्मृतो ब्रह्मा शाकद्वीपे च भास्करः[1] ॥

ஒரு சூரியனை சுவேதத்வீப மக்கள் விஷ்ணு என்றும், குசத்வீபத்தில் உள்ளவர்கள் மஹேச்வரன் என்றும், புஷ்கரத்வீபத்தில் உள்ளவர்கள் பிரம்மா என்றும், சாகத்வீபத்திலுள்ளவர்கள் பாஸ்கரன் என்றும் சாம்ப புராணம் கூறுவதை உணரலாம்.

இத்தகைய வைதிக தேவதைகளை வேறு ஒருமுறையில் வழிபாடு செய்ய வழிவகுத்தனர். ஆகமங்கள்,

"वैदिक देवता तदाराधनप्रकारविशेषप्रतिपादकानां आगमानां पुराणशब्दे नैव संग्रहः[2]"

ஆகமங்கள் தோன்றுவதற்கு முன்பே அல்லது வேறு முறையில் வழிபாடு உடையனவாக ஆலயங்கள் — பிரதிமைகள் இருந்தன. **कासीत्प्रमा प्रतिमा** (ऋ. *10 - 130 - 3*) என்னும் ருக் வேதத்தின் உரையில் சாயனர்,

"तथा प्रतिमा हविष्प्रतियोगित्वेन मीयते निर्मीयत इति प्रतिमा देवता"

ஹவிஸ்ஸைப் பெறுவதற்கு என்றும், 4-24-10 இடத்தில் இந்திரப் பிரதிமையை விற்பதைக் கூறுவதாலும்.

---

1. **साम्बपुराणम्** *26, 27* b, *28* a.
2. **शिवार्कमणिदीपिका** *1 . 1 . 3*

तव यक्षं पशुपते अप्स्वन्तस्तुभ्यं (अथर्वसं 11 - 2 - 24)

என்ற அதர்வவேத மந்திரத்தின் உரையில்

तव त्वदीयं यक्षं पूज्यं स्वरूपं अप्सु अन्तः उदकेषु मध्ये वर्तते

என்று சிவலிங்கம் கூறப்படுவதாலும் பிரதிமைகள் இருந்ததை உணரலாம். மேலும் दैवतप्रतिमाहसन्ति, रुदन्ति, गायन्ति (साम वेदीय षड्विंशब्राह्मणं 6 - 10 - 2) என்று சாம வேதத்தின் ஷட்விம்சப்பிராம்மணம் கூறுகிறது. மற்றும் போதாயன காடக, அக்னிவேச சாங்காயன, வைகானஸ க்ருஹ்ய சூத்ரங்களும் கௌதம தர்ம சூத்ரம், போதாயன தர்ம சூத்ரம் போன்றவைகள் தேவதை பூஜை ஆலயம் இவைகளைக் கூறுகின்றன. கௌடில்யர் அர்த்தசாஸ்திரம், வியாகரண மஹாபாஷ்யம், மநு ஸ்மிருதி லௌகாக்ஷி ஸ்மிருதி முதலான பல ஸ்மிருதிகள் மஹாபாரதம் மற்றும் பல புராணங்கள் தேவதைகளின் பிரதிமைகள் ஆலயங்களைப் பற்றி கூறுகின்றன.

वैदिकी तान्त्रिकी चैव द्विविधा कीर्तिता श्रुतिः

என்று மநு ஸ்மிருதியின் உரையில் (2 , 1) குல்லூகபட்டர் வேதமே தந்திரம் என்றும் பிரிந்திருப்பதாகக் கூறுகிறார்.

सांख्यं योगः पाञ्चरात्रं वेदाः पाशुपतं तथा ।
ज्ञानान्येतानि राजर्षे विद्धि नानामतानि च ॥

என்று மஹாபாரதம் கூறும் ஐந்து நெறிகளில் இன்று மூன்று நெறிகள்தான் உள்ளன. வேதநெறி, பாஞ்சராத்ரம், பாசுபதநெறி என்பவை. பாசுபதம் பல பிரிவாகப் பிரிந்து போனதால் இன்று அந்தப் பெயர் மறைந்து விட்டது. ஸ்ரீ ஆதிசங்கராசாரியர்கள் லகுலீசப்ரக்ரியை எடுத்துக்கொடுத்து நிஷேதம் செய்கிறார்கள். ஸ்ரீ கண்டர் தம்முடைய பிரம்ம மீமாம்ஸா பாஷ்யம் மூன்றாவது அத்தியாயத்தில் அவர் அதர்வண வேதத்திலிருந்து பாசுபத யோகத்தைக் கூறுகிறார். இவை இரண்டுமே தாந்திரிக மார்க்கம் இல்லை. இருவரும் கேவலம் நிமித்தகாரணவாதிகளும் அல்ல, லகுலீச ப்ரக்ரியையுடன் கேவலம் நிமித்தகாரணவாதம் கூறும் தந்திரங்கள் தனித்து இருந்திருக்கும் என்று தோன்றுகிறது.

அபிநவகுப்தர் தந்த்ராலோகம் என்ற நூலில் 36-வது ஆன்னிகத்தில் —

त्र्यम्बकामर्दकाभिख्य श्रीनाथा अद्वये द्वये ।
द्वयाद्वये च निपुणाः क्रमेण शिवशासने[1] ॥

சைவ தந்திரங்கள் மறையவே சிவபெருமானுடைய உத்திரவின் பேரில் துர்வாஸர் த்ர்யம்பகர் என்ற மாநஸ புத்ரரை உண்டுபண்ணினார். அவர் மற்றொரு த்ரயம்பகர், ஆமர்தகர், ஸ்ரீநாதர், என்ற மூன்று புத்ரர்களை உண்டுபண்ணி, அவர்கள் மூலம் அத்வைதம், துவைதாத்வைதம், துவைதம் என்ற மூன்று வகையான தத்துவங்களைக் கூறும் பைரவ, ரௌத்ர, சைவ ஆகமங்களைத் தொகுத்துக் கொடுக்கப்பட்டன என்று கூறுகிறார். தற்கால ஆய்வாளர்கள் இது நடந்த வரலாற்றுக் காலம் கி. பி. 3 ஆம் நூற்றாண்டின் கடைசியாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள். அத்வைதம் கூறும் நூல்கள் பைரவ ஆகமங்கள் என்று பெயர் பெற்று காஷ்மீர சைவத்தின் மூல நூல்கள் ஆயின. துவைதாத்வைதம் கூறுபவையும், துவைதம் கூறுபவையுமான ஆகமங்கள் ருத்ர பேதம் என்றும், சிவபேதம் என்றும் பெயர் பெற்று சித்தாந்த ஆகமங்கள் ஆயின.

க்ஷேமேந்திரன் ஸ்வச்சந்த வியாக்கியானத்தில் सिद्धान्तप्रियो हि लोकः. உலகம் ஸித்தாந்தாகமங்களிடத்தில் பிரியமுடையது என்று கூறுகிறார், காஷ்மீரத்தில் அத்வைத சைவம் பிரபலமாக இருந்தாலும் ஆலயங்கள் சித்தாந்தாகமத்தின் முறையில் கட்டப்பட்டன, இதனால்தான் அவர் இவ்விதம் கூறுகிறார். பதினெட்டு ஆகமங்கள் ருத்ரபேதங்கள் என்றும், பத்து சிவபேதங்கள் என்றும் ஆக இருபத்தெட்டு சைவாகமங்கள் என்று இன்று வழங்கப்படுகிறது. ஆனால் இவைகளுக்குச் சித்தாந்தாகமங்கள் என்பது பெயர். இந்த ஆகமங்கள் மஹா தந்திரம், பிரதிஷ்டா தந்திரம், தந்திரம் என்று பிரிக்கப்பெற்றுள்ளன. ஞானம், யோகம், கிரியை, சரியை என்ற நான்கு பாதங்களை உடையது மஹாதந்திரம். கர்ஷணம் முதல் பிரதிஷ்டை வரை உள்ளவைகளைக் கூறுபவை பிரதிஷ்டா தந்திரம். கலந்து கூறுவது தந்திரம் இந்த இருபத்தெட்டு ஆகமங்களுள் பல மறைந்து விட்டன. கிடைப்பவைகளும் முழுமைப் பெறாதவைகளாக உள்ளன.

---

1. तन्त्रालोके 36 - 11

ஆகமங்களின் கிரியா பாதத்தை ஒத்தது சிற்ப சாஸ்திரம். மத்ஸ்ய புராணம் 256-ஆம் அத்யாயத்தில் சிற்ப சாஸ்திர ஆசிரியர்களின் பெயர்கள் கூறப்படுகின்றன.

தேசநிர்தேசம், கர்ஷணம், வாஸ்து சுத்தி, சங்குஸ்தாபனம் ஆகியவைகள் ஆபஸ்தம்ப ச்ரௌத சூத்ரத்துடன் ஒத்தலை, அங்கு யாகசாலைக்கும், ஆகமங்களின் ஆலய நிர்மாணத்திற்கும் மேற்கூறிய காரியங்கள் செய்யப்படுகின்றன. கிராம வாஸ்து, நகரம், பட்டணம், ராஜதானி போன்றவைகளைச் சிற்ப நூல்களும் ஆகமங்களும கூறுகின்றன, சிவன் விஷ்ணு என்னும் இரு தெய்வங்களும் அந்தணர்கள் வாழும் தெருவின் இரு இடங்களில் கோயில் கொண்டிருக்கும். இப்படி இருக்க வேண்டும் என்று காமிகாகமம் கூறுகிறது.

हरिहरयुतं वास्तु केवलेन हरेण वा । कामिकं I 26 - 3a

"वेदः शिवः शिवो वेदः वेदाध्यायी सदाशिवः"

என்ற சிவபுராண வாக்கியத்தின்படியும்,

"ईशानः सर्वविद्यानां यो वेदादौ स्वरः प्रोक्तः वेदान्ते च प्रतिष्ठितः तस्य प्रकृति लीनस्य यः परः स महेश्वरः" । என்பன போன்ற வேதவாக்கியங்களின்படியும் "नादरूपी सदाशिवः" என்று பட்டபாஸ்கரதைத்திரீய ஸம்ஹிதையின் பாஷ்ய (2 - 1) ஆரம்ப மங்கள சுலோகத்தின்படியும் எல்லா வித்யைகளின் சொரூபம் சிவபெருமான். यज्ञो वै विष्णुः என்பதால் "யக்ஞம் விஷ்ணு". இதனால் அந்தணர் வீதிக்கு இருபுறமும் இவ்விரு ஆலயங்கள் இருப்பதற்குக் காரணம். இதை எல்லா ஆகம நூல்களும் கூறுகின்றன. பிரம்மாவுக்கு நான்கு வேதமும் நான்கு தலைகள். இதனால் பிரம்மாவுக்கு வேதாத்மா என்ற பெயரைக் கூறுகிறது வேதம். சிவபெருமானுக்கு நான்கு வேதங்களோடு காவ்ய, நாடக, புராண இதிஹாஸ தந்திரங்கள் ஐந்தாவது தலை. இது இருவருக்கும் உள்ள வேற்றுமை. ஸரஸ்வதிக்குப் பிரம்மாவுக்குச் சமமான ரூபத்தை மத்ஸ்ய புராணம் கூறுகிறது.

இன்று கிடைக்கும் சைவாகமம், பாஞ்சராத்ரம் இவைகளே நமக்குச் சில வரலாறுகளைக் கூறுகின்றன. சிவபெருமானுக்கு ஸர்வாத்மத்தைக் கூறுமிடத்தில்,

विश्वतश्चक्षुरुत विश्वतोमुखो विश्वतो हस्त उतविश्वतस्पात् ।

எங்கு கண்கள், முகங்கள், கைகள், கால்களைக் கூறுகிறது. ஆனால் முன்னிலைப்படுத்தி சிவன் — விஷ்ணு இவர்களைக் கூறும்பொழுது இரு கைகளை உடையவர்களைக் கூறுகிறது. बाहुभ्यामुतते नमः சிவபெருமானை இரு கைகளை உடையவர்களாகக் கூறுகிறது. மொஹஞ்சதாரோவில் கிடைத்த சிவமூர்த்தம், மௌரியர் காலத்திய உருவங்கள், குஷாணர்களின் சிவ மூர்த்தங்கள், வாகாடகர்கள், குப்தர்களின் ஆரம்பகால வடிவம் எல்லாம் சிவபெருமானை இரு கைகளுடன் கூடியவராகத்தான் காட்டுகிறது. இன்று கிடைக்கும் சைவாகமங்கள் எல்லாம் பிரதிமாலக்ஷண படலத்தில் சிவபெருமான் நான்கு கைகளை உடையவராகத்தான் கூறுகின்றன. இன்று காணும் கோயில் பிரதிமைகள் எல்லாம் நான்கு கைகளோடுதான் காட்சி தருகின்றன. இதே நிலை விஷ்ணு பிரதிமைக்கும் உண்டு. ஆனால் ஸ்ரீரங்கம், திருப்பதி இவைகளில் இரு திருக்கரங்களுடன் காட்சி தருகிறார்.

ஆபஸ்தம்பர் க்ருஹ்ய சூத்ரத்தில் ஈசான பலி ஸ்தாலிபாகத்தைக் கூறுமிடத்தில் ஈசானனுக்கும், மீடுஷீ என்ற கௌரிக்கும் தனித்தனியே இரு குடிசைகள் போடச் சொல்கிறார். द्वे कुटी कृत्वा என்பது சூத்திரம் இவ்வாறு பழைய கோயில்கள் இருந்தன. இதை அப்பர் தேவாரமும் கூறுகிறது.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபத்தினோ டெட்டு மற்றும்
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுரையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே. [1]

ஓலைக் குடிசை கரக்கோயில். மரத்தினடியில் இருப்பது ஞாழற் கோயில், முல்லைக்கொடியின் அடியில் இருப்பது கொகுடிக் கோயில், சிறிய கோயில் இளங்கோயில் இன்று பாலாலயம் என்று பொருள்படுத்துகிறார்கள். தில்லையே சிற்றம்பலம்தான். ஆலமரத்தின் அடியில் இருப்பது ஆலக்கோயில். இதனை நினைவு கொள்ளவே தல வ்ருக்ஷங்கள் இருக்கின்றன. ஆலயம் சமுதாயக்கூடமாக ஆனபிறகே அரசர்களால் ஆலயங்கள் கற்றளிகள் ஆக்கி சமூகத்தின் பல துறைகளுக்குப் பயன்படும் வண்ணம் பல மண்டபங்களை உடையனவாக ஆக்கினர். இன்றுள்ள நிலைக்கு ஆகமங்கள் இலக்கணம் கூறுவதும இவைகளின் காலத்தை நமக்குக்காட்டும்.

---

1. அடைவுத்திருத்தாண்டகம் 2.

இன்று கிடைக்கும் ஆகமங்களுள் பிராசாத லக்ஷணமுடைய ஆகமங்கள். அம்சுமத்காச்யபம், காமிகம், காரணம், கிரணம், தீப்தம், ஸ்வாயம்புவம், ஸுப்ரபேதம், அஜிதம், ஸந்தானம், மகுடம், ரௌரவோத்தரம் ஆகியவைகள். இதேபோலபிரதிமாலக்ஷணம் உடையவைகள் அம்சுமத்காச்யபம், காமிகம், காரணம் தீப்தம், மதங்கபாரமேச்வரம், யோகஜம், வாதுல சுத்தம், ஸந்தானம், சுப்ரபேதம், ரௌரவம், மகுடம், வீராகமம், ஸூக்ஷ்மம் ஆகிய ஆகமங்கள். இதேபோல பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் அகஸ்த்ய ஸம்ஹிதை, ஈச்வர ஸம்ஹிதை, அஹிர்புத்ஸ்ய ஸம்ஹிதை, கபிஞ்சல ஸம்ஹிதை, ஜயாக்ய ஸம்ஹிதை, நாரதீயஸம்ஹிதை, பரமஸம்ஹிதை, பாத்மஸம்ஹிதை, பரமேச்வர ஸம்ஹிதை, புருஷோத்தம ஸம்ஹிதை, மார்கண்டேய ஸம்ஹிதை, விஷ்ணு ஸம்ஹிதை, ஸ்ரீப்ரச்ன ஸம்ஹிதை, ஸனத்குமார ஸம்ஹிதை, ஹயசீர்ஷ ஸம்ஹிதை ஆகியவைகளில் பிராசாத் லக்ஷணமும், மேற்கூறிய ஸம்ஹிதைகளோடு, ஈச்வர ஸம்ஹிதை, பௌஷ்கர ஸம்ஹிதை, ப்ருஹத்தர்ம ஸம்ஹிதை, விச்வாமித்ர ஸம்ஹிதை, விஷ்ணு திலகம் ஆகியவைகளில் பிரதிமாலக்ஷணமும் காணப்படுகின்றது. வடஇந்தியாவில் உள்ள கோயில்களுக்கு இங்குள்ள நூல்களில் பெருவாரியாக இலக்கணம் கிடைக்கவில்லை. மகுடம் ரௌரவோத்தரம், ஈசான சிவகுரு தேவபத்ததி இவைகளில் 96 வகையான கோயில்கள் கூறப்படுகின்றன. சித்ரகூடம், மந்தரம், கைலாசம், ஹேமகூடம் மேரு போன்ற மலைகளின் பெயரிலேயே பிராசாதங்கள் உள்ளன. நாகரம், திராவிடம், வேஸரம் என்பன இடத்தின் பெயர்கள். அந்தந்த இடத்தில் வாழ்ந்த மக்கள் கட்டிய வீட்டின் அமைப்பே கோயிலாகி இருக்கலாம்.

இமய மலையில் உள்ள கோயில்கள், உத்தரப்ரதேசம், மத்யப்ரதேசத்தில் உள்ளவை, அஸ்ஸாமில் இருப்பவை, வங்கதேசத்தவை, ஓரிசாவில் உள்ளவை, காஷ்மீரத்தில் காணப்படுபவை, பஞ்சாப், மஹாராஷ்டிரம், கர்னாடகம் ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு என ஆலயங்கள் மாறுபடுகின்றன. அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம், ஸ்தூபி, என்ற ஆறு அவயவங்களும் அளவு வேறுபாடு, வேலை வேறுபாடுகளால் இத்தனை பிரிவுகள் வந்தன. பண்டை சிற்ப நூல்களுள் மறைந்த நூல்களின் கருத்துக்கள் ஆகமங்களின் கிரியாபாதத்துள் கலந்துவிட்டன என்று கூறலாம். இன்று கிடைக்கும் மயமதம், சமராங்கண ஸூத்ரதாரம், ப்ராசாத மண்டனம், ரூபமண்டனம், மானஸோல்லாஸம், விச்வகர்ம வாஸ்து சாஸ்திரம் இவைகள் ஆகமங்களை நோக்கக் காலத்தால் பிற்பட்டவை.

கல்ப சூதரங்களின் கி. மு. 7 ஆம் நூற்றாண்டு என்கிறார்கள். பூபரீக்ஷை, கர்ஷணம், பீஜாவாபம், சங்குஸ்தாபனம், தாள விதிகள் அக்காலம் முதல் இருக்கிறது. சிவன், விஷ்ணு என்ற தெய்வங்கள், பஞ்சாக்ஷரம், பஸ்மா, பதி-பசு-பாசம் என்றும், பதார்த்தங்கள், பஞ்சப்ரம்மம், சிவபூஜை சிவலிங்கம் இவைகளை வேதமே கூறுவதால் கல்ப சூத்ரத்தையும் விடப் பழமையானது. பிரதிமையின் அலங்காரங்கள், தெய்வத்தின் சத்தியை வெளிப்படுத்தும் முறை, கலைவளர்ச்சி, கட்டிட வளர்ச்சி, தேவை இவைகளுக்கு ஏற்ப பிரதிமைகளும் பிராசாதமும் மாற்றமடைந்துள்ளன. இதை ஆகமங்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம். அத்யாத்ம முறையில் சரீரமே ஆலயம். சரீரத்தின் உள்ளே இருக்கும் பரமாத்மாவே கோயிலுக்கு உள்ளே இருக்கும் மூர்த்தி. நித்திய பூஜை, திருவிழாக்களும் காலத்தினால் பெரிதானவைகளே, மஹாதேவனுக்கு யாதவர்கள் உத்ஸவம் செய்ததை மஹாபாரதம் கூறுவதிலிருந்தும். சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்தகாதையிலும், மதுரைக் காஞ்சி என்ற சங்க இலக்கியத்திலும் திருவிழாக்கள் நடந்தன என்பது தெரிகிறது.

லகுலீசர், கல்வெட்டு சான்றுகளின்படி கி. பி. இரண்டாவது நூற்றாண்டினர் என்பது இன்றுள்ள முடிபு. அவருடைய பஞ்சார்த்த சூத்ரத்தில் மூர்த்தி தாரதம்யம் கூறப்படவில்லை. இதன் பிறகே இன்றுள்ள பாஞ்சராத்ர நூல்களும் சைவ ஆகமங்களும் தோன்றின. சைவ வைணவ வேறுபாடுகளுக்கு ஆரம்பமுண்டு. ஆரம்பமிருந்தால் முடிவும் இருக்க வேண்டுமல்லவா ?

****
***
**
*

# LEGAL RULES PERTAINING TO THE CALCULATION OF INTERESTS IN ANCIENT LAW BOOKS

Dr. E. R. RAMA BAI
Head of the Department of Sanskrit
University of Madras.

The word rna (ऋण) means obligation in religious context We hear about three types of rnas — devarna, pitrrna and acaryarna. But when we come to the practical side of life (Vyavahara), the word rna means debt. This has been defined and explained in the smrti texts and dharma-sastra works. The Vivadabhangarnava defines the word rna thus —

तथा च अधमर्णपार्श्वे स्थिति नियत लाभ जनकं यद्धनं तदेव ऋणम् ।

Again Vacaspatimisra on the basis of the text of Narada' defines rna as money invested to earn profit, keeping the principal infact with the debtors accepting the terms offered —

तेन मूलावस्थान एव लाभनिमित्तं धनिकेन दत्तं अधमर्णेन च तथाभ्युपेत्य गृहीतं ऋणमित्यर्थः ।

(Vivadacintamani - 2)

R. K. Ranade brings out the nature of debt in its original and the present meaning in the following lines: "A debt is a sum of money which is now payable or will become payable in the future by season of a present obligation and has reference to an actually existing debt or a perfected and absolute debt. In its primary sense, a debt denotes a loan arising out of contract, express or implied. In its wide sense, the term debt embraces not only a contractual debt but also a breach of civil duty arising independent of contract, for which a suit would lie,

In old Hindu law the term rna or debt appears to have been used in its primary sense as implying a loan resulting out of contract and recoverable by suit, the contract being express or implied. Modern law classes as debts not only contractual debts but also other obligations arising independent of contract. (R. K Ranade, Bomay Law Reporter, Journal, April, 1950. pp 33 - 34)

The two words kusida aud rna used in the Dharmasastras had been understood by the commentators and digest-writers as synonymous. Narada explains Kusida as the profit accrued to the amount advanced as loan.

स्थानलाभनिमित्तं हि दानग्रहणमिष्यते । तत्कुसीदमिति प्रोक्तं तेन वृत्तिः कुसीदिनाम् –
Nar IV 98

The word has been explained by Bhavasvamin. Medhatithi in his commentary on Mamid (VIII. 48) Candesvara (Vivadaratnakara, 5) and others, and from these we understand that Kusida means rna-

अत्र कुसीदं ऋणमित्येव लक्षणम्, तच्च नारदोक्तौस्फुटमेव —
Vivadaratnakara. 5

Thus we can say that rna could be understand in its primary sense, as an investment yeilding, profit or interest. In the case where the loan is given without any interest the word is understood to be used in the secondary sense. Here also some of the smrti-s explain the amount advanced as against a pledge and some others, as amount advanced on non-pledge.

When the creditor is investing money by way of loan, he could claim interest on the same. Interest is indicated by the word vrddhi. The rates of interest on loans varied for different objects; on different circumstances; on the basis of pledged object or non-pledged object; on the basis of castes etc.

From the Panini sutra-s. we come to understand different rates of interests. For example he uses the word Vrddhi for the interest in the sutra:

तद् अस्मिन् वृद्ध्यायलाभशुल्कोपदा दीयते — (V. 1 - 47)

The sutra is explained in काशिका thus —

तत्र यद् अधमर्णेन उत्तमर्णाय मूलधनातिरिक्तं देयं तद् वृद्धिः

The sutra

कुसीददशैकादशात् ष्ठन् ष्ठचौ (IV. 4 - 31)

explains that the affixes ष्ठन् and ष्ठच् come respectively after the words कुसीद and दशैकादश in the sense of giving for a mean motive. Balamanorama explains thus —

एकादशनिष्कान् अधिकान् ग्रहीतुं दश निष्कान् अधमर्णाय प्रयच्छतीति यावत् ।

The illustrations पञ्चक for the sutra तदस्मिन् etc., indicates that the rate of interest 5%.

पञ्चास्मै वृद्ध्यादिदीयते पञ्चको देवदत्तः ।

The sutra पुराणार्धहन् (V. 1 - 48) refers to the rate of interest as half a persent (½%). The sutra भागाद्यच्च (V. 1 - 49) when illustrated refers to the rate as 2½ percent by the word भागिक.

Patanjali refers to a sum by way of interest being equal to the capital by the word द्वैगुणिक (dvaigunika). Loans were also named on the basis of the amount of interest calculated an them. Thus Patanjali refers to a loan fetching 5% interest as Pancaka seven percent as Saptaka, eight percent as astaka, nine percent navaka etc. Certain percent of interest has been accepted as righteous (dharmya) by the law-givers.

Kautilya prescribes 15 percent as the righteous rate of interest. If the loan is for Commercial purposes the rate of. interest is to be five panas per hundred per month (i.e. 60 percent) In the same text we see that a creditor is permitted to demand ten panas per hundred per month in the case where the debtor is to pass through forasts and twenty panas per hundred per month where he is to cross the sea.

सपादपणा धर्म्या मासवृद्धिः पणशतस्य पञ्चपणा व्यावहारिकी दशपणा कान्तारगाणां विंशतिपणा सामुद्राणाम् — Artha 3. 11. 1

ப௫. — 34

In the above case we see that the rate of interest reflects in general, the risk to which the capital is subject.

Goutama also agrees with Kautilya with respect to righteous rate of interest.

कुसीदवृद्धिर्धर्म्या विंशतिः पञ्चमाषिकी मासम् — Gow Dh Su. XII. 26.

Baudhayana prescribes five masas for 25 Karsapnas i. e. 12 p. c.

पञ्चविंशतिस्त्वेव पञ्चमाषकी स्यात् (Baudh. Dh. Su. I - 5 - 10 - 23)

Manu, Yajnavalkya and Narada agrees with Kautilya i. e. 15 p. c. But Yajnavalkya adds one condition that the loan should be secured by a pledge.

अशीतिभागो वृद्धिस्यात मासि मासि सबन्धके (II 37)

One finds a development in Vyasa where he gives more credit to a pledge them to a surety. According to him, when a loan is secured on a pledge the interest should be 1/80-th part i. e 15 p. c. when secured on surety 1/60-th part i. e. 20 p. c. (Vyasa quoted in Smrticandrika II - 361).

## DIFFERENT TYPES OF INTERESTS

While commenting Yaj. II - 37, Vijnanesvara explains that the types of interest of Seven 5 - types with reference to debtor and two with reference to creditor — 1) What type of loan should be given, (2) What type should not be given. (3) Who is the fit person to advance loan, (4) at what time, (5) in which mode it should be given. (6) method of advancing. (7) and method of recovery.

ईदृशं देयं ईदृशमदेयं, अनेनाधिकारिणा देयं, अस्मिन् समये देयं अनेन प्रकारेण देयमित्यधमर्णे पञ्चविधम् । उत्तमर्णे दानविधिरादानविधिश्चेति द्विविधमिति एतच्च नारदेन स्पष्टीकृतम् ।

Then he first explains the types of advancing loan. Though generally, we find certain rates of interests being prescribed in the law books, different rates of interests had been permitted in the society according to the changing conditions of the society.

Generally we find six types of interests.

They are — 1) Kalika i. e. periodical interests.

2) Sikhavrddhi (hair-interest)

3) Karita (stipulated interest)

4) Kayika (Corperal interest)

5) Cakravrddhi (compound interest)

6) Adhibhoga (interest by enjoyment).

Manu mentions only four types of interests omitting sikhavrddhi and the adhibhoga — (VIII. 153) without explaining them. Narada also mentions the same four as Manu (IV. 102). Yajhavalkya, appears to refer to the Karita type of interest. Visnusmrti also refers to it. (VI. 3 and commentary on it by Nanda). Brhaspati refers to different views according to which interest may be of four, five or six varieties (X. 8).

KALIKA: When the interest is calculated everymonth and callected each month. It is called Kalika.

प्रतिमासं स्रवन्ती या वृद्धिः सा कालिका स्मृता — Narada IV. 103

मासग्राह्या तु कालिका — Brhas X. 10

Asahaya explains that, in this case, the rate of interest ranges from 2 to 5 percent per month as sanctioned by the Sastra-s according to the caste of the debtor.

सा च शास्त्रोक्ता वर्णानुक्रमेण पञ्चकशतं अवधिभूता दृष्टा (C. on Narada IV. 103)

Thus we see that Kalika is not to rate of interest but a mode of payment of interest with reference to time. Vijnanesvara, (C. on Yaj. II. 37). Devanabhatta (Smrticandrika II - 359) and Mitramisra (Vyavaharaprakasika, 226) explain it in the same way. Medhatithi, commentator on Manusmrti, explains the word masi, masi as only upalaksana and it only indicates that the interest should not get accumulated and is realised daily or

monthly and in another case if the interest is not paid within a stipulated time, the capital would get doubled automatically.

मासग्रहणं उपलक्षणार्थं यानुपचिता वृद्धि दिवसे दिवसे गृह्यते भासि भासि वा यस्याः कालो न प्रतीक्ष्यते । (Manu - VIII - 153)

अथ एतस्मिन् किल यदि न ददासि तदा द्विगुणी भवति धनमित्येकरूपा कालवृद्धिः ।

— Medhatithi

In the Gautama - dharmasutra the Kalavrddhi has been explained in a different manner. i. e. if the interest is not paid in the stipulated time, the interest would be come thrice or four times the capital, by Maskarim.

अस्मात्कालात्प्राक् केवलं वा प्रकृतवृद्ध्या वा मम दातव्यं यदि न ददासि ततस्तस्मादूर्ध्वं त्रिगुणं च चतुर्गुणं वा दातव्यमिति समये कृत्वा यस्मिन् वृद्धी वृद्धिर्गृह्यते सा कालवृद्धिः ।

Sikhavrddhi is explained as interest collected each day. Brahaspati in one of the verses brings out the significance of this name saying that this grows like hair on the head which ceases to grow only when the head is chopped. off like that this also comes only when the capital is paid off.

शिखेव वर्धते नित्यं शिरश्छेदान्निवर्तते ।
मूले दत्ते तथैवैषा शिखावृद्धिस्ततः स्मृता ॥ (X. 13)

This has been explained differently by Katyayana, Devanabhatta, Mitramisra and others.

KANTA (stipulated interest): This is generally explained as the interest promised by the debtor himself at a rate above the normal one as prescribed by the Sastras.

वृद्धिः सा कारिता नाम धनिकेन स्वयं कृता । (Narada)

कारिता ऋणिना कृता । Brhaspati - X. 10

Medhatithi speaks of it as a rate agreed by both debtor and creditor considering the requirements and benefits of both the parties.

परस्परोपकारापेक्षयोत्तमर्णाधमर्णौ कुरुत: । (C. on Mana VIII. 153)

He also observes that the type of interest is specially intended for distant traders.

एषाऽपि दिग्वणिजामेव Ibid.

Medhatithis given another explanation for the type of interest where gold is given as loan and cloth is received as interest.

अथवा हिरण्ये प्रयुक्ते वासांसि वृद्या गृह्यते । (medh. C. on Mah. VIII. 153)

On this type of interest also one find different views expressed by different digest. Writers such as Katyayana. Brhaspati and others. When Maha is against this, we find Yajnavalkya accepting the same.

KAYIKA (corporal interest): This is being referred to by Gautama and Manu. Narada defines this as an interest at the rate of one "pana" or quarter of a pana paid regularly without diminishing the principal (Narada IV. 104 and Asahiya's commentary). According to Brhaspathi, this interest is connected with bodily labonr कायिका कर्मसमूका Brh. X. 10 Madhatithi (C on Manu) explains that this type of interest consists in the payment of the interest through physical labour.

कायिका कायकर्मणा संशोध्या (Medha. on Manu VIII. 153)

Devanabhatta observes that in this type of interest the physical labour of the pledged animals is treated as the interest.

गो घोटका देशधिकृतस्य दोहनवाहनादिक: कायिको व्यापार एव यत्र वृद्धित्वेन कल्पित: सा कायिका इत्यर्थ: ॥ (Smrtichandrika II. 359)

Devanabhatta's view has been accepted by Prthvicandra and Mitramifra.

Some commentators view this Kayika type of interest as the physical service rendered by the debtor to the creditor in lieu of interest.

कायिका यावन्न मूलं अर्प्यते तावत् कायेन कलार्थं कार्यमिति ।

(Sarvajnanarayana on Manu VIII. 153)

CAKRAVRDDHI (Compound interest): Gautama and Manu refer to this type of interest called Cakravrddhi which is explained by Narada as interest on interest.

वृद्धेरपि पुनर्वृद्धिश्चक्रवृद्धिरुदाहृता – Narada. IV. 104

With reference to this type of interest also, digest-writers differ in their explanation. But this is not favoured by Manu, may be for the reason that when interest calculated on this principle, the amount wonld become more than double of the principle which is against the principle of dvaigunya.

ADHIBHOGA (Interest by enjoyment): This type is known to Gautama. Though Manu and Narada are silent about this, this is well-known to them is understood when they describe about the enjoyment of pledge in lieu of interest (Manu. VIII. 143–44). Brhaspati explains this as interest in the form of use of a house or of the produce of the field.

गृहात् सोमः सद्यः क्षेत्राद्भोगलाभः प्रकीर्तितः (X. 14)

The same is being explained in Vivadachintamani, Vivadaratnakara and Vyavaharaprakasa (226). Katyayana speaks of Adhibhoga, were the interest is in the form of enjoyment of the pledge.

आधिभोगस्त्वशेषो यो वृद्धिस्तु परिकल्पितः ।
प्रयोगो यत्र चैवं स्यादाधिभोगः स उच्यते ॥ *(501)*

Regarding this also the later writers differ in their views.

We can some up by saying that since Kayika and bhoga-labha (in case physical services are accepted as interest) are almost same without significant change, may be one of the reasons Manu has not mentioned the bhogalabha.

Vacaspatimisra observes that Kayika type of interest is to be calculated yearly; Kalika, realised by each month and sikha-vrddhi is collected each day. The Karita is agreed at times of need (calamity).

कायिका वार्षिकी कालिका मासिकी चक्रवृद्धिः वृद्धिवृद्धि कारिता आपदि स्वीकृता शिखावृद्धिः प्रात्यहिकी । (Vivadacintamani, 4)

All the above form (i. e. kayika, karika, cakravrddhi and kalavrdhi) have been prohibited by Manu.

The above mentioned interests are only gold or coins. With respect to other objects the rate of interest differs. In the Arthasastra the interest on grains should be half of the grain, but, Afterwards it may be increased, the interest being turned into capital.

धान्यवृद्धिः सस्यनिष्पत्तावुपार्धा परं मूल्यकृता वर्धेत (II 261)

According to Yajnavalkya, in the case of female beasts, the interest would be in the form of progeny.

सन्ततिस्तु पशुस्त्रीणां (II 39)

Though norms have been prescribed, in some countries the interest was calculated independent of sastraic ideals.

The sastrakaras have fixed the maximum interest also on investments.

Kautilya favours double of the capital (cash)

चित्रप्रवासः स्तम्भप्रविष्टो वा मूल्यद्विगुणं दद्यात् — III ii 6

Gautama also favours the same view.

चिरस्थाने द्वैगुण्यं प्रयोगस्य (Gow. Dh. Su. 28)

Vasistha recognises this in the case of gold.

द्विगुणं हिरण्यं (Vas. Dh. Su. II. 44)

Manu clearly states that the interest in money-transaction should not exceed the double (of the principal).

कुसीदवृद्धिर्द्वैगुण्यं वात्येति सकृदाहिता (VIII. 151)

The same is the view of Yajnavalkya with reference to gold.

This is known as Dandupat in modern Law, (see P.V. Kane, HDS. III. 423-25) (R. K. Ranade, Dandupat in Hindu Law in the Bombay Law, Report Jornal (July—1952, pp. 49-57). Though general rules had been formed at times of need, and at the times when a man earns his livelihood by this the rules had been relaxed thus hormonizing with the economic conditions.

# தர்க்க தரிசனம்

Vyakarana Siromani, Siksha Sastri,
**Dr. S. KODANDARAMAN,**
Vidyavaridhi,
Proficiency in Oriental Learning,
M. A., (Skt), M. A., (Eng.) M. Ed.,
Gest Editor, T.M.S.S.M. Library. Tnj.
Spl, Gr. Sanskrit Pandit.
Oriental High School. Thanjavur,

இறையருளின் சிந்தனைத்திறன் பெற்ற படைப்பு மனித இனம். நன்கு சிந்தித்து நல்லுயர்வு பெற அவன் மேற்கொண்டவை நால்வகை வேதங்கள். வேதங்களின் சாரமோ தர்ம, அர்த்த, காம, மோக்ஷமெனும் நால்வகைப் புருஷார்த்தங்கள். இவை தன்னலம் கருதாத் தனிப்பெரும் தகைகளால் மனித இனத்திற்கு உபதேசிக்கப்பட்ட மனித நேயக் கோட்பாடுகள். **'नीयते अनेन इति' नेय:** 'நீயதே அநேந இதி' நேயம்.' மனித இனம் இதனால் வழி நடத்திச் செல்லப்படுகிறது' எனும் பொருள் கொண்டது நேயம் எனும் சொல். பட்டாங்கில் உள்ளபடி ஏற்றுக்கொள்ளப்பட்ட. 'வாழ்க்கை வழிகாட்டு நெறிகளே' மனித நேயமென்க.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற வரிசையில் இறுதி இலக்காக நம்மினத்திற்கு அமைவது 'வீடு'. வீடுபேற்றை அடையவே பிறிதான மூன்றும் சாதனங்களாம். வீடு பேற்றை அருள வல்ல வல்லவனைக் குறித்து வேதங்கள் பலவாறு போற்றுகின்றன. இவனைப் பரமாத்மா என்றும் அறிகிறோம். அவனை அடைந்து பேரானந்தம் பெற விரும்பும் மனிதனை ஜீவாத்மா என்கிறோம்,

'உண்டென்றால் அது உண்டு. இல்லையென்றால் அது இல்லை' என்ற கவிஞர் கண்ணதாஸனின் எளிய விளக்கத்திற்கிணங்க, பரமாத்மா உளனென்றும் இலனென்றும் முரண்பட்ட கருத்துக்கள் வேதங்களிலேயே காணக்கிடைக்கின்றன. இவ்விதக் கருத்துக்கள் உள்ளடக்கிய நூல்களை 'ஆஸ்திக தர்சனங்கள்' நாஸ்திக தர்சனங்கள்' எனப் பகுத்துணர்கிறோம்.

தன்னைச் சுற்றிலும் காணப்படுவனவற்றின் தன்மைகளைத் தானறிந்து, உகக்குமவை உகந்து, உகவாதனைத்தும் ஒழித்து, இறுதி இலக்காகிய வீடுபேற்றை அடைய தர்சனங்கள் வழிவகுக்கின்றன. தர்சனம் — நோக்கு, பார்வை எனப் பொருள்.

இத்தகைய தர்சனங்களில் ந்யாய, வைசேஷிக தர்சனங்கள் இன்றைய விக்ஞான விரிவாக்கத்தின் அன்றைய வித்தாக, அறிவு, அறியத்தக்கவை, அறியும் முறை ஆகியவற்றைத் தெளிவாக இயம்பி அறிவியல் நூலாகத் திகழ்கின்றன.

பரமாத்மாவை உணர அதனின்றும் பிற பொருள்களை அறிந்து, உணர்ந்து, அவற்றை விலக்கிப் பற்றறுத்துப் பாஷாண நிலையை எட்ட வேண்டும் என்பதற்காக இத்தர்சனங்கள் பிரபஞ்சப் பொருள்களைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன. இவற்றுள் ந்யாய சாஸ்த்ரம் கௌதம முனிவராலும், வைசேஷிக சாஸ்த்ரம் கணாத முனிவராலும் இயற்றப்பட்டன. இவ்விரண்டையும் பொதுவாக தர்க்க சாஸ்த்ரம் என்கிறோம்.

" சத்தம் மெய்ஞ்ஞானம் தருக்கம் சமயமே
வித்தகர் கண்ட வீருள்ளிட்டாங் — கத்தகத்
த்ந்த வில்வைந்தும் அறிவான் தலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து"

எனும் பழம் பாடலொன்று ஒரு தலையாய சிந்திப்பில் சிட்டனாவான் அறியத்தக்கச் சிறந்த சாஸ்த்ர வரிசையில் நடுநாயகமாக விளங்குவது தர்க நூலே. சிட்டர் என்போர் வேதப்ரமாணகர்.

மேலே எரிந்த கல் கீழே விழும் என்பதும். காந்தம் வடதிசை நோக்கியே நிற்குமென்பதும், பூமி உருண்டை வடிவினதென்பதும், இன்ன பிற பலவும் இயல்பாகவே சித்தித்திருப்பனவாயினும், அவற்றைச் சிறப்பாக லக்ஷணம் (இலக்கணம்) ப்ரமாணம் (அறிவுசார் அணுகு முறை) இவற்றுடன் நூல் வாயிலாக அனைவரும் அனைத்தையும் அறியும் பொருட்டு நெறிப் படுத்தும் தேவையின் எழுந்ததே தர்க்க சாஸ்த்திரம்.

தருக்கம், நியாயம், அளவை, ஏரணம், எண் எனப்பல பெயர்களில் இச்சாஸ்த்திரம் வழங்கப்படுகிறது. இலக்கண நூலறிவு (பிழையற்ற சொல்லறிவு) இல்லாதார்க்கு தர்க்க நூலறிவு தோன்றாதாகையால்தான்

"ஆற்றின் அளவறிந்து கற்க — அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற்பொருட்டு" — குறள் 725

எனும் குறளுக்கு உரை பகர்ந்த பரிமேலழகர் 'சொல்லிலக்கண நெறியானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க' எனக் கூறி, 'அளவை நூல், சொல் நூல் கற்றே கற்க வேண்டுதலின், அதற்கு அஃது ஆறெனப்பட்டது. அளக்கும் கருவியை அளவு என்றார் ஆகுபெயரான்' என விளக்கமும் கூறினார்.

"ஏரணம் காண்பர் எண்ணர்" எனத் திருச்சிற்றம்பலக்கோவையைப் பற்றிக் கூறும் செய்யுளில் ஏரணம், எண் என்பன அளவை நூலைக் குறிக்கின்றன. "எண்ணெழுத்திகழேல்". "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனும் ஔவையின் கூற்றும்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

எனும் திருவள்ளுவரின் கூற்றும் எண் என்பதால் தர்க்கசாஸ்த்திரத்தையே குறிக்கின்றன.

அறிவின் இருப்பிடமே ஆன்மா. எனவே அனைத்தறிவின் இருப்பிடம், அனைத்தும் வல்லான் பரமாத்மா. ஜீவான்மா அதனினும் சிறிது குறைவுபட்டு மட்டுப்படுத்தப்பட்ட அறிவையும் ஆற்றலையும் பெற்றவன் என இச்சாஸ்த்ரம் கூறுகின்றது.

"இதனை இதனால் இவன் முடிக்கும்" என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" — குறள் 517

எனும் குறள் செயல்படும் திறனுள்ளவனை (கர்த்தாவை) இனம் காண உதவும் சூத்திரமாக விளங்குகிறது. இங்குள்ள "இதனால்" என்ற பதத்தின் ஆழத்தை தர்க சாஸ்த்ரம் மிக அழகாக பரமாத்மாவின் பண்புகளைப்பற்றி பேசும்போது கூறுகிறது. கர்த்தா — செயல்படும் திறனுள்ளவன், செயல்படும் திறனை கர்த்ருத்வம் என்கிறோம். "कर्तृत्वं हि उपादान गोचर-अपरोक्ष ज्ञान-चिकीर्षा-कृतिमत्त्वम्" "உபாதான கோசர-அபரோக்ஷ க்ஞான-சிகீர்ஷா-க்ருதிமத் த்வம்-கர்த்ருத்வம்" அதாவது சுய அறிவு, தன்னார்வம், சுயமுயற்சி ஆகியவற்றைப் பெற்றிருப்பவனே கர்த்தா.

சுய அறிவு அற்றவன் செயலின் ஆழமறிந்து திட்டமிடவும், தடங்கல் நேரிடின் அதை எதிர்கொள்ளும் துணிவு இன்றியும் இருப்பான். எனவே அவனால் எதையும் செய்யமுடியாது. செயலைச் செவ்வனே நிறைவேற்ற சுய அறிவு கட்டாயத் தேவை.

அறிவு மட்டுமே செயலை நிறைவு செய்யாது. செயல்படவேண்டும் என்ற ஆர்வமும் வேண்டும். அறிவுபெற்ற சோம்பேறிகளால் எதைத்தான் சாதிக்கமுடியும்? எனவே அறிவும் ஆர்வமும் வேண்டும்.

அறிவும் ஆர்வமுமே செயலை முடிக்கப் போதுமானதா? நிச்சயம் போதாது; முயற்சி தேவை. முயற்சி என்பதால் உடல்திறன் முதலியவை பேசப்படுகின்றன. அறிவும் ஆர்வமும் உள்ள ஒருவன் உடல் திறனற்றிருந்தால் அவன் எவ்விதம் செயல்களை நிறைவேற்றுவான்? எனவே சுய முயற்சியும் செயலை முடிக்கக் கட்டாயம் தேவை.

ஆகவேதான் ஆத்மாவுடன் இணைந்த சுய அறிவு, தன்னார்வம், சுய முயற்சி இவற்றை உடையவனே கர்த்தாவாகிறான். "இதனால்" என்பதால் பேசப்படும் கருவிகள் இவையே எனக்காண்க. தர்சனங்கள்பால் திருவள்ளுவரின் ஈடுபாடு இதனால் நாம் உணரக்கூடியதாக அமைகிறது.

'இன்ப துன்பங்களை உணர்த்தும் பொறி' என மனதிற்கு இலக்கணம் வகுக்கிறது இத்தர்சனம். நான் சுகமாக உள்ளேன். நான் துக்கப்படுகிறேன். என்று உணர்த்துவதே மனம் எனும் பொறி. மெய், வாய், கண், மூக்கு, செவி. எனும் பொறிகள் ஐந்துடன் மனம் எனும் பொறிதனையும் சேர்த்து அறிவு தரும் பொறிகள் ஆறெனப் பேசுகிறது இத்தர்சனம். இவை தவிர வாய், கை, கால், சல, மல, புறவழிகள் இவற்றை செயற்புலன்கள் ஐந்து எனவும் பேசும்.

அறிவியல் நூலாதலின் அறிவைப் பற்றி ஆழமாகவே பேசுகிறது. அதன் சாரமாவது அறிவின் வகை நான்கு. ப்ரத்யக்ஷம், அனுமிதி, உபமிதி, சாப்தம் என.

ப்ரத்யக்ஷமாவது ஐம்பொறிகளாலும், மனதாலும் நாபடையும் அறிவு. இதைக் கண்ணளவை எனத் தமிழில் கூறுகிறோம். பொறிகளுள் முதன்மையான கண் முதலிட்டுக் கூறப்பட்டதெனக.

'आत्मा मनसा संयुज्यते, मनः इन्द्रियेण, इन्द्रियम् अर्थेन, ततः प्रत्यक्षम्'

ஆத்மா, மனஸா ஸம்யுஜ்யதே, மன: இந்த்ரியேண, இந்த்ரியம் அர்த்தேன, தத: ப்ரத்யக்ஷம்'

ஆத்மா மனதுடனும், மனம் பொறிகளுடனும், பொறிகள் பொருள்களுடனும், தொடர்பைப் பெறுவதால் ப்ரத்யக்ஷ அறிவு ஏற்படுகிறது என அறிவு தோன்றும் வழியைக் கூறுகிறது.

இங்கு மனமெனும் உட்புலன் கம்ப்யூட்டரின் மையத் தொகுப்பலகாகச் (C. P. U.) செயல்படுவதைக் காண்கிறோம். ஆத்மா — மனம் — பொறி இவற்றின் தொடர்பு உடலின்கண் எப்போதும் உள்ளதால் அது முன்னிட்டுப் பேசப்படுகிறது. பொருள், பொறி இவற்றின் தொடர்பால் நேரிடையாகப் பெறப்படும் அறிவான ப்ரத்யக்ஷம் நப்பகத்தன்மை நிறைந்த முழுமைபெற்ற முதல்தர அறிவாகக் கருதப்படுகிறது.

அனுமிதியாவது — அனுமான அளவை எனப்படுகிறது. நாம் மேற்கொள்ளும் கருதுகோளை காரண-காரியத் தொடர்புடன் ஆராய்ந்து, சித்தாந்தமாக நிறுவத் தேவையான வழிவகைகளைக் கூறும் அறிவுத்துறையாக இப்பகுதி விளங்குகிறது. அறிந்தவற்றிலிருந்து அறியாதவற்றைத் தெளியும் அடிப்படையின்கண் பல அரிய அறிவியல் அணுகுமுறைகளைக் கொண்டது.

சிறப்பாக — தானறிந்தவற்றைப் பிறரறியச் செய்யும் ஆசிரியர் மேற்கொள்ளவேண்டிய வழிவகைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

प्रतिज्ञा – हेतु – उदाहरण – उपनय – निगमनानि

ப்ரதிக்ஞா — ஹேது — உதாஹரண — உபநய — நிகமனானி

प्रतिज्ञा — கருதுகோளை முன்வைத்தல் Proposition

हेतु — கருதுகோளை நிறுவும் காரணம் கூறுதல் Reasoning

उदाहरण — அறிந்தவற்றை எடுத்துக்காட்டாக அமைத்தல் Illustration

उपनय: — எடுத்துக்காட்டின் தன்மையை கருதுகோளில் பொருத்திக் காணல் Application.

निगमनम् — உறுதிசெய்தல் Conclusion.

என ஐந்து படிகளை உள்ளடக்கிய போதனா முறையை நிறுவி கல்வித் துறைதனில் பாடங்களனைத்தையும் கற்பிக்க உதவுகிறது. காரணத்தை கண்ணுற்று கார்யத்தை நிறுவும் தர்க்கவியலுக்குத் தேவையான வழிமுறைகள் அனைத்தையும் ஆணித்தரமாக அறிவிக்கின்றது இப்பகுதி. ஆயினும் நம்பகத் தன்மையில் இரண்டாமிடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பலனைக் குற்றம் சாட்டப்பட்டவனுக்கு அனுகூலமாக்கி விடுதலை செய்யும் நீதிபரிபாலனத்திற்கு வலுவூட்டவேபோலும்.

உபமான அளவை எனப்படும் உபமிதியாவது ...... ஒரு பொருளைப் போலுள்ள மற்றொரு பொருளைத் தெரிந்துகொள்ளுதல். இதன் வழி கால-இட மாறுபாட்டால் இதற்குமுன் காணாத பொருளொன்றைத் தெரிந்து கொள்கிறோம். எடுத்துக்காட்டாக நரியைப் பார்த்திராத ஒருவன், காட்டு வாசியின்மூலம், நாயைப் போன்றது நரியென அறிந்துகொண்டு, காடு சென்றக்கால் நாயைப் போன்றதொரு விலங்கைக் கண்டு, காட்டுவாசியின் கூற்றின் துணைகொண்டு, "இதுதான் நரிபோலும்" என அறிதல். இதன் நம்பகத்தன்மை குறைவுதான் என்றாலும், சில சமயங்களில் இதன் மூலமும் அறிவைப் பெறவேண்டியுள்ளதால் மூன்றாமிடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

சாப்தம்—நூலளவை எனப்படும் இது நான்காம் வகையது. நூலின் கண் கூறப்படும் செய்திகளை நாம் அறிவது இதன்பாற்பட்டது. நமது கண் எதிரே நடந்த நிகழ்ச்சிகளைச் செய்தித் தாள்களில் மறுநாள் நாம் காணும் போது அடையும் அதிர்ச்சியே நூலளவையின் நம்பகத் தன்மைக்குச் சான்று ஆகும். முற்றிலும் தவிர்க்கமுடியாத இவ்வகை அறிவை, ஆய்ந்து கண்ணளவை யாக்கி மெய்ப்பொருளைக் காணப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

நினைவாற்றல் பற்றி நுட்பமாக இயம்பப்படுகிறது. ப்ரத்யக்ஷத்தின் பயனாகத் தோன்றும் பயிற்சியினால் ஏற்படும் அறிவே நினைவு. பாவனை எனும் ஸம்ஸ்காரமே நினைவுக் காரணமாகிறது. மனப்பயிற்சியே நினைவு ஆற்றலைக் கொடுக்கவல்லது. நினைவாற்றலின் மூலம் செயல்களில் வேகம், சிந்தனைத்திறன், இயந்திரங்களைப் பிரித்து மீண்டும் கோர்த்தல் முதலியவை சித்திக்கின்றன என இதன் பயன்களும் கூறப்படுகின்றன. நினைவாற்றலைப் பெருக்கச் சோம்பி, கால்குலேட்டர்களைத் தேடும் காலமிதில் கருத்திதன் நிலை கவலைக்கிடமே.

பொருள்களனைத்தும் அணுக்களால் ஆனவை. அணுக்கள் சீரிய கட்டமைப்பு கொண்டவை. அணுவெனும் சொல் தர்க்க நூலாரின் கொடையே. நில அணு, நீரணு, தீயணு, வளியணு என பரமாணுக்கள் நால்வகைத்தவை என்றிவரும். பரமாணுக்கள் ஒரு தன்மையன என சமணரும் கூறுகின்றனர். இறைவனின் இச்சை வயத்தால் பரமாணுக்களில் கிரியை தோன்றி, அவ்விரண்டு பரமாணுக்கள் தம்மில் இணைத்து இரட்டையணுவாய், அவை மும்மூன்று தம்முட் சேர்ந்து மும்மையணுவாய், அவை நந்நான்கு தம்முட் சேர்ந்து நான்மை அணுவாய் பல்கிக் காரியப்படும் என்றும், சிதையும்கால் இறைவன் இச்சை வயத்தால் அவ்வாறே ஒடுங்கும் என அறிகின்றனர்.

பொருள்கள் சிலவற்றிற்கு இச்சாஸ்திரத்தினர் கணம் தோறும் அழிவு உண்டென்கின்றனர். இயற்கையாகவே அணுக்கட்டமைப்பு நிலை யற்றது. காரியப்படுவதால் என்பதை நன்கு உணர்ந்துள்ளனர். உண்ட உணவின் சாரமே அவயவங்களாகப் பரிணமித்துக் கணம் தோறும் வளர்ந்தும் தேய்ந்தும் வேறுபடுதலின் அவயவியாகிய உடம்பும் வளர்ந்தும், தேய்ந்தும்

கணந்தோறும் வேறுவேறாம். இதை நாம் உணர முடியாத நிலையில் ஆற்று வெள்ளம் போல் (கணம் தோறும் கடந்து செல்லும் நீர் வேறாயினும், நீர் ஓடுகிறது எனக் கூறுவது போல்) நித்யத்தை ஏற்கவேண்டியுள்ளது.

பஞ்ச பூதங்கள் ஒன்றுக்கொன்று இணைந்து பிரிந்து செயல்படும் தன்மையன என்ற இவர்களின் கூற்றால் பொருண்மை அழியா விதி வகுக்கப் படுகிறது.

இவ்விதம் சுற்றியுள்ள பொருள்களைத் தெளிந்து, இதனினும் வேறான ஆன்மாவை உணர்ந்து, அதில் லயிப்பதே வீடுபேறு. இதை அடைவதே பரம புருஷார்த்தம் என இத்தர்சனம் பகர்கிறது.